
# பூக்குழி

பெருமாள்முருகன்



# பூக்குழி



'பூக்குழி'யின் மூன்றாம் பதிப்பு இது. வாழ்வை ஒருகோணத்தில் அணுகுவதை முதன்மையாக்கிப் பிற கோணங்களையும் கொண்டுவந்து முரண்களைக் கூர்மையாக்கிக் காட்டும் தன்மையில் எழுதப்பட்டது இது. பருண்மையல்லாத கருத்துக்களின்மீது நாம் கொண்டிருக்கும் பிடிமானமும் அவற்றைக் காப்பாற்ற எதையும் செய்யத் தயாராக இருக்கும் வெறிநிலையும் என்னை வியப்படையச் செய்கின்றன; சலிப்புறவும் வைக்கின்றன. ஏன் நாம் வேறுபாடுகளை முன்னிலைப்படுத்துகிறோம்? அவற்றை இயல்பாகக் கடந்து அன்போடும் மகிழ்ச்சியோடும் வாழ இயலாதா? நம் சிந்தனையின் குறுகலுக்குக் காரணம் என்ன? இந்தப் பிரபஞ்சம் தன் விரிவை ஏன் நமக்குள் கடத்தவில்லை?

பெருமாள்முருகன்

# பூக்குழி

**பெருமாள்முருகன்** (பி. 1966)

படைப்புத்துறைகளில் இயங்கிவருபவர். அகராதியியல், பதிப்பு ஆகிய கல்விப்புலத் துறைகளிலும் ஈடுபாடுள்ளவர். அரசு கல்லூரி ஒன்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார்.

# பெருமாள்முருகன்

# பூக்குழி

காலச்சுவடு பதிப்பகம்

**பூக்குழி** Ç நாவல் Ç ஆசிரியர்: பெருமாள் முருகன் Ç © மு. இளம்பிறை, எ.மு. இளம்பரிதி Ç முதல் பதிப்பு: டிசம்பர் 2013 Ç வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629001

**puukkuzi** Ç Novel Ç Author: PerumalMurugan Ç © M. Elampirai, E.M. Elamparithi ÇLanguage: Tamil Ç First Edition: December 2013

Published by Kalachuvadu Publications Pvt. Ltd., 669 K.P. Road, Nagercoil 629001, India Ç Phone: 91-4652-278525 Ç e-mail: publications@kalachuvadu.com

ISBN: 978-93-89820-59-1

தருமபுரி இளவரசனுக்கு

முன்னுரை

# ஆயிரமாயிரம் கேள்விகள்

‘பூக்குழி’யின் மூன்றாம் பதிப்பு இது. நான் எழுதியவற்றில் இரண்டாம் சிறிய நாவல் இது. முதலாவது ‘நிழல்முற்றம்.’ வாழ்வை ஒருகோணத்தில் அணுகுவதை முதன்மையாக்கிப் பிற கோணங்களையும் கொண்டுவந்து முரண்களைக் கூர்மையாக்கிக் காட்டும் தன்மையில் எழுதப்பட்டது இது. பருண்மையல்லாத கருத்துக்களின்மீது நாம் கொண்டிருக்கும் பிடிமானமும் அவற்றைக் காப்பாற்ற எதையும் செய்யத் தயாராக இருக்கும் வெறிநிலையும் என்னை வியப்படையச் செய்கின்றன; சலிப்புறவும் வைக்கின்றன. ஏன் நாம் வேறுபாடுகளை முன்னிலைப்படுத்துகிறோம்? அவற்றை இயல்பாகக் கடந்து அன்போடும் மகிழ்ச்சியோடும் வாழ இயலாதா? நம் சிந்தனையின் குறுகலுக்குக் காரணம் என்ன? இந்தப் பிரபஞ்சம் தன் விரிவை ஏன் நமக்குள் கடத்தவில்லை?

நூற்றாண்டுக்கு முந்தைய நமது மூன்றாம் தலைமுறையினரைப் பற்றிக்கூட ஏதும் அறியாதவர்கள் நாம். அடுத்த நூற்றாண்டுக்குப் பிந்தைய மூன்றாம் தலைமுறையைப் பற்றியும் ஊகிக்கவும் இயலாதவர்கள் நாம். ஆனால் இன்றைச் சாசுவதம் என்று நம்பி சக ஜீவன்களை வெறுத்தும் மறுத்தும் பகைத்தும் வாழ்கிறோமே, இது வாழ்வுதானா? நாமே நிலையில்லாதவர்கள் என்னும்போது நம் கருத்துக்களுக்கு ஏது நிலைத்தன்மை? வாழ்வை நினைத்தாலே பகீர் என்கிறதே, ஏன் இப்படி ஆக்கிக்கொண்டோம்?

இந்த நாவலைப் பற்றி யோசிக்கும்போது எப்போதும் எனக்குத் தோன்றும் ஆயிரமாயிரம் கேள்விகள். அவற்றில் சில கேள்விகளாவது வாசிப்போருக்குத் தோன்றும்

என்னும் நம்பிக்கையோடு இந்நாவலை மறுபதிப்பிட விழைகிறேன். நான் எதிர்பார்க்காத கேள்விகளும் சிலருக்கு எழலாம். அவர்களுக்காக இச்சிறுகுறிப்பு: இந்நாவல் முழுவதும் புனைவு; அதாவது கற்பனை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்ச்சொற்கள்யாவும் கதைக்கானவை. எவரையும் எவ்விடத்தையும் குறிப்பன அல்ல.

இந்நூலைத் தொடர்ந்து பதிப்பித்துவரும் காலச்சுவடு கண்ணனுக்கு நன்றிகள்.

**பெருமாள்முருகன்**

நாமக்கல்

26-11-16

# 1

பொழுது உச்சியிலிருந்த வெயில் வேளையில் சரோஜாவும் குமரேசனும் பேருந்திலிருந்து இறங்கினார்கள். சாலைப் புளியமரங்களைக் கடந்து விழுந்த பார்வையில் பொட்டல் காடுகள் பரந்து தெரிந்தன. எட்டிய தொலைவு வரைக்கும் வீடு எதுவும் கண்ணில் படவில்லை. கானல் அலையடிக்க அந்தரத்தில் வெள்ளைச்சேலைகளை விரித்துவிட்டமாதிரி வெயில். ஆள் நடமாட்டத்தையே காணோம். பறவைச் சத்தங்களும் இல்லை. எங்கும் அனல் தீய்த்த சாம்பல் தூவல். நுழைந்து செல்லத் தயங்கினாள். ‘வலது கால எடுத்து வெச்சு எறங்கு’ என்று சிரித்தபடி குமரேசன் சொல்லியிருந்தான். அவன் கேலிக்குச் சொன்னானா உண்மையாகவா என்பதைப் புரிந்துகொள்ள முடியாத தடுமாற்றம் அவளுக்கு இருந்தது.

இயல்பாகவே வலதுகால்தான் கீழே இறங்கியது. அவன் கவனித்தானா என்று தெரியவில்லை. அதுவரை இருந்த தைரியம் போய் மனது படபடத்தது. கால் மண்ணில் பதிந்ததும் ‘எல்லாம் நல்லபடி ஆகணும்’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். கண்ணுக்குள் சட்டென எந்தச் சாமியும் வரவில்லை. குமரேசனின் குலதெய்வப் பெயர் மட்டுமே தெரியும். ‘கூளிம்மா’ என்று சொல்லியிருந்தான். கூளியின் உருவம் கோயிலில் எப்படியிருக்குமோ தெரியவில்லை. அகட்டிய விழிகளுடன் கோரப் பற்கள் தெரியத் தொங்கும் நாக்குப் பேயாகிய அவள் கற்பனையில் வந்தாள். அந்தக் கூளியை வணங்க முடியவில்லை. பயமாக இருந்தது.

இறங்கியவன் வெகுதூரம் போய்விட்ட மாதிரி தோன்றியது. சட்டெனச் சுதாரித்துக் குமரேசனின் வேகத்திற்கு நடக்க முடியாமல் சற்றே ஓடி அவனோடு இணைந்துகொண்டாள். கனத்த பையைக் கை மாற்றியபடி அவளைப் பார்த்தான். அவனுக்கு எதுவும்

புதிதாகத் தெரியவில்லை. நள்ளிரவில்கூட வந்து இறங்கிச் செல்லும் இடம். கால்கள் உற்சாகமாகி வேகமாக நடைவிடும். இப்போதும் அப்படியே உணர்ந்தான். ஆனால் கூட வரும் அவள்தான் புதிது. செழித்த சோளப்பயிர். லேசான வாடல். மழைத்துளி விழுந்தால் இன்னும் புதிதாகும். அவளது நடையோட்டம் கண்டு தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டான். இப்போது அவனுக்கு அடிமேல் அடி எடுத்து வைத்து நகர்வது போலிருந்தது. அப்படி நடப்பதால் பதற்றம் அமுங்கி ஆசுவாசம் கூடியது. நெரிசல் பிதுங்கும் நகரத்துக்குள் இருந்துவிட்டு ஆளே இல்லாத இந்த ஊரைப் பார்த்து சரோஜா பயந்திருப்பாள் என ஊகித்தான்.

அவள் முகத்தைப் பார்த்தான். கலைந்த மயிர்க்கற்றை ஒன்று கன்னத்தை உரசி ஆடியது. அதை ஒதுக்கிவிட்டுப் பார்க்க ஆசையாக இருந்தது. கட்டுப்படுத்த முயன்றான். எனினும் மனவிரல் கட்டுப்படவில்லை. அவளையே பார்த்தபடி ‘மத்தியான நேரம்னா ஊர்ல காக்கா குருவிகூட வெளிய வராது. உங்கூராட்டம் பெரிய பட்டணமில்ல இது. சின்னப் பட்டிக்காடு. போவப் போவப் பாரு. இங்க இத்தன ஆளு இருக்கறாங்களா, இப்படி இப்படி ஆளுவல்லாம் இருக்கறாங்களான்னும் அரிசியப்படுவ. மத்தபடி பயப்படாத. நானிருக்கறன்’ என்று சிரித்தான்.

அவனுக்குள் பலமுறை ஒத்திகை பார்த்துக்கொண்ட திட்டம் இருந்தது. எல்லாம் அதன்படிதான் நடக்கும், நடக்க வேண்டும் என்று நம்பினான். ஏதாவது மாற்றம் இருக்குமா என்பதை யோசித்து யோசித்துத் தோன்றிய மாற்றங்களுக்கு ஏற்பத் திட்டத்திலும் மாறுதல்களைச் செய்து வைத்திருந்தான். எப்பேர்ப்பட்ட திட்டம் போட்டாலும் அதைக் குலைக்கும்படி ஒன்று நடந்துவிடும் என்பது தெரிந்தே இருந்தது. குருட்டுத் தைரியம் ஒன்றும் அவனைச் செலுத்தியது.

அவன் தோள்பட்டையை அழுத்திப் பிடித்தாள். அவன் கால்களுக்குள் தன் கால்கள் சிக்கிவிடாதபடி நடந்தாள். லேசாகச் சிரித்தாள். ‘உன்னைத் தவிர எனக்கு யாரும்

இல்லை. உன்னை நம்பித்தான் வந்திருக்கிறேன்' என்று சிரிப்புக்கு அர்த்தம் எடுத்துக்கொண்டிருப்பானா என யோசித்தாள். இருப்பான். நெடுங்காலம் பழகியவன் போல அவள் அசைவுகளுக்கான அர்த்தங்களைப் புரிந்துகொள்ள அவனால் முடிவதை ஏற்கனவே உணர்ந்திருந்தாள். அவள் பற்றல் அவன் வேகத்தைக் கட்டுப்படுத்திப் பின்னிழுத்தது. பற்றலில் இருக்கும் சுகம் உணர்ந்து அதை அனுபவித்தவாறே நடந்தான்.

கரட்டூரிலிருந்து ஓடையூருக்குச் செல்லும் பிரதான சாலை அது. ஆட்டூருக்குச் சாலையிலிருந்து ஒரு கல் தொலைவு நடக்க வேண்டும். வழிகளைப் பற்றி அவளுக்கு விளக்கிக்கொண்டே வந்தான். படபடப்பைக் குறைக்க இந்தப் பேச்சு அவனுக்கு உதவியது. ஊர் அமைப்பைப் பற்றியெல்லாம் அவன் பேச்சு விரிந்து செல்வதாக உணர்ந்தாளே தவிர அவற்றில் அவள் மனம் அவ்வளவாகப் பதியவில்லை. தன்னூரில் என்ன நடந்திருக்கும் என்பதை யோசித்து யோசித்துச் சோர்ந்திருந்த மனம் இப்போது இங்கே என்ன நடக்கும் என்று குழம்பியது. இரவு முழுக்கவும் பின்னாலேயே போலிஸ்காரர்கள் தொடர்கிற மாதிரியும் எந்த நிமிசமும் குமரேசனிடமிருந்து அவளைப் பிரித்து இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்பதாகவும் கற்பனை விரிந்து சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

அப்படி எதுவும் நடக்கவில்லை என்றதும் 'போய்த் தொலையட்டும்' என்று தலை முழுகிவிட்டார்களோ என்று தோன்றியது. எதையும் எடுத்துப் போகவில்லை, கட்டிய துணியோடுதான் போயிருக்கிறாள் என்று சந்தோசப்பட்டிருப்பார்களோ. அவ்வளவுதானா. எல்லாம் அவ்வளவுதானா. இத்தனை வருட ஒட்டும் உறவும் ஒன்றுமே இல்லையா. ஏன் தேடி வரவில்லை. பயமாக இருந்தாலும் பின்னாலேயே யாரேனும் வந்திருந்தால் அது போலிஸே என்றாலும் நிம்மதி ஏற்பட்டிருக்கும். இப்போது யாருமே இல்லை என்னும் வெறுமை. எல்லாம் கடந்தபின் இனி எப்போதாவது அங்கே போய் நிற்க முடியுமா?

அப்படி நின்றால் ஆதரவாகச் சேர்த்தணைக்க யாராவது இருப்பார்களா? 'போனவ அப்படியே போவ வேண்டியதுதானே' என்பார்கள்.

குமரேசனோடு சேர்ந்து போனால் தைரியமாக இருக்கலாம். தனியாகப் போகக் குமரேசன் விடமாட்டான். அச்சம் போக்கி நம்பிக்கை ஊட்டும் ஏராளமான வார்த்தைகளை அவன் கொடுத்திருக்கிறான். 'உனக்கு இன்னமே நாந்தான் எல்லாமின்னு நம்பிக்க வந்தா எங்கூட வா' என்று கோபத்தோடு அவன் சொன்ன இறுதிச் சொற்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள். அனைத்தும் விட்டாலும் அவன் போதும். 'நாந்தான் எல்லாம்' என்று அவன் சொல்லியிருக்கிறான். அதை மந்திரம் போல அவனிடமே திரும்பத் திரும்பப் பலமுறை சொல்லவும் செய்தாள். அப்போதெல்லாம் அவன் சிரித்தான். ஆமோதிக்கும் சிரிப்பு அது.

அவன் தோளில் சாய்ந்து பேருந்தில் பயணம் செய்த இரவிலும் திருமணம் முடித்துக் கிளம்பியபோதும் திரும்பத் திரும்பக் குமரேசன் தெளிவாகச் சொல்லியிருந்தான். அவனுடைய அம்மாவும் சரி, மற்றவர்களும் சரி எது கேட்டாலும் ஒருவார்த்தை இரண்டு வார்த்தை பதிலாக அவள் பேசினால் போதும். மற்றபடி எல்லாவற்றையும் அவன் பேசிக்கொள்வான். 'எதுனாலும் நா . . . சொன்னா அம்மா கேட்டுக்கும். மத்தவங்க என்ன சொல்லுவாங்கன்னு கொஞ்சம் யோசிக்கும். சீக்கிரம் செரியாயிரும். ஒன்னும் பயப்படாத' என்று பலமுறை பாடம் எடுப்பது போல வெவ்வேறு விதமாகச் சொல்லியிருந்தான். அவள் தலையாட்டி எல்லாவற்றையும் நல்ல பிள்ளையாய்க் கேட்டுக்கொண்டாள். பேசாமல் இருப்பது அவள் இயல்புக்கு உகந்ததல்ல என்றாலும் இங்கே அவன் சொல்லியபடி பேசாமல் இருப்பதுதான் தன் வேலை என்று உணர்ந்தாள். எல்லாவற்றையும் அறிந்துகொண்ட பின் வேண்டுமளவு பேசிக்கொள்ளலாம். அதுவரைக்கும் அவன் சொன்னபடிதான் இருக்க வேண்டும்.

முன்னாடியே இப்படி என்று சூசகமாக அவன் அம்மாவுக்கு உணர்த்தியிருப்பதாகவும் சொல்லியிருந்தான். போனமுறை ஊருக்கு வந்திருந்தபோது ‘என்னடா பொண்ணுப் பாக்கலாமா’ என்று அம்மா கேட்டாளாம். ‘அதெல்லாம் பொறுமையாப் பாத்துக்கலாம்’ என்று அவன் சொன்னானாம். ‘வெளியூர்ல போயிருக்கற. அது இதுன்னு பலவற்றப் பிள்ளயப் பாத்துக்கீது இழுத்துக்கிட்டு வந்தராத’ என்று சொல்லி அம்மா நோட்டம் பார்த்தாளாம். அதற்கு அவன் ‘பின்ன எனக்கு நானே பாத்துக்காத நீயா பாப்ப. வெச்சுப் பொழைக்கறவன் நாந்தான’ என்று சிரித்தானாம். அம்மா அதற்குப்பின் எதுவும் பேசவில்லையாம். யோசிக்கட்டும் என்று அவனும் விட்டு விட்டானாம். கிளம்பும்போது ‘போயிட்டு வர்றம்மா’ என்று சொன்னதற்கு ‘ம்’ என்று உறுமல் வந்ததாம். அவ்வப்போது இப்படிச் சில வார்த்தைகளைப் போட்டு வைத்திருக்கிறானாம். அதனால் அம்மாவுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருக்காது என்று சொல்லியிருக்கிறான்.

‘உம்மூஞ்சியப் பாத்தா ஆருக்காச்சும் புடிக்காத போவுமா பிள்ள? அப்படியே உம்பக்கம் சாஞ்சிருவாங்க. என்னயக்கூட மறந்திருவாங்க’ என்பான். ‘பாரேன் இந்தக் கருவாயனுக்கு வந்த வாழ்வன்னு அவனவன் கருவிக்கிட்டுக் கெடப்பான் பிள்ள’ என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்ப்பான். ‘பிள்ள’ என்று அவன் கூப்பிடும்போது அவளுக்குச் சிலிர்க்கும். அவன் கேலி செய்கிறானா உண்மையாகச் சொல்கிறானா என்று சந்தேகமாக இருந்தாலும் மனதுக்குள் சந்தோசப்பட்டு ரசித்துக்கொள்வாள். எதையும் மிகையாகச் சொல்கிற மாதிரியே அவன் முகபாவனை இருக்காது. ‘நல்லா ஏமாத்தற’ என்று மட்டும் அவளுக்குச் சொல்லத் தோன்றும். ‘நீயா ஏமார்ற பிள்ள?’ என்று ஆச்சர்யம் காட்டுவான். அவன் பேச்சே அவளை அணைந்து நடத்தியது.

சாலையிலிருந்து பிரிந்த மண் பாதையில் குமரேசன் திரும்பினான். ‘இதுதான் நம்மூருக்குப் போற ராசபாட்ட’

என்று சொல்லி அவளைப் பார்த்தான். 'அப்படீன்னா' என்றாள். இது மாதிரி புரியாத மொழியைப் பேசி அவ்வப்போது பயமுறுத்துவான். அவன் பேச்சே பல சமயங்களில் அவளுக்குப் புரியாது. அதுவும் வேகமாகப் பேசினால் ஏதோ புதுமொழியில் பேசுவது போலிருக்கும். ஏடாகூடமாக ஏதாவது சொல்கிறானோ என்றிருக்கும். 'ராசாவும் ராணியும் ஒன்னாச் சேந்து நடக்கக் கால் நோவக்கூடாதுன்னு மாத்து விரிச்சு மெத்துமெத்துன்னுப் பூப்போட்டு வெச்சிருப்பாங்கல்ல அதுதான் ராசபாட்ட. இப்ப ராசாவும் ராணியும் நாமதான்' என்றதும் அவளுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. பாதை முழுக்க வெண்ணிறப் பாம்புகள் நெளிந்து கிடப்பதைப் போலத் தோன்றியது. தலைவால் கண்டுபிடிக்க முடியாத நீண்ட பாம்புகள். இது உண்மையாகவே ராச பாட்டையா? இந்தச் சமயத்தில்கூடக் கொஞ்சமும் பதற்றம் இல்லாமல் சிரித்துப் பேசியபடி வரும் அவனை ரொம்பவும் பிடித்திருந்தது.

கால்களில் புழுதி அப்பி வெக்கையாகப் பறந்தது. முந்தானைச் சேலையை எடுத்துத் தலைக்கு முக்காடு போட்டாள். 'முக்காடு வேண்டாம் எடுத்துரு. இங்கெல்லாம் முக்காடு போட்டா எழவுக்குப் போறதுன்னு அர்த்தம். இந்தா இதப் போட்டுக்க' என்று சிறுதுண்டை அவள் தலையில் விரித்தான். திருமணம் செய்துகொள்ளலாம் என்று முடிவு செய்ததும் 'இப்பிடிச் செய்யாத, அங்க தப்பாயிரும்' என்றும் 'இப்பிடித்தான் அங்க செய்வாங்க' என்றும் சொல்லத் தொடங்கினான். அது இன்னும் நீடிக்கிறது. எதைச் செய்தால் எப்படி எடுத்துக்கொள்வார்கள் என்று அவளுக்குத் தெளிவாகவில்லை. எதையும் செய்ய முடியவில்லை. இதைச் செய்தால் என்ன சொல்வார்களோ என்னும் பயம் வந்துகொண்டேயிருக்கிறது. இதுநாள்வரை பழகியிருந்தவை எல்லாவற்றையும் மாற்றிக்கொள்ளும்படி நேருமோ என்று தோன்றும்போதெல்லாம் அடிவயிற்றில் கனம் கூடுகிறது. இனிப் புதிதாகத்தான் பழக வேண்டும் என்றால்

குழந்தையாகிவிடலாம். குழந்தையாக முடியுமா? ஆனாலும் யார் வளர்ப்பது? குமரேசன் அதற்குத் தயாராக இருப்பானா? தலைத் துண்டு நழுவி விழுந்துவிடுமோ. ஒரு கையால் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டே வந்தாள்.

கொஞ்சம் நடந்ததும் பெரிய வேப்பமரத்தடி ஒன்றில் நின்றான். பாதையை ஒட்டியிருந்தது வேம்பு. பாதை முழுவதையும் அதன் கிளைகள் ஆக்கிரமித்திருந்தன. அதே போல எதிர்ப் பக்கமும் விரிந்து ராட்சசக்குடையாகி இருந்தது. அண்ணாந்து பார்த்தாள். அதன் உச்சி எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. இத்தனை பெரிய வேம்பை அவள் இதுவரை பார்த்ததேயில்லை. அடியில் நின்றதும் இதுவரைக்குமான கஷ்டம் எல்லாம் மாயமாயிற்று. வெயிலை வேம்பே உறிஞ்சிவிட்டதுபோல. குளுமையாக இருந்தது. ‘இத்தாப் பெரிய மரம்’ என்றாள் சுற்றிலும் பார்வையை அளைந்துகொண்டு. அது வாரித் தன் மடியில் இருத்திக்கொண்டது. அவளுக்கு ஒருமாதிரி ஆசுவாசமாக இருந்தது. இப்படித்தான் குமரேசனின் மடியும் தன்னை வாரி வைத்துக்கொள்ளும் என்று நம்பினாள். அப்போது அவளைச் சீண்டும் குரலில் ‘இதுதான் எங்கூரு . . . இல்ல இல்ல . . . நம்மூருக் கானக்காடு’ என்று சொல்லிக் கையால் காட்டினான். அவள் புரியாமல் அவனைப் பார்த்தாள். சுதாரித்து அதான் சுடுகாடு’ என்றான் அவன்.

விரிந்த மடி சட்டென்று அவளை உதறிச் சுருங்கிக் கொண்டது. பயத்தோடு சுடுகாட்டைப் பார்த்தாள். வேம்புக்குப் பின்னால் மரங்களும் புதர்ச்செடிகளுமாக விரிந்திருந்தது. யாரையும் புதைத்த சுவடோ எரித்த மாதிரியோ தெரியவில்லை. ஆனால் உள்ளே இன்னும் பெருமரங்கள் வான் நோக்கிச் சென்றிருந்தன. குறுங்காடு அது. எதை எதையோ உள்ளே வைத்துக்கொண்டு கமுக்கமாக நின்றது. அந்தப் பக்கமிருந்து பார்வையைத் திருப்பிக்கொண்டாள். எனினும் பின்னிருந்து எதுவோ அவளையே

கவனித்துக்கொண்டிருந்தது. சீக்கிரம் அங்கிருந்து கிளம்பிவிட வேண்டும் என்று நினைத்தாள்.

தோலூர் நகராட்சிச் சுடுகாட்டை அவள் அறிவாள். அது ஏக்கர் கணக்கில் விரிந்திருக்கும். எங்கு பார்த்தாலும் புதைகுழிகளும் சமாதிகளும் நிறைந்திருக்கும். சில இடங்களில் முள் மரங்கள் அடர்ந்து கிடக்கும். பிற மரங்கள் எங்காவது ஒன்றிரண்டு இருக்கும். அதனடிச் சமாதியில் யாராவது படுத்திருப்பார்கள். அடர்முள்ளுக்குள் சீட்டாடும் ஆட்களின் எக்காளம் கேட்டபடி இருக்கும். ஆட்களின் நடமாட்டம் இல்லாத நேரமில்லை. இரவிலும் பலர் அங்கே தூங்குவார்கள் என்று அப்பன் சொல்லியிருக்கிறார். ‘பேயிங்க நடமாட இந்த மனிசன் வுட்டாத்தான’ என்பார் அப்பன். எப்போதும் ஏதாவது குழி புதிதாகத் தெரியும். பிணம் எரிந்துகொண்டிருக்கும். இங்கே ஒன்றுமில்லை. ‘இங்கெல்லாம் வருசத்திக்கி ஒன்னு ரண்டுதான் வரும். சுடுகாட்டுல ஆடு மாடுங்கதான் அதிகமா மேஞ்சுக்கிட்டிருக்கும்’ என்றான் அவள் யோசனையைப் புரிந்து கொண்டவனாய்.

ரகசியங்களை மறைத்துக்கொண்டிருக்கும் புதர்களினூடே தவிர்க்க முடியாமல் பார்வையை அலையவிட்டுக் கொண்டிருந்தபோது ‘என்ன மாப்ள . . . இங்க நிக்கற? இது யாரு?’ என்று குரல் கேட்டுச் சட்டெனத் திரும்பினாள். சைக்கிளில் இருந்து காலை ஊன்றியபடியே ஒருவர் நின்றுகொண்டிருந்தார். இடுப்பில் கோவணம் மட்டுமிருந்தது. தலையில் துண்டைக் கட்டியிருந்தார். நடுத்தர வயதிருக்கும். பெருத்த வயிறு. உடல் முழுக்க அடர்மயிர். கோவணமும் துண்டும் மட்டும் இல்லை என்றால் கரும்பன்றி போலவே இருப்பார். இப்படி ஓர் ஆளைப் பார்க்க வெட்கமாகவும் சிரிப்பாகவும் இருந்தது. அவளையே அவர் அளந்துகொண்டிருந்தார். துளைக்கும் வண்டாய் நீளும் பார்வையிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ளத் தலை குனிந்து நின்றாள்.

குமரேசன் நிதானமாகப் பதில் சொன்னான்.

‘எம் பொண்டாட்டிங்க மாமா. இன்னைக்குக் காத்தாலதான் கலியாணமாச்சு.’

‘பார்ரா . . . வேலைக்குப் போன எடத்துலயே சுழி சுத்தம் பாத்து மாடு புடிச்சிட்ட. உங்கொம்மாளுக்குத் தெரியுமா?’ என்று கேட்டபடியே அவளை மீண்டும் மேலும் கீழும் பார்த்தார். விட்டால் அருகில் வந்து பல்லையும் பிடித்துப் பார்த்துவிடுவார் போல.

பட்டு இல்லை என்றாலும் புதுச்சேலை ரவிக்கையோடும் மஞ்சள் கயிறு தாலியோடும் புதுப்பெண்ணுக்கான லட்சணங்களுடன் தெரிந்தாள். பயணக் களைப்பில் வாடியிருந்த முகம் புகை படிந்த ஓவியம். குமரேசனுக்குப் பின்னால் நகர்ந்து ஒளிந்துகொள்ள முயன்றாள். ஆனால் அவர் பார்வை துரத்திய படி வந்தது. முழுக்கத் தன்னை ஒடுக்கிக்கொண்டு அவன் முதுகில் மறைந்துகொள்ளப் பார்த்தாள்.

‘ஊட்டுக்குப் போனாத்தான் அம்மாளுக்குத் தெரியும்’ என்றான்.

‘நம்மூர்ல இதுவரைக்கும் இல்லாத வழமொறயா வெளியூர்ல இருந்து பொண்ணுப் புடிச்சாந்திருக்கற. என்ன எனம்?’ என்றார்.

‘எல்லாம் நம்ம எனந்தான்’ என்றான் குமரேசன்.

அவர் கிளம்பினால் நல்லது என்பதால் வார்த்தைகளைக் குறைத்துப் பதில் சொன்னான். அவர் கிளம்புகிற மாதிரியில்லை. சைக்கிளில் இருந்து இறங்கி அவனின் இருபுறமும் சாய்ந்து சாய்ந்து அவளைப் பார்த்தார். அவள் தடுமாறுவதைக் கண்டு ‘ம்’ என்று உதட்டைப் பிதுக்கி இமையைச் சுழித்து ஆச்சரியம் காட்டினார்.

‘மூஞ்சியப் பாத்தாத் தெரியாதா மொசப் புடிக்கற நாயி. நம்ம எனத்து மூஞ்சியில்ல மாப்ள இது. காடு மேட்டுல பெரண்டு திரியற மூஞ்சி இப்பிடியா இருக்கும்? இது பாரு நெவுலொணத்தி உட்டு நவராத மூஞ்சி. வெய்யப்படாத

மேனி. செரி நெசமேச் சொல்லு . . . எப்படியோ . . . பொழங்கற எனந்தானா?' என்று விடாமல் கிண்டினார்.

'ஆமா மாமா' என்றான் பொறுமையாக.

அவனிடம் மேற்கொண்டு எதையும் வாங்க முடியாது என்று கண்டுகொண்டவர் 'செரிசெரி வெயில் ஏறி அடிக்குது. ஊட்டுக்குப் போயிச் சேந்து ஒருவா நீத்தண்ணிகீது குடிங்க. புதுமருமவளப் பாத்ததியும் உங்கம்மா அப்பிடியே மவுந்து போயிக் கோழி அடிச்சிக் கொழம்பு வெச்சு சீரவச் சம்பாச் சோறாக்கிப் போட்டாலும் போடுவா. இப்பிடி மருமவ நம்மூருக்கு இப்பத்தான வந்திருக்கறா. ஆருக்கும் கெடைக்காத அச்சு வெல்லம் டோய்' என்று சொல்லிக்கொண்டே சைக்கிளை மிதித்தார். பாதை மண்ணுக்குள் புதைந்து சைக்கிள் மெதுவாகவே நகர்ந்தது. கோவண வால் ஆட எழுந்து மிதித்து வேகம் கூட்டுவது தெரிந்தது. அடிக்கடி திரும்பி அவர்களைப் பார்த்தார். வெண்புழுதியினூடே வெயிலைத் துளைத்துக்கொண்டு அவர் போவதையே அச்சத்தோடு பார்த்தாள்.

'நம்மூருக்காரருதான். பொதாருன்னு பேரு. ஆளு மேலெல்லாம் மயிரு பாத்தீல்ல. பொதரு மாதிரி மயிரு இருக்கறதனால அந்தப் பேரு. ஒவ்வொரு ஆளுக்கும் அப்பிடி ஒருபேரு இருக்கும். எனக்கும் இருக்குது. நீயே தெரிஞ்சுக்குவ. நம்புளுக்கு முன்னாடி சேதி போயிச் சேந்திரும். அதும் நல்லதுதான். நாம்பளே போயி எதையும் சொல்ல வேண்டிதில்ல. பெரிய வரவேற்பு நடக்கும் பாரு. பயந்து போயிராத' என்று பையைத் தூக்கித் தலைமேல் வைத்தான்.

'போர்ட்டர் மாரியே கீது' என்றாள். பொதாருவின் பார்வைக் கொடுக்கிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ளப் பேச்சைத் திருப்பினாள். மாடு என்று சொல்லிவிட்டுப் போன அந்த ஆளின் பார்வையும் மாட்டைச் சுற்றிச் சுற்றிச் சுழி பார்ப்பது போலத்தான். குமரேசனைப் போர்ட்டராகக் கற்பனை செய்துகொள்வது அவளுக்குச் சிரிப்பைக் கொடுத்தது.

தோலூர் ரயில் நிலையத்தில் பைகளைத் தூக்கிக் கொண்டு நடக்கும் போர்ட்டர்கள் உண்டு. அவள் ரயிலில் இதுவரை போனதில்லை என்றாலும் ரயில் நிலையத்தை வேடிக்கை பார்த்திருக்கிறாள். அந்தப் பக்கம் போக நேரும்போதெல்லாம் வெகுநேரம் நின்று பார்ப்பாள். அது அவளுக்குப் பிடிக்கும். அங்கிருந்து ரயிலில் கிளம்பலாம் என்றுதான் திட்டமிருந்தது. நினைத்த நேரத்திற்குக் கிளம்ப முடியாது என்பதால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுப் பஸ்ஸுக்கு வந்தார்கள். ரயிலில் போவதைப் பற்றி நினைத்து 'மொதமொதப் போவும்போதே புதுசு. எல்லாம் அப்படியே இருக்கணும்' என்று எண்ணியிருந்தாள். அது முடியாமல் போனது ஏமாற்றம் தான். 'இன்னொரு நாளைக்கி மாமனாரு ஊட்டுக்கு வராதயா போயிருவம். அப்ப ரயில்ல கூட்டிக்கிட்டு வர்றன். கவலப்படாத' என்று குமரேசன் ஆறுதல் சொன்னான். கண்கள் கலங்கியதை அடக்கிக்கொண்டு அவன்மேல் சாய்ந்தாள். கன்னத்தை வருடிய அவன் கைகளை அப்படியே பிடித்து வைத்திருப்பது நன்றாக இருந்தது.

'போர்ட்டராட்டமா இருக்குது? இருக்கும் இருக்கும். ஒருமாசம் ரண்டு மாசம் ஆவட்டும். சாணிக்கூடயத் தலமேல வெச்சுக்கிட்டு நீயும் இப்பிடிப் போவ' என்றான். அவன் உதடுகளில் மெல்ல விரிந்த புன்னகை கண்டு 'நீ தூக்கியுட்டாப் போதும். செம தூக்கிடுவன் பாரு' என்றாள். அவள் சொன்னது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'இப்பிடிச் சொல்றயே அதே போதும். ரண்டு மாடு வெச்சாச்சும் பொழச்சுக்கலாம்' என்றான்.

வழியெங்கும் மொட்டைக்காடுகள் வெம்மையேறிக் கிடந்தன. எங்கோ தொலைவில் ஒவ்வொரு வீடு தெரிந்தது. எல்லாம் கூரை வீடுகள். வெளிப்பட்ட ஒன்றிரண்டு உருவங்களும் சிறுத்துத் தெரிந்தன. அவற்றையே பார்த்தபடி நடந்தாள். நடக்க நடக்க வழி தீரவே இல்லை. புதிதாக வரக்கூடியவர்கள் அவ்வளவு சீக்கிரம் ஊரைக் கண்டுபிடித்து வந்துசேர்வது கஷ்டம். அது அவளுக்குத் திருப்தியைத் தந்தது.

தீராது செல்லும் பாதையிலிருந்து ஒற்றையடித் தடம் ஒன்றில் பிரிந்தான். தூரத்தில் அனல் எழும்பிய பாறை மேல் உட்கார்ந்திருப்பது போலத் தெரிந்த ஓலைக் கொட்டகைகளைக் கைகாட்டி ‘அதுதான் நம்பூடு’ என்றான். வீட்டைப் பற்றி அவன் இதுவரை ஏதும் சொல்லியிருக்கவில்லை. அவளும் துருவிக் கேட்கவில்லை. ஓலைவீட்டைப் பார்த்ததும் மனதுக்குள் எதுவோ விட்டுப்போயிற்று. தேற்றிக்கொள்ளும் பொருட்டுப் பாறையைப் பார்த்தாள். சுற்றிலும் வேறு வீடுகள் எதையும் காணோம். பாறையைச் சூழ்ந்து மரங்கள் தெரிந்தன. அந்தச் சூழலை அவளால் உடனடியாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

அவள் முகவாட்டத்தை உணர்ந்து ‘ஓட்டுவீடா இருக்கும்னு நெனச்சயா?’ என்றான். ‘இல்லயே’ என்றாள் முகத்தை நிமிர்த்தாமல். ‘எல்லாம் கட்டீரலாம்’ என்றான். இப்படித்தான். எதையும் முடியாது என்று சொல்வது அவனிடம் கிடையாது. எதுவானாலும் ‘செஞ்சிரலாம்’ என்பான். செய்கிறானோ இல்லையோ இந்த வார்த்தை போதாதா?

பாறையை நெருங்க நெருங்க மரத்தடிகளில் உட்கார்ந்திருந்த பெண்களின் முகங்கள் தெரிந்தன. அவர்களின் பேச்சுக்குரல்கள் கலாமுலாவென்று எழுந்தன. இவர்களைக் கண்டதும் எல்லாரும் எழுந்துகொண்டார்கள். ஒரு நிமிசம் பேச்சே இல்லை. அவள் தலை குனிந்தபடி நின்றாள். அவன் பையைப் பாறையின்மீது வைத்தவிட்டு எல்லாரையும் பார்த்தான். ஒருவரும் எதுவும் பேசவில்லை. ஐந்தாறு ஆண்களும் தெரிந்தார்கள்.

திடீரென்று கொட்டகை ஒன்றுக்குள் இருந்து ‘எந்தலயில கல்லத் தூக்கிப் போட்டுட்டியேடா’ என்று குரல் கத்திக் கொண்டே ஓடி வந்தது. சரோஜா சடக்கென்று தலை நிமிர்த்திப் பார்த்தாள். வெள்ளைச்சேலையில் நெடுநெடுத்த உருவம் தலைமயிர் விரியக் கைகளை உயர்த்தியபடி அவர்கள் முன்னே

நின்றது. அவனுடைய அம்மா. மீண்டும் பார்க்க அவளுக்குத் தெம்பு வரவில்லை.

குமரேசனின் நெஞ்சில் ஓங்கி ஓங்கி அடித்தாள்.

'இதுக்குத்தானா உன்னய ஊரு உட்டு ஊரு அனுப்புனது? எஞ்சாமீ நாலு காசு சம்பாரிச்சுக்கிட்டு வந்து நாலு பேருக்கு நடுவுல தல நிமிந்து நிக்குமின்னு நெனச்சனே. நெருப்ப அள்ளித் தலயில போட்டுட்டானே. இதுக்கு அங்கயே ஒரு காருலகீது அடிச்சுச் செத்திருந்தா எந்தலவிதின்னு நெனச்சுத் தூக்கிப் போட்டுருப்பனே. எட்டு நாளைக்கு அழுது தொலச்சிருப்பனே. இப்பக் காலம் முழுக்க அழுவ வெச்சிட்டானே. எதுக்குடா இப்பிடிப் பண்ணுன . . . எதுக்குடா இப்பிடிப் பண்ணுன . . .' அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றி இழுத்து நெஞ்சிலும் கன்னத்திலும் மாறி மாறி அறைந்தாள்.

சரோஜாவின் பக்கம் திரும்பி 'என்னடி செஞ்சு எம்மவன மயக்குன? இப்பிடி எத்தன பேர மயக்கிருக்கற?' என்று வெறி பிடித்தவளாய் மயிரை எட்டிப் பற்றினாள். உடனே 'கம்முனு உடும்மா. என்ன இது?' என்று அம்மாவை வேகமாக விலக்கிவிட்டு சரோஜாவின் கையைப் பிடித்து 'வா' என்று இழுத்துக்கொண்டு கொட்டகை ஒன்றினுள் நுழைந்தான். 'இப்பவே என்னய இந்தத் தள்ளுத் தள்ளறானே . . . மை வெச்சாளோ மாய்மாலம் பண்ணுனாளோ. பொய் ஆயிருச்சே . . . போங்காலம் வந்திருச்சே.' அவன் அம்மா பாறையில் உட்கார்ந்து மாரில் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கும் காட்சி அவளுக்குத் திகிலாயிருந்தது.

சரோஜா அவளை அறியாமல் அழுதுகொண்டே இருந்தாள். உடல் நடுங்கியது. மேலெல்லாம் பயச் சிலிர்ப்பு. கண்கள் செருகின. வெளிக்காட்சி மங்கலாகிக்கொண்டே வந்தது. 'தண்ணி தண்ணி' என்றாள். 'ஒன்னுமில்ல பயப்படாத' என்று அவன் சொல்லச் சொல்லவே மயங்கிச் சாய்ந்தாள்.

0 0 0

# 2

பதற்றத்தோடு சரோஜாவைக் கைத்தாங்கலாகப் பிடித்தான். ‘அம்மா . . . தண்ணி கொண்டாம்மா’ என்று கத்தினான். வெளியே பேச்சில்லை. எல்லாரும் மௌனமாய் அவன் அம்மாவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அம்மாவும் சட்டென அடங்கிப் பாறையோர வேம்படியில் சாய்ந்து புடவை முந்தானையை வாயில் பொத்தி விசும்பினாள். விசும்பலின்போது குலுங்கும் அசைவு மட்டும் தெரிந்தது. குமரேசன் இரண்டு மூன்று முறை கூப்பிட்டது அவள் காதில் விழுந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை.

‘காசமக்கா . . . நீங்கதான் தண்ணி கொண்டாங்களே . . . மயக்கம் போட்டுட்டா’ என்று அவனுக்கு நேராகத் தெரிந்த காசமக்காவைப் பார்த்துக் கத்தினான். சட்டென முகத்தை அவள் வேறுபக்கமாகத் திருப்பிக்கொண்டாள். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவளின் முதுகில் முகத்தை மறைத்தாள். மற்றவர்களும் எங்கே தன்னைக் கூப்பிட்டுவிடுவானோ என்று பயந்து தலையைக் குனிந்துகொண்டார்கள். வெயில் அலையில் அவன் கண்களுக்கு வெறும் தலைகளே தெரிந்தன. ஒவ்வொருத்தியின் மயிரை இழுத்துப் பிடித்துக் கழுத்திலேயே குத்த வேண்டும் போல வெறி வந்தது. பற்களைக் கடித்துக் கட்டுப்படுத்திக்கொண்டான். அவன் பார்வையில் படாமல் இருந்தவர்களுக்குப் பிரச்சினை இல்லை.

வெளியே இருந்து பார்க்கும்போது சரோஜா மயங்கிச் சரிந்ததும் குமரேசன் அவளைத் தாங்கிக் கீழே படுக்க வைப்பதும் தெரிந்தன. பின் அவன் வெளியே வந்தான். கறுத்த முகத்தை வேர்வை மூடிக்கொண்டது. யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை. எதிரில் இருந்த கைச்சாளைக்குள் போய்ச் சொம்பில் தண்ணீர் மொண்டு கொண்டு ஓடினான். அவள் முகத்தில் தெளித்து எழுப்பித்

தண்ணீர் குடிக்க வைத்தான். மிரண்டு சுற்றும் முற்றும் பார்த்து அழுத அவள் கன்னத்தைத் தட்டி ‘ஒன்னுமில்ல பயப்படாத’ என்று தேற்றினான்.

அவன் நெஞ்சில் சாய்ந்து விசும்பினாள். ‘மொட்ட வெயில்ல நடந்து வந்ததுதான் சேர்ல. கொஞ்சம் நீத்தண்ணி தர்றன். குடிச்சிக்கிறியா’ என்று கேட்டான். அவள் ஒன்றும் பேச முடியாமல் தழுதழுத்தாள். அவளை விட்டுவிட்டு மீண்டும் கைச்சாளைக்குள் போய்ச் சிறுகுண்டாவில் களி நீத்தண்ணியை ஊற்றினான். இரண்டு கல் உப்புப் போட்டுக் கரைத்தபடி கொட்டகைக்குள் போனான். ‘குடிச்சிக்க’ என்று அவள் வாயில் குண்டாவை வைத்தான். அவள் ஒரு மொடங்கு குடித்துவிட்டு முகத்தைச் சுழித்துப் ‘போதும்’ என்று முனகினாள்.

‘இன்னம் ரண்டு வாய் குடி. நீத்தண்ணி அப்படியே சூட்டத் தணிச்சிரும்’ என்றான். அவளுக்கு நீத்தண்ணியின் வாசனையே பிடிக்கவில்லை. முகத்தைத் திருப்பிக்கொண்டு ‘வேணாம்’ என்றாள். அவனுக்குக் கோபம் வந்தது. ‘குடி. தெளிச்சி ஆயிரும்’ என்று கட்டாயப்படுத்தினான். அவள் மறுத்துத் தலையை ஆட்டினாள். ‘இங்க பாரு இப்பக் குடிக்கிறியா இல்லயா’ என்று சத்தமிட்டான். அவள் பரிதாப மாக ‘நாத்தமடிக்குது . . . புடிக்கில. வாந்தி வந்திடும்’ என்றாள்.

களி நீத்தண்ணியின் அருமை தெரியவில்லை அவளுக்கு என்று அவன் நினைப்பது புரிந்தது. ஆனால் அவளால் வாயில் வைக்க முடியவில்லை. குமட்டிக்கொண்டு வந்தது. நெல்லஞ் சோற்று நீத்தண்ணியாக இருந்தால் குடித்திருப்பாள் என்பது அவனுக்கு நினைவு வந்துவிட்டது. அதற்கு மேல் அவளை வற்புறுத்தவில்லை. நீத்தண்ணியை அவன் குடிக்கத் தொடங்கினான். தோலூர்ப் பக்கம் களிக் கிளறித் தோண்டிப் போட்டு நீத்தண்ணியில் கரைத்துக் குடிக்கும் வழக்கமே இல்லை. களி என்றால் குழம்பில் தோய்த்து விழுங்குவதுதான். கூழ் காய்ச்சுவார்கள். அப்படி ஒரு கூழைக் குமரேசன் கண்டதில்லை. குருணை அரிசியை

‘நொய்’ என்பார்கள். ஆரிய மாவோடு நொய் போட்டுக் கெட்டியாகக் காய்ச்சுவதுதான் கூழ். அதை அடை போல அள்ளிப் போட்டுக் கரைத்துக் குடிக்க வேண்டும்.

குமரேசனின் ஊரில் ஆரிய மாவை நீரில் கரைத்து உப்புப் போட்டுத் தண்ணீராகக் காய்ச்சி எடுத்தால் கூழ். அதை உடம்பு சரியில்லாதவர்கள் ஆற்றி வெதுவெதுப்பாகக் குடிப்பார்கள். கன்று ஈன்ற மாடுகளுக்குக் கூழ் காய்ச்சி வைப்பார்கள். அப்போதுதான் உடல் தேறும். களியைத் தோண்டிப் போட்டு ஊற வைத்த புளிப்பு நீத்தண்ணியை இதுவரைக்கும் சரோஜா பார்த்ததேயில்லை. அது நினைவுக்கு வந்து அவளுக்கு ஏற்ற மாதிரி இங்கே என்ன இருக்கிறது என்று யோசித்தான். நெல்லஞ்சோறு இருப்பதாகத் தெரியவில்லை. அரிசி இருந்தாலும் அம்மா ஆக்குவதில்லை. நெல்லஞ்சோற்றைக் கண்ணில் பார்ப்பது பவுனைப் பார்ப்பது போல. இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கறிச்சாறு காய்ச்சும்போது அரிசியை எண்ணிப் போடுவாள். தீபாவளி, பொங்கல் என்றால் அரிசி தென்படும். சரோஜா அரிசியே சாப்பிட்டுப் பழக்கமானவள்.

இனித் தினமும் சோற்றுப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்னும் கவலை குமரேசனுக்குள் ஓடியது. இதுவரைக்கும் அவன் திட்டம் முழுக்கவே அம்மாவை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியே இருந்தது. சரோஜா அங்கே நிலைகொள்வது பற்றி எதுவும் யோசிக்கவில்லை. இதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? அவனுக்குள் கலக்கம் வந்தது. சருகு போலத் துவண்டு கிடக்கும் அவளையே பார்த்தான். எப்போதும் அவள் அசைவுகள் அவனைக் கிளர்த்தி அழைப்பு விடுக்கும். லேசான புருவ நெரிப்பில் ஈர்த்து உள்ளிழுத்துக் கொள்கிறாளே என்று மாய்வான். இப்போது அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஒன்றுமே தோன்றவில்லை. எப்படி இவளைக் காப்பாற்றிவைக்கப் போகிறோம்? பாறையில் எள் போலப் பொரிந்துபோவாளோ?

உள்ளே நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருத்தி ‘பொண்டாட்டிய இப்பிடிப் பாவன பாக்கற ஆம்பள கெடைக்கோணுமே’ என்றாள்.

‘அடித் தவளா . . . ஊட்டுக்குப் போன ஒடன நிய்யும் தல சுத்தறாப்பல தொப்புனு கீழ உழுந்து படப்பசம் போடு. உன்னூட்டுக்காரன் ஓடியாந்து பாவன பாப்பான்’ என்று பதில் குரல் வந்தது. எல்லாரும் சிரித்தார்கள்.

‘ஆமா இப்பிடிப் படப்பசம் போட நம்புளுக்கு வராதாயா. அப்பிடியே போட்டாலும் நெஞ்சுல சாச்சுக்கறாப்பல கன்னத்துல ஓங்கி ஒருஅற உடுவான். அப்பறம் காலத்துக்கும் மூஞ்சியத் திருப்பிக்கிட்டுத்தான் கெடக்கோணும்’ என்று தவளாயி சொன்னாள்.

‘இந்தச் சீனிமாப்படம் பாக்கறதுக்கெல்லாம் இன்னமே நாலஞ்சு மைலு நடந்து போயிக் காசு செலவு பண்ண வேண்டிதில்ல. இங்க பாற மேல வந்து உக்காந்துக்கிட்டாப் போதும் போ’ என்றொரு குரல் எழுந்தது.

பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள். முன்பு இருந்ததைவிட இப்போது இன்னும் கூட்டம் சேர்ந்திருந்தது. அங்கங்கே காட்டுக்குள் குடியிருந்தவர்கள் எல்லாம் செய்தி தெரிந்து வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள். புதிதாக வந்தவர்கள் கொட்டாயிக்குள் எட்டி எட்டி சரோஜாவைப் பார்த்தார்கள். உள்ளே இருந்த நிழல்இருளில் சரோஜாவின் முகம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எப்படியும் வெளியே வருவாள் என்று எதிர்பார்த்து நிழல் கண்டு உட்கார்ந்தார்கள். பேச்சு மும்மரமாக நடந்தது.

‘அதுஞ் செரிதான். பிள்ள என்ன நம்மளாட்டம் கருவிளிச்சா கெடக்கறா. செக்கச் செவேல்னு கெழக்க வெளுக்க இருக்கற மானமாட்டம் தெரியறா. அப்பறம் என்ன சீனிமாக்காரிதான்.’

‘நம்ம சீரா பாவம் தனிக்கட்டையா இத்தன வருசம் இந்தப் பாற மேல கெடந்தா. இப்பப் பாரு அப்படியே

சீனிமாக் காரியாட்டம் மருமவ வந்திட்டா. கைல வச்சுத் தாங்குவா.’

‘பாறையில பாதம் பட்டா நோவும்னு பஞ்சுல நடக்க வெச்சுப் பாத்திருப்பா. வெயில்ல மேனி பட்டாக் கருக்குமுன்னு மாளி கட்டி மதுப்பா வெச்சிருப்பா.’

‘வெயில்ல மூக்குத்தி மினுங்கி அடிச்சிது பாரு மின்னலாட்டம். அதிலயே கொமரேசன் படார்னு உழுந்திருப்பான்.’

‘அட எப்ப இருந்து கொமரேசன்னு பட்டம். நெறமாப் பொண்ணுப் புடிச்சாந்ததயும் நோண்டிப்பயனுக்குப் பேரு வெச்சிட்டீங்களா.’

‘புதுப்பொண்டாட்டிக்கு மின்னால நோண்டின்னு சொல்லிக் கூப்படச் சொல்றயா.’

‘பொண்டாட்டி வந்தாலும் புள்ளப் பெத்தாலும் பேரனெடுத்தாலும் நோண்டி நோண்டிதான். அத இந்த ஆயுசுக்கும் மாத்தீர முடியுமா? கொமரேசன்னா நம்மு சனம் நாலு பேருக்குத் தெரியும். ஊருக்கெல்லாம் தெரீமா.’

அவர்கள் பேச்சிலிருந்து குமரேசனுக்கு ‘நோண்டி’ என்பது இங்கே வழங்கும் பட்டப்பெயர் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது. அந்தப் பெயர் ஏனோ அவளுக்குப் பிடிக்கவில்லை. ‘நோண்டி தோண்டின்னு இது என்ன பேரு.’ குமரேசன் மிகவும் அந்நியோன்யம் மிக்க பெயர். அந்தப் பெயரைச் சொல்லிக் கூப்பிட அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஒருமுறை முதல்நாள் நிறைய வேலை என்பதால் மத்தியானத்தில் வெளியே கட்டிலைப் போட்டுப் படுத்து ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். எப்போதும் அப்படித் தூங்குகிறவன் அல்ல அவன். மரத்தடி நிழல் மாயமென அவனைச் சொக்கிப் போகச் செய்திருந்தது. எதற்கோ வெளியே வந்த சரோஜாவுக்கு அசையாப் படமாய் அவன் கிடந்த காட்சி ஈர்த்தது. அப்படியே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

வெளியே யாருமில்லை. கட்டில் அருகில் போய் அவன் காதோரம் வாய்வைத்து மெதுவாக ‘டேய் குமரேசா’ என்று

அழைத்துவிட்டு ஓடி வந்தாள். வீட்டுக்குள் புகுந்தபின் பார்த்தால் கட்டிலில் எழுந்து உட்கார்ந்திருந்தான். அடடா அவசரப்பட்டுத் தூக்கத்தைக் கெடுத்துவிட்டோமே என்று வருத்தமாகிவிட்டது. அப்போது அவனிடம் போய்க் கேட்கவும் முடியவில்லை. அன்றைக்குச் சாயந்திரம் பேச வாய்ப்புக் கிடைத்தபோது 'எழுப்பீட்டனா' என்றாள். 'கெனாவுல உன்னோடதான் பேசிக்கிட்டு இருந்தன். நீ கூப்பிட்டதும் கெனா மாதிரியே இருந்துச்சு. எந்திரிச்சு உக்கோந்ததும் கெனாவுலதான். அப்பறம் உன்னயக் கட்டிப் புடிச்சிக்கிட்டு அப்பிடியே தூங்கிட்டன்' என்று சிரித்தான். அவளுக்குச் சிரிப்பாகவும் வெட்கமாகவும் இருந்தது.

அதன்பின் அவ்வப்போது 'குமரேசான்னு ஒருதரம் கூப்பிடேன்' என்று கெஞ்சுவது போலக் கேட்பான். அவளும் கூப்பிடுவாள். 'அப்பிடி இல்ல. அன்னைக்குக் கெனாவுல கூப்பிட்டயே அப்பிடி' என்பான். அவளும் குரலை மென்மையாக்கிக்கொண்டு கூப்பிடுவாள். எத்தனை தரம் கூப்பிட்டாலும் 'அப்பிடி வல்ல. இன்னொருக்காக் கூப்புடு' என்பான். 'போ' என்று கோபித்துக்கொண்டு அவள் போனால் சிரிப்பான். மந்திரம் போல அந்தப் பெயரைத் தனக்குள் எத்தனையோ விதமாகச் சொல்லிச் சொல்லிப் பார்த்திருக்கிறாள். அப்பேர்ப் பட்ட பெயரை விட்டுவிட்டு 'நோண்டியாம் நோண்டி.'

ஓய்ந்திருந்த கொடுமழை சற்றுநேரம் விட்டு மீண்டும் தொடங்கியது போல அவன் அம்மா சட்டெனக் குரலெடுத்துக் கதறினாள்.

'வெயிலுப் பொறுக்காத மயங்கி உழுவறவளக் கொண்டாந்துட்டானே. என்ன வேல செய்வா? ரண்டு கொடம் தண்ணி எடுத்தாரக்கூடத் தெம்பில்லாத ஒடம்பு நம்பூட்டுக்கு ஆவுமா. அறிவும் நெனவும் இல்லாத ஈனனாப் போயிட்டானே. காத்தாலயும் பொழுதோடயும் அவ காலுக்குப் பூப்போட்டுக் கும்பிடறதா வேல.

ஆன கொண்டாருவான்னு அம்மா மவுந்திருந்தன்
குதிர கொண்டாருவான்னு குயிலி மவுந்திருந்தன்

மாடு கொண்டாருவான்னு மயிலி மவுந்திருந்தன்
ஆடு கொண்டாருவான்னு அழவா மவுந்திருந்தன்
பூன கொண்டாந்து புருச்சுனு உட்டுட்டானே
புடுச்சுக் கட்டுவனா போவட்டுமுன்னு உடுவனா.

நல்ல நல்ல பந்தப் போட்டு
நாலு சனத்தக் கூட்டி வெச்சு
மோளம் கொட்டித் தாலி கட்ட
மனங்குளுரப் பாக்க முடியலியே
மவுந்திருக்க எனக்கு வாய்க்கலியே

கொள்ள கொள்ளப் பந்தப் போட்டுக்
கோடி சனத்தக் கூட்டி வெச்சு . . .

அம்மாவின் குரல் ஒப்பாரியாய் விரிந்தது. யாரோ ‘கம்முனு இரு. என்ன இருந்தாலும் நம்ப பையன் கலியாணம் மூச்சுக்கிட்டு வந்திருக்கறான். நீ ஒப்பாரி வெக்கற’ என்று அடக்கினார்கள். அக்குரலில் கேலி தெரிந்தது. ஆனாலும் இப்போது அம்மாவின் விசும்பல் ஒலி மட்டும் கேட்டது.

கொட்டகைக்குள் நிறுத்தியிருந்த கட்டிலைப் போட்டுப் போர்வையை விரித்தான். அவளைக் கை கொடுத்துத் தூக்கி நிறுத்திக் கட்டிலில் படுக்க வைத்தான். ‘தூங்கு எல்லாஞ் . . . செரியாயிரும்’ என்றான். வெளியே பேசும் பேச்சுக்கள் அவள் அழுகையை மேலும் கூட்டின. கயிறு தொங்கிப்போயிருந்த கட்டிலில் குழந்தையைப் போலக் கிடந்தாள். ஒருகணம் அவளைப் பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. லேசாக வாடிய பூச்சரம் நீண்டு கிடந்தது.

கட்டிலில் படுத்திருப்பது அவளுக்கு அசௌகரியமாக இருந்தது. பாய் விரித்துப் படுப்பதுதான் அவளுக்குப் பழக்கம். படுத்திருந்த அவள் அருகே குனிந்து ‘காத ரண்டயும் மறந்துட்டுத் தூங்கு’ என்று சொல்லியவன் வெளியே போனான். அவள் பார்வை அவன் பின்னாலேயே போயிற்று. தூக்கம் வருமா என்று தெரியவில்லை. ஓலைக் கொட்டகைக்குள் கட்டிலில் படுத்துக் கிடப்பது பெருங்குகைக்குள் தன்னந்தனியாக மாட்டிக் கொண்டது போலிருந்தது. சுற்றிலும் ஓயாத குரலொலிகள். உடல் கூச மொய்க்கும் அவற்றை மறந்துவிட்டு எப்படித் தூங்குவது? அவன் சொன்னது

போலவே இங்கே இத்தனை பேர் இருப்பார்கள் என்று அவள் நினைக்கவில்லை.

எல்லாம் காட்டுக்குள் தனித்தனி வீடுகளாகத் தெரிந்ததால் ஐந்தாறு பேர் தன்னைப் பார்க்க வந்தால் அதிகம் என்று நினைத்திருந்தாள். அவர்களைச் சமாளிப்பது ஒன்றும் பெரிய விஷயமில்லை என்பதாகவே மனதில் ஓடிற்று. குமரேசனைப் போலவே அவளும் திட்டம் வைத்திருந்தாள். ஆனால் அவனிடம் சொல்லவில்லை. புதுப்பெண்ணைப் பார்க்க எப்படியும் சுற்றி இருப்பவர்களும் சொந்தக்காரரர்களும் வருவார்கள். அவர்கள் கேள்விகளுக்கு எப்படிப் பதில் சொல்வது? சிரிப்பு ரொம்பச் சரியான பதிலாக இருக்கும். அதற்குமேல் ‘ஆமா’, ‘சரி’ என்றெல்லாம் சில வார்த்தைகள் இருக்கின்றன. ஆழம் பார்த்து ஆட்களைத் தெரிந்துகொள்ளும் வரையில் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று திட்டம். குமரேசன் பேச்சிலிருந்து பொறுக்கி எடுத்திருந்த சொற்கள் கொஞ்சம் அவளுக்குள் சேர்ந்திருந்தன. அவற்றைச் சந்தர்ப்பம் பார்த்துப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால் இந்தக் கூட்டத்திடையே எதுவும் பலிக்காது. யாரும் பக்கத்தில் வந்து எதுவும் கேட்காமல் போய்விட்டால் நல்லது. எப்படியும் இன்றைக்கு யாரையும் பேசக் குமரேசன் விட மாட்டான். வெளியே போய் யாரிடமும் அவன் எதுவும் சண்டை போட்டுவிடுவானோ என்று பயம் தோன்றியது. அதனால் காதுகளைத் தீட்டிக்கொண்டாள். தூங்குவது போலக் கண்களை மூடிக்கொண்டாள். அவள் மயக்கம் போட்டது பரவி ‘புதுப் பொண்ணுப்பிள்ள மயக்கம் போட்டுட்டா’ என்று புதிதாக வருபவர்களுக்குச் சொல்வதும் ‘ஓலையடுக்கு மாளியப் பாத்தொடன மயக்கம் வந்திருக்கும்’ என்றெல்லாம் கேலி செய்வதும் அவளுக்குக் கேட்டன. எல்லாவற்றையும் கூர்மையாகக் கேட்டுக்கொண்டே படுத்திருந்தாள்.

ஐந்தாறு ஆண்கள் கோவணத்தோடு உட்கார்ந்திருந்ததை வரும்போது பார்த்தாள். அதில் யாரோ ஒருவர் ‘செவப்புத் தோலப் பாத்து பிதுமாறு

கெட்டுப் போயிட்டயாடா பயா' என்றார். குமரேசனின் பதில் கேட்கவில்லை. லேசாகச் சிரித்திருப்பான். அவன் முகத்தில் எப்போதும் இந்தச் சிரிப்புக்குப் பஞ்சமில்லை. எப்பேர்ப்பட்ட நேரத்திலும் அவன் உதடுகள் விரிந்துவிடும். அதைக் கொண்டே எல்லாவற்றையும் சமாளித்து விடுவான்.

'ஆமா உங்க கூட்டத்துக்கே ஒன்னுக்கு ரண்டாப் பாக்கறதுதான பொழப்பு. நோண்டியச் சொல்றீங்க' என்று ஒரு பெண்குரல் கேட்டது. பெண்கள் வாய் அடங்கவில்லை.

'காடே கதி கட்டுனதே கோமணமுன்னு இங்கயே கெடக்கறதால நாங்க பொழச்சிருக்கறம். வெளியூர்ப் பக்கம் போனீங்கன்னா என்ன கதி பண்ணுவீங்களோ.'

'அட அதான் மாமன ஒரு சந்த சாரிக்கிக்கூட அனுப்பாத வெச்சிருக்கறயா.'

'போன எடத்துல எப்படியோ தொடுப்பாயிருச்சு. செரி, தப்பில்ல. தொடுப்ப அங்கயே உட்டுட்டு வந்தர வேண்டியதுதான. அப்பப்பப் போயி நாலு நாளு ஒருவாரமின்னு டேராப் போட்டுட்டு வந்திருக்கலாமே. இங்கொண்ண நம்ப எனம் சனத்துல பாத்து நாலு பேருக்குக் கெவுருதியாக் கலியாணம் பண்ணிருக்கலாமில்ல மாப்ள. நம்ப சனத்துல மட்டும் என்ன கொறஞ்சு போச்சு. இப்பிடிச் செவப்பில்லைன்னாலும் மாநெறமாத்தான பிள்ளைவ இருக்குது' என்று ஒருவர் நல்ல சத்தமாகவே பேசினார். சரோஜாவுக்கு அழுகைதான் கூடியது.

'செவப்பா ஒன்னு மாநெறமா ஒன்னுன்னு செவலயும் காரியும் சேத்துக் கட்டி ரட்ட மாட்டுவண்டி ஓட்டச் சொல்றயா.'

'அட அதிலென்னப்பா தப்பு. ஒத்த மாட்டு வண்டிய வெச்சிக்கிட்டு லொங்கு லொங்குன்னு ஓட்டறதுக்கு ரட்ட மாட்டு வண்டின்னா ஜோராப் போலாமில்ல. வாலத் திருவி உட்டா ரண்டும் மாப்ளயப் பல்லாக்குல வெச்சுத் தூக்கீட்டுப் போறாப்பல போவுமில்ல.'

பேச்சு அவ்வளவாகப் புரியவில்லை என்றாலும் ஒவ்வொன்றும் சரோஜாவைக் கலவரப்படுத்தின. அவளைக் கேவலப்படுத்திக் குமரேசனை மாற்றப் பார்க்கும் பேச்சுகளின் தொனியை நன்றாக உணர்ந்தாள். குமரேசனின் மனதை இப்பேச்சுக்கள் எல்லாம் அசைத்துவிடுமோ என்றும் தோன்றியது.

அவனையே நம்பி வந்திருக்கும் தன் கதி என்னவாகுமோ. அவன் அவளிடம் சொன்ன சொற்களை நினைவுபடுத்திக்கொள்ள முயன்றாள். வீட்டை விட்டுப் புறப்பட்ட அன்றைக்கு இரவு அவ்வளவு பயமாக இருந்தது. துணிமணிகளை ஒரு பையில் போட்டு முதல்நாளே குமரேசனிடம் கொடுத்திருந்தாள். அவன் எங்கோ கொண்டுபோய் வைத்திருந்தான். கடைகளுக்குச் சோடாப் போடுவதால் பஸ் ஸ்டேண்ட் பக்கம் பல கடைகள் அவனுக்குப் பழக்கம். அவள் அண்ணன் வீட்டுக்கு வரப் பத்துமணிக்கு மேலாகும். அப்பன் போதையில் வந்து சாப்பிட்டுப் படுத்தவர் எழவேயில்லை. அவளைப் போக வேண்டாம் என்று பிடிக்கவோ தடுக்கவோ யாரும் இல்லை. என்றாலும் திக்கென்று இருந்தது. அப்பனைப் பார்க்கப் பார்க்கப் பொறுக்க முடியாமல் கண்ணீர் வந்தது. வரிசைவீட்டில் ஒருவர்கூட வெளியே இல்லை. குமரேசன் சைக்கிள் எடுக்கும் சத்தம் கேட்டது. வீதி முனையில் அவன் சென்று நிற்பதாகப் பேச்சு.

அவன் போன ஐந்து நிமிடத்தில் அவள் கிளம்ப வேண்டும். வாசல் கட்டிலில் கிடந்த அப்பனைத் தாண்டும்போது கதறி விடுவோமோ என்று பயம் வந்ததால் அவர் பக்கம் திரும்பாமலே ஒரே ஓட்டமாக ஓடிப் போனாள். வரிசை வீட்டுக்காரர்கள் யாரும் பார்க்கவில்லை. பார்த்தாலும் ஒன்றும் பிரச்சினை இல்லை. தெரிந்தாலும் வந்து தடுப்போர் இல்லை. சைக்கிளோடு நின்றவனை எட்டியதும் அடக்கி வைத்திருந்த எல்லாம் உடைந்து அழுதாள். அவன் நின்றிருந்தது முள் புதரின் ஓரம். அங்கே விளக்கு வெளிச்சம் இல்லை. அழுகையில் கனிந்த முகத்தை

இருகைகளாலும் ஏந்தி உதட்டில் முத்தமிட்டான். அவன் கொடுக்கும் முதல் முத்தம். மின்னல் ஒன்று உதட்டில் பதிந்து மறைந்தது போலிருந்தது. அப்போது 'எதுக்குங் கலங்கக்கூடாது. எப்பவும் நான் உம்பக்கந்தான் இருப்பன்' என்று சொன்னான். அந்தச் சொற்களில் அவளது எல்லாத் தயக்கங்களும் ஒடுங்கின. சைக்கிளில் ஏறி உட்கார்ந்தாள். சைக்கிள் அவளை இப்படி ஒரு கண்காணாத சீமைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இங்கே அவனைத் தவிர வேறு யாரிடம் இருந்தும் ஆறுதலாக ஒரு வார்த்தையையும் எதிர்பார்க்க முடியாது. எப்போதும் அவன் கூடவே இருக்க முடியுமா? அவன் இல்லாதபோது இவர்களை எல்லாம் எப்படிச் சமாளிப்பது? ஏனோ சட்டென அவளுக்கு அண்ணனின் நினைவு வந்தது.

எல்லாரும் அவளைச் 'சரோ' என்று கூப்பிடுவார்கள். அண்ணன் மட்டும் 'ரோஜா' என்று அழைப்பான். 'ஊட்டோட கீறாப்பல மருமவனப் பாக்கறன். எப்பவும் எங்களாண்டயே இருக்கலாம். அப்பத்தான் அவன் எதுனா உன்னச் சொன்னாக் கூட ஒடனே தவடையில அறஞ்சு கேக்கலாம்' என்பான் அண்ணன். அப்பேர்ப்பட்ட அண்ணனை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் இரவோடு இரவாக வந்திருக்கக் கூடாதோ. உடல் நடுங்கியது. காய்ச்சல் வரும் போலத் தோன்றியது. குமரேசன் சீக்கிரம் உள்ளே வந்துவிட்டால் பரவாயில்லை.

அவனிடம் அவளைப் பற்றி ஆளாளுக்குக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். 'அந்தூருப் பக்கமெல்லாம் நம்ப எனம்சனம் இருக்காதே' என்று ஒருவர் சொல்லக் குமரேசன் 'ஒன்னு ரண்டு இருக்குது. போயிப் பாத்தீங்கன்னாத் தெரியும்' என்றான்.

'செரி. இது என்ன எனத்துப்பிள்ள.'

'எல்லாம் நம்ப எனந்தான்.'

'இப்படி எல்லாம் ஏய்க்க முடியாது மாப்ள . . . எப்படியும் ரண்டு நாள்ல பஞ்சாயத்து இருக்கும். ஊரு என்ன சொல்லுமோ தெரீல. பாத்து நடந்துக்க. இல்லீன்னா நா . . .

சொன்னாப்பல அங்கயே கொண்டோயி உட்டுட்டு வந்திரு. மாசம் ஒருக்கா போயிப் பாத்துட்டுச் செலவுக்குக் குடுத்துட்டு வந்தரலாம்.'

'பாத்துக்கலாம் மாமா' என்றான் குமரேசன். அவர்கள் சொல்கிற மாதிரி கூட்டிக்கொண்டு போய் விட்டுவிடுவானோ. அவனும் அங்கேயே இருந்துகொண்டால் சரி. அப்பனும் அண்ணனும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். ஆனால் குமரேசன் வருவானா? அவனுக்குத் தோலூரில் அவளைத் தவிர வேறேதும் பிடித்தமில்லை. அதை அவளிடமே சொல்லியிருக்கிறான். 'உன்னயப் பாக்காத இருந்திருந்தா இத்தன மாசம் இங்க இருந்திருக்க மாட்டன். இந்த நாத்தம் புடிச்ச ஊர்ல என்னய இருக்க வெச்சுட்டியே' என்றான். அப்போது அவளுக்குச் சந்தோசமாக இருந்தது. அந்த ஊர் அவனுக்குப் பிடித்திருந்தால் பரவாயில்லை என்று இப்போது தோன்றியது.

'பிள்ளையோட பொறந்தவங்க எத்தன பேரு பயா' என்று ஒருவர் கேட்பது தெரிந்தது. குரல்களைக் கொண்டுதான் வேறு வேறு ஆட்கள் என்று இனம் பிரித்துக்கொண்டாள்.

'ஒரே ஒரு அண்ணந்தான். அப்பனிருக்கறாரு. அம்மா இல்ல' என்று அவன் விவரம் சொன்னான். எப்படியும் தாய் தந்தையைப் பற்றிக் கேட்பார்கள் என்பதால் முன்கூட்டியே சொன்னான் போல.

'அம்மா என்னானா?' என்று குமரேசனைப் பார்த்து அவர் கேட்பதும் கொட்டாய்க்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்குரல் ஒன்று மெதுவாக 'இப்பிடித்தான். எவனோட ஓடிப் போனாளோ' என்பதும் சரோஜாவின் காதில் விழுந்தன. முகத்தை நோக்கி எதுவோ வந்து சொத்தென்று விழுந்த மாதிரி இருந்தது. குறுகி முகத்தைப் புதைத்துக்கொண்டாள். அம்மா சின்ன வயதிலேயே இறந்த விவரத்தை அவன் சொல்லிக்கொண்டிருந்தான். இப்போது இன்னொரு பெண்குரல் 'பொம்பள ஊட்டுல இருந்து வளத்திருந்தா இப்பிடி ஒடியாருமா இது. ஆம்பள வளப்பு. அதான்

தறிகெட்டு ஒடியாந்திருச்சு' என்றது. இந்த மாதிரி பேச்சையெல்லாம் அவள் ஒருபோதும் கேட்டதில்லை. அப்பனும் அண்ணனும் அவளை ஒருவார்த்தை கடிந்து சொன்னதில்லை. அதற்கேற்ற மாதிரிதான் குமரேசனும். விளக்கெண்ணெய் தொட்ட வாழைப்பழம் நழுவி இறங்குவது மாதிரி அப்படிப் பேசுவான். பேச்சாலேயே அவளை அரவணைத்துக்கொள்ளும் வித்தை அவனுக்குக் கைவந்திருந்தது.

'எனம் என்னன்னு நாலு பேருக்குத் தெரியச் சொல்லீரு. பிரச்சின இல்லாத பாத்துக்கலாம்.'

'நம்ம எனந்தான் மாமா.'

'அட இந்தப் பேச்ச உடு. நம்ம சனம் அந்தப் பக்கமெல்லாம் எப்பப் போனாங்க? அப்பறம் இந்தப் பிள்ளயப் பாத்தா சாட தெரியாதா? நம்ம எனத்துல இப்பிடி மொறத் தவலம் மூஞ்சியுள்ள பொம்பளய எங்க பாத்திருக்கறம்?'

'அட எப்பிடின்னாலும் தெரிஞ்சுதான ஆவும். எங்க போயிரும் உடு.'

இந்த ஊரில் இனத்தைப் பற்றி இவ்வளவு கேட்பார்கள் என்பதையும் அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. குமரேசன் சொல்லியிருந்தான். 'எனத்தக் கேட்டா நாஞ் சொல்லிக்கறன். நீ ஒன்னும் சொல்லாத' என்று அவன் சொன்னபடி எப்போதும் நடக்க முடியுமா? ஆளுக்கு ஆள் இனத்தைப் பேசுகிறார்கள். தனியாக இருக்கும்போது கேட்காமல் இருப்பார்களா? அப்போது என்ன சொல்வது? அதற்கு ஏதாவது ஒரு பதிலைத் தயார் செய்துகொள்ள வேண்டும். குமரேசனிடம் கலந்து கொள்ளலாம்.

'கலியாணம் எங்க நடந்துச்சு மாப்ள' என்றார் ஒருவர்.

'கோயில்ல.'

குமரேசன் எதையும் முழுதாகச் சொல்வதில்லை. அவர்களும் விடுவதாக இல்லை.

'எந்தூருக் கோயில்ல?'

‘மங்கூரு மஞ்சாமி, முருகன் கோயில்ல மாமா. அங்கதான் நாளொன்னுக்கு நூறு கலியாணம் நடக்குதே.’

‘எல்லாமே இப்பிடித்தானா? ஒடியாந்து கட்டிக்கற ஜோடிதானா?’

அதற்கு அவன் ஏதும் சொல்லவில்லை.

‘என்ன மாப்ள தலயக் குனிஞ்சுக்கிட்ட. நிமிந்து பதில் சொல்லத் தெகிரியம் இல்லியா?’ என்று யாரோ ஒருவர் தூண்டினார்.

அவன் தைரியசாலிதான். எங்கே கல்யாணம் நடந்தது, யார் யார் வந்திருப்பார்கள் என்றெல்லாம் தெரிந்தால் அவர்களுக்கு ஏதும் பிரச்சினை வருமோ என்று யோசித்திருப்பான்.

‘ஒன்னு ரண்டு இப்பிடி இருக்கும் மாமா. எல்லாமே இப்பிடி இருந்துட்டா அப்பறம் எதுக்கு இப்பிடிக் கூட்டம் போட்டுக்கிட்டு வேடிக்க பாக்கச் சனம் வருது?’

குமரேசன் குரலில் வேகமும் கோபமும் இருந்தன. அவர்களைத் தவிர்த்துக் கொட்டகைக்குள் நுழைந்தான். உடனே சரோஜா உறங்குவது போலக் கண்களை மூடிக் கொண்டாள். அவன் கீழே தென்னந்தடுக்கு ஒன்றைப் போட்டுப் படுத்தான். இனி யாருக்கும் எந்தப் பதிலும் சொல்லக் கூடாது என்று அவன் முடிவுசெய்து முடங்குவதை உணர்ந்தாள்.

‘கூட்டம் போட்டுக்கிட்டுத் தேர் பாக்க வந்துட்டமாமா. ஆன மேல அம்பாரமா ஆயரம் மொடா வந்து எறங்கியிருக்குது. மாட்டுவண்டி வரிச பாரு கரட்டு மேல முட்டிக்கிட்டு நிக்குது. வேடிக்க பாக்க வந்துட்டமாமா. வாங்காயா போலாம். நோண்டிக்குச் செவப்பி தொறந்து காட்டியிருப்பா. என்ன பேச்சுப் பேசறான் பாத்துக்க.’

‘வேடிக்க பாக்கத்தான வந்தம். அதான் சொல்றான். பொண்ணு மாப்ளயும் வந்தொடன ஆராத்தித் தட்டத் தூக்கிட்டு ஓடிச் சுத்தியா உள்ள கூப்பிட்டம்? அதான் சொல்றான்.’

‘உள்ளவ ஒப்பாரி வெக்கறா. பாரு மயிலாட்டம் சாஞ்சு கெடக்கறத. நாம போயி ஆராத்தி எடுத்தா என்ன நெனைப்பா?’

‘செரி செரி. பொண்ணையும் மாப்ளயையும் தனியா இருக்க உட்டுட்டு அவுங்கவுங்க வேலயப் பாருங்கப்பா. அல்லாம் அப்பறம் பேசிக்கலாம்’ என்று ஒருவர் சொல்ல மெல்லக் கிளம்பினார்கள். குமரேசனுக்குச் சோர்வாக இருந்தது. தூங்க முயன்றான். மெல்ல விழி திறந்து அவனைப் பார்த்துவிட்டு மீண்டும் மூடிக்கொண்டு அவளும் தூங்கப் பார்த்தாள்.

‘பொண்டாட்டிக்குக் கட்டலு, புருசனுக்குத் தடுக்கு. இப்பிடியல்ல இருக்கோணும்’ என்றது உள்ளே எட்டிப் பார்த்த குரல்.

சரோஜாவுக்கு இன்னும் நடுக்கம் தீரவில்லை. உடலைக் குறுக்கி இறுக்கமாக்கிக்கொண்டாள். கொஞ்சம் கொஞ்சமாக எந்த நினைவுமற்று ஆழ்ந்து போய்விட வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் நினைவுகள் ஓயவில்லை. இந்த ஊரும் சனங்களும் இப்படி இருப்பார்கள் என்று அவளுக்குத் தெரியவில்லை. எல்லாப் பக்கமும் தோஹூரில் இருப்பது போலவே தான் சனம் இருக்கும் என்று நினைத்துவிட்டாள். குமரேசனும் ஏதும் சொல்லவில்லை. இங்கே இருப்பவர்களின் பேச்சும் சரிவரப் புரியவில்லை. அவர்களின் விசாரிப்பும் விளங்கவில்லை.

சம்பந்தமே இல்லாத தேசம் ஒன்றுக்குள் கொண்டு போய் இறக்கிவிட்ட மாயக்கம்பளம் குமரேசனின் கை. கொஞ்ச காலம் மங்கூரில் இருந்திருக்கலாமோ. ஏன் அவனுக்கு இதுவெல்லாம் தோன்றவில்லை. இந்தச் சனங்களை அப்படி நம்பிவிட்டானே. அப்பனுக்கும் அண்ணனுக்கும் தெரியாமல் இவனோடு வந்தது தப்பு என்று தோன்றியது. சந்தோசமாக வாழலாம் என்று வந்தாள். சரோஜாவின் அண்ணன் அவனோடு வேலை செய்யும் ஒருவனுக்குக் கட்டிக்கொடுக்க எண்ணியிருப்பதாகப் பேசினான். அதனால்தான் குமரேசனிடம் சொல்லி அவசரப்படுத்தினாள். அவள்

எப்போது அப்படிக் கேட்பாள் என்று காத்துக்கொண்டிருந்தவனாய் உடனே எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்துவிட்டான். இன்னும் கொஞ்சம் பொறுத்திருக்கலாம். எல்லாம் தெரிந்துகொண்டு வந்திருக்கலாம். இந்தக் கஷ்டம் இன்றோடு தீரப் போவதில்லை. இது எதுவரைக்கும் போகுமோ. குமரேசன் தோலூருக்கு வராமல் இருந்திருந்தால் இந்தக் கஷ்டம் இல்லை. எதற்கு வந்தான் அவன்?

0 0 0

# 3

முட்டைக்கார பாய் அன்றைக்கு இரவு குமரேசன் வீட்டில் தங்கினார். வாரம் இரண்டுமுறை ஊர்ப்பக்கம் வருவார். வேலை முடியாத நாளில் பாறைக்கு வந்து தங்குவார். அதுவும் வளர்பிறைக் காலமாக இருந்தால் அவருக்கு உற்சாகம் பிறந்துவிடும். வெயில் காலத்தில் கொட்டகைக்குள் படுக்கமாட்டார். பாறை வெளியில் கட்டிலைப் போட்டு வானம் பார்த்துப் படுத்திருப்பது அவருக்குப் பிடிக்கும். அவர் இருப்பே இப்படித்தான். தினம் ஒரிடம். அவரை வேண்டாம் என்று சொல்லும் ஆள் அந்தச் சுற்று வட்டாரத்திலேயே இல்லை. எந்தக் காட்டுக்குப் போனாலும் அவருக்கு ஒரு கட்டில் போட்டுவிடுவார்கள். அவர் வாயைத் திறந்தாலே கதைதான். வருசக்கணக்காகப் பல ஊர்களைச் சுற்றியவர். எத்தனையோ மனிதர்களைச் சந்தித்தவர். அப்புறம் கதைகளுக்கு என்ன பஞ்சம்.

அவர் தோலூர்க்காரரர் என்றாலும் பேச்சில் அது தெரியாது. குமரேசனின் அம்மா 'பாயண்ணா . . . வேத்தூரு மனசனாட்டமே தெரியில. எங்கூரு ஆளாட்டமே இருக்கறீங்க. என்ன அப்பப்பச் சாமி கும்படறதுக்கு முட்டியப் போட்டுக்கிறீங்க' என்பாள். 'உங்கூருப் பக்கமே சுத்திச் சுத்தி உங்க பேச்சே எனக்கும் வந்திருச்சு சீராயம்மா' என்பார்.

பெண்களை 'அம்மா' என்று சொல்லித்தான் அழைப்பார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி வரிசை வைத்துப் பேசுவார். குமரேசனை ஊரில் எல்லாரும் 'நோண்டி' என்று கூப்பிடுவது அவருக்குத் தெரியும். ஆனால் அவர் வாய் 'குமரேசா' என்றோ 'குமரேசுத் தம்பி' என்றோதான் அழைக்கும். அவரால்தான் குமரேசன் தோலூருக்குப் போகும்படி ஆயிற்று.

கட்டியிருக்கும் வேட்டியும் சட்டையும் தவிர வேறு துணிமணி எதுவும் அவரிடம் இருக்காது. எங்காவது கிணற்றில் ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்தால் போய்விடுவார். தலைத் துண்டை அவிழ்த்துக் கோவணம் கட்டிக்கொண்டு வேட்டி சட்டையையும் பணம் வைக்க வசதியாகப் பெரிய சோப்பு வைத்த டவுசரையும் துவைப்பார். நீரில் நனைத்து நாலு கும்முக் கும்மிப் பக்கத்தில் மரத்தின் மேலே காயப் போடுவார். ஏற்றம் இறைக்கும் ஆளிடம் பேசிக்கொண்டே வாய்க்காலில் குழியில் நின்றபடி குளிப்பார். காக்காக் குளியல் அவருக்குப் பிடிக்காது. வெகுநேரம் தண்ணீரை மொண்டு மொண்டு ஊற்றிக்கொண்டே இருப்பார். தேய்த்துத் தேய்த்துக் குளிப்பதைப் பார்த்துப் 'பாயண்ணா . . . என்ன தண்ணி கண்டு மாசமிருக்குமா?' என்று யாரேனும் கேலி செய்தால் சிரிப்பார். 'வெய்யில்ல சுத்தறம். கொஞ்ச நேரம் தண்ணியில இருந்தாச் சூடு தணியும். துணியும் காயும்' என்பார். துணி கிட்டத்தட்டக் காய்ந்துவிடும். லேசான ஈரமாக இருந்தாலும் அப்படியே உடுத்திக்கொள்வார். 'ஒடம்பு சூட்டுல துணி ஒலந்திரும்' என்பார். 'மாத்துத்துணியே கெடையாதா பாயண்ணா' என்றால் 'எல்லாம் இருக்குது' என்பார். எங்கே வைத்திருக்கிறார், எப்போது மாற்றுவார் என்பதெல்லாம் தெரியாது. பழுப்பேறிய வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் மாற்றினாலும் ஒன்றே போலத்தான் தெரியும்.

'மொட்டு வித்த காச வெச்சு மாளியா கட்டற பாயண்ணா . . . நாலு துணிமணி வெச்சுக்கலாமில்ல' என்று கேட்காத ஆள் கிடையாது.

'தொழில்சொமயே தாங்க முடியில. இதுல நம்ம சொம வேற எதுக்கு?' என்பார்.

கையில் பிரம்புக்கூடை இரண்டிருக்கும். அந்தக் கூடைகள் இந்தப் பக்கத்தில் இல்லை. வட்ட வடிவில் பொட்டி போல இருக்கும். ஈர்க்குச்சிப் பிரம்பால் நெருக்கிப் பின்னப்பட்டிருக்கும். அடிப்பக்கச் சதுரம் எந்த இடத்திலும் அசையாமல் உட்கார்ந்து கொள்ளும். கூடையின் மேல்பகுதியில் மூடாக்குப் போட்டிருக்கும்.

கைப்பிடியும் உண்டு. கைப்பிடியில் செருகிய மூடாக்கை மேலே உருவி ஏற்றலாம். கீழே இறக்கி மூடலாம். கழற்றி எடுக்க முடியாது. வெறுங்கூடையாக இருந்தால் தோளில் மாட்டிக்கொள்ளலாம். முட்டையோடு இருக்கும் போது கையில் பிடித்துக்கொள்ளலாம். ‘கொழந்தயக் கொண்டோராப்பல பாயண்ணன் கோழிமொட்டக் கொண்டோரராரப்பா’ என்பார்கள். கூடைக்குள் வைக்கோலைப் பரப்பியிருப்பார். வைக்கோல் மெத்தையில் முட்டைகள் மோதாமல் படுத்துக் கிடக்கும். ‘ஒன்னு ஒடஞ்சாலும் மொட்டுச் சேதாரமில்ல. மொதலுச் சேதாரம்’ என்று சொல்வார்.

‘மூடாக்குப் போட்ட கூட எங்களுக்கும் ஒன்னு வாங்கியாந்து குடுண்ணா’ என்று கேட்காத ஆளில்லை. ‘அடுத்த தரம் ஊருக்குப் போறப்ப வாங்கியாரன்’ என்பதுதான் எல்லாருக்கும் பதில். ‘முடியாது’ என்று யாரிடமும் சொன்னதில்லை. பிறகு எப்போது கேட்டாலும் ‘இன்னம் ஊருக்குப் போவுலியே’ என்பார். ‘வருசக்கணக்காவா போவுல?’ என்றால் ‘போறப்ப நெனப்பு இருக்க மாட்டீங்குது’ என்று சிரித்தபடி சொல்வார். ஒருவருக்கும் அந்தக் கூடையை அவர் வாங்கி வந்து தந்ததில்லை. எப்போதாவது ரொம்பச் சந்தோசத்தோடு இருக்கும்போது ‘இந்தக் கூட மந்திரமோதிச் செய்யறது. இதுலதான் என்னோட ஏவாரமே இருக்குது. நாலு பேருக்கு வாங்கியாந்து குடுத்து அவுங்க நாலு பேரும் கூடையத் தூக்கித் தோள்ல மாட்டிக்கிட்டு ஏவாரத்துக்குக் கௌம்பீட்டாங்கன்னா? தலயில துண்டப் போட்டுக்கிட்டு நான் போயி மூலயில உக்காந்துக்க வேண்டியதுதான்’ என்று சிரிப்பார்.

காடுகாட்டுக்குப் போய்ப் பார்த்து முட்டை வாங்கி வருவார். நடைக்குச் சலிக்காத மனுசன். கூடையில் ஒரளவு முட்டை சேர்ந்துவிட்டால் எங்காவது தெரிந்த வீட்டில் பாதுகாப்பாக வைத்துவிட்டு இன்னொரு கூடையை எடுத்துக் கொண்டு போவார். இரண்டு கூடைகள் கைவசம் இருக்கும். கூடைகள் நிறைந்துவிட்டால் கிளம்பிவிடுவார். வைக்கோலை

அடுக்கடுக்காகப் பரப்பி அதன்மேல் முட்டைகளை அடுக்குவார். ஒரு கூடையில் நெரிசல் இல்லாமல் நூற்றிருபது முட்டைகள் வைக்கலாம். இரண்டு நாளுக்குள் கூடைகள் நிறைந்துவிட்டால் சந்தோசம் மாளாது. ஆட்டூரிலிருந்து மங்கூருக்குப் போய் அங்கிருந்து தோலூருக்குச் செல்லும் பேருந்தில் பாதுகாப்பாக அனுப்பிவைப்பார். இரவில் அனுப்பிவிட்டு அங்கிருந்து காலிக்கூடைகளை எடுத்துக்கொண்டு இரவிலேயே வந்து விடுவார். பேருந்தில் செல்லும் முட்டைகளைத் தோலூரில் எடுத்துக்கொள்ள ஆளிருக்கும்.

நள்ளிரவில் சிலசமயம் பாறைக்கு வந்துசேர்வார். ‘பாயண்ணன் ராக்கோழியாட்டம் வர்றாரு’ என்று சீராயி சொல்வாள். கையில் கொண்டுவரும் பொட்டலத்தைப் பாறையில் வைத்துப் பிரிப்பார். ‘கடசிப் பஸ்ஸ உட்டுட்டா வெடிய வெடிய அங்க கெடக்கோணும். அதான் நாலு புரோட்டாக் கட்டிக்கிட்டு வந்தன்’ என்று சொல்லிக் குமரேசனுக்கும் கொஞ்சம் தருவார். மாராயி அதைக் கையில் தொடவே மறுத்துவிடுவாள். ‘ஓட்டலுக் குருமாக் கொழம்ப நக்கி ருசி கண்டுக்கிட்டா அப்பறம் ஊட்டுச் சோறு ருசிக்காது’ என்பாள். ‘எனக்கெல்லாம் ஓட்டலுக் கட இல்லீன்னா பட்டினிதாம்மா’ என்பார். குமரேசன் சப்புக் கொட்டிக்கொண்டு புரோட்டாவைத் தின்பான். சிலநாள் புரோட்டா முழுவதையும் அவனுக்கே கொடுத்துவிட்டு அவன் வீட்டிலிருக்கும் களியை அவர் தின்பார். கறி ஆக்கியிருக்கும் நாளில் எவ்வளவு வற்புறுத்திக் கூப்பிட்டாலும் சாப்பிட மாட்டார்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தோலூர் போய் ஒருவாரம் பத்து நாள் இருந்துவிட்டு வருவார். அவர் முட்டை வாங்கும் ஊர்களில் எல்லாம் ‘வர ஒருவாரம் ஆவும். இப்பவாச்சும் பிள்ளைவ பசவளுக்கு மொட்ட வேவிச்சுக் குடுங்க. மொட்டுச்சாறு காய்ச்சித் தின்னுங்க. அங்கயும் இங்கயும் விக்கக் கொண்டோயராதீங்க’ என்று சொல்லிப் போவார். அது எல்லாருக்கும் பிடிக்கும். ‘ஏவாரின்னாலும் இப்பிடில்ல இருக்கோணும்’ என்பார்கள். வேறு ஏவாரி உள்ளே புகுந்துவிடாமல்

பார்த்துக்கொள்வார். ஊருக்குப் போனாலும் அவர் எண்ணம் எல்லாம் இங்கேயேதான் இருக்கும்.

குமரேசனின் வீட்டில் அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவர்தான் முட்டை வாங்கிக்கொண்டிருந்தார். கோழி வளர்க்கத் தோதான இடம் பாறை. பாறை நிறையக் கோழிகள் மேயும். அதனால் எப்படியும் தினம் நான்கைந்து கோழிகள் முட்டை இடும். உப்புச்சட்டியில் முட்டைகளை எடுத்து வைத்திருப்பாள் அம்மா. இரண்டு மூன்று நாளுக்கு ஒருமுறை அவர் வந்தாலும் எப்படியும் பதினைந்து இருபது முட்டை சேர்ந்திருக்கும். முட்டை நாலணா. இருபது முட்டை இருந்தால் ஐந்து ரூபாய் சுளையாகக் கைக்கு வரும். குண்டா நிறையத் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி அதற்குள் ஒவ்வொரு முட்டையாகப் போடுவார். நேராக நிமிர்ந்து நின்று மிதக்கத் தொடங்கும் முட்டைகளை எடுத்துத் தனியாக வைத்துவிடுவார். மற்ற முட்டைகளை மட்டும் எடுத்துக் கூடையில் பத்திரமாக வைத்துக்கொள்வார். மிதக்கும் முட்டைகளை ‘ஊளமொட்ட இன்னைக்கே வேவிச்சிருங்க’ என்று சொல்லித் திருப்பிக் கொடுத்துவிடுவார்.

சீராயி ‘என்ன பாயண்ணா . . . உங்கள அப்பிடியா ஏமாத்தீருவம்? தங்கத்த ஒரசறாப்பல தண்ணீல போட்டுப் போட்டுப் பாக்கறீங்க’ என்று அவ்வப்போது கோபப்படுவாள். அதற்கெல்லாம் அவர் அசருகிறவர் அல்ல. ‘ஏம்மா . . . நீங்க நல்லவீங்க. அதுக்கு மொட்டு பயப்படுமா? ஒருநாள் ஆயிருச்சின்னா மொதந்திரும். நானும் வாங்கிக்கொண்டோயி மொதலுப் பண்ணோனுமில்ல?’ என்று சொல்வார். என்ன கேட்டாலும் அவருக்கு ஒருபோதும் கோபம் வந்து பார்க்க முடிந்ததில்லை.

அன்றைக்கு இரவு பாறைவெளியில் படுத்திருந்தபோது அவள் ‘எங்கெங்கயோ சுத்தறீங்க பாயண்ணா . . . எம் பையனுக்கு எதுனா ஒருவழி பாருங்களே. ஒழக்குக்குள்ள சுத்தறாப்பல இந்த ரண்டு அணப்புக்குள்ளயே ஒலப்பிக்கிட்டுக் கெடக்கறான்’ என்றாள்.

அப்போது குமரேசன் பதினொன்றாம் வகுப்பு முடித்து இரண்டு வருசத்திற்கு மேலாகிவிட்டது. அவன் முடித்த வருசம்தான் ப்ளஸ் டூ முறை அமலாயிற்று. ஒருவருசம் முன்னால் வந்திருந்தால் இன்னொரு வருசம் பள்ளிக்கூடம் போயிருக்கலாம் என்று ஆதங்கமாகச் சொல்வான். இரண்டு வருசம் பெயிலாகிப் போனாலும் அவனுக்குப் பள்ளிக்கூடம் போவது பிடித்திருந்தது. முடித்ததும் அவள் ‘போதுமப்பா படிப்பு’ என்று சொல்லி விட்டாள். ஒத்தைக்கு ஒரே பையனை வெளியூருக்கு அனுப்புவதற்கு அவளுக்கு விருப்பமில்லை. அனுப்பிப் படிக்க வைக்கும் அளவுக்கு வசதியும் இல்லை.

இரண்டு வருசமாகக் காட்டில்தான் ஏதேதோ வேலை செய்துகொண்டிருந்தான் குமரேசன். சீராயி செய்யும் வேலையைப் பகிர்ந்து செய்தான். மற்றபடி வருமானத்தைப் பெருக்க அங்கே வழி ஏதுமில்லை. காட்டைக் கரண்டு கரண்டு பார்த்தாலும் ஒன்றும் வருவதில்லை. ஆடு குட்டிகளை மேய்க்க ஒருத்தி போதாதா? பண்ணயத்தாள்களுடன் சேர்ந்து சில நாள் கூலி வேலைக்குப் போனான். பாத்தி கட்ட, போர் போட என்று வேலை இருக்கும். அதையும் யாரோ வந்து அவளிடம் ‘சேர்க்கைக்கு நல்ல ஆளுவ இல்லியா. நம்ம எனம் சனத்தோட பாத்துச் சேத்தாத இப்பிடி அசலாளுவளோடவா பாத்து உடுவ? தண்ணிய நாம தூக்கி ஊத்துனாக் குடிக்கறவிங்களோட ஒன்னாமன்னா தொட்டுப் பொழங்க உடறியே. அந்த ஆளுவளோட உம்பையன் குதி போட்டுக்கிட்டு ஓடறதும் ஒடியாரதும் என்னன்னு சொல்லறது? அப்பறம் ஆரு பொண்ணுக் குடுப்பா? அவிய ஊட்டுலதான் போயிக் கட்டோணும்’ என்று குசலம் மூட்டிவிட்டார்கள்.

அதற்கப்புறம் அவள் ‘மரத்து நெவுல்ல கட்டலப் போட்டுப் படுத்திருந்தாலும் போவுதுடா சாமி. நீ எந்த நாயோடவும் சேந்துக்கிட்டுக் கூலி வேலைக்குப் போவ வேண்டாம்’ என்று நிறுத்தினாள். அவனும் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். ‘ஒழுக்கமா இருந்துக்கவம்மா’ என்று சொன்னதெல்லாம் அவளிடம் எடுபடவே இல்லை.

கோபத்தோடு சிலநாள் ஒருவேலையும் செய்யாமல் வேம்படியில் கட்டில் போட்டுப் படுத்துத் தூங்கினான். அம்மா ஏனென்று கேட்கவில்லை. ஒருவேலைக்கும் கூப்பிடவும் இல்லை. அவனுக்கே சலித்துப் போய் பழையபடி காட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கினான்.

பெண் பார்த்துக் கலியாணம் செய்துவிடலாம் என்றால் பெண் கொடுப்பவர்கள் 'கையில் எவ்வளவு பணம் இருக்கிறது' என்பதைத்தான் முதலில் விசாரித்தார்கள். கழுத்து நிறைய நகைகளோடும் மாட்டுவண்டியில் பாத்திரம் பாண்டங்களோடும் மருமகள் வந்து இறங்க வேண்டும் என்பது அவளுடைய எதிர்பார்ப்பு. ஆனால் அவளுக்கு இருப்பது பாறைமேல் ஓலைக் கொட்டகை. ஓட்டுவீடுகூட இல்லை. வந்த பெண்களை எல்லாம் நொட்டை சொல்லி மறுத்துவிட்டாள். ஊரிலிருக்கும் மாமன்களும் அப்புச்சி அம்மாயியும் எல்லாம் செய்வார்கள் என்று அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்களும் குமரேசனுக்குப் பெண் பார்த்தார்கள். அங்கே இருக்கிறது, இங்கே இருக்கிறது என்று ஆளாளுக்குக் கை காட்டினார்களே தவிர ஒன்றும் முடிவாகவில்லை. முடிவானால் செலவு செய்ய வேண்டி வந்துவிடுமோ என்று மாமன்கள் வேண்டுமென்றே தவிர்ப்பது போலக்கூடக் குமரேசனுக்குத் தோன்றியது. இப்படியே போனால் கலியாணம் ஆகுமா என்னும் சந்தேகமே வந்துவிட்டது. கையில் காசிருந்தால்தான் எல்லாம் என்று அப்போதே பேச ஆரம்பித்தான். வேலைகளில் அவனுக்கு ஈடுபாடு இல்லாமல் போயிற்று.

எல்லாவற்றையும் முட்டைக்கார பாயிடம் சொல்லிப் புலம்பினாள். பாய் அப்போது ஏதும் சொல்லவில்லை. 'பாக்கலாம்மா' என்றதோடு சரி. அடுத்த வாரம் வந்தபோது அவர் ஒரு யோசனை சொன்னார். தோலூரில் அவருடைய சொந்தக்காரர் ஒருவர் நான்கைந்து சோடாக் கடைகள் வைத்திருந்தார். அங்கே போய் ஒரு வருசம் வேலை செய்து எல்லாவற்றையும் பழகிக்கொண்டு

வந்தால் இங்கே சொந்தமாகக் கடை வைத்துவிடலாம். காட்டையும் ஆடு மாடுகளையும் பார்த்துக்கொண்டு சோடாக்கடையைப் பார்ப்பது சுலபம்தான்.

அவர் சொன்னார், 'ஏம்மா . . . இந்தக் காலத்துல மேட்டுக்காட்டுல மண்ணச் சொரண்டிக்கிட்டுக் கெடந்தா காலத்திக்கும் இப்பிடியேதான் கெடக்கோணும். வேற ஒன்னையும் கூட வெச்சிக்கிட்டாதான் நல்லது.'

அவருக்குச் சோடாக்கடை பற்றி ஏராளமாகத் தெரிந்திருந்தது.

'பத்துப் பொட்டிக்கட புடிச்சிக்கிட்டாப் போதும். இன்னைக்குத்தான் ஊரூருக்குச் சாராயக்கட இருக்குது. அவனவன் சாராயத்துக்குச் சோடா வேணுங்கறான். அப்பறம் செவ்வாச்சந்த, சனிச்சந்தயின்னு வாரம் ரண்டு சந்தக்கிச் சோடாவும் கலரும் கொண்டோனாப் போதும். குடும்பத்தத் தாட்டீரலாம்' என்றார் அவர்.

பையனை ஒருவருசம் வெகுதூர ஊருக்கு அனுப்ப அவளுக்குத் தயக்கம். 'இங்க பக்கத்துலயே எதும் பாக்க முடியாதா பாயண்ணா' என்றாள்.

'ஏம்மா . . . நானெல்லாம் அப்பிடி நெனச்சிருந்தா இங்க வந்து உங்ககிட்டப் பேசிக்கிட்டிருக்க முடியுமா? வெளியில போனாத்தான் நாலு விசயம் தெரியும். கையில நாலு காசு பொழங்கும். ஆம்பள இருக்கற ஊடா இருந்தா இந்நேரம் பையனுக்கு வம்பாடு பட்டாச்சும் சேத்தி வெச்சிருப்பீங்க. ஒருத்தி பொம்பள வேல செஞ்சு பையன ஆளாக்குனதே பெரிசு. இப்ப றக்க மொளச்சு நிக்கறான். உடுங்க. நாலு எடம் பறந்து போயி நல்லா எர தேடிக்கிட்டு வரட்டும்' என்று பலவிதமாகப் பேசி அவளிடம் சம்மதம் வாங்கினார்.

குமரேசனுக்குக் கொண்டாட்டமாக இருந்தது. காட்டு வேலை பிடித்திருந்தாலும் அம்மாவின் முகத்தையும் ஆடு மாடுகளின் முகத்தையும் மட்டுமே பார்க்க வேண்டியிருந்தது. புதுப்புது மனித முகங்களைக் காண்பதில் அவனுக்கு உற்சாகம் அதிகம். திரும்பத் திரும்பக் கிணற்றின் சுவர்களுக்கு இடையே நீச்சல்

அடிப்பதில் சலித்துப் போயிருந்தான். கை கால்களை விரித்துப் போட்டுப் பரந்த சமுத்திரத்தில் நீந்துவது அவன் விருப்பம்.

குமரேசனை அழைத்துச் செல்வதற்காகவே அவர் சீக்கிரமாய் ஊருக்குக் கிளம்பினார். அம்மா கட்டுச்சோறு கட்டிக்கொடுத்தாள். அவர் சிரித்தார். 'அந்தக் காலமாட்டம் நெனச்சுக்கிட்டீங்களா? நடந்தா போவப்போறம்? பொழுதோட பஸ் ஏறுனாக் காத்தால அங்க கொண்டாயி உட்டர்றான். வழியெல்லாம் புரோட்டாக் கட கெடக்குது' என்றார். அவள் கேட்கவில்லை. கட்டுச்சோத்து மூட்டையோடு பஸ் ஏறிக் குமரேசன் தோலூர் வந்து சேர்ந்தான்.

அவன் எதிர்பார்த்ததைவிடவும் அந்நகரம் பெரிதாய் விரிந்திருந்தது. நடக்க நடக்க வீதிகள் தீரவில்லை. எல்லாம் ஒன்றுபோலவே தெரிந்தன. பெரிய பெரிய தியேட்டர்கள் இருந்ததைக் கண்டான். அது பெரிய சந்தோசமாய் இருந்தது. திரைப்படம் பார்ப்பதில் அவனுக்கு மிகுந்த ஆசை. அம்மாவிடம் அனுமதி வாங்கி ஒருபடம் பார்ப்பதற்குள் உயிர் போய் உயிர் வரும். 'காசக் கொண்டோயிக் குடுத்துட்டு ஆட்டம் பாத்துட்டு வர நாமென்ன மிட்டா மிராசா' என்பாள். இங்கே அம்மாவின் தொந்தரவு இல்லாமல் வாரம் ஒருபடம் பார்க்கலாம்.

முட்டைபாயின் சொந்தக்காரரர் சோடாபாய். அவருக்கு நகரத்தைச் சுற்றிலும் ஐந்து சோடாக்கடைகள் இருந்தன. கடை என்றால் விற்பனை செய்யும் இடமல்ல. சோடா தயாரிக்கும் இடம். ஒவ்வொரு கடையும் எங்காவது சந்துக்குள் சிறுஅறை ஒன்றில் இருந்தது. தயாரித்துச் சைக்கிளில் கொண்டு போய்ப் பெட்டிக்கடைகளுக்குப் போட வேண்டும். சோடாவையும் கலரையும் விற்பனை செய்வன பெட்டிக்கடைகள்தான். தோலூரில் 'பங்க் கடை' என்று சொன்னார்கள். முதலில் குமரேசனுக்குப் புரியவில்லை. கரட்டூரில் பெட்ரோல் பங்க் இரண்டு இருந்தது. பெட்ரோல் பங்குக்குள் வைத்திருக்கும் கடை என்று நினைத்துவிட்டான். அப்புறம்தான் தெரிந்தது பெட்டிக்கடைக்கே அந்தப் பெயர் என்பது. கோலி

சோடாப் பாட்டில்களில் சோடாவும் கலரும் தயாரிப்பார்கள். பெட்டிக் கடைகளில் சிறிய சிமிட்டித் தொட்டிகளில் தண்ணீர் ஊற்றி அதற்குள் சோடாவையும் கலரையும் வைத்திருப்பார்கள். காலி பாட்டில்களை எடுத்துவந்து திரும்பச் சோடா தயாரிக்க வேண்டும். இதுதான் வேலை.

நகரத்தின் கடைக்கோடியில் சோடாபாய்க்கு வரிசை வீடு ஒன்று சொந்தமாக இருந்தது. ஒரே அறை கொண்ட எட்டு வீடுகள். அதில் ஒருவீட்டில் இருந்த சோடாக்கடைதான் குமரேசனுக்கு ஒதுக்கப்பட்டது. சோடாப் பாட்டில்களும் மிஷின், தண்ணீர் தொட்டிகளும் நிறைந்திருந்த அந்த அறைக்குள்தான் அவனுக்கு வேலை. அங்கேயே தங்கிக்கொள்ள வேண்டும். கலர் தயாரிக்க ஜீரா காய்ச்சுவதற்காக மண்ணெண்ணெய் ஸ்டவ் ஒன்றும் சில பாத்திரங்களும் இருந்தன. அவற்றில் சமையல் செய்துகொள்ளலாம். அதை வீடு என்று குமரேசன் கருதவில்லை. அங்கே இருந்தவர்கள் எல்லாரும் வீடு என்று தான் சொன்னார்கள். அவன் வேறு வழியில்லாமல் அறை என்று சொல்லிக்கொண்டான்.

வெளியே எட்டு வீடுகளுக்குமான வாசல் நீளமாகவும் கொஞ்சம் அகலமாகவும் விரிந்திருந்தது. வாசலில் அங்கங்கே புங்கமரங்கள் இருந்தன. கிளைகளைக் குடையாய்ப் பரப்பியிருந்த அவைதான் அவனுக்கு ஆறுதல். சாப்பாட்டுக்கும் அன்றாடச் செலவுக்கும் படிக்காசு கொடுத்து மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம். சம்பளக் காசை அப்படியே மிச்சம் பிடித்து விடலாம். முட்டைபாய் அவருடைய வேலை ஒன்றுக்கும் குமரேசனை நியமித்தார். குறிப்பிட்ட பஸ்ஸில் அவர் அனுப்பும் முட்டைகளை எடுத்துப்போய் அதற்குரிய இடத்தில் சேர்க்க வேண்டும். பொறுப்பான பையன் என்பதால் அந்த வேலையைக் கொடுத்தார். அதற்கு மாதம் ஐம்பது தருவதாகச் சொல்லியிருந்தார்.

முதலில் அவனுக்குச் சோடாக்கடை வேலை எதுவும் தெரியவில்லை. பழக்கிவிடப் பெரியசாமி என்றொருவன் வந்தான். அவனுக்கும் குமரேசனின் வயதுதான் இருக்கும்.

அவனுக்கு ஊர் கொல்லூர். குமரேசனின் ஊரும் அதுவும் ஒரே மாவட்டத்தில்தான் இருந்தன. அவன் நன்றாகவும் பழகினான். முதலில் சோடாப் பாட்டில்களை எப்படிக் கையில் எடுக்க வேண்டும் என்று பழக்கினான். அடுத்து ஒருவாரம் முழுக்கப் பாட்டில் கழுவிக் கொடுப்பதுதான் குமரேசனின் வேலை. பெரியசாமி ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பான்.

‘இந்த லைன் வீட்டுல ஏழெட்டுப் பிள்ளைங்க இருக்குது. மூனு அம்சமா இருக்கும். பாத்துக்கிட்டே இருக்கலாம். என்னய இங்க அனுப்புங்க பாய்னு கேட்டுப் பாத்திட்டன். இங்க அதிக வேல இல்ல, புது ஆளுங்க போதும்னு என்னய டவுனுக் கடையில இருக்கச் சொல்லீட்டாரு’ என்றான். ‘இங்கயே ஒன்னப் பாத்துக் கலியாணம் பண்ணிக்கவேன்’ என்று குமரேசன் சொன்னான். ‘அய்யோ என்னாலெல்லாம் பாக்கத்தான் முடியும். அதுக்கே பயந்து சாவோணும் பாத்துக்க. அப்பிடிக் கலியாணம் பண்ணிக்கிட்டன்னு தெரிஞ்சா ஊருப் பக்கம் போவ முடியாது. எனம் சனத்த உட்டு இங்கயே கெடக்க வேண்டிதுதான். போனமுன்னா வெசம் வெச்சுக் கொன்னுபுடுவாங்க. இல்லீன்னா அடிச்சுத் தூக்கிக் கட்டீருவாங்க’ என்று பெரியசாமி பயத்தோடு சொன்னான். என்றாலும் அவன் பேச்சு எப்போதும் பெண்களைப் பற்றியே இருக்கும்.

முதல் ஒருவாரம் வரிசைவீடுகளில் யார் யார் இருக்கிறார்கள் என்பதே குமரேசனுக்குத் தெரியவில்லை. தலையைக் குனிந்துகொண்டே வெளியே போனான், வந்தான். ஊரிலேயே வயசுப் பிள்ளைகளிடம் முகம் பார்த்துப் பேசியதில்லை. பாறைக் காட்டுக்குள் வீடு என்பதால் அதிகம் பேரைப் பார்க்கவும் வாய்ப்பில்லை. கோயில் நோம்பி போட்டிருக்கும்போது போனால் ஒட்டுமொத்தமாய்ப் பெண்களைப் பார்க்கலாம். அப்போதுதான் நம் ஊரிலும் இத்தனை பெண்கள் இருக்கிறார்களா என்று தோன்றும். யாரிடமும் தனியாகப் பேச முடியாது. ஒருத்தியிடம் பேசினால் அடுத்த நிமிசமே ஊரெல்லாம் தெரிந்துபோகும்.

குமரேசனுக்கென்று ஒருசைக்கிள் கொடுக்கப்பட்டிருந்தது. சோடாப் பாட்டில்களைக் கிரேடுகளிலும் கம்பிப் பெட்டிகளிலும் அடுக்கிக்கொண்டு சைக்கிளில் பெரியசாமி முன்னால் போவான். இரண்டு டஜன் கம்பிப்பெட்டியில் கலர்களை அடுக்கிக்கொண்டு அவனுக்குப் பின்னாலேயே குமரேசன் போவான். சோடாப் போடும் பெட்டிக்கடைகளையும் நகரத்து வீதிகளையும் அறிந்துகொள்ள இந்த ஏற்பாடு. காலை நேரத்தில் ஒருமுறையும் மாலை நேரத்தில் ஒருமுறையும் இந்த நகர்வலம் இருக்கும். மற்ற நேரம் எல்லாம் அறைக்குள் அடைந்து கிடக்க வேண்டியதுதான். அங்கங்கே கிழிந்து தொங்கிய நாடாக் கட்டில் ஒன்று அறை மூலையில் கிடந்தது. அதை எடுத்து விரித்துப் போட்டுப் புங்க மரத்தடியில் பகலில் படுத்திருப்பான். தூக்கமும் வராது. சும்மா இருப்பதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அப்போதுதான் தோன்றியது. சும்மா புரண்டு புரண்டு மரநிழலில் படுத்திருந்தபோது கண்கள் மெலிதாக விரிந்து மூடின. அப்போது வெயிலில் மினுங்கித் தேவலோகப் பெண் போல எதேச்சையாக சரோஜா கண்ணில் பட்டாள்.

0 0 0

# 4

சரோஜா வெகுநேரமாக வேம்பு நிழலடியில் உட்கார்ந்து பாறையிலிருந்து இறங்கி மெல்லச் செல்லும் கொடித்தடத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். குமரேசனை இன்னும் காணோம். பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. ஆடுகளை ஓட்டிக் கொண்டு மாமியார் எங்கோ போய்விட்டாள். எந்நேரம் திரும்புவாள் என்று தெரியாது. ஏதாவது சொல்லிச் செல்வாள் என்று எதிர்பார்த்துப் பாறையின் கடைசிவரை வந்து நின்றாள். மாமியார் இவள் பக்கம் திரும்பவேயில்லை. வார்த்தை எதுவும் வரவுமில்லை. அனாதிவெளியில் தான் மட்டும் நிற்பதாக உணர்ந்தாள். எப்போது மரத்தடி நிழலுக்கு வந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை.

இங்கே அவளுக்குப் பாறைதான் மிகவும் பிடித்திருந்தது. அவள் கால்கள் காரைத் தரைக்கும் மண்ணுக்குமே பழகியவை. பாறையில் கால் வைத்ததே இல்லை. குமரேசனின் கைகளைப் போல மிருதுவான உணர்வும் முரடான தழுவலும் இயைந்து பாறை அவள் கால்களைத் தொட்டது. நடந்து நடந்து சிலிர்த்தாள். ஆனால் எப்போதும் எச்சரிக்கை வேண்டும். லேசாகத் தடுக்கினாலும் கால்விரல் நகத்தைப் பேர்த்துவிடும். குப்புறத் தள்ளி முகத்தை ரணமாக்கும். வெறுங்காலால் நடந்து பார்த்தாள். குழந்தை நடை பழகுவது போல ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தாள். பின் செருப்புப் போட்டு நடந்தாள். போட்டுக்கொண்டால் மேட்டிலும் பள்ளத்திலும் மாறிமாறி நடப்பதாய் இருந்தது.

ஆடுகளை ஓட்டிக்கொண்டிருந்த மாமியார் ‘பாறையில பதிஞ்சா பூம்பாதம் புண்ணுப் பட்டுரும். பாத்து நடங்காயா’ என்று சொன்னது காதில் விழுந்தது. தன்னைச் சொல்கிறாளா ஆடுகளையா என்று குழம்பினாள். சரோஜாவின் பக்கமே திரும்பவில்லை. ஆடுகளையாகத்தான் இருக்கும். தன்னையாகவே

இருந்தாலும் ஆடுகளை என்று எடுத்துக்கொள்வதே நல்லது. ஆனால் அதன்பின் நடை பழகத் தோன்றவில்லை. பாறைவெளியைப் பார்த்தபடி ஓரிடத்தில் உட்கார்ந்தாள். நேற்று முழுக்கக் குமரேசன் எங்கும் செல்லவில்லை. செய்தியறிந்து விசாரிக்க வந்தவர்கள் எல்லாரிடமும் சரோஜாவைக் காட்ட வேண்டியிருந்தது. தான் எந்தத் தப்பும் செய்யவில்லை என்பதை உணர்த்தும் விதமாகச் சிரித்துச் சிரித்துப் பேசினான்.

மாட்டுக் கொட்டகைக் கட்டிலில் சுருண்டு படுத்த மாமியார் எழவேயில்லை. ஆடு மாடுகளைப் பார்க்கும் வேலையைக் குமரேசனே செய்தான். அவனே சமையலிலும் இறங்கினான். சரோஜா உதவி செய்தாள். காட்டு வேலிகளில் மரக்குச்சிகளை வெட்டி வந்து பாறையில் அங்கங்கே சிதறிக் கிடந்த பழைய ஓலைகளையும் பனங்கருக்குகளில் வெட்டிய புது ஓலைகளையும் கொண்டு கட்டிக் குளியலறை உருவாக்கினான். அவன் கை மாயம் செய்து அதை உருவாக்கியதாகத் தோன்றியது. வந்தவர்களிடம் பேசியபடியே இரண்டு மணி நேரம் வேலை செய்திருப்பான். எடுபிடிக்குக் கூட ஆளில்லை. பாறையில் சமதளமான இடம் ஒன்றில் சட்டென அது எழும்பி நின்றது. திறந்து மூடும் படல் கதவு. அவள் குமரேசனின் கைகளையே பார்த்தாள். அவற்றின் ஒவ்வொரு அசைவும் கணிக்க முடியாததாக இருந்தது.

அதை முடித்தபின் குடத்தை எடுத்துக்கொண்டு கிணற்றுக்குப் போய்த் தண்ணீர் கொண்டு வந்தான். தூரம். ஒருகுடம் கொண்டு வர நேரமானது. குளியலறைக்குள் மொடா ஒன்றைக் கொண்டு போய் வைத்தான். பெரிய மொடா. அதைத் தொட்டுப் பார்த்தாள். அவளால் அசைக்கவே முடியவில்லை. அவன் சட்டெனக் குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு போவது போல மொடாவைக் கொண்டு போய் உள்ளே வைத்தான். சிறிய வாய்க்குள் பெரும் வயிறு திரண்ட மொடா. உள்ளே குனிந்து குனிந்து

பார்த்தாள். ‘தல மாட்டிக்கப் போவுது’ என்று கேலி செய்தான். தண்ணீர் கொண்டு வரத் தயாரான அவளை வேண்டாம் என்று சொன்னான். ‘அப்பறம் நீதான கொண்டாரோணும். கொஞ்ச நாள் போவட்டும்’ என்றான்.

அவன் வேலைகளில் எல்லாவற்றையும் கரைக்க நினைத்தது அவளுக்குப் புரிந்தது. விசாரிக்க வந்தவர்களில் ஒருத்தி ‘பொண்டாட்டி வந்ததியும் தண்ணி வாத்துக்கத் தடுப்புக் கட்டிட்டான். இத்தன நாளு அம்மாளுந்தான் இருக்கறா. அவளுக்கு ஒரு மறப்பும் காணாம்’ என்றாள். ‘தாயும் பொண்டாட்டியும் ஒன்னா?’ என்று இன்னொருத்தி கேட்டாள். எல்லாரும் சிரித்துக்கொண்டே ஊசியை ஏற்றுவது மாதிரி இருந்தது. குமரேசன் அதற்கெல்லாம் பதில் பேசவேயில்லை. அவன் சார்பில் ஆண் ஒருவர் ‘பிள்ள பட்டணத்தில இருந்து வந்திருக்குது. உங்களாட்டம் வெட்டவெளியில அவுத்துப் போட்டுக்கிட்டுத் தண்ணி ஊத்திக்குமா. வின்னப்படாத ஊத்திக்க மறப்பு வேண்டாமா’ என்றார். ‘எங்க மேனியெல்லாந்தான் வின்னப்பட்ட மேனி. அது தங்க மேனி. அப்படியே எடுத்துக் கழத்துல மாலயாப் போட்டுக்குங்க’ என்று பழிப்புக் காட்டினாள் ஒருத்தி.

ஓலைத் தடுப்புகளால் ஆன குளியலறைக்குள் முதல் முறையாகக் குளித்தாள். மேலே வானம் முழுவதுமாய்த் தெரிந்தது. பனைகள் எல்லாம் தலை நீட்டிப் பார்த்தன. காற்றில் அவை அசைவது அவளை நோக்கிக் குனிவதாய் இருந்தது. குருவிகள் இரண்டு அவளைக் கண்டு விலகிப் பறந்தன. தடுக்குக்குள் உடைகளைக் களையவே வெட்கமாக இருந்தது. ஒருவழியாக வேகமாய்க் குளித்து வெளியேறினாள். கொட்டகைக்குள் புகுந்தால் அங்கும் ஓலை. என்னவோ சரசரத்தது. ஒவ்வொரு சலனமும் அவளுக்குள் திகிலை மூட்டின. இங்கே எப்படி இருக்கப் போகிறோம்? பாறை பழகுமா. பனைகளோடு சினேகம் உருவாகுமா. குளிப்பதைப் பார்த்துப் போன பறவைகள் என்ன நினைத்திருக்கும்? குமரேசனிடம் கேட்டால் ‘மோகினி குளிக்கறான்னு ஊரெல்லாம் போய்ச் சொல்லும்’ என்று ஏதாவது சொல்லிச் சிரிப்பான்.

அப்படியா, மோகினியா நான். அதனால்தான் அவனை மயக்க முடிந்ததா. எதையும் கற்பனைகூடச் செய்ய முடியாதபடி ஆட்கள் வந்தபடியே இருந்தார்கள்.

குமரேசனிடம் சிரித்துப் பேசியவர்கள் மாமியார் படுத்திருந்த கொட்டகைக்குள் போய்த் துக்கம் விசாரித்தார்கள். ‘எதோ பெரியகாரியம் நடந்திருச்சுன்னு எழவு காங்க வந்திருக்கறாங்க’ என்று அவளிடம் சொல்லிச் சிரித்தான். ‘பெரியகாரியம்னா சாவு’ என்று காதுக்குள் சொன்னான். அவளால் அதை ரசிக்க முடியவில்லை. முகம் இருள அவனையே பார்த்தாள். கன்னத்தைச் சுட்டுவிரலால் ஒரு தட்டுத் தட்டி விட்டு ‘எல்லாஞ் . . . சரியாயிரும்’ என்று நகர்ந்தான். அதை ரசித்து ஏற்றுக்கொண்டாள். வந்தவர்களிடம் ரொம்ப நாள் உடம்பு முடியாமல் படுத்திருப்பவளைப் போல மெலிதாய் வார்த்தைகளைப் பேசினாள் மாராயி.

இன்றைக்குக் காலையில் சாப்பிட்டபின் குமரேசன் கிளம்பிப் போனான். சோடாக்கடை வைப்பது தொடர்பாகச் சிலரைப் பார்த்து வருவதாகச் சொன்னான். அவன் போனதும் அவ்வப்போது ஒவ்வொருவர் வந்தனர். அப்படி வரக்கூடும் என்பது குமரேசனுக்கும் தெரியும். அவன் சொல்லியிருந்தான், ‘எனக்கு மட்டுமில்ல, இப்ப இந்த ஊருக்கே அரிசியம் நீ. உன்னயப் பாக்கச் சுத்துப்பட்டு ஊர்கள்ல இருந்து வண்டி கட்டிக்கிட்டு வந்தாலும் வருவாங்க பாரு. வர்றவங்க கிட்ட வாய் தொறந்தராத. அப்பறம் அப்பிடி இப்பிடிக் கிண்டிக் கெளறி எல்லாத்தயும் புடுங்கீருவாங்க. ஆடி அடங்க உட்டம்னாத்தான் அப்பறம் நம்ம பேச்சு எடுபடும். உசாரா இருந்துக்க.’

யாருடைய குரலாவது கேட்டால் உடலில் சிலிர்ப்போடியது. கைகால்கள் விறைத்துக்கொள்கிற மாதிரி நடுக்கம். கொட்டகைக்குள்ளேயே இருந்தாள். அதனால் எல்லாரும் சீராயிடம் போய் விசாரித்தார்கள். இன்றைக்கு அவள் எழுந்து நடமாடினாள். வாய் மட்டும் இடைவிடாமல் முனகிக் கொண்டே இருந்தது. ஓலைச் சரசரப்புப் போல அவள் காதில் பொருளற்று அது

விழுந்துகொண்டேயிருந்தது. பொருள் புரிபடாததால் ரொம்ப பயமாக இருந்தது. காதுகளை எவ்வளவோ கூர் தீட்டிக்கொண்டாலும் சொற்கள் பிரிபடவே இல்லை. வருபவர்களிடம் ‘கொமுரி ஒருத்தியக் கொண்டாந்து கொட்டாயிக்குள்ள கூடையப் போட்டு மூடி வெச்சிருக்கறான். மொட்டிடுமோ அட படுக்குமோ எல்லாம் ஊளயாப் போவுமோ ஆரு கண்டா’ என்று வாய்க்கு வந்த மாதிரி எல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள் அவள்.

‘நேத்து முழுசும் படுத்தே கெடந்தன். ஒருவாய் நீத்தண்ணி குடிச்சயான்னு கேக்க ஆளில்ல. ஒருசாண் வவுறு இருக்குதே. அந்தப் பொழப்புக்குத்தான் இன்னைக்கு எந்திரிச்சு நடமாடறன். எனக்கு ஒரு போங்காலம் வந்திருச்சின்னா இந்தக் கருமாந்தரத்தயெல்லாம் கண்ணுல பாக்காத இருக்கலாம். கொண்டவனத் தின்ன அந்தக் கூத்துவன் என்னயத் தேடி எப்ப வரப் போறானோ தெரீலியே’ என்று புலம்பினாள்.

சில பேர் கொட்டாயிக்கு முன்னால் வந்து நின்றுகொண்டு ‘அட பொண்ணுப் பிள்ள வெளிய வா. உன்னயப் பாக்கத்தான வந்திருக்கறம். உள்ள போயி நோண்டி கோமணத்துக்குள்ள பூந்துக்கறாப்பல ஒளிஞ்சிருந்தா எப்பிடி’ என்று வலுக்கட்டாயமாக அவளை அழைத்தார்கள். பூனை போல முகத்தை வெளியே காட்டினாள் சரோஜா. குனிந்த தலையை நிமிர்த்திய ஒருத்தி ‘மூஞ்சியெல்லாம் வெளிரோடிக் கெடக்குது. எங்கயோ சோத்துக்குச் செத்தவளாட்டம் இருக்குது. இவளப் போயி நோண்டி புடிச்சாந்து இருக்கறானே, இவளால ரண்டு பேருத்துக்குச் சோறாக்கிக்கூட வெக்க முடியாதாட்டம் இருக்குது. வெள்ளாமக் காலத்துல களவெட்டுவாளா, கருது பொறுக்குவாளா, காய் புடுங்குவாளா’ என்று பேசிக்கொண்டே போனாள்.

இன்னொருத்தி ‘உம்பேரு என்னாயா?’ என்றாள். ‘நானென்ன ஆயாவா? அப்படியா எனக்கு வயதாகித் தெரிகிறது’ என்று நினைத்துக்கொண்டாலும் கேட்காமல்

‘சரோஜா’ என்றாள். ‘ம். சரோசாவாம். சரோசாதேவியாட்டம் பொறந்திருக்கிறீன்னு இந்தப் பேரு வெச்சாங்களா’ என்று அவள் நொடித்தாள். ‘உங்கிட்ட ஒரே ஒரு விசியத்தக் கேக்கோணும்னுதான் வந்தன். கேக்கட்டுமா?’ என்று கிசுகிசுத்தாள். சரோஜா என்ன என்பது போலப் பார்த்தாள்.

‘இந்த நோண்டிய எப்பிடி மயக்குன? இந்தூருப் பிள்ளைங்க அஞ்சாறு பேரு இவனுக்கு நோட்டமுட்டுப் பாத்தாங்க. ஒன்னுக்கும் மசியில. பொண்ணுங்களக் கண்டாத் தலய நட்டுக்கிட்டுப் போயிருவான். பண்ணயத்துக்கு வர்ற பொம்பளய வெள்ளாமக் காட்டுக்குள்ள கூட்டியோார ஆம்பளைங்க இருக்கற ஊரு இது. இவன் எதுக்கும் அசையில. நீ மட்டும் என்னத்தக் காட்டுன சொல்லு. எப்பிடிப் பேசுன? எங்க பாத்த? பழவுனது எப்பிடி? கொஞ்சம் சொல்லாயா. எம்புரசன் ஒரு மொரட்டு நாயி. நீ சொல்றாப்பல செஞ்சு பாக்கலாம்னு தான் கேக்கறன். வெக்கப்படாத சொல்லு ஆமா.’

அவள் சரோஜாவின் தாடையைப் பற்றிக் கெஞ்சுவது போலக் கேட்டாள். கேட்டுக்கொண்டே இருந்தாள். அவமானமாகவும் எரிச்சலாகவும் இருந்தது. மெல்ல நழுவி சரோஜா உள்ளே போய்விட்டாள். ‘எத்தன நாளைக்கு உள்ளாரயே ஒளிஞ்சிருப்ப. இந்த மூஞ்சிய வெயிலுக்குக் காட்டித்தான ஆவோனும். அப்ப உங்கிட்ட விலாவாரியாக் கேட்டுக்கறன்’ என்று சொல்லிவிட்டுப் போனாள். அவள் போய்த் தொலைந்தால் போதும் என்றிருந்தது.

குமரேசன் இன்னொன்றையும் சொல்லியிருந்தான். ‘எங்க மாமமூட்டுக்கு இந்நேரம் சேதி தெரிஞ்சிருக்கும். எல்லாரும் சேந்து வந்தாலும் வந்திருவாங்க. அப்பிடி வந்தா நீயொண்ணும் பயப்படாத. கேக்கறதுக்கு அளவாப் பேசு.’ ஆனால் மத்தியானம் வரைக்கும் ஒருவரும் வரவில்லை. போன குமரேசனையும் காணவில்லை. வெயிலின் நிற மாற்றங்களை இத்தனை விதமாக இதுவரை அவள் கண்டதில்லை. பளீரென்று அடிக்கும் வெயில் சிறுமேகத்தின் மூடலில் நிழலாகக் காடெங்கும்

பரவியது. கொஞ்ச நேரம் எங்கும் நிழல். பின் மெதுமெதுவாக மேகம் விலக விலக வெயிலும் வெளிவந்தது. வானத்தையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தாள். கழுத்து வலிக்கும் வரைக்கும் பார்வை அசையவில்லை. வெயில் ஏறுவதை வெம்மை கொண்டும் தூரக்காட்சியில் மயமயப்பு ஏற்படுவதை வைத்தும் அறிந்தாள். வெயிலோடு விளையாடிக்கொண்டிருந்ததில் நேரம் போயிற்று.

குமரேசன் சீக்கிரம் வந்துவிடுவான் என்று நினைத்தாள். என்ன வேலையோ தெரியவில்லை. இன்னும் காணோம். வெயிலில் பொசுங்கும் பாறைக்குள் பார்வை நின்றது. வழிந்தோடி உறைந்துவிட்ட ரத்தத்தின் நிறத்தில் பாறை படுத்திருந்தது. ஓரிடத்தில் ஓராள் நீட்டிப் படுத்துக்கொள்ளும் அளவுக்குப் பாழிக்குழி இருந்தது. மழைநாளில் அதில் நீர் தேங்குமாம். பங்குனி முடிந்து சித்திரை பிறந்தால் கோடை மழை பெய்யுமாம். அப்போது பாழிக்குழியைச் சுத்தம் செய்து வைத்துவிட்டால் அது நிறைந்துவிடும். ஒரு மாதத்திற்குத் தண்ணீர்ப் பிரச்சினையே இருக்காதாம். குடத்தைத் தூக்கிக்கொண்டு எங்கும் போக வேண்டாமாம். குமரேசன் ராத்திரிச் சொன்னான். பாறையின் எல்லாப் பக்கமும் நடந்து முழுவதையும் தன் காலின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்று ஆசையாக இருந்தது.

திடுமென யாரோ வருவது போலச் சத்தம் கேட்டுக் காட்டுப்பக்கம் திரும்பினாள். பாட்டி ஒருத்தி கூடையைச் சுமந்துகொண்டு வந்தார். சரோஜா எழுந்து நின்றாள். மரநிழலுக்கு வந்து ‘பொன்னு . . . கூடைய ஒருகை குடுத்து எறக்காயா’ என்றார். சரோஜா இறக்கக் கை கொடுத்தாள். பாட்டி மையை அப்பியது போல இருந்தார். முகம் முழுக்க வேர்வை. ‘ஸ் . . . அப்பாடா. கூடயச் செமந்துக்கிட்டுக் காடுகாட்டுக்கு அலய முடியல போ’ என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே உட்கார்ந்தவர் ‘பொன்னு . . . தண்ணி கொண்டாயா’ என்றார்.

கூடைக்குள் மூடியிருந்த துணிக்கடியே காய்கள் தென்பட்டன. சரோஜா கொடுத்த தண்ணீரை வாங்கிக் குடித்துவிட்டுப் பாட்டி ‘புதுப்பொண்ணு வந்திருக்குதுன்னு சொன்னாங்க. நல்லா அழவாத்தான் இருக்கற. எங்கண்ணே பட்டிருமாட்டம்’ என்று சொன்னார். இரண்டு கைகளையும் நீட்டி சரோஜாவின் முகத்தைத் தடவி எடுத்து நெட்டி முறித்தார். சரோஜாவுக்குக் கூச்சமாக இருந்தது. ‘உம் மாமியா இல்லியா’ என்றார். ‘ம்கும்’ என்றாள் சரோஜா. ‘வாயத் தொறக்கக் காசு கேப்பியாட்டம் இருக்குது’ என்று சிரித்தார் பாட்டி.

‘ஆமா பங்குனி மாசத்திலயா கலியாணம் பண்ணிக்கிட்டீங்க. பங்குனிக் கலியாணம் பாழுன்னு சொல்லுவாங்க. பங்குனிக் கலியாணம் மங்கிலியத்துக்கு ஆவாதுன்னு செலவாந்தரம் சொல்லும். அப்பிடி என்னாயா அவசரமாயிப் போச்சு’ என்று கேட்ட பாட்டி சரோஜாவின் முகத்தைத் தீவிரமாக ஆராய்ந்தார். ‘நோண்டிப் பய சும்மா இருக்காத வவுத்துலகீது குடுத்துட்டானா. மூஞ்சியப் பாத்தா மூனு நாலு மாசத்துக்கு முந்தியே காள சேந்த கெடாரியாட்டம் இருக்கற’ என்றார். பாட்டியின் கேள்வி புரிந்ததும் சரோஜா முகம் சிவந்தாள். சட்டெனத் திருப்பிக்கொண்டாள். ‘செரியாயா உன்னய ஒன்னுஞ் . . . சொல்லுல. இந்தப் பக்கம் திரும்பு. பங்குனிக் கலியாணமின்னதும் எனக்குக் கொஞ்சம் சந்தேகம். அதுதான். பனங்கா கனிஞ்சாத் தானாக் கீழ உழுவுது.’ பாட்டியின் குரல் கொஞ்சநேரம் கேட்கவில்லை. சரோஜா பாட்டியின் பக்கம் திரும்பினாள்.

சுதாரித்துக்கொண்ட பாட்டி ‘சொரக்காயும் பீக்கங்காயும் இருக்குது. வேணுமா?’ என்று கேட்டார். அவற்றை வாங்குவதா வேண்டாமா என்று அவளுக்குத் தெரியவில்லை. யோசிப்பதைக் கண்டு ‘அன்னைக்கே உம் மாமியா கொண்டாரச் சொன்னா. இந்தா . . . எடுத்து வெய்யி. ரண்டு நாக் கழிச்சு வருவன். அப்பக் காசு வாங்கிக்கறன். கலியாணம் பண்ணிக்கிட்டாக் காரியக்காரன். இன்னமே உம்பிரசங்கிட்டயே காசு

வாங்கி வெய்யி. இதுல பூக் கொஞ்சம் இருக்குது. புதுப் பொண்ணு . . . தலைக்கு வெச்சுக்க. காசு வேண்டாம்' என்றவர் காய்களையும் உள்ளங்கை நீளப் பூச்சரத்தையும் எடுத்து சரோஜாவிடம் நீட்டினார். தயக்கத்தோடே அவற்றை வாங்கிக் கொண்டுபோய்க் கொட்டாய்க்குள் இருந்த தண்ணீர்ப் பானைமேல் வைத்துவிட்டு உள்ளேயே நின்றாள்.

அவள் வெளியே வராததைக் கண்டு பாட்டி 'வந்து கூடயத் தூக்கி உட்டுட்டு அப்பறம் போயிக் கட்டல்ல கெடந்துக்க. புதுப்பொண்ணு ராத்திரித் தூக்கமிருக்காது. இன்னங் கொஞ்ச நாளைக்கு நோண்டிப்பயன் உன்னய நோண்டி நொங்கெடுத்துப் புடுவான். தூக்கி உட்டுட்டுப் போயித் தூங்காயா' என்று அழைத்தார் பாட்டி. வெறுப்புடன் சரோஜா வெளியே வந்தாள். சரோஜாவின் கழுத்தில் கிடந்த சங்கிலியைச் சட்டெனத் தொட்டுப் 'பவுனா கண்ணு' என்றார். 'ம்' என்று மட்டும் சரோஜா பதில் சொன்னாள். 'டவுனுப் பக்கமெல்லாம் பவுனு மாதிரியே பித்தாளச் சங்கிலி வந்திருக்குதுன்னு சொல்றாங்க. அதான் கேட்டன்' என்றார்.

சங்கிலியை உருட்டி உருட்டிப் பார்க்கும் கையை மெல்ல விலக்கி விடுவித்த சரோஜாவுக்குப் பயமாக இருந்தது. 'எத்தன பவுனு?' என்றார் பாட்டி. சுருக்கம் மொய்த்த முகத்தில் ஆர்வம் பொங்கியது. கேட்டுக்கொண்டு போய் ஊர் முழுக்கப் பரப்பிவிடுவார் பாட்டி என்று தோன்றியது. அதிகமாகச் சொல்லி வைப்போமா என்று நினைத்தாள். அதுவும்கூட ஏதும் பிரச்சினையைக் கொண்டு வந்துவிடுமோ. மெதுவாகச் சிரித்து வைத்தாள். பாட்டிக்கு எப்படிப் புரிந்துகொள்வது என்று குழப்பமாக இருப்பது முகத்தில் தெரிந்தது. அந்தக் குழப்பத்தை ரசித்தாள் சரோஜா.

பாட்டி அத்தோடு விடுபவளாக இல்லை. 'இங்க பக்கத்துல வாயா' என்று அழைத்துக் கிசுகிசுப்பாய்ச் சொன்னாள். 'நீ என்ன குலமோ எனமோ எனக்குத் தெரியாது. ஆனா இவுங்ககிட்டப் பாத்து இருந்துக்க. ஒத்தயாப் பாறக்காட்டுல கொண்டாந்து

வெச்சிருக்கறான் அந்த நோண்டிப்பயன். அவனுக்கு அப்பம்பக்கத்துச் சொந்தம் அதிகமில்ல. பங்காளி பரக்காளி ஒருத்தன் ரண்டு பேரு வருவான். மத்தபடி ஒண்ணுமில்ல. ஆனா அம்மா பக்கத்துச் சொந்தம் கொசக்கொசன்னு கொட்டப்புழுவாட்டம் கெடக்குது. மாமன், அப்புச்சின்னு பெருத்த சனம் அந்தச் சொந்தத்துல இருக்குது. ராத்திரியோட ராத்திரியாக் கொரவளய நெரிச்சுக் கொன்னு கொட்டாயில தூக்கிக் கட்டீருவாங்க. நீலப்பொடியக் கொழகொழன்னு கரச்சுத் தடவி உட்டுட்டு பாம்பு தீண்டீருச்சுன்னு சொல்லீருவாங்க. நோண்டி ஒரு ஒடக்காம்பய. வேலியக் கண்டெடத்துல தாவீருவான். ஆள அந்தப் பக்கம் போவ உட்டுட்டு உன்னய அடிச்சுத் தொரத்தீருவாங்க. என்ன வேண்ணாலும் செஞ்சிருவாங்க. பாத்துப் பதனமா இருந்துக்க' என்ற பாட்டி சரோஜாவின் முகத்தைப் பார்த்தார். வெளுத்துப் பயம் படர்ந்திருந்தது.

'கலியாணம் பண்ணிக்கிட்டு நேரா இங்க வந்திட்டீங்களா? இல்ல அரசாங்கத்துல பதிவு பண்ணுணீங்களா?' என்றார். சரோஜா வாய்க்குள்ளேயே 'பதிவு பண்ணுல' என்றாள். 'அவன வக்குபறுத்தி மொதல்ல போயிப் பதிவு பண்ணீரு. அதுதான் உனக்குப் புடிமானம். எதுனா ஒன்னுனா அரசாங்கம் வந்துரும்னு பயப்படுவாங்க. சாதி சனத்த உட்டுட்டு இவன நம்பி இங்க வந்திருக்கற. உனக்குன்னு ஆரிருக்கறா. உம்பக்கம் பேச ஒருநாயும் வராது. புடிச்சது புளியங்கொம்புதான். ஆனா கெட்டியாப் புடிச்சுக்கோனுமில்ல.'

பாட்டி அதற்கு மேல் என்ன பேசினாள், எப்போது போனாள் என்பதொன்றும் சரோஜாவுக்கு நினைவில்லை. கொட்டாய்க்குள் போவதற்கே நடுங்கியது. அவளை அறியாமல் பார்வை கூரை முகட்டை அண்ணாந்து பார்த்தது. குமரேசனை நம்பி இவ்வளவு தூரம் வந்தது தவறோ என்று யோசனை விரிந்தது. இதுவரைக்கும் குமரேசன் மேல் துளி சந்தேகம்கூட வரவில்லை. அவன் நல்லவனாக இருந்தாலும் சுற்றியிருக்கும் சொந்தங்களை எப்படி நம்புவது? மதியச் சாப்பாட்டு வேளை கடந்தும்

அவளுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. மரத்தில் ஏறும் எறும்புகள் அவள் மேலும் ஊர்ந்தன. அப்படியே அடித்து வைத்த சிலை போல உட்கார்ந்திருந்தாள். நாலாப்புறமிருந்தும் மனித முகங்கள் அவளை மொய்த்தன. அவற்றிடம் இருந்து விடுபட முடியாமல் கூசிக் குறுகினாள். விதவிதமான கைகள் அவள் முகத்தைப் பிறாண்டின. ரத்த விளாறுகள் தெறிக்கக் கத்திக்கொண்டு ஓடினாள். எதெதற்குள்ளோ அவள் மூழ்குவதாகக் கற்பனை போய்க்கொண்டே இருந்தது.

வெகுநேரத்திற்குப் பிறகு சைக்கிள் சத்தம் கேட்டு யோசனை கலைந்து எழுந்து பார்த்தாள். குமரேசனல்ல. அவன் வயதே இருக்கும் ஒருவன் சைக்கிளில் சர்ரென்று வந்து அவள் மேல் இடிப்பது போல நிறுத்தினான். துருவேறித் தகர டப்பா போன்றிருந்த சைக்கிள். சீட்டி கிழிந்து அலங்கோலமாயிருந்தது. அவன் கோவண வால் வெளித்தெரிய விட்டு மேலே வேட்டியைப் பேருக்குச் சுற்றியிருந்தான். தலையில் துண்டு. அவளைப் பார்த்துச் சிரித்தான். அவன் பார்வை அவளை விழுங்கிவிடுவது போலிருந்தது. சிரிப்பில் சலவாய் வழிந்து சொட்டியது. கொட்டாய்க்குள் ஓடிவிடலாமா என்று நகரப் பார்த்தாள்.

அவன் சிரிப்பு மாறாமல் ‘நான் கொமரேசனுக்குப் பங்காளிதான். தம்பி மொறையாவுது’ என்றான். அவளுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. மெல்லச் சிரிக்க முயன்றாள். ‘அவனுக்குச் சின்னப்பாட்டன் பேரன் நான். என்னயப் பாரேன். அப்பிடியே கொமரேசஞ் . . . ஜாட தெரியும்’ என்று விழிகளை மேலுருட்டி அவளைப் பார்த்தான். அப்படி ஒன்றும் தெரியவில்லை. குமரேசனுக்குப் பக்கத்தில்கூட நிற்க லாயக்கற்றவன் என்று நினைத்தாள். ‘நான் பாக்கங் காட்டி உன்னய அவன் பாத்துட்டான்’ என்று முணுமுணுப்பது போலச் சொன்னான். அது அவளுக்குக் கேட்க வேண்டும் என்றே சொல்லியதுதான்.

கிழபுறம் திரும்பி ‘அதா அங்க தெரியுது பாரு ஓட்டு ஊடும் மாட்டுக் கொட்டாயும். அதுதான் எங்கூடு. கொமரேசன் இல்லீனா ஒருசத்தம் வெள்ளயான்னு

கூப்புடு போதும், ஓடியாந்திருவன். எந்த நேரம்னாலும் கூப்புடு வந்தர்றன். நீ எனக்கு அண்ணம் பொண்டாட்டிதான். அவன் என்னோட ஒருமாசம் மூத்தவன்' என்றான். சைக்கிளை விட்டு இறங்காமல் அப்படியே நின்றான். போய்விட்டால் பரவாயில்லை என்று நினைத்தாள். மரத்துக்கும் சைக்கிளுக்கும் இடையே அவள் நின்றிருந்தாள். கிட்டிக்குள் மாட்டிய மாதிரி.

'பொறந்தப்ப வெள்ளையா இருந்தனாம். அதான் வெள்ளயன்னு பேரு வெச்சிட்டாங்க. காட்டுல மேட்டுல வெய்யில்ல திரிஞ்சு இப்பக் கொஞ்சம் கறுத்துப் போயிட்டன். ஆனாலும் கொமரேசன உட நெறந்தான். உன் நெறத்துக்குப் பொருத்தமா இருப்பன்' என்றான் அவள் முகத்தை ஆராய்ந்தபடி. சைக்கிள் டயரைக் கையால் அழுந்தத் தள்ளிக் கிட்டிக்குள் இருந்து விடுபட்டுக் கொட்டாயை நோக்கி நடந்தாள்.

'எனக்கு நீ நங்க மொற. இந்தக் கொழுந்தனாரு சும்மா வல்ல பாத்துக்க. உம்பிரசங்கிட்ட இருந்து ஒருசேதி கொண்டாந்தன். எங்கயோ கட பாக்கறமின்னு போயிட்டான். வர நேரமாவுமாம். டவுன்ல பாத்தன். போயி உன் நங்கயப் பொறப்பட்டு இருக்கச் சொல்லு. வந்து சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போறன்னு சொன்னான். பொறப்பட்டு இரு. வந்திருவான். மொத ஆட்டத்துக்குத்தான்' என்று அவன் கத்தியதைக் கேட்டுக்கொண்டே உள்ளே போய்விட்டாள்.

கட்டுப்படுத்தக் கட்டுப்படுத்த அழுகை பெருகியது. சத்தம் வராமல் அடக்கினாள். வெளியேயிருந்து பேச்சுச் சத்தம் இல்லை. போய்விட்டான் போலிருக்கிறது என்று நினைத்து வெளியே எட்டிப் பார்த்தாள். ஒருபக்கம் காலை ஊன்றிக்கொண்டு இன்னொரு காலைப் பெடலில் வைத்துத் தொடை தெரியச் சைக்கிளில் அப்படியே நின்றபடி அவளைப் பார்த்துப் 'பொறப்பட்டுச் சினிமாவுக்குப் போ. இன்னொரு நாளு நானும் வர்றன். நாமெல்லாம் சினிமாவுக்குப் போலாம். அவங்கிட்ட இருக்கறத உட எங்கிட்டக் காசு எச்சாவே இருக்குது.

எவ்வளவுன்னாலும் தர்றன். போலாம். செரி, வர்ட்டா’ என்றான்.

அவள் சட்டெனத் தலையை உள்ளே இழுத்துக்கொண்டாள். இவனிடமெல்லாம் எதற்குக் குமரேசன் சேதி சொல்லி அனுப்புகிறான் என்று அவன்மேல் கோபமாக இருந்தது. உண்மையாகவே சொல்லியனுப்பினானா இவனாக வந்து சொல்லி நோட்டம் பார்க்கிறானா. இப்படியுமா ஒருத்தன் பேசுவான்? அவன் சிரிப்பும் தொடை காட்டி நின்ற தோரணையும் நினைக்க நினைக்க எரிச்சலாக இருந்தது. குமரேசன் இல்லை என்றதும் ஆளாளுக்கு இப்படி வந்து பயமுறுத்துகிறார்களே.

கட்டிலில் சுருண்டு படுத்தாள். தூக்கமும் வரவில்லை. ஓலையை மீறி வெக்கை அடித்தது. மனம் நிலையில் இல்லை. அப்படியே புரண்டு கொண்டிருந்தவளுக்கு வெள்ளயன் சொன்னது உண்மையாக இருந்தால் என்ன செய்வது என்று பயம் வந்தது. குமரேசனுக்குச் சினிமாப் பார்க்கப் பிடிக்கும். அந்த எண்ணத்தில் அவன் வந்து இவள் தயாராகாமல் இருந்தால் கோபித்துக்கொள்ளலாம். இப்போது இருக்கிற நிலையில் அவனும் கோபித்துக்கொண்டால் அவ்வளவுதான். இன்றைக்கு நடந்ததை எல்லாம் அவனிடம் சொல்லலாமா கூடாதா என்று தீர்மானிக்க முடியவில்லை. இந்த வெள்ளைப் பன்றியைப் பற்றிச் சொன்னால் குமரேசன் கோபம்கொண்டு அதைத் துரத்தியடிக்கப் போய்க் கடிபட்டுக்கொள்ளக்கூடும். கொஞ்சநாள் போகட்டும். எப்படிப் போகிறது என்று பார்த்துச் சொல்லலாம். பன்றி எப்படியும் தினம் இந்தப் பக்கம் தலை காட்டும். சமாளிக்க வேண்டும்.

அவன் பேச்சும் இளிப்பும் நாற்றம். புழுத்துப் போன தோலுக்குள் இருந்து அடிக்கும் வீச்சம் அது. யாருமற்ற பகல் வேளையில் அவன் வந்தால் என்ன செய்வது? கொட்டாய்க்குள் கூடப் புகுவான். சைக்கிளை நிறுத்தி எந்தப் பக்கமும் அசையவிடாமல் செய்ததைப் போல என்ன வேண்டுமானாலும் செய்வான். கத்திக்

கூப்பிட்டால் வருவதற்குப் பக்கத்தில் யாரும் இல்லை. அவன் வீடுதான் கண்ணுக்குத் தெரிகிறது. அங்கே எட்டுகிற மாதிரி குரலை உயர்த்த முடியுமா? அது கஷ்டம். இங்கே எல்லாரும் சத்தம் போட்டுத்தான் பேசுகிறார்கள். தூரத்தில் இருக்கும் ஒருவரைக் கூப்பிட எழுப்பும் குரல் உச்சம். இன்றைக்குக் காலையில் ஒருத்தி 'பயா பயோ . . .' என்று யாரையோ கூப்பிட்டுக்கொண்டே போனாள். அவள் குரல் இரண்டு மூன்று மைல்களுக்குக் கேட்டிருக்கும். எந்தப் பையனும் பதில் சொன்ன மாதிரி தெரியவில்லை.

அப்படிக் குரல் எடுக்க அவளால் முடியாது. அவள் குரல் கீச்சென்று இருக்கும். 'தங்கச்சிக் குருவீ' என்பான் அண்ணன். சின்ன வயதில் அவள் பேசுவதைக் கிண்டல் செய்யக் 'கீச்கீச்' என்று கத்திச் சிரிப்பான். அதனால் அவள் அறியாமலேயே மெல்லப் பேசத் தொடங்கினாள். அதுவே வழக்கமாகிக் காதுக்குள் பேசுவதாயிற்று. எப்போதாவது கோபம் வந்து குரலெடுத்தால் வரிசைவீட்டுக்காரர்கள் எல்லாம் ஆச்சர்யப்பட்டு 'சரோஜாவா இது' என்று கேட்பார்கள். அவளுக்கு வெட்கமாகிவிடும். 'ஆளுத்தான் வளந்துக் கீது. கொரலு இன்னம் குருவிதான்' என்பான் அண்ணன். இந்தக் குரலை வைத்துக்கொண்டு என்ன செய்வது? எப்படி இவனை எல்லாம் சமாளிப்பது?

யோசித்தபடி எழுந்து தயாரானாள். பொழுது மேற்கே சாயச்சாய அவளுக்குப் புதுப்பெண்ணின் மெருகு வந்தது. தலை சீவி அழுந்தப் பின்னினாள். புதுச்சேலை ஒன்றைக் கட்டிக்கொண்டாள். கை நுனியில் ஜிகினா பார்டர் வைத்த ரவிக்கை. காய்க்காரப் பாட்டி கொடுத்த பூவை வைத்துக்கொண்டாள். இன்னும் கொஞ்சம் பூவிருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. லேசாகப் பவுடர் போட்டு முகத்தைத் திருத்தமாக்கிக்கொண்டு வெளியே வந்து மரத்தடியில் உட்கார்ந்தாள். அவள் பார்வை குமரேசன் வரும் தடத்தையே பார்த்துக்கொண்டிருந்தது.

மாமியாரின் ‘ஹோஹோ’ என்னும் சத்தம் கேட்கத் திரும்பினாள். ஆடுகள் ஓடி வந்து தாழியில் தண்ணீர் குடித்தன. மாமியாரின் முகத்தைப் பார்க்கத் தைரியம் இல்லாதவளாய் மறுபடி திரும்பிக்கொண்டாள். அவளைப் பார்த்து ‘ஐயையோ’ என்று குரலெடுத்தாள் மாமியார். இந்தக் கிழத்துக்கு இதே வேலைதான், வாயைத் திறந்தால் ‘ஐயோ’தான்.

பயத்தோடு எழுந்து நின்ற சரோஜாவின் பக்கம் கை நீட்டி ‘ஒத்தைக்கு ஒருத்தன் எங்கொலத்துக்குத் தலச்சன் எம்பையன். அவன் பொழப்பக் குழி தோண்டிப் பொதச்சுட்டு அது மேல ளதளன்னு வளந்து நிக்கற எருக்கலஞ் . . . செடியப் பாக்கப் பாக்க எனக்கு மனம் பொறுக்கலியே. வேரோட புடுங்க எறிய முடியுமா . . . எஞ்சாமீ’ என்று ஒப்பாரிக் குரல் எடுத்தாள்.

‘பொழுது சாயற நேரத்துல ஆட்டப் புடுச்சுக் கட்டுவா, மாட்டப் புடுச்சுக் கட்டுவா, புரசனுக்குத் தண்ணிக்குத் தீப் போடுவா, சோத்துக்கு ஒல வெப்பா. அவ குடியானச்சி. இது பொழுதோட நேரத்துல சீவிச் சிங்காரிச்சுக்கிட்டு நிக்குதே. கரட்டூருத் தெருவுல பராரிவதான் இப்பிடி நிப்பாளுவ. அந்தக் கூட்டத்துலருந்து ஒன்னப் புடிச்சாந்து வெச்சிட்டானே. இவனுக்குச் சோத்துல மருந்தக் கலந்து குடுத்திட்டாளா. இந்த மருந்த எந்த வைத்தியங்கிட்டப் போயி எடுப்பன் நானு. எத்தன காசு செலவு பண்ணுவன். எம்பையன் எனக்குக் கெடைப்பானா. இல்ல, இந்த எச்சக்கலயோடதான் இருப்பானா . . .’

சரோஜாவுக்குத் தன் அலங்காரத்தின் மேல் வெறுப்பு வந்தது. எல்லாவற்றையும் கலைத்து எறிய நினைத்தாள். ஆசை ஒழுக ஒழுக ஒருவருசமாகப் பேசிக் கூட்டி வரும்முன் இப்படியெல்லாம் இருக்கும் என்று குமரேசன் சொல்லியிருக்கலாம். சரோஜாவும் இன்னும் கொஞ்சம் தூண்டிக் கேட்டிருக்கலாம். அவன் பேச்சும் பிரியமும் வேறு எதையும் நினைக்க வைக்கவில்லை. அவனை மட்டுமே பார்த்துப் பழகி எல்லாவற்றையும் முடிவு செய்திருக்கக்கூடாது. ஆனால் இப்படி எல்லாம் யோசிக்கும்படி அப்போதைய நிலை இல்லை.

0 0 0

# 5

எந்தப் பெண்ணையும் அவள் அறியாமல் பார்த்ததில்லை குமரேசன். சரோஜாவை அப்படிப் பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை. புங்க மரத்தடியில் படுத்துத் தூங்கிய நேரம் குறைவு. சும்மாவே அங்கே போய்ப் போய்ப் படுத்துக் கொண்டான். வரிசைவீட்டுக்காரர்கள் சிலர் அந்தப் பக்கமாகப் போகும்போது ‘இந்தப் பையன் எந்நேரமும் தூங்கிக்கினே கீறான்’ என்று சொன்னார்கள். யாராவது வரும்போது ஆழ்ந்து தூங்குவது போலக் கண்களை இறுக மூடிக்கொள்வான். அரைவிழி திறந்தும் அவள் வீட்டுப் பக்கம் திரும்பிப் படுத்தும் அவன் பார்ப்பதை அவளும் உணர்ந்திருந்தாள்.

அவள் வருவதும் போவதும் திரும்புவதும் என ஒவ்வொரு அசைவும் அவனுள் பளீர்பளீரென்று அறைந்தது. வலியைச் சுகமாக உணர்ந்தான். அவள் இல்லாத நேரங்களில்கூடக் கண்களை மூடிக்கொண்டால் பளிச்செனத் தோன்றி மறையும் உருவமே கண்ணுக்குள் நின்றது. முன்பக்கம் கிடந்த சடையை ஒருமுறை அனாயாசமாகத் தூக்கி முதுகில் போட்டாள். மாட்டின் முதுகில் பட்டெழுந்த சாட்டையென அது அவனை வீசிற்று. அன்றைக்கெல்லாம் அவனுக்குள் அந்தக் காட்சியே ஓடியது. இப்படித் தினம் ஒன்று பிரதானமாகி அவனுக்குள் சுழலும். சாட்டைச் சடையால் தன் கழுத்தை இறுக்கிக்கொண்டு செத்துப் போய் விடலாமா என்றுகூடத் தோன்றியிருக்கிறது. அவள் அறியாமல் பின்னாலேயே ஓடிக்கொண்டிருந்தான். எத்தனை கட்டுப்படுத்தியும் ஓடுவதைத் தவிர்க்கவே முடியவில்லை.

அவன் பார்க்காதபோது அவளும் பார்த்தாள். அப்பனும் அண்ணனும் வேலை செய்யும் கம்பெனிக்கு அவள் போனால் வலிந்து பேச ஆட்கள் நிறையப் பேர்

வருவார்கள். அவர்களின் முகங்கள் எல்லாம் ஒரே மாதிரி அவளுக்குள் பதிந்திருந்தன. ஒரே ஆண் முகம். யாருக்கும் வேறுபாடில்லை. அவளால் ஒருவரையும் நினைவில் இருத்திக்கொள்ள முடிந்ததேயில்லை. குமரேசன் வேறாகத் தெரிந்தான். அவன் பார்வையில் கொட்டிச் சிதறிய பிரியம் மூழ்கடித்தது. அதற்குள் ஆனந்தமாகத் திரியலாம் என்று தோன்றியது. எப்போதாவது பார்வை நேர்ப்படும்போது அவன் முகம் கொள்ளும் வெட்கத்தை இதுவரை ஒருவரிடமும் கண்டதில்லை. சாம்பல் பூத்த நெருப்புக் கங்கு ஒரே ஊதலில் ஜொலிப்பது போலிருந்தது.

அவன் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று கருதி விதவிதமாகத் தன்னை ஆக்கிக்கொண்டாள். எப்போதாவது கட்டுவதற்கு என்று பெட்டியில் வைத்திருக்கும் புதுத்துணிகளை எல்லாம் வெளியே எடுத்தாள். பாவாடை தாவணிகளே அவளிடம் இருந்தவற்றில் அதிகம். அது சலித்துப்போய் இருந்த ஒன்றிரண்டு சேலைகளைக் கட்டினாள். இனிமேல் துணி எடுத்தால் சேலைதான். சேலை கட்டிப் போகும் நாளில் அப்பன் ‘பொண்ணு வயசுக்கு வந்துட்டா’ என்று நினைத்துக் கொள்வார். அண்ணன் ‘வரன் பாத்துடலாமா’ என்பான். அப்போது அவளுக்குக் குமரேசன் முகமே நினைவிலாடும். முன்பைப் போலில்லாமல் அடிக்கடி வெளியே நடமாடினாள். அவன் எங்காவது போயிருந்தால் அந்த இடமே சலிப்பானதாக மாறிப் போயிற்று. தீப்போலத் தன்னுள் அவன் பரவிக் கொண்டிருக்கிறான் என உணர அதிக நாட்கள் ஆகவில்லை. ஆனால் வார்த்தையே பேசவில்லை.

விரைவில் அவள் செயல்கள் அவனுக்கும் அவன் செயல்கள் அவளுக்கும் அத்துபடி ஆகிவிட்டன. அவள் வீட்டிலிருக்கும்போது அவனும் இருந்தான். போசியைத் தூக்கிக்கொண்டு அவள் வெளியே போன ஐந்தாவது நிமிடம் அவனும் சைக்கிளை எடுத்தான். சில சமயம் அவள் பின்னால் போய்ப் பார்க்கலாமா என்று தோன்றியதைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தினான். அவள் வருவதற்குள் கடைகளுக்குப் போய்ச் சோடாப்

போட்டுவிட்டுத் திரும்பினான். அவன் வரும்போது அவள் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மனம் வடிந்து போகும். அவனுக்கு முன்னால் அவள் வந்திருந்தால் ‘வந்து ரொம்ப நேரமாகியிருக்குமோ’ என்று எண்ணிக் குமைவான். மத்தியானத்திற்கு மேல் அவள் எங்கும் செல்வதில்லை. அவனுக்கு வேலையிருக்கும். வேண்டா வெறுப்பாகத்தான் போவான். நேரம் இருவருக்கும் அத்துபடி. பேசிக்கொள்ளாமலே நேரக்கணக்கு வைத்துக்கொண்டு கண்ணில் பட்டார்கள்.

அவளுக்கு அம்மா இல்லை. என்னவானாள் என்று தெரியாது. நன்றாகப் பழகிய பின்னர் அவளைக் கேட்டபோது ‘செத்துட்டா’ என்றாள். ‘எப்படி?’ என்றான். ‘எப்பிடியோ எனுக்குத் தெரியாது’ என்று சொல்லிவிட்டாள். துருவித் துருவிக் கேட்பானோ என்று பயந்தது போலில்லை. அம்மாவைப் பற்றிப் பேசுவதில் அவளுக்கு விருப்பம் இல்லை என்பது தெரிந்ததும் அந்தப் பேச்சை எடுப்பதையே நிறுத்திவிட்டான் அவன். அது அவளுக்குப் பிடித்திருந்தது. முகமே நினைவில் இல்லாத அம்மாவைப் பற்றி அவள் என்ன சொல்ல முடியும். அப்பனிடம் எப்போதாவது கேட்டால் ‘செத்துட்டாம்மா’ என்பார். எப்படி, எப்போது என எந்த விவரமும் சொல்ல மாட்டார்.

அவளுக்கு அப்பனும் அண்ணனும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் முகங்களைத் தெளிவாகக் குமரேசன் பார்த்ததில்லை. இருவரும் தோல் கம்பெனி ஒன்றில் வேலை செய்தார்கள். விடிகாலையில் கிளம்பினால் இருட்டிய பிறகே வருவார்கள். அவர்கள் கிளம்பும்போது தடபுடவென வரும் சத்தங்களை மட்டுமே கேட்பான். அந்தச் சமயத்தில் வெளியே வரவேமாட்டான். அவர்களுக்கு முகம் காட்டப் பயந்திருந்தான். தன்னை அவர்கள் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று பிரயாசைப்பட்டான். அதனால் அவர்களையும் அவன் பார்க்கவில்லை. ஞாயிற்றுக்கிழமை மட்டும் விடுமுறை. மரத்தடியில் கட்டிலைப் போட்டு முகம் மூடிப் பிணம்

போலத் தூங்குவான் அவள் அண்ணன். அன்றைக்கும் அவள் அப்பன் எங்கே போவார் என்று தெரியாது.

இரவில் பேசும்போது அவர்களின் குரல்கள் மட்டும் கேட்கும். குரல்களைக் கொண்டு உருவங்களை மனதில் வரைந்து பார்த்திருக்கிறான். ஒன்றும் பிடிபடவில்லை. சரோஜாவின் முகம் மட்டுமே அவனுக்குள் வந்து நின்றது. வேறு வழியில்லாமல் அவள் முகத்திற்கு ஆண் தன்மையைக் கொடுத்துக் கொஞ்சம் வயதான முகம் அப்பன் என்றும் இளமையான முகம் அண்ணன் என்றும் முடிவு செய்தான். ஆண் உருவில் அவளைக் கற்பனை செய்வது அவ்வளவு எளிதாக இல்லை. ஆனால் எல்லாமே சரோஜா மாதிரிதான் இருக்கும், இருக்க வேண்டும் என்று விரும்பினான். இதை சரோஜாவிடம் ஒருமுறை சொன்னபோது அவள் கண்ணில் நீர் பெருகச் சிரித்தாள்.

'இல்லே ரெண்டு பேரும் வேற வேற மாதிரி தெரிவாங்க' என்று சொல்லிப் போட்டோவைக் கொண்டு வந்து காட்டினாள். பழைய போட்டோக்கள். அப்பன் இளைஞராகவும் அண்ணன் சின்னப் பையனாகவும் இருந்தபோது எடுத்தவை. அவை அவனுக்கு இன்னும் குழப்பத்தையே கொடுத்தன. சரோஜா முகத்திற்கு வடிவம் கொடுத்தாலும் அது ஒருநாளில் மாறிப்போகும். அவளைப் பெண்ணாகக் காண்பதே பிடித்திருந்தது. என்றாலும் அவள் அப்பனையும் அண்ணனையும் நினைவில்கொள்ள சரோஜாவுக்கு அன்றாடம் ஆண் வேசம் போட்டுப் போட்டுப் பார்த்தான். கலைத்துக் கலைத்து விதவிதமாக சரோஜாவுக்கு ஒப்பனை செய்வது சுகமாக இருந்தது. அவள் முகத்தில் எத்தனையோ முறை அவன் கை பட்டது. அவள் ஏதும் சொல்லவில்லை. ஒப்பனைக்குத் தகுந்த மாதிரி முகத்தைக் காட்டினாள்.

காலையில் ஒன்பது மணிவரைக்கும் சரோஜா வீட்டிலிருந்து இலங்கை வானொலி ஒலித்துக்கொண்டிருக்கும். அவள் சமையல் வேலைகளைச் செய்துகொண்டே கேட்பாள். பக்கத்தில் இருப்பவர்களோடு பேசும்போதும் பாட்டுக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் அவளுக்கு. உதடு

குவித்துப் பாட்டுக்கேற்ப லேசாகச் சீழ்க்கை அடிப்பாள். பாட்டின் இசையோடு கலந்து வருவது போலவே தோன்றும். குமரேசனே ரொம்ப நாள் கழித்துத்தான் இந்த ரகசியத்தைக் கண்டுபிடித்தான்.

சோடாக்கடை வேலைகளைச் செய்துகொண்டே குமரேசனும் பாட்டுக் கேட்பான். பாட்டை ஒதுக்கிவிட்டு அவள் சீழ்க்கை ஒலி மட்டும் காதில் வந்து விழும். கிறங்கிக் கேட்பான். ஒவ்வொரு பாடலும் அவளது சீழ்க்கையாகவே மனதில் பதிந்தது. இப்போது தொடக்க இசையை வைத்தே என்ன பாடல் என்பதைக் கண்டுபிடிக்கும் திறனைப் பெற்றான். அது அவள் சீழ்க்கையிலிருந்து கிடைத்தது. அவள் சீழ்க்கையில் இந்தப் பாடல் எப்படி இருக்கும் என நினைத்துக் கண்ணை மூடிக்கொண்டால் சீழ்க்கை பாடும். அப்படி லயித்திருக்கும் சுகத்திற்குள் மூழ்கினான். அடுத்த முறை ஊருக்குப் போனபோது டிரான்சிஸ்டர் ஒன்றை வாங்கிக்கொண்டு போனான். சரோஜாவையே கூட அழைத்துப் போவது போலத் தோன்றிற்று. பேருந்தில் ஏறி ஊர் வந்து சேரும்வரை அவளை மடியைவிட்டு நகர்த்தவில்லை. அவ்வப்போது நெஞ்சில் சேர்த்துக்கொண்டு தூங்கினான். ஊரில் திருச்சி வானொலி தெளிவாகவும் கோவை வானொலி ஓரளவுக்கும் எடுத்தன.

அம்மாவுக்குப் பெருமை பிடிபடவில்லை. பாறையில் சத்தமாக வைத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். வருபவர்கள் எல்லாம் ‘சீராவுக்கு என்னப்பா லேடியோ பொட்டியில பாட்டுக் கேட்டுக்கிட்டுப் பாறையில மல்லாந்து படுத்திருக்கறா. பையனப் பெத்தாலும் இப்பிடியல்லொ பெக்கோணும். தாய்க்குன்னு வாங்கியாந்து குடுத்திருக்கறான் பாரு’ என்றார்கள். ‘பத்தரமா வெச்சுக்கம்மா’ என்று நூறு முறை சொல்லியிருப்பான். ‘பையனுக்கு இப்பத்தான் புத்தி வந்திருக்குது. பொருளு மேல கவனம் பாரு’ என்று நினைத்துக்கொண்டாள். அவன் கிளம்பும்போது ரேடியோவை எடுத்துத் தடவிக் கொடுத்தான். ‘என்னடா

இது பொண்டாட்டியக் கொஞ்சறாப்பல' என்றாள் தாங்க முடியாமல் அம்மா. அவன் வெட்கச் சிரிப்போடு திரும்பிப் பார்க்காமல் கிளம்பினான். 'கண்ணு நீ போயி லேடியோப் பொட்டியவே நெனச்சிக்கிட்டிருக்காத. பத்தரமாப் பாத்துக்கறன் போ. ஆடோட்டிக்கிட்டுப் போனாலும் கையிலயே கொண்டாயர்றன்' என்று கத்திச் சொன்னாள்.

பையனுக்கு ரேடியோ இல்லாமல் ஏங்கிப் போவானோ என்றும் தோன்றிற்று. 'நீயே கொண்டுக்கிட்டுப் போயிக் கேளு கண்ணு. எனக்கென்னத்துக்கு இது' என்றாள். அவன் நடந்த படியே 'அங்க பாக்கற ரேடியோவே இருக்குதும்மா. நீ வெச்சுக் கேளு' என்று சொன்னபடியே நடந்தான். புதன்கிழமை இரவு எட்டு மணிக்கு நாடகம் போடுவார்கள். அதைக் கேட்க பக்கத்துக் காடுகளில் இருந்தெல்லாம் ஆட்கள் வருவார்கள். பாறை நிறைந்திருக்கும். வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போவார்கள். சம்பாக்கிழவி வந்திருந்து ஒருமுறை நாடகம் கேட்டார். 'இத்தினியூண்டு பொட்டிக்குள்ள இருந்துக்கிட்டு மனசன் பேசறானே. கதையில வர்றாப்பல சுண்டுவெரலுச் சோடு மனசனா இருப்பானோ' என்று அதிசயித்து அதை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். எல்லாரும் சிரித்தார்கள்.

'அட ஆயா ஆயா . . . நீ உம்பிரசனக் கத்திக் கூப்பிட்டா எப்படி நாலு ஊருக்குக் கேக்குது?' என்றான் வெள்ளையன். கிழவி உடனே 'அதக் காத்துக் கொண்டுக்கிட்டுப் போவுதுடா' என்றார். 'அதே மாதிரிதான் இதும். எத்தனையோ பேருத்துக் கொரலக் காத்துக் கொண்டுபோய்க்கிட்டே இருக்குது. அதத்தான் இந்த ரேடியோ பொட்டி இழுத்து உடுது பாத்துக்க' என்றான் அவன். ரேடியோவால் ஆட்கள் வரப் போக இருந்தது குமரேசன் கூட இல்லாத குறையைப் போக்கியது.

சரோஜாவுக்கு நாடகங்கள் பிடிப்பதில்லை. எந்நேரமும் பாட்டுத்தான். எந்த நிலையத்தில் எப்போது பாட்டு வரும் என்பது அவளுக்கு அத்துபடி. அதைக் கேட்டுக்கேட்டுக் குமரேசனுக்கும் தெளிவாகி இருந்தது. ஒன்பது மணிக்குச்

சாப்பாட்டுப் பையைத் தூக்கிக்கொண்டு அவள் வெளியேறுவாள். வரிசைவீடுகளில் இருந்து அவளோடு இன்னும் இரண்டு மூன்று பெண்களும் போவார்கள். அப்பனுக்கும் அண்ணனுக்கும் சாப்பாடு கொடுத்துவிட்டு வர வெகுநேரமாகும். பன்னிரண்டு நாற்பது செய்தி முடிந்து சென்னை வானொலியில் இரண்டு பாட்டுப் போடுவார்கள். எப்படியும் அதைக் கேட்க வந்துவிடுவாள். அவள் வரும்வரை குமரேசனுக்கு இருப்புக் கொள்ளாது. பாட்டுச் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தால் சரோஜா பக்கத்திலேயே இருக்கிறாள் என்று தோன்றும்.

இரண்டு மாதங்களுக்குள் சோடாக்கடை வேலைகள் பெருமளவு குமரேசனுக்குக் கை வந்திருந்தன. அவன் ஒருவனாகவே எல்லாவற்றையும் தயாரித்துச் சைக்கிளில் கொண்டுபோய் அவனுக்கென ஒதுக்கப்பட்ட கடைகளுக்கு விநியோகம் செய்துவிட்டு வந்தான். அவன் வேலைகளை எல்லாம் சரோஜாவின் நேரத்திற்கு ஏற்ப மாற்றிக்கொண்டான். இப்படியே நான்கைந்து மாதங்கள் ஓடின. சரோஜாவுக்கும் அவன்மேல் ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது.

காலையில் ஏழு மணிவாக்கில் மேலுடம்பில் ஒற்றைத் துண்டை மட்டும் போட்டுக்கொண்டு வேப்பங்குச்சியால் அரை மணிநேரம் பல் துலக்குவான். அவள் பார்வை வெளியே போகும்போதெல்லாம் பலகை போன்ற கருத்த முதுகில் பட்டுத் திரும்பும். வேப்பங்குச்சியில் அவன் பல்துலக்குவது வரிசை வீட்டுக்காரர்களுக்கு எல்லாம் சிரிப்புக்குரிய விஷயம். ‘பாயிகையில சொல்லி பிரஷூ வாங்குபா’ என்று கிண்டல் செய்வார்கள். அவன் சிரிப்பானே தவிர பதில் சொல்வதில்லை. அங்கிருப்போரிடம் அளவாகவே பேச்சு வைத்துக்கொள்வான். அனாவசியமாக வெளியே வரமாட்டான். அவளைப் பார்ப்பது கூட மூன்றாம் பேர் எளிதாகக் கண்டுபிடிக்க முடியாத வகையில் நுட்பமாக இருக்கும். ஏதாவது அவனாகவே பேசுவான் என்று மிகவும் எதிர்பார்த்தாள். அவள் எதிர்ப்பட்டாலே பதற்றத்தோடு

விலகி விரைந்து நடந்துவிடுவான். அவளாகப் போய்ப் பேசவும் தைரியமில்லை.

அன்றைக்கு மத்தியான நேரம். பாலைச் சூடாக்க வேண்டியிருந்தது. இல்லாவிட்டால் கெட்டுப் போய்விடும். ஸ்டவ்வைப் பற்ற வைக்கத் தீப்பெட்டியை எடுத்தாள். வெற்றுப் பெட்டி. அந்நேரம் கடைக்குப் போகச் சலிப்பு. வெளியே யாரும் இருக்கிறார்களா என்று பார்த்தாள். ஒருவரையும் காணோம். அவ்வப்போது எழுந்து பீடி பிடித்துவிட்டுத் தூங்கும் வாட்சுமேன் தாத்தாவும் இல்லை. அவர் இருந்தால் கட்டில் தலைமாட்டிலேயே தீப்பெட்டி வைத்திருப்பார். அவர் தூங்கிக் கொண்டிருந்தாலும் கேட்காமலே எடுத்துக்கொள்ளலாம். சில வீடுகளின் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. சில வீடுகளில் ஒருக்களித்த கதவுகள் தெரிந்தன. இந்நேரத்தில் தூங்குவார்கள்.

குமரேசனின் கடையிலிருந்து சோடாச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மிஷினைச் சுற்றும் விசுக்விசுக் என்னும் சத்தமும் பிறகு குண்டடைக்கும் போது புருச் என்னும் சத்தமும் கேட்டன. அவற்றையே கொஞ்சநேரம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு மனதில் தைரியத்தோடு கதவுக்கு நேராகப் போய் நின்றாள். அவள் நிற்பதை அவன் கவனிக்கவில்லை. ‘த்தா’ என்று கூப்பிடலாமா. அது சரியாயிருக்குமா. அவன் திரும்புவதாகவே தெரியவில்லை. அத்தனை கவனத்தோடு வேலைக்குள் இருந்தான். லேசாகக் கனைத்தாள். அது உள்ளுக்குள்ளேயே புதைந்து போயிற்று. செருமிக்கொண்டு வேகமாகக் கனைத்தாள். முதுகில் யாரோ தட்டியது போலத் திடுக்கென்று திரும்பினான். வெளியே வெயில். உள்ளே நிழலிருட்டு. முதலில் ஒன்றும் தெரியவில்லை. கண் பழகி அவளை நேரே பார்த்ததும் சட்டெனத் திருப்பிக்கொண்டான். இங்கே எதற்கு வந்து நிற்கிறாள் என்று பதறிப்போனான். தான் பார்ப்பதைக் கண்டுபிடித்திருப்பாளோ. அதைப் பற்றிக் கேட்டுச் சண்டை போடத்தான் வந்திருக்கிறாளோ.

அவனை எப்படி அழைப்பது என்று அவளுக்குத் தயக்கமாயிருந்தது. அவள் போகாமல் நிற்கிறாள் என்னும் உணர்வு தோன்றிய பிறகு மீண்டும் திரும்பிக் கதவுப்பக்கம் வந்தான். நாக்கு வறண்டு ஒட்டிக்கொண்டது. முகத்தில் வேர்வை பெருகிச் சொட்டியது. அவள் 'வத்திச் சுப்பலு வோணும்' என்றாள். அவனுக்குப் புரியவில்லை. அவள் கேட்பதை உடனே கொடுத்து விட வேண்டும் என்று பரபரத்தான். ஆனால் என்ன கேட்கிறாள்? சரியாகக் காது கேட்கவில்லையோ என்று சத்தமாக 'வத்திச் சுப்பலு' என்று சொன்னாள். அப்போதும் அவனுக்குப் புரியவில்லை. இந்த ஊரில் விற்கும் கலர் எதையாவது கேட்கிறாளோ. கரட்டூரில் அப்படிச் சில கம்பெனிக் கலர்கள் உண்டு. அது மாதிரி இங்கும் இருக்கும். அதைத்தான் கேட்கிறாளோ. விளையாடுகிறானோ என்று அவள் நினைத்தாள். அவன் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. தீவிரமாக யோசித்து அது என்னவென்று கண்டுபிடிக்க முனைந்தான்.

சட்டென அவள் வீட்டுக்குள் போய்த் தீப்பெட்டியை எடுத்து வந்து காட்டினாள். அவனை அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது. 'நெருப்புக்குச்சியா?' என்றவன் உள்ளே போய்த் தீப்பெட்டியை எடுத்து வந்து நீட்டினான். வாங்கிக்கொண்டு ஒரே ஓட்டமாக உள்ளே போய்விட்டாள். தான் கேட்டது தவறோ என்று தோன்றியது. அவன் என்ன சொன்னான்? தீக்குச்சி என்றானா? இல்லை, நெருப்புக்குச்சி என்றான். அதுவரைக்கும் அவன் பேச்சை அவ்வளவாகக் கேட்டதில்லை. பெரியசாமி வரும்போது அவனோடு பேசிக்கொண்டிருப்பான். பேச்சு தெளிவாகக் கேட்காது. குரல்கள் மட்டும் வரும். அவற்றையும் வேறுபடுத்தி இது குமரேசன் குரல் என்று அடையாளம் காண முடிந்ததில்லை.

புங்க மரத்தடியில் படுத்திருக்கும்போது கட்டிலை உரசும் நாயை விரட்ட 'ச்சுடாய்' என்பான். மரத்தில் வந்து உட்காரும் காக்காயைத் 'தூய்' என்று துரத்துவான்.

யாராவது ஏதாவது கேட்டால் ‘ம்’ என்றோ ‘ம்கூம்’ என்றோ சொல்வான். அப்போதெல்லாம் அவன் குரலை அனுமானித்திருக்கிறாள். கெட்டிக் குரல். ‘நெருப்புக்குச்சியா?’ என்று அவன் முதன்முதல் அவளிடம் வார்த்தை பேசியபோது கெட்டிக்குரலில் கொஞ்சம் இளக்கம் இருப்பது போலத் தோன்றியது. கெட்டிக்குரலுக்குள் இந்தக் கீச்சுக்குரல் கரைந்துபோகுமா. வீட்டுக்கு வெளியே வரவே அவளுக்குக் கூச்சமாக இருந்தது. எப்படி அவனைப் பார்ப்பது?

சாயங்காலம் நாலு மணி இருக்கும். ஒருக்களித்திருந்த கதவுக்கு வெளியே ‘ஏங்க ஏங்க’ என்னும் அழைப்புக்குரல். அவன் குரலை இப்போது அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது. மெல்லக் கதவைத் திறந்தாள். அவனை நேராகப் பார்க்கச் சங்கடப்பட்டுத் தலை குனிந்திருந்தாள். அவன் இப்போது நேராகப் பார்த்து ‘வத்திச்சுப்பலு’ என்றான். அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கதவைச் சாத்திக்கொண்டு அப்படிச் சிரித்தாள். இதுவரைக்கும் அதுபோலச் சிரித்ததேயில்லை.

குமரேசனிடம் பேசிய அன்றைக்கு ஏற்பட்ட சந்தோசத்திற்கு நிகராக எதுவும் இல்லை என்று மனதில் குறித்து வைத்திருந்தாள். அவளைச் சிரிக்க வைக்க வேண்டும் என்றால் முகத்தைப் பாவம் போல வைத்துக்கொண்டு ‘வத்திச்சுப்பலு’ என்பான். அவளுக்கு உடனே சிரிப்பு வந்துவிடும். அவனோடு இருந்தால் அந்தச் சந்தோசம் என்றைக்கும் நிலைக்கும் என்றே அந்தக் கணத்தில் தோன்றியது.

0 0 0

# 6

வைரியூரிக்குள் சைக்கிள் நுழைந்த போது சரோஜாவுக்குக் கொஞ்சம் தெம்பாக இருந்தது. குமரேசன் வீட்டைப் போலத் தன்னந் தனியாக அல்லாமல் ஊருக்குள் வீடுகள் நிறைந்திருந்தன. கூரை வீடுகள் மிகுதி. கீழ்ப்பகுதி அகண்டு மேல்பகுதி குறுகிக் கோபுரம் போன்ற வடிவில் இருந்த அவ்வீடுகளை ஆச்சர்யமாகப் பார்த்தாள். சில வில்லைவீடுகளும் தெரிந்தன. அவற்றில் புதுமெருகு. கைஓடு போட்ட வீடுகள் உள்ளடங்கித் தென்பட்டன. கோபுர வீடுகளை அண்ணாந்து பார்த்தபடி செல்வது சந்தோசமாக இருந்தது. ஆட்கள் ஒன்றிரண்டு பேர் கண்ணில் பட்டனர். வயதானவர்கள். பெண்களைக்கூடக் காணோம். குமரேசனின் அம்மாவைப் போலவே எல்லாப் பெண்களும் காட்டு வேலைகளை எடுத்துச் செய்பவர்கள் என்பதை சரோஜா சீக்கிரமே அறிந்துகொண்டாள். அங்கங்கே கிழடுகள் ஒரு வெள்ளாட்டையோ மாட்டுக் கன்றையோ கையில் பிடித்துக்கொண்டு நிற்பதைக் கண்டாள். சோறாக்கி வைத்துக்கொண்டு வீட்டோடு இருக்கிற ஊர் இல்லை இது.

சின்ன வயதில் இப்படி ஒரு கிராமத்துக்குள் இருந்ததாக அப்பன் சொல்வார். அவளுக்குத் துளியும் நினைவில்லை. ‘உனுக்கு அதுல்லாம் தெரியாத கீறதே நெல்லது. உடு’ என்று சொல்வார். ஊரைப் பற்றிப் பேச்சு வந்தால் ‘நாம இருக்கற எடந்தான் நம்மூரு. செரியா’ என்பார். அண்ணனுக்குக் கிராமம் கொஞ்சம் நினைவிருக்கும் போல. அவனிடம் ஆர்வத்தோடு அவள் கேட்ட சமயங்களில் அவன் சொல்வான். ‘இந்த ஊருல எந்தத் தெருன்னாலும் கைய வீசிக்கினு நீ நடந்து போற. அங்கல்லாம் ஆவாது. அப்பிடியாப்பட்ட ஊரு நமக்கு இன்னாத்துக்கு?’ என்று சொல்லி அடக்கிவிடுவான். அவளுக்கும் அந்த ஊரைப் பார்க்க வேண்டும் என்னும் ஆசையெல்லாம் ஒன்றுமில்லை.

வரிசைவீடுகளில் ஒவ்வொருவரும் தங்களுடைய ஊரைப் பற்றிப் பேசுவார்கள். ஊரில் விசேஷம் என்று கிளம்பிப் போய் மாதம், பத்து நாள் என்று இருந்து வருவார்கள். அப்போதெல்லாம் சரோஜாவைப் பார்த்து ‘ஊருக்குப் போலயா’ என்று விசாரிப்பார்கள். அவளுக்குப் பதில் சொல்லச் சங்கடமாக இருக்கும். சிரித்துத் தலையசைப்பாள். பதில் பேசியே ஆக வேண்டும் என்றால் ‘நாங்க இந்தூருதான்’ என்பாள். தோலூருக்கு வந்தபிறகு மீண்டும் அங்கே போக அப்பனுக்கு ஏனோ விருப்பமில்லை. தோலூர் வீதிகளும் மக்களுமே அவளுக்குள் முழுமையாக நிறைந்திருந்தார்கள்.

தோலூர் முழுவதும் கைவீசி நடக்க ஏற்ற அகலமான தெருக்கள். அகழி சூழ்ந்த பெருங்கோட்டை ஒன்று. அதைச் சுற்றிலும் மரங்கள் நிறைந்த பரந்த வெளியுண்டு. அங்கெல்லாம் ஓடி விளையாடியிருக்கிறாள். அவள் சின்னவளாக இருந்தபோது அப்பன் வேலைக்குப் போகையில் அவளையும் கைப்பிடித்துக் கூட்டிச் செல்வார். கம்பெனிச் சுற்றுச்சுவருக்குள் மரங்கள் இருக்கும். அங்கே விட்டுப் போவார். அவளைப் போலவே சில பிள்ளைகள் ஓடி ஆடிக்கொண்டிருப்பார்கள். அவர்களோடு சரோஜாவும் சேர்ந்துகொள்வாள். நேரம் போவதே தெரியாது.

அப்போதெல்லாம் இடைவிடாத விளையாட்டுத்தான். சாப்பாட்டு நேரத்துக்கு அப்பன் வந்து கூப்பிடுகையில் பசி தெரியும். அண்ணன் வேலை செய்த கம்பெனி வேறொரு இடத்தில் இருந்தது. அவனுக்கு வேலை சீக்கிரம் முடியும். வந்து சரோஜாவையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போவான். அப்பன் வருவதற்குள் இரண்டு பேரும் சமைப்பார்கள். அண்ணன்தான் அவளுக்கு எல்லாம் சொல்லிக்கொடுத்தவன். வளர்ந்த பிறகு வீட்டோடு இருக்கச் சொல்லிவிட்டார்கள். தோலூரில் வசித்த வீடுகள் எத்தனையோ. எல்லா இடத்திலும் அக்கம் பக்கம் ஆட்கள் நடமாட்டம். எப்போதும் மக்கள் கூட்டத்திற்குள்ளேயே இருந்ததை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

அப்பனும் அண்ணனும் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்களோ என்று யோசனை ஓடியது. நன்றாக இருக்கிறதோ இல்லையோ பத்து வயதிலிருந்து முழுக்க அவள்தான் சமைத்தாள். ஞாயிற்றுக்கிழமையில் கவுச்சி எடுத்தால் அண்ணன் கூட இருந்து எல்லாம் செய்வான். அப்பன் சாப்பிடுவதோடு சரி. சமையலில் அவருக்கு எதுவும் தெரியாது. ‘எம்பொண்ணு கைபட்டா எப்பேருப்பட்ட பதார்த்தமும் ருசியாயிடும்’ என்பார். ஒருநாளும் அவர் குறை சொன்னதேயில்லை. அண்ணன்தான் அவ்வப்போது முணுமுணுப்பான். கொஞ்சம் போட்டுவிட்டு வந்தான் என்றால் அவளைச் சீண்டுவான்.

அவளுக்குக் கோபம் வந்துவிடும். ‘போ. எங்கனா குருமாக் கொயம்பு நக்கு போ’ என்று கத்துவாள். ‘மவராணி செஞ்சத ஒன்னும் பேசக்கூடாதா. அத உங்கப்பாவாண்ட வெச்சுக்க’ என்பான் அவன். ‘உனுக்கும் பொண்டாட்டின்னு ஒருத்தி வருவா. அவளாண்ட வெச்சுக்க’ என்று பதிலுக்குக் கத்துவாள். ‘இந்தக் கீச்சுக்காரியக் கட்டிக்கினு எவன் அவுதிப்படப் போறானோ’ என்பான். இப்படி நடக்கும் சண்டையால் இரண்டு நாளுக்குப் பேச்சு வார்த்தை இருக்காது. அண்ணனாக வந்து பேசினால் உண்டு. சரோஜா போய்த் தானாகப் பேச மாட்டாள்.

வேலை முடிந்து வரும்போது யாராவது ஒருவர் கையில் கூம்பு வடிவ மிக்சர் பொட்டலம் இருக்கும். அதைப் பார்த்தால் அவள் கோபம் எல்லாம் போய்விடும். அப்பன் போதையோடு வந்தால் ஒருவார்த்தையும் பேச மாட்டார். பேச்சில்லை என்பதுதான் சமிக்ஞை. அண்ணன் தூரத்தில் வரும்போதே ‘ரோசா . . . ரோசாக் கன்னு’ என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தால் அன்றைக்குப் போதை என்று கண்டுகொள்வாள். ‘எந்தங்கம், கன்னு, பொன்னு’ என்றெல்லாம் கொஞ்சுவான். கால்களை எப்போதும் சொரிந்துகொண்டே இருப்பான். அவ்வப்போது கால்களுக்கு எண்ணெய் தடவிவிடுவாள். ‘கெமிக்கலுப்

பட்டுப் பட்டுக் காலெல்லாம் புண்ணு. இந்த வேலய உட்டுத் தொலஞ்சா இன்னா' என்று திட்டுவாள்.

முழங்கால்வரைக்கும் கொப்புளத் தழும்புகளும் அவற்றின்மேல் மீண்டும் எழுந்த கொப்புளப் புண்களுமாகவே இருக்கும். 'வேற எங்க சம்பளம் குடுக்கறன்னு கூப்புடுறான்? இவந்தான் தெனைக்கும் வேல குடுக்குறான். இன்னாவோ துன்னது போவ உங்கண்ணாலத்துக்குக் கொஞ்சம் துட்டு சேத்துட்டாப் போதும்' என்பான். தாயில்லாக் குறையை அவள் உணர்ந்ததேயில்லை. யாராவது அம்மாவைப் பற்றிக் கேட்டால்தான் அப்படி ஒருத்தியைப் பற்றி ஞாபகம் வரும். என்ன செய்கிறார்களோ?

ஊருக்குள் ஆட்கள் நடமாட்டம் அவ்வளவாக இல்லை. சிறுவர்களின் விளையாட்டுக் குரல்கள் கேட்டன. இங்கு வருவதற்கு அவளுக்கு விருப்பமே இல்லை. எங்கு போகவும் தோன்றவில்லை. போகும் இடமெல்லாம் பாறையைவிட வெம்மையை உமிழும் என்பதை அனுமானித்திருந்தாள். அவளைக் கண்டு மிரண்டு கத்தி விலகிப்போன பூனை மட்டும் இந்த ஒருவாரத்தில் இணக்கமாகி இருக்கிறது. உடலை வளைத்துக்கொண்டு கால்களில் வந்து உரசுகிறது. கட்டிலில் படுத்திருந்தால் அதுவும் வந்து கூடப் படுத்துக்கொள்கிறது. சாப்பிடும்போது வட்டலுக்குப் பக்கத்தில் வந்து வாய் வைத்துவிடுவது போலக் கத்துகிறது. குமரேசன் வட்டலின் ஒரு பகுதியை அதற்கு ஒதுக்கிவிடுவான். அவளுக்கு ஏனோ அது பிடிப்பதில்லை. அது வாய் வைத்தபின் அதே வட்டலில் கை வைத்து எப்படிச் சாப்பிடுவது?

சோறு வைக்கவில்லை என்றாலும் அது நெருக்கம்தான். தூக்கக் கிறக்கத்தில் இருந்தபோது கன்னத்தில் உரசிய அதன் தடவலைக் குமரேசனின் கையாக நினைக்கும்படி ஆகியிருக்கிறது. வால் மயிர் உடலைத் தடவுவது மயிற்பீலியால் தொடுவதுபோலச் சுகமாக இருக்கும். இறுகக் கட்டிக்கொண்டால் கொஞ்சம் முரண்டு பிடிக்கும். திரும்பித் தனக்குச் சம்மதமில்லை என்பதாய்ப்

பற்களைக் காட்டிக் கத்தும். அப்போது ‘செரி’ என்று சிரித்துப் போகவிடுவாள். சில சமயம் அதுவாகவே வந்து அவள் வயிற்றுக்குள் சுருண்டு படுக்கப் பார்க்கும். ‘அவனாட்டமே கீற நீயும்’ என்று செல்லமாகக் கடிவாள்.

அவளை ஏற்றுக்கொண்ட இரண்டாவது உயிர் பூனைதான். அதைக் ‘க்ளூஸ்’ என்று குமரேசன் கூப்பிடுவான். அவள் ‘மியாவ்’ என்று கூப்பிட்டுப் பார்த்தாள். அது சட்டை செய்யவேயில்லை. பின் அவளும் ‘க்ளூஸ்’ என்றே கூப்பிடப் பழகினாள். ஏனோ அதன்மீது அப்படி ஒரு பிரியம் பெருகிற்று. வீட்டிலே அது இருக்கும் நேரம் குறைவுதான். எங்காவது போய்விட்டு வெகுநேரம் கழித்து வரும். குமரேசனிடம் பேசுவது போலத் ‘தனியா உட்டுட்டுப் போனீன்னாப் பாரு’ என்பாள். அது கண்களை மூடி ‘மியாவ்’ என்கும். தூக்கி மடியில் வைத்துக் கொள்வாள்.

பகலிலும் அது வீட்டில் இருந்தால் பொழுது போகும். குமரேசனிடம் சொன்னபோது ‘அது கடுவம்பூன. அப்பிடித்தான் சுத்தும். கொஞ்ச நாள்ல பொட்டப்பூன இருக்கற எடத்துக்கே ஓடுனாலும் ஓடிரும்’ என்றான். ‘இங்க கூட்டிக்கினு வராதா’ என்று கேட்டாள். ‘அதுக்கு மனசனா இருக்கோணும்’ என்று சிரித்தான். அவன் சொல்வதன் அர்த்தம் உணர்ந்ததும் முகம் கனிச்சிவப்பாயிற்று. குமரேசனும் பூனையுமே போதும் என்றாகி எங்கும் வரமாட்டேன் என்று அவள் அடம் பிடித்தாள். இரண்டு நாட்களாகக் குமரேசன் சமாதானம் செய்து ஒருவழியாக ஒத்துக்கொள்ள வைத்தான்.

சினிமாவுக்குப் போகப் புறப்பட்டிருந்த அன்றைக்கு மாமியார் போட்ட கூப்பாட்டில் அதிர்ந்து போய்ப் பூவைப் பிய்த்து எறிந்துவிட்டுக் கொட்டாய்க்குள் ஓடிக் கட்டிலில் விழுந்தவள்தான். அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வாய் விட்டு அழுதாள். கண்ணீர் நனைத்துத் தலையணை ஈரம். அதன்மீதே தூக்கமா விழிப்பா என்று சொல்ல முடியாதபடி அப்படியே கிறங்கிக் கிடந்தாள். சைக்கிள் சத்தமும் பேச்சுக் குரல்களும் காதில் விழ மெல்ல நினைவுக்கு வந்தாள்.

எங்கும் இருள். யாருமற்ற பெருங்குகைக்குள் வந்து சிக்கிக் கொண்டதான பதற்றத்தோடு எழுந்தாள். வெளிக்குரல்களை உணர்ந்ததும் எல்லாம் நினைவுவர மீண்டும் அழுகை தொடங்கிற்று. மாமியாரின் குரல் கேட்டது.

‘கூத்தாடப் போறவளாட்டம் சிங்காரிச்சுக்கிட்டு உக்காந்திருந்தா. குடியானச்சி என்னைக்காச்சும் இப்பிடிச் சிங்காரிப்பாளா. அதான் நம்புளுக்கு இது ஆவுமான்னு ஒரு சத்தம் போட்டன். அதுக்கு அழுதுக்கிட்டு ஓடி உள்ள படுத்துக் கெடக்கறா. வெளக்குக்கூடப் பத்த வெக்கல. இப்பிடி இருந்தா ஊடு வெளங்கீரும் போ. செவப்புத் தோலப் பாத்துப் பிதுமாரு கெட்டுப் போயி இந்தக் கெரவத்தக் கொண்டாந்து வெச்சிருக்கறயே. எங்காச்சும் தல முழுவி இந்தக் கெரவத்தத் தொலச்சாத்தான் உருப்படுவ. இல்லீன்னா அள்ளித் தூத்துன பொட்டாட்டம் எல்லாம் போயிரும்.’

பிணக்குழி மேல் எருக்கஞ்செடி என்று ஏசிய வாய் அதை அப்படியே மறைத்துவிட்டுப் பேசும் விந்தையைக் கண்டு வெறுப்பு வந்தது. அதுவும் தளதளவென்று வளர்ந்து நிற்கும் எருக்கஞ்செடி. இங்கே வந்தபின் இந்தச் செடி வாடுவது இவளுக்குத் தெரியுமா. அங்கே இன்னும் எத்தனையோ செழிப்பாக இருந்த செடி இது. எருக்கஞ்செடி. இந்த வார்த்தை எந்தக் காலத்திலேனும் மறக்குமா? எதிர்த்துப் பேச வார்த்தை கிடைக்காமல் இல்லை. குமரேசனின் அம்மா என்னும் ஒரே தகுதியால் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்கிறாள். காலம் இப்படியேவா இருக்கும்? பகலெல்லாம் வெயிலில் காய்ந்த பாறை வெம்மையை உள்ளே தக்க வைத்துக்கொண்டு இரவில் வெளிவிடுகிறது. கீழே கால் வைக்க இயலவில்லை. இன்னும் எவ்வளவு நேரம் இந்த வெம்மை தகிக்குமோ?

அவன் சைக்கிளை நிறுத்துவதும் கைகால்களைக் கழுவுவதும் ஒலிகளாகக் கேட்டன. கொட்டாய்க்குள் நுழைந்தது தெரியவில்லை. பூனை போல வந்திருப்பானோ. அவள் காது மடல்களில் அவன் மூச்சுக்

காற்று உரசியது. ‘வத்திச்சுப்பலு இல்லியா?’ என்று கிசுகிசுத்தான். இப்போது அவளுக்குச் சிரிப்பு வரவில்லை. அழுகை கூடியது. தலையைத் தூக்கி மடியில் கிடத்திக்கொண்டான். முகத்தை வருடினான். அவன் நெஞ்சில் இரண்டு கைகளாலும் குத்தினாள். அவன் சாய்ந்து தாங்கிக்கொண்டான். அப்படியே அவன் மடியில் குப்புறப் படுத்தாள். கண்ணீர்த் தடம் விரிவதையும் விசும்பல் கூடுவதையும் அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. தனக்கென அவன் ஒருவன் மட்டுமே இருக்கிறான் என்னும் நிலை அவன்மேல் இன்னும் பிரியம் கூட்டியது. தன் மனதை அவனைத் தவிர யாரிடம் காட்ட முடியும்?

அவன் சமாதானம் எதுவும் அவளுக்குக் கேட்கவே இல்லை. ‘நாம தோலூருக்கே போயிடலாம். நீ வந்தாலும் வரலன்னாலும் என்ன மட்டும் எங்க ஊட்டுக்குக் கூட்டிக்கினு போயி உட்டுடு’ என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னாள். திரும்பிப் போனால் அப்பனும் அண்ணனும் வேண்டாம் என்றா துரத்திவிடுவார்கள்? ‘இன்னாமா இப்பிடிப் பண்ணிட்ட?’ என்று அப்பன் கேட்பார். அண்ணன் அதுகூடக் கேட்க மாட்டான்.

ஒற்றையறை வீட்டில் பல வருசமாக இருந்துவிட்டாள். அது கொடுத்த பாதுகாப்பை இந்த வெட்டவெளி கொடுக்கவில்லை. பேயிருளும் சூறைக் காற்றும். பகலெல்லாம் பொசுக்கும் வெம்மை. மரத்தடி நிழலில் எத்தனை நேரம் நிற்பது? தோலூர் வீட்டுக்குப் போய்த் தகரக் கதவைச் சத்தம் வரத் தாழிட்டுக்கொண்டு பாயில் குறுக்கி முறுக்கிப் படுத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. எல்லாவற்றில் இருந்தும் அது காப்பாற்றும். ‘எங்க ஊட்டுல உட்டுடு’ என்றவள் வாயை உதடுகளைத் தடவி அடைத்தான். அந்த ஒத்தடத்தில் அவளுக்கு எல்லாம் மறந்தது.

‘வெளக்குக்கூடப் பத்த வெக்கல. வந்ததியும் கொஞ்சலப் பாரு. குடியானப் பையனா இவன்? என்ன சொன்னாலும் ஏற மாட்டீங்குது. அப்பிடி என்ன மருந்து வெச்சாளோ மாயம் செஞ்சாளோ’ என்று வெளியே

மாமியார் தானாகப் பேசிக்கொண்டிருந்தாள். உள்ளே போனதும் அவளைத் திட்டி உதைப்பான் என்று எதிர்பார்த்திருப்பாள். ‘பொட்டச்சிய இப்பிடிக் கொஞ்சிக்கிட்டு வெச்சிருந்தா ஓலக் கொட்டாயி மாளி ஆயிரும், ஒன்னுமில்லாதவன் மிட்டாதாரன் ஆயிருவான்’ என்று பேசினாள். அப்படியே பேச்சு விரிந்துகொண்டே போயிற்று.

அவன் அதைப் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. ‘தோலூருக்குப் போலாம். போயித்தான ஆவோனும். மாமனாரு ஊட்டுக்குப் போவாதயா இருப்பம்’ என்று காதுகளில் கிசுகிசுத்தவன் அப்படியே தூக்கி இறுக்கிக்கொண்டான். விளக்கைப் பற்ற வைத்தபின் மெல்ல எழுப்பி அவளைச் சாப்பிட வைப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. காலைச் சோறு. அவள் மத்தியானமும் சாப்பிடவில்லை. அப்படியும் பசி தெரியவில்லை. அவள் எதுவும் சொல்லவில்லை, அவன் அம்மா கடுஞ்சொல் சொல்லியிருப்பாள் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது. அதனால் அவன் மீண்டும் மீண்டும் ஒன்றையே சொல்லிக்கொண்டிருந்தான்.

‘கொஞ்ச நாளைக்குக் காதக் கழட்டி வெச்சிரு. எங்கிட்டப் பேசறப்ப மட்டும் எடுத்து மாட்டிக்க. எல்லாஞ் . . . செரியாயிரும்.’

காது என்ன கழுத்தில், கையில் போடும் நகையா? கழட்டி ஓலைக்குள் செருகி வைப்பதற்கு? எந்நேரமும் மனிதக் குரல்களைக் கேட்டுக்கொண்டிருந்த காதுகள் இங்கே வந்தபின் அதற்கு ஏங்க ஆரம்பித்துவிட்டன. வரிசை வீடுகளில் பேச்சுக்குக் குறைவிருக்காது. வெளியே எட்டிப் பார்த்தால் இரண்டு பேர் விசாரிப்பார்கள். உள்ளே இருந்தாலும் கூப்பிட்டுப் பேசுவார்கள். தெளிவற்ற மனிதக் குரல்கள் சுற்றிலும் ஒலித்தபடி இருக்கும். இந்த ஊரில் மனித வாடை காண்பதே அரிது. யாரையாவது பார்த்தாலும் பேச்சைக் கேட்கப் பிரியமாகவா இருக்கிறது? எப்போதாவது கேட்கும் குரல்களும் காதுகளைக் கொத்திப் பிடுங்குகின்றன.

பனைமரங்களில் இருந்து கத்தும் காக்கைக் குரல்களும் மைனாக் குருவிகளின் குரல்களும் போதும். அவள் பார்த்தே அறியாத பறவைகள் பாறைக்கு வருகின்றன. ஒவ்வொன்றும் வரும்போது கோழிகள் எழுப்பும் விதவிதமான ஒலிகள் அவற்றைக் காட்டிக் கொடுக்கின்றன. கோழிக்குரல் பெருந்துணை. பாறையைச் சுற்றிக் காடுகளுக்குள் அவை வெகுதூரம் போய் மேய்ந்து வரும். காலையில் கூடையைத் திறந்துவிட்டதும் இறக்கையை உதறி அவை இரை தேடப் புறப்படும் அழகே அழகு. ஒரு நிமிடம்கூட இடைவெளி விடாமல் மாமியார் கோழிகளை விரட்டுவாள். அவை காட்டுக்குள் ஓடித்தான் பீப் பேழ வேண்டும் என்பதற்காக. கேவலில் தொடங்கும் அவற்றின் நாள் வெவ்வேறு குரல்களில் நகரும். அவற்றைக் கேட்டால் எந்த மனிதரும் வந்து ஏதும் பேசிவிடக் கூடாது என்று தோன்றும்.

வெள்ளயனிடம் சொல்லிவிட்டது, சினிமாவுக்குக் கூட்டிப் போக நேரத்தில் வராதது எல்லாவற்றுக்கும் குமரேசன் காரணங்களை அடுக்கினான். அவை மேலும் அழுகையையே கூட்டின. ‘தோலூர்ல வேல செஞ்சு மிச்சம் புடிச்சு வெச்சிருக்கற காசு எத்தன நாளைக்காவும்? அம்மா கையப் பாத்துக்கிட்டிருந்தா அவ்வளவுதான். ஒரு கடையப் போட்டுட்டனாப் போதும். அப்பறம் நேரம் நமக்கேத்த மாதிரி அமஞ்சிரும். வேற எங்கனாப் போயிக் குடியிருக்கலாம். அதுவரைக்கும் பொறுத்துக்க.’

அடுத்த நாள் அவன் எங்கும் போகவில்லை. அவளைச் சமாதானப்படுத்த அங்கேயே இருந்தான். மாமியார் ஆடோட்டிக்கொண்டு போனதும் கொட்டாய்க் கதவுத் தடுக்கை இழுத்துச் சாத்திவிட்டுக் கட்டிலில் அவளோடு நெருங்கிப் படுத்துக் கொண்டான். உடலாலும் அவளைச் சமாதானப்படுத்த முயன்றான். அந்தக் கணம்வரை விலகிப்போயிருந்த பயம் அது கடந்ததும் சட்டென வந்து பற்றிக்கொண்டது. நினைக்க நினைக்க அழுகை பெருகிக்கொண்டேயிருந்தது. இப்படி ஒருநாளும் அழுதவள் அல்ல அவள்.

‘எங்காச்சும் வெளிய போயிட்டு வரலாம். பொறப்படு’ என்று அவன் மறுநாள் சொன்னபோது அவளால் சட்டென உடன்பட முடியவில்லை. எங்கும் வரவில்லை என்று கடுமையாகச் சொல்லிவிடவே விரும்பினாள். தனியாக விட்டுவிட்டுப் போய்விடுவானோ என்று பயமாக இருந்ததால் மெல்லப் புறப்பட்டாள். மெல்லிய பச்சை நிறச் சேலையைக் கட்டிக் கொண்டாள். முகத்திற்குப் பவுடர்கூடப் போடவில்லை. இப்போது எருக்கஞ்செடி என்று சொல்ல முடியாது. மாமியார் இல்லை என்றாலும் அவளுக்கு எதுவும் செய்யப் பிடிக்கவில்லை. உள்ளுக்குள் ‘கூத்தாடவா போறம்?’ என்று சொல்லிக் கொண்டாள்.

வீட்டைவிட்டு வெளியே புறப்படும்போது அவள் எத்தகைய அலங்காரங்களோடு போவாள் என்று அவனுக்குத் தெரியும். அப்போதுதான் செடியில் பூத்த பூப்போல மலர்ச்சி கொண்டிருப்பாள். அவள் சடையிலிருந்து ஒவ்வொன்றும் பொலியும். நிறுத்திவைத்து நாள் முழுக்கப் பார்த்தாலும் தீராது என்று தோன்றும். அதனால் ஏக்கமாய் ‘என்ன அவ்வளவுதானா?’ என்றான். ‘சுடுகாட்டு எருக்கஞ்செடிக்கியின்னா இப்பிடியே இருந்தாப் போதும்’ என்று சொல்ல வாய் வந்து அடக்கிக் கொண்டாள். இன்னும் கொஞ்சம் அலங்காரத்துடன் அவள் வந்தால் அவனுக்குத் திருப்தியாக இருந்திருக்கும்.

அவள் அழகை இதுவரை யாரும் குறைத்துச் சொல்லவில்லை. ‘கருவாயனுக்குப் பொண்ணுக் கெடச்சிருக்குது பாரு பவுனாட்டம்’ என்றுதான் எல்லாரும் சொன்னார்கள். அது அவனுக்குப் பெருமையாக இருந்தது. அலங்காரக் குறைவால் அந்தப் பெருமை பங்கப்பட்டு விடுமோ என்று நினைத்தான் போல. அதைப் பற்றியே பேசிக்கொண்டு வந்தான். ‘அவுங்க சொல்றாங்க இவுங்க சொல்றாங்கன்னு நீ மனசப் போட்டு அலட்டிக்காத. எப்பவும் நீ இருக்கறபடி இரு. எல்லாஞ் . . . செரியாயிரும்’ என்றாள். அவளுக்கு அதிகம் பேசப் பிடிக்கவில்லை. ‘ம்’ போட்டதோடு சரி.

சரோஜாவின் அப்பன் ‘எம்பொண்ணு எங்கம்மா மாரி. நம்ம ஜனத்துல இப்பிடி நெறமா ஆரு கீறா. தப்பிப் பொறந்த தங்கம்’ என்பார். இத்தனை தூரம் வந்த பின்னும் இந்த நிறம்தான் கொஞ்சம் மரியாதையைத் தந்திருக்கிறது. நிறம் இல்லாவிட்டால் குமரேசன் பார்வை தன்பக்கம் திரும்பி இருக்குமா என்பது சந்தேகம் என்றுதான் சரோஜா நினைத்தாள். ஆனால் இந்த ஊரில் வாழ நிறம் மட்டும் போதாது. இன்னும் என்னென்னவோ தேவைப்படுகிறது. முக்கியமாக இனம். யாராக இருந்தாலும் ‘என்ன இனம்?’ என்று கேட்காமல் இருப்பதில்லை. அதைப் பற்றி யாருக்கும் எதுவும் சொல்லக் கூடாது என்றும் எல்லாம் தான் பார்த்துக்கொள்வதாகவும் குமரேசன் சொல்லியிருந்தான். அவனாலேயே இப்போது சமாளிக்க முடியவில்லை. இன்னும் என்னவெல்லாம் வருமோ.

வரிசைவீடுகளில் மைதிலியக்கா வீடு தனி. வீட்டுக்குள் யாரையும் விடமாட்டாள். யார் வந்தாலும் வெளிவாசலில் புங்க மரத்தடியில் நிறுத்திப் பேசி அனுப்பிவிடுவாள். அவள் வீட்டில் சோறு குழம்பு மீந்துபோனால் வரிசைவீட்டுக்காரர்கள் யாரையேனும் கூப்பிட்டுக் கொடுப்பாள். யாரிடமும் அவள் ஏதும் வாங்க மாட்டாள். இந்த விவரம் பிடிபடவே சரோஜாவுக்கு ரொம்ப நாள் ஆயிற்று. ‘அவ பொறந்தது மட்டும் அவ்வளோ ஒஸ்தியா? கெடக்கறா பங்கி’ என்றெல்லாம் அவளைப் பற்றி மற்றவர்கள் பேசுவார்கள். அப்போது ஏதோ மனத்தாங்கல் என்று நினைத்திருந்தாள்.

குமரேசனோடு பழக்கம் ஏற்பட்டுக் கொஞ்சநாள் ஆனபோது அவனுக்கு ஏதாவது செய்து கொடுக்க வேண்டும் என்று நினைத்தாள். ‘உனக்குக் கலகலா புடிக்குமா?’ என்று கேட்டாள். கலகலா என்றால் என்னவென்றே அவனுக்குத் தெரியவில்லை. ‘எனக்குக் கலாவப் புடிக்கும். கலகலான்னா என்ன?’ என்றான். அவள் பொய்க்கோபம் காட்டினாள். பின் ஆசையாகச் செய்து கொடுத்தாள். கூப்பன் கடையில் கோதுமை வாங்கி வந்து அதை நேம்பிப் புடைப்பாள். பின் கழுவிக்

காய வைத்து மாவு அரைத்து வருவாள். கோதுமையில் அவள் பல பண்டங்கள் செய்வாள். அன்றாடம் அரிசி என்றால் கட்டுபடி ஆகாது. கோதுமைத் தோசை, கோதுமைக் களி, சப்பாத்தி, பூரி எல்லாம் போடுவாள். பூரிக்கு மட்டும் எண்ணெய் அதிகம் ஆகும் என்று அண்ணன் ஆசையாகக் கேட்கும் போதுதான் செய்வாள்.

கோதுமை மாவுப் பலகாரமும் நிறையத் தெரியும் அவளுக்கு. பக்கடா போட்டால் ஓரிரு நாட்களுக்குத்தான் வைத்துக்கொள்ள முடியும். கலகலா செய்தால் ஒரு மாதத்திற்குக்கூட வரும். கோதுமை மாவைப் பிசைந்து நீளமாகத் தேய்த்துச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி எண்ணெயில் போட்டு எடுத்தால் நன்றாகப் பொரிந்து வரும். விதவிதமான வடிவத்தில் செய்யலாம். அது அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஏதாவது தின்ன வேண்டும் போலிருந்தால் ஒருகை அள்ளிக் குலுக்கிச் சத்தம் எழுப்பிக்கொண்டே சாப்பிடுவாள். அதைச் செய்து ஒரு தட்டம் நிறைய வைத்து அவனுக்குக் கொடுத்தாள். அவனுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. ‘இதுதான் கலாவா?’ என்றான். ‘கலா இல்ல, கலகலா’ என்று சொன்னாள். ‘அட ரண்டு கலாவா?’ என்றான் வேண்டும் என்றே.

நான்கைந்தை அள்ளிக் கைகளைக் குவித்துக் குலுக்கினாள். கலகலவென்று சத்தம் வந்தது. ‘இந்தக் கலகலா’ என்றாள். அவன் எடுத்துத் தின்றான். தின்னத் தின்னத் தின்றுகொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது. அப்படி ஒரு சுவை. அவள் கை பட்டால் எதற்கும் சுவை வந்துவிடுகிறது. என்னென்னவோ செய்யத் தெரிந்திருக்கிறாள். அவன் ருசித்துச் சாப்பிடுவதைப் பார்த்தாள். அந்த மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. வரிசைவீடுகளில் எல்லாருக்கும் கொண்டுபோய்க் கொடுத்தாள். மைதிலியக்கா வீட்டுக்கும் கொண்டு போனாள். ‘இன்னாமா உன்னோட பேஜாராக் கீது. இத்த எங்கவூட்டுல யாரும் துன்ன மாட்டாங்க. வேணாம்’ என்று முகத்தில் அடித்ததுபோலச் சொல்லிவிட்டாள். சரோஜாவுக்கு ஏமாற்றமாயிற்று.

இன்னொரு வீட்டில் இருந்த பார்வதி ‘அந்தக்கா ஆளுப் பாத்துத்தான் வாங்கிக்கும். உனுக்குத் தெரியாதா?’ என்று சொன்னாள். அதுவரைக்கும் சரோஜாவுக்கு இனத்தைப் பற்றி ஏதும் தோன்றியதில்லை. ‘இப்படியும் இருப்பார்களா’ என்று ஆச்சர்யப்பட்டாள். ‘அவுங்க என்ன எனம்’ என்று கேட்டாள். ‘ஒன்னும் இல்லின்னாலும் ஜம்பம் அடிச்சிக்கிற எனம்’ என்று பதில் வந்தது. அதனால் எல்லாரும் மைதிலி வீட்டோடு பேச்சையும் கொடுக்கல் வாங்கலையும் குறைத்துக் கொண்டார்கள். இங்கே இருப்பதோடு ஒப்பிட்டால் மைதிலியக்கா விஷயம் மிகச் சாதாரணம்.

எங்கே போகிறோம் என்பதை சரோஜாவிடம் அவன் சொல்லவே இல்லை. ‘வந்து பாரு தெரியும்’ என்றான். அவளும் வற்புறுத்திக் கேட்கவில்லை. வெளியே போகிறோம் என்பது மட்டும் போதுமானதாக இருந்தது. மாமியார் ஆடோட்டிக் கொண்டு போனபின் கிளம்பினார்கள். சைக்கிள் கேரியரில் உட்கார்ந்து செல்லும்போது வழியில் எதிர்ப்பட்ட எல்லாரும் அவளையே பார்ப்பது போலத் தோன்றிக் கூசியது. யாராவது பேசும் குரல் கேட்டால் தன்னைப் பற்றித்தான் பேசுவதாக நினைத்தாள். விசாரிக்கிறவர்களிடம் பேச நிற்பானோ என்று பயமாக இருந்தது. மிதித்துக்கொண்டே பதில் சொல்லிப் போனான்.

சிலர் சிரித்தார்கள். சிரிக்கும் முகங்களைக் கண்டால் பிடிக்கவேயில்லை. அவர்கள் சிரிப்பின் பின்னால் எத்தனையோ அர்த்தங்கள். ஒருவருக்கும் ஒன்றும் தெரியாதது மாதிரியும் எல்லாம் சரோஜாவுக்குத்தான் தெரியும் என்பதாகவும் எப்படியெல்லாம் கேவலப்படுத்துகிறார்கள். நம்பக்கூடாத சிரிப்பு என்று ஒன்று இருப்பதை இங்கேதான் கண்டாள். ‘பொண்ணு மாப்பளயும் ஜோடி போட்டுக்கிட்டுப் போறதப் பாரு. இந்த ஊர்ல இப்பிடிக் கங்காட்சி இதுவரைக்கும் பாத்ததில்லயாயா’ என்னும் குரல் காதில் விழுந்தது. ‘பகல்லயே சினிமாப்படம் பாக்கவா? நடத்து நடத்து. இந்தக் குடியானச்சிவளக் கட்டியிருந்தா

இப்பிடியெல்லாம் போவ முடியுமா? உனக்குத்தான் குடுத்து வெச்சிருக்குது. எங்களுக்கெல்லாம் அந்தக் குடுப்பின இல்ல நோண்டி . . .' என்று ஓர் ஆண்குரல் பின்னால் வந்து கொண்டே இருந்தது. அது அடங்கவே இல்லை. அவளைத் துரத்திக்கொண்டு வருவது போலவே தோன்றியது. நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. தலையைக் குனிந்தபடியே சைக்கிளில் உட்கார்ந்து சென்றாள். தார்ச்சாலைக்கு வந்தபின்தான் பயம் விலகிற்று.

இருபுறமும் அடர்ந்திருந்த புளியமர நிழல் அணைத்துக் கொள்வதாக உணர்ந்தாள். சாலையில் வெயில் இறங்காமல் இத்தனை நெருக்கமாக மரங்கள் நிற்பதைக் காண வேறொரு சமயமாக இருந்தால் நடுங்கியிருப்பாள். இப்போது ஆச்சர்யமும் நிம்மதியும் தோன்றின. சாலையில் ஒருவரையுமே காணோம். மனிதர் இல்லாத சாலை. மரச்சாலை. தோலூரில் இப்படி ஓரிடத்திலும் பார்க்க முடியாது. இருபுறக் கைகளும் வாஞ்சையாய் அவளை ஏந்திக்கொண்டன. வெம்மை கலந்த மெல்லிய காற்று என்றாலும் எல்லாப் புழுக்கத்தையும் போக்கும்படி வீசிற்று. அவனிடம் மெல்லக் கேட்டாள்.

'எங்கிக்குக் கூட்டிக்கினு போற?'

'உனக்கு எங்க போவோணும்னு இருக்குதுன்னு சொல்லு. அங்க கூட்டியோரன்.'

'எங்க ஊட்டுக்குப் போவணும்தான் கீது எனக்கு. கூட்டிக்கிணு போயி உட்டுடு.'

'கூட்டிக்கிட்டுப் போயி உடறதுக்கா இத்தன கஷ்டப்பட்டுக் கூட்டிக்கிட்டு வந்தன். வேற எங்கனா சொல்லு.'

'உன்னோட வந்ததும் வந்துட்டன். இன்னமே நீ எங்க கூட்டிக்கிணுப் போனாலும் வந்துதான ஆவணும்.'

'இதுதான் நல்லபிள்ள பேச்சு.'

சாலையில் ஒரு நெடுமேடு வந்தது. சைக்கிள் அழுத்த ரொம்பவும் கஷ்டப்பட்டான். சீட்டிலிருந்து எழுந்து அழுத்தினான். ஆனால் அவளை இறங்கச்

சொல்லவில்லை. அவளாகவே ‘நிறுத்து. எறங்கித் தள்ளிக்கிணு போலாம்’ என்றாள். அவனுக்கு அது அவமானமாகப் பட்டது போல. ‘அழுத்தீருவன். உன்னய வெச்சு அழுத்தலீன்னா நாளைக்குச் சோடாப் பாட்டல வெச்சு எப்பிடி அழுத்துவேன்’ என்று சொல்லிப் பிரயாசைப்பட்டு அழுத்தினான். பெரிய மேடு. நிதானமாகத்தான் கடக்க வேண்டும். ‘நிறுத்தலீன்னாக் குதிச்சிருவன்’ என்றாள். ஒன்றும் பேசாமல் நிறுத்திவிட்டான்.

0 0 0

நனைந்த சட்டை முதுகில் ஒட்டிக்கொள்ள மூச்சு வாங்கியவாறு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மேடேறும்போது எங்கே போகிறோம் என்பதைச் சொன்னான். அங்கிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ள வைரியூரில் அவனது அப்புச்சி வீடு. அப்புச்சியும் அம்மாயியும் இன்னும் இருக்கிறார்கள். அவனுக்கு நான்கு மாமன்கள். வீட்டுக்கு ஒரே பிள்ளையாகிய அவன் அம்மாவின் மேல் அவர்களுக்குக் கரிசனை அதிகம்.

நல்ல குணமானவன் மட்டுமல்ல, உழைப்பாளி என்றும் பார்த்துத்தான் குமரேசனின் அப்பன் வேலய்யனுக்குக் கட்டிக் கொடுத்தார்கள். வேலய்யனும் அவர்களுக்குத் தூரத்துச் சொந்தம். கண்ணுக்குத் தெரிகிற இடத்தில் இருந்தால் பிள்ளையைப் பார்த்துக்கொள்ளலாம் என்றும் எண்ணம். நிலபுலனும் வசதியும் குறைவு என்றாலும் பிள்ளையைக் கொடுத்தார்கள். நகைநட்டுடன் நன்றாகவே கல்யாணம் நடந்தது. கொஞ்சநாள் வேலய்யனின் பூர்விக வீட்டில் ஊருக்குள் குடியிருந்தார்கள். அது வேலைக்குச் சரிப்படாது என்று காட்டுப்பாறைக்குக் குடி வந்தார்கள். வேலய்யனும் சீராயியும் ஆனந்தமாகவே இருந்தார்கள்.

சின்ன வேலை என்றாலும் ஊரிலிருந்து ஆள் வந்துவிடும். கறி ஆக்கினாலோ பலகாரம் செய்தாலோ போசியில் போட்டுக் கொண்டுவந்து தருவார்கள். குமரேசன் பிறந்தபோது கொண்டாட்டமாக இருந்தது. குழந்தைக்கு ஒருவயது ஆகும் வரைக்கும் தாயும் சேயும் மாமனார் வீட்டிலேயே இருந்தார்கள். வேலய்யனுக்கு அன்றாடம் மூன்று வேளையும் சோறு அங்கிருந்தே வந்துவிடும். மருமகனுக்கு அனுப்பும் சோறு சாதாரணமாக இருக்குமா. தினமொரு பலகாரம். அரிசிச்சோறு. ‘கொழந்த பொறந்ததுக்கு அப்பறமும் மருவலஞ் சோறு திங்க வேலய்யனுக்குக் குடுத்து

வெச்சிருக்குது' என்று ஊரே பேசியது. ஊர் கண்ணும் உற்றார் கண்ணும் பட்டிருக்கும்.

வேலய்யனுக்கு ரொம்ப நாள் வாழக் கொடுத்து வைக்கவில்லை. குமரேசன் இரண்டு வயதுப் பையனாக இருந்தபோது இறந்து போனார். விடிகாலையில் கரிக்குருவிச் சத்தம் கேட்டு எழுவது அவர் வழக்கம். பெரிய அணைப்பு ஒன்றில் மிளகாய்ச் செடி நட்டிருந்தார். கரட்டூருக்குச் சென்று கக்கூஸ் குப்பை நான்கைந்து வண்டி கொண்டுவந்து போட்டு நட்ட செடி. செடிகள் தளதளவென்று வளர்ந்து அணப்பையே புதர் போல மூடிவிட்டன. இரண்டு வருசம் காய்க்கும் என நம்பிக்கை இருந்தது. சாயங்காலம் மிளகாய் பறிப்பது, விடிகாலம் தண்ணீர் கட்டுவது, அதன்பின் காயைச் சந்தைக்குக் கொண்டு போவது என்று கடுமையான வேலை. குழந்தையைப் பார்த்துக்கொண்டு வீட்டு வேலைகளைச் செய்யத்தான் சீராயிக்கு முடிந்தது.

காலையில் எழுந்ததும் முதல் வேலை ஏற்றம் கட்டுவதுதான். பனிப் பதத்தில் வாரிமண் குளிர்ந்திருக்கும். மாடுகளை ஓட்டி முடியும்வரை புழுதி இருக்காது. நேரமாகி ஏற்றம் கட்டினால் வாரிப் புழுதி எழும்பி மாடுகளைத் திணறடித்துவிடும். நாலு பறி இறைத்ததும் ஒருகுடம் தண்ணீரை வாரியில் தெளிக்க வேண்டும். நேரத்திலேயே ஏற்றத்தைக் கட்டினால் வெயில் ஏறும்முன் இறைத்துவிடலாம். மாடுகளும் சங்கிப் போகாது. இரண்டு அணப்புகள் பாயும் அளவுக்குக் கிணற்றில் நீர் இருந்தது. பறி நிறைமாதக் கர்ப்பிணி போல நீரை நிறைத்து மேலேறும். வேலய்யன் அன்றைக்கும் அப்படி ஏற்றம் கட்டி இறைத்தபோது மாடுகள் மிரண்டு பின்வாங்கியதில் கிணற்றுக்குள் விழுந்துவிட்டார்.

விழுந்ததை யாரும் பார்க்கவில்லை. என்ன நடந்தது என்று இன்றுவரைக்கும் ஒருவருக்கும் தெரியாது. எல்லாம் ஊகம்தான். வடக்கயிற்றில் பிணைந்து பின்னுக்குப் போய் ஏற்ற வண்டி உருளை வழியாகக் கிணற்றுக்குள் விழுந்திருக்கிறார். உருளை உருண்டு தூக்கி வீசியதில்

கிணற்றுச்சுவரில் அடித்து உள்ளே போயிருக்க வேண்டும். காட்டு வேலை செய்து வலுவேறிய உடம்புதான். எதையும் சமாளிக்கக்கூடிய தெம்பு உண்டு. ஆனால் எப்படி நடந்தது அது? நான்கைந்து பறி இறைத்துத் தண்ணீர் வழிந்தோடி வாய்க்கால் குடித்துப் பாத்திக்குப் போய்ச் சேரும் நேரத்தில் சீராயியை ஒருசத்தம் கூப்பிடுவார். தண்ணீர் மாற அப்போது வந்தால் போதும். அன்றைக்கும் கூப்பிடுவார் என்று எதிர்பார்த்திருந்தாள். அவருடனே எழுந்து வீட்டு வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். விடிகாலை அழைப்புக் குரலுக்குச் சத்தம் வேண்டியதில்லை. குசுகுசுப்பாகக் கூப்பிட்டாலே அவளுக்கு வந்து சேர்ந்துவிடும். பாறை வாசலிலேயே வேலை செய்தாள்.

வேலய்யனின் கதறல் குரல் திடுமெனக் கேட்டது. என்னவென்றே புரியாதபடி கிணற்றுப் பக்கம் சத்தம் கேட்டு ஓடினாள். மாடுகள் மிரண்டு பிணை போட்டு முன்வாரி உருளைப் பக்கத்தில் நின்றன. கழுத்துக் கயிறு இறுகிப் பிதுங்கிய விழிகள். இருட்டில் மினுங்கிய கண்களைப் பார்த்துப் பயந்து கத்தினாள். பக்கத்துக் காட்டுக்காரர்கள் எல்லாம் ஓடிவந்து மாடுகளை அவிழ்த்தார்கள். வேலய்யனைக் காணவில்லை. கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தும் ஒன்றும் தெரியவில்லை. உள்ளே இறங்கப் போனவளைப் பிடித்து நிறுத்துவதே பாடாய் இருந்தது. வைரியூருக்கும் சேதி போய் எல்லாரும் ஓடி வந்தார்கள். வெளிச்சம் வந்த பிறகுதான் கிணற்றுக்குள் இறங்கி வேலய்யனைத் தூக்க முடிந்தது. பிணமாகத்தான் வெளியே வந்தார். ஒருநாளும் இல்லாதபடி மாடுகள் மிரண்டிருக்கக் காரணம் என்னவென்று தெரியவில்லை. ஏற்றத்திற்கு நன்றாகப் பழகிய மாடுகள். பல வருசங்களாக இழுக்கும் மாடுகள் அவை. அவையே மிரண்டன என்றால் காத்துக்கருப்பு தவிர வேறென்ன?

காத்துக்கருப்பு வேலையாக இருக்கும் என்று பேசிக்கொண்டார்கள். வேலய்யனின் முப்பாட்டன் ஒருவர் அந்த ஏற்றத்தில் தூக்கிட்டுத்

தொங்கிவிட்டதாகவும் அந்த ஆவி இன்னும் சுற்றிக்கொண்டிருக்கிறது என்றும் பேச்சுக் கிளம்பியது. ‘இவனுக்கு ஆத்திரம். மொளவா போட்டுக் கோட்ட கட்டீரோனும்னு. நல்லா வெடிஞ்சதியும் போயி ஏத்தம் கட்டியிருந்தா இப்பிடி ஆவுமா. ராவுபகலாப் பாடுபட்டு என்னத்தக் கொண்டுக்கிட்டுப் போவப் போறம். எல்லாம் இந்த உசுரு இருக்கற வரைக்குந்தான். இப்பப் பாரு கொழந்தப் பையன உட்டுட்டு இப்பிடிப் போயிச் சேந்துட்டான். அவ அறியாப்பிள்ள. என்ன செய்வா பாவம். அதான் எல்லாம் ஒரு அளவோட இருக்கோணும்’ என்றெல்லாம் பேசினார்கள். மிளகாய்த் தோட்டத்தைப் பொறுக்க முடியாமையின் வார்த்தை வெளிப்பாடுகள். அதற்குப் பின் மிளகாய்ச் செடிக்குத் தண்ணீரே காட்டவில்லை. கொப்பும் குழையுமாக அப்படியே நின்ற நிலையில் காய்ந்து போயின. கிணற்றை அப்படியே விட்டாயிற்று. அதற்கப்புறம் இன்றைக்கு வரைக்கும் ஏற்றம் கட்டவேயில்லை. வண்டி போட்டுத் தண்ணீர் சேந்துவதோடு சரி. குமரேசன் வளர்ந்தபின் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். அவனும் ஏற்றம் இறைத்தால் நாலு காசு கையில் பார்க்கும் வெள்ளாமை வைக்கலாம் என்று அம்மாவிடம் கேட்டான். அவள் ‘ஒருசுரக் காவு வாங்குனது போதும். தங்கந்தங்கமா வர்றாப்பல இருந்தாலும் வேண்டாமடா சாமீ’ என்று சொல்லிவிட்டாள்.

அப்போதே பையனைக் கூட்டிக்கொண்டு ஊருக்கு வரச் சொல்லி அவள் அப்பனும் மாமன்களும் அழைத்தார்கள். மறுத்துவிட்டாள். என்னதான் பாசமாக இருந்தாலும் தூரமே உறவைத் தீர்மானிக்கும். அண்ணன் தம்பிகளுக்கும் கலியாணம் ஆகிவிட்டது. வேற்று வீட்டுப் பெண்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அங்கே போனால் அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இருக்க வேண்டும். பெற்ற வீட்டுக்குப் போகக்கூடாது என்பதில் தெளிவாக இருந்தாள். புருசன் சொத்தாகக் காடு இருக்கிறது. கால் வயிற்றுக் கஞ்சி குடித்தாலும் பரவாயில்லை என்று பாறைக் கொட்டகையிலேயே இருந்துவிட்டாள். ரொம்ப வருசம் தினந்தோறும் அவள்

அப்பன் இருட்டும் நேரத்துக்கு வந்துவிடுவார். இரவில் இங்கே துணையாய்ப் படுத்திருந்துவிட்டுக் காலையில் எழுந்து போவார். ஏதாவது வேலை இருந்தால் பகல் தங்கலும் உண்டு.

அப்போது அவளுக்கு இருபது வயது. ஊரில் அப்படி இப்படி என ஒரு பேச்சு வந்துவிடக் கூடாது என்பதில் அவள் தாய்வீட்டுச் சொந்தங்கள் கவனமாக இருந்தார்கள். உதவிக்கு ஆட்கள் ஓடோடி வந்தார்கள். காட்டுக்குள் பாறை வெளியில் தன்னந்தனியாய் இருக்கும் உணர்வே இல்லாதவாறு பார்த்துக்கொண்டார்கள். புருசனில்லாதவள் என்று ஊரில் ஒருபயல் பாறைப்பக்கம் அண்ட முடியாது. குமரேசனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதாகி ஆம்பளை துணை இருக்கிறது என்றான பிறகே அவள் தாய்வீட்டுச் சனம் வருவது குறைந்தது. அப்போதெல்லாம் வைரியூரில் நோம்பி சாட்டினால் ஆடுமாடுகளை எல்லாம் ஓட்டிக்கொண்டு அங்கே போய் விடுவார்கள். ஒருமாசம் அங்கேதான் வாசம்.

'உங்கொப்பஞ் . . . சொந்தம் ஒராளு வந்து எப்படியிருக்கறீன்னு எட்டிப் பாத்திருப்பாங்களா? ஏதோ எங்கப்பனும் எங்கம்மாளும் தெடமா இருந்ததால பொழச்சு வந்தன். எங்கண்ணனும் தம்பிகளும் ஒத்தப் பொறப்புன்னு பாசமா இருந்தாங்க. அவுங்களுக்கு வந்த நங்கைங்களும் எனக்கு அனுசரன. இல்லீன்னா உன்னய இப்பிடி ஆளாக்கியிருக்க முடியுமா?' என்று அவ்வப்போது சொல்வாள்.

குமரேசனுக்கு அப்புச்சியும் மாமன்களும் பெண் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். எல்லாருக்கும் செல்லமாகவே இருந்தான். அம்மாயிக்கு அதிகச் செல்லம். அம்மாவுடன் சிறுசண்டை வந்தால்கூட சொல்லாமல் கொள்ளாமல் அம்மாயி வீட்டுக்கு ஓடிப் போவான். விடுமுறை நாட்களில் அங்கேதான் இருப்பான். மகள் வீட்டுப் பேரன் ஒற்றைக்கு ஒருவன் என்பதால் அம்மாயி மடிப் பைச் சில்லரை அவனுக்குத் தாராளமாகக் கிடைக்கும். 'மாமமூட்டுலயே கெடந்து

என்ன பண்றது. அங்கருந்து பொண்ணுக் கட்டக் குடுக்கவா போறாங்க’ என்று பேச்சிருந்தது.

பெரிய மாமனின் பெண்கள் எல்லாரும் அவனுக்கு மூத்தவர்கள். சின்ன மாமன்களின் பெண்கள் அவனைவிட நான்கைந்து வயது சிறியவர்கள். கட்டலாம். ஆனால் மாமன் பெண்டாட்டிகளுக்கு விருப்பமில்லை. ஏற்கனவே நம் வீட்டுப் பெண்ணை அந்த ஊருக்குக் கொடுத்து விளங்கவில்லை. இன்னொரு பெண்ணையும் கொடுக்க வேண்டுமா என்று கேட்டார்கள். அதை வெளிப்படையாகச் சொல்லாமல் பொருத்தமில்லை என்றார்கள். ‘வெளிய அருமையான பொண்ணாப் பாத்துக் கட்டி வெக்க நாங்களாச்சு.’ அவ்வளவு சீக்கிரம் அருமையான பெண் ஏதும் கிடைக்கவில்லை. அங்கே பார்க்கிறோம், இங்கே பார்க்கிறோம் என்று பேச்சு ஓடிக்கொண்டிருந்தது. தன் வீட்டிலிருந்து பெண் எடுக்க முடியவில்லை என்னும் வருத்தம் சீராயிக்கு இருந்தது.

‘எம் புருசன் இருந்து நாலு சனத்துக்கு மதுப்பா நானும் பொழச்சிருந்தாக் குடுப்பாங்க. இந்த முண்டச்சி என்னத்தச் சேத்து வெச்சிருக்கறான்னு எளப்பாப் போயிட்டன். அப்பறம் எப்பிடிக் குடுப்பாங்க. பாசங்கீசமெல்லாம் பணமிருந்தாத்தான். ஒரம்பரையெல்லாம் வசதி இல்லீன்னா வாசலுக்குக்கூட இல்ல. எம்பையனுக்கு ஏழபாழையில ஒரு பிள்ள கெடைக்காதயா போயிருவா’ என்று அவ்வப்போது புலம்பிக் கண்ணீர் சிந்துவாள். அப்படி வருத்தம் இருந்தாலும் வெளியே யாரிடமும் காட்டிக்கொள்ள மாட்டாள். ‘குறிப்புப் பொருந்துலைன்னா அவுங்க என்ன பண்ணுவாங்க’ என்பாள். அப்பனையும் அண்ணன் தம்பிகளையும் கலந்துகொள்ளாமல் எதுவும் செய்வதில்லை. கையில் இருக்கும் பத்து இருபதையும் அங்கேதான் கொடுத்து வைப்பாள். பணம் எவ்வளவு இருக்கிறது என்பது குமரேசனுக்குக்கூடத் தெரியாது.

குமரேசனின் கல்யாணச் செய்தி உடனடியாக அவர்கள் காதுக்குப் போயிருக்கும். ஆடோட்டிப் போகும் சாக்கில் அங்கே போய் சேதி சொல்லி அழுது விட்டு வந்திருப்பாள்.

ஆனால் அங்கிருந்து யாரும் இதுவரை துக்கம் விசாரிக்க வரவில்லை. யாரும் வருவார்கள் என்று குமரேசன் எதிர்பார்த்திருந்தான். அப்புச்சியோ மாமன்களோ யாராவது வந்து திட்டி வீட்டுக்கு அழைத்துப் போவார்கள் என்னும் எதிர்பார்ப்பு அவனுக்கு இருந்தது. பெண் பார்க்கிற வேலை இனித் தங்களுக்கு இல்லை என்றும் தங்கள் வீட்டுப் பெண்ணைக் கட்டித் தரவில்லை எனக் குறை சொல்ல முடியாது என்றும் அவர்களுக்குச் சந்தோசமாக இருக்கும், ஓடோடி வருவார்கள் என்பது குமரேசனின் எதிர்பார்ப்பு. யாரும் எட்டிப் பார்க்கவில்லை என்றதும் குழம்பிப் போனான். இனிமேல் வரவே மாட்டார்களோ என்றும் நினைத்தான். அம்மாவிடம் அதைப் பற்றிக் கேட்கவே பயமாக இருந்தது. போய்ப் பார்த்துவிடுவது என்று தீர்மானித்தான். வீடேறி வந்தவனை, அதுவும் புதுப்பெண்டாட்டியுடன் வந்தவனை ‘வெளியே போ’ என்றா விரட்டுவார்கள்?

அங்கே போவதாக அம்மாவிடம் குமரேசன் சொல்லவில்லை. சொன்னால் ‘ஆட்டூரல் கப்பலேத்திட்ட. வைரியூருல மானமேத்தற. அப்பிடியே கரடேறி இந்த மானக்கேட்டக் கத்திச் சொல்லீரு. ஊரே கேக்கட்டும், நாடே தெரியட்டும்’ என்று கத்தித் தடுத்திருப்பாள். அம்மாவால் இன்னும் இயல்பாக முடியவில்லை. எப்போதும் உர்ரென்று இருக்கிறாள். நினைத்ததும் ஒப்பாரி. சரோஜாவிடம் ஒரு வார்த்தையும் சந்தோசமாகப் பேச முடியவில்லை. அவள் செய்யும் சமையலைச் சாப்பிடுவதில்லை. இரவில் களி கிளறி வைத்துக்கொள்கிறாள். அதையே மூன்று வேளையும் சாப்பிடுகிறாள். எப்போது சரியாவாள்? சரியாவாளா? அம்மா இத்தனை ஆக்ரோசம் காட்டுவாள் என்று அவன் நினைக்கவில்லை. கொஞ்சநாள் மங்கூருப் பக்கமாகவே இருந்துவிட்டு நாள் பொறுத்து வந்திருக்கலாம். உடனே வந்தது தப்போ?

சொந்தக்காரர் வீட்டுக்குப் போகிறோம் என்றதும் சரோஜாவுக்குப் பயமாகவே இருந்தது. குமரேசன் ‘எம்மேல பாசம் அதிகம். கொஞ்சம் கத்துனாலும்

ஒத்துக்குவாங்க. அவுங்களே வரட்டுமின்னு இருந்தா ஆவுமா? நாம போனா வேண்டா முன்னா தள்ளீருவாங்க' என்றான் பரிதாபமாக.

'அழயா விருந்தாளியாப் போறது கேவலமில்லயா?' என்றாள் சரோஜா.

'எங்க அப்புச்சி ஊட்டுக்கு அழச்சுத்தான் போவோணுமின்னு இல்ல. அது நம்மூடு மாதிரி' என்று சிரித்தான் அவன். போக வேண்டாம், திரும்பலாம் என்று அடம் பிடிப்பாள் எனப் பயந்தான்.

அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை அவள். அங்கே போய் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அங்கும் எல்லாருக்கும் கண்காட்சிப் பொருளாவது நிச்சயம். எல்லார் கண்களும் மொய்க்க உட்கார்ந்திருப்பதைப் போலக் கஷ்டம் ஏதுமில்லை. எதுவும் பேசாமல் தலைகுனிந்து கொண்டிருக்க வேண்டும். எதையும் பார்க்காமல் தவிர்க்கலாம். ஆனால் கேட்காமல் இருக்க முடியாது. என்றைக்காவது ஒருநாள் இந்த ஊருக்கு வந்துதான் ஆக வேண்டும். அது இப்போதே நடக்கிறது. மனதைப் பலவிதமாகத் தேற்றிக்கொண்டாள்.

ஊரைத் தாண்டிச் சைக்கிள் போயிற்று. சைக்கிள் கேரியரிலும் முன்னாலும் சோடாப் பாட்டில் பெட்டிகளை வைத்துக் கட்டிக்கொண்டு அழுத்தி அழுத்திக் குமரேசனுக்கு நல்ல பயிற்சி வந்திருந்தது. பெரிய மேட்டிற்குப் பிறகு எங்கும் சரோஜா இறங்க வேண்டியிருக்கவில்லை. சரோஜாவின் முகம் கொஞ்சம் சிரித்த மாதிரி மாறியதும் அவள் கனம் உறைக்கவே இல்லை. நொடித் தடத்திலும் பூப்போலச் சைக்கிளை ஓட்டிப் போனான்.

ஊருக்குள்ளும் இல்லை, வெளியிலும் இல்லை. ஊரிலிருந்து கூப்பிடு தூரத்தில் அப்புச்சியின் காடும் வீடும். சின்ன ஓட்டுவீட்டுக்கு முன்னால் நிறுத்தினான். அதுதான் அவன் அப்புச்சியும் அம்மாயியும் இருந்த வீடு. அதையொட்டிக் கொஞ்ச கொஞ்ச தூர இடைவெளியில்

காட்டுக்குள் நான்கு வீடுகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்தன. எல்லாம் வில்லையோட்டு வீடுகள். அண்ணன் தம்பிகள் நால்வரும் அவரவருக்குப் பிரிந்த காட்டுக்குள் தனித்தனியாக வீடு கட்டிக்கொண்டிருந்தார்கள். அதை மெலிந்த குரலில் விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்த குமரேசனின் குரல் கேட்டு அப்புச்சியும் அம்மாயியும் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தார்கள்.

வெறும் மேலோடு நெடுநெடுவென இருந்த அப்புச்சி குமரேசனைப் பார்த்ததும் ஓடிவந்து ‘எங்கடா வந்த எச்சக்கல நாயே’ என்று கத்திக்கொண்டே ஓங்கி அறைந்தார். வலி தாங்காமல் கன்னத்தைப் பிடித்தபடி நகர்ந்தவனை இழுத்துக் கண்டபடி அடித்தார். ‘நன்னி கெட்ட நாயி. தொண்டக்குழிக்குள்ள போனதக் கக்கிக் குடுத்துக்கூட வளத்தனேடா.’ அப்படிப்பட்ட வரவேற்பை அவனே எதிர்பார்க்கவில்லை. சைக்கிள் கீழே விழக் கன்னத்தைப் பற்றிக்கொண்டு அதிர்ந்து விலகி நின்றான். பயந்து அழுதுகொண்டே அவன் பின்னால் ஒளிந்தவாறு நின்றாள் சரோஜா. அப்புச்சிக்கு முன்னால் குமரேசன் குறுகித் தெரிந்தான். மேலும் அறையோ அடியோ விழுவதற்குள் அம்மாயி ஓடிவந்து அப்புச்சியின் கையைப் பிடித்துக்கொண்டாள்.

‘அட ஊடு தேடி வந்த பையன இப்பிடியா அடிப்பாங்க. வயசாச்சே தவிரப் பித்தி இல்ல உனக்கு. நம்ம கொழந்த பேண்டு வெச்சிருச்சின்னு கைய வெட்டிக்குவமா? நெவுரு அந்தப் பக்கம். நீ வாடா கண்ணு’ என்று குமரேசனின் கையைப் பிடித்து இழுத்தபடி வீட்டுக்குள் போனார்.

இங்கிருந்து உடனடியாகப் போய்விட வேண்டும் என்று தோன்றினாலும் அதைச் செயல்படுத்த முடியாமல் குமரேசனின் முதுகோடு ஒட்டியபடி சரோஜாவும் போனாள். அவளை வெறிக்க வெறிக்கப் பார்த்தார் அப்புச்சி. குமரேசன் வாசல் திண்ணையைத் தாண்டி உள்ளே நுழையும் முன் அப்புச்சி வெளியே இருந்து கத்தினார்.

‘இங்க பாருடி . . . உள்ள கூட்டிக்கிட்டுப் போவாத. என்ன எனமோ எழவோ. பெரிய பையன் பொண்டாட்டி

நோம்பிக்குப் பூக்குழி எறங்கச் சுத்தபத்தமா இருக்கறா. நெனப்புல வெச்சுக்கிட்டுத் திண்ணையோட நிறுத்திக்க.'

'ஆமா அடுத்த மாசம் வர்ற நோம்பிக்கு இப்பருந்தே உம் மருமவ விரதம் இருக்கறாளா?' என்றபடி அம்மாயி உடனே திண்ணையைக் காட்டி 'இங்க உக்காருங்க கண்ணு' என்றார். குமரேசனின் அழுகை நிற்கவில்லை. அடக்க முடியாமல் பொங்கி அழுதான். அவன் அழுவதைப் பார்க்க சரோஜாவுக்கு எரிச்சலாக இருந்தது. கூடச் சேர்ந்து அழுவதா வேண்டாமா என்று தெரியவில்லை. கொஞ்சம் திட்டுவார்கள் என்று மட்டும் நினைத்திருந்த அவனுக்குப் பெரும் ஏமாற்றம். அதனால்தான் தாங்க முடியாமல் அழுகிறான். இதுவரைக்கும் குமரேசன் கலங்கிக் கண்டதேயில்லை. எதையும் அசட்டையாகக் கடந்துவிடுவான். எரிச்சல் போய் அவனைக் காப்பாற்றிக் கூட்டிக்கொண்டு போய்விட வேண்டும் என்னும் பதற்றம் அவளுக்குள் உருவாயிற்று. அதற்குள் அம்மாயி அவனை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு 'அழுவாதடா சாமீ. .. அழுவாத' என்று சொன்னார்.

அம்மாயி ஒடிந்து விழும்படி ஒல்லி. அந்த உடம்பைக்கொண்டு எப்படி நடக்க முடிகிறது என்று சரோஜா நினைத்தாள். இங்கே அம்மாயி மட்டும்தான் கொஞ்சம் ஆறுதலாக இருப்பார் என்று தோன்றியது. அதுவும் போகப்போகத் தெரியும். எல்லாம் நடிப்பாகவும் இருக்கலாம். அவன் தேம்பல் கொஞ்சம் கட்டுப்பட்டதும் உள்ளே போய்ச் சொம்பில் தண்ணீர் கொண்டு வந்தார். கொடுக்க நீட்டியவர் திடீரென்று நினைவு வந்ததுபோல உள்ளே போய் ஈய டம்ளர் ஒன்றை எடுத்து வந்து அதில் ஊற்றி சரோஜாவுக்குக் கொடுத்துவிட்டுச் சொம்பைக் குமரேசனிடம் கொடுத்தார். தயக்கத்தோடு டம்ளரை வாங்கித் தண்ணீரைக் குடித்தாள். தாகம் அடங்கவே இல்லை. இன்னும் கேட்கத் தயக்கமாக இருந்தது. எவ்வளவு குடித்தாலும் அடங்காத தாகம்.

சத்தம் கேட்டுப் பக்கத்து வீடுகளில் இருந்து அவன் மாமன் வீட்டார் எல்லாரும் என்னவோ ஏதோ என்று ஓடி

வந்தார்கள். சரோஜாவுக்கு யாரையும் தெரியாது. சொல்லும் நிலையில் குமரேசனும் இல்லை. ‘அட நம்ம நோண்டி. புதுப் பொண்டாட்டியக் கூட்டிக்கிட்டு மாமமூட்டுக்கு மருவலஞ் சோறு திங்க வந்திருக்கறான். பலகாரத்துக்கு மாவு கரைங்கடி’ என்று அவன் அத்தைகளில் ஒருத்தி சொன்னாள். எல்லார் முகத்திலும் ஏளனச் சிரிப்பு பூத்திருந்தது. தலை குனிந்து உள்ளே திண்ணையில் உட்கார்ந்திருந்த சரோஜாவைப் பல கோணங்களில் பார்த்தார்கள். ‘ஒருத்தனோட ஓடியாரதுக்கு வெக்கமில்ல. இப்ப வெக்கம் வந்து இக்கத்துல ஏறிக்கிருச்சுப் புதுப் பொண்ணுக்கு’ என்றாள் ஒருத்தி. ‘ஆட்டூரு ஆளுவளுக்கு மானம் ரோசமிருந்தா இன்னம் உட்டு வெச்சிருப்பாங்களா? இந்தக் கழுதய அடிச்சுத் தொரத்திருக்க மாட்டாங்க’ என்று ஒருத்தி ஆவேசமாகப் பேசினாள்.

‘ஏண்டா உங்கப்பன் எப்பேர்ப்பட்ட ஆளு. அவரு செத்து இத்தன வருசத்துல உங்கம்மா பேருல எதுனா ஒருபேச்சு அப்பிடி இப்பிடின்னு வந்திருக்குமா. குடும்ப மானத்தக் காப்பாத்தி வெச்சிருக்கறா. அந்த வம்சத்துல பொறந்துட்டு இதுவரைக்கும் ஆருஞ் செய்யாத தப்பச் செஞ்சுட்டு வந்து நிக்கறயே. மாமனெல்லாம் மானங்கெட்டவன்னு நெனச்சயா? இங்க வர உனக்கு எப்பிடிடா காலு வந்திச்சு. அப்புச்சியாச்சும் அடியோட உட்டாரு. மாமனுங்க இருந்திருந்தா இந்நேரம் கால வெட்டியிருப்பாங்க’ என்றாள் இன்னொருத்தி.

குமரேசன் அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பெண்களும் சின்னஞ்சிறுசுகளும் கூட்டத்தில் இருந்தன. அவன் தோளில் ஏறியாடும் பிள்ளைகள். தோலூரிலிருந்து ஊருக்கு வரும்போது பெரும் பொட்டலங்களோடு இங்கே வருவான். அவனைச் சூழ்ந்துகொண்டு ஆட்டம் போடும் பிள்ளைகள் தயங்கித் தூரத்தில் நின்றன. குமரேசனின் மாமன்கள் யாரும் இல்லை. அது சரோஜாவுக்கு ஆறுதலாயிருந்தது. அப்புச்சியின் குரல் மறுபடியும் வந்தது.

‘மாமனுங்க வர்றதுக்குள்ள ஓடிப் போயிரு. இப்பிடிச் செஞ்சவன வெட்டிப் போட்டரலாமுன்னு பேசிக்கிட்டு இருக்கறாங்க. சின்னப்பையன்ல இருந்து பாத்துப் பாத்து வளத்தமே இப்பிடிப் பண்ணிட்டு வந்து நிக்கறானேன்னு கெடந்து மருவறானுங்க. பாற மேல சின்னதா ஒரு வில்லயூடு கட்டிக்குடுத்துக் கலியாணம் பண்ணி வெக்கலாம்னு ஏற்பாடு பண்ணிக்கிட்டு இருக்கறாங்க. இந்த வேல பண்ணீருக்கற. பாத்ததுதான் பாத்த நம்ம ஊருல நம்ம சனத்துல ஒரு பிள்ள உனக்குக் கெடைக்காதயா போயிருச்சு. கேக்கற ஆளுவளுக்குப் பதிலு சொல்லு முடியில. தல குனிஞ்சு நடக்கறம். நேர்ல பாத்தா வெட்டிப் பலி போட்ருவானுங்க. எலே, எதுனா சோறுகீறு கரச்சு ஊத்தறதுன்னா ஊத்தி வெரசா அனுப்பு. பசங்க கேட்டாப் பண்ணயத்து ஆளுவளுக்கு ஊத்தறாப்பல ஊத்துனமுன்னு சொல்லிக்கலாம்.’

அதற்கு மேல் அங்கிருக்க சரோஜாவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவன் கையை அழுத்தினாள். அவனும் உணர்ந்துகொண்டு எழுந்து வெளியே வந்தான். அம்மாயி ‘இருடா கண்ணு . . . வெயிலுக்கு ஒருவா நீத்தண்ணியாச்சும் குடிச்சுட்டுப் போவ’ என்று பின்னாலேயே வந்தார். அத்தைகளில் ஒருத்தி ‘பேரன் கூடவே போயி வயனமா ஆக்கிப் போட்டுக்கிட்டு இருக்கறது. தப்புப் பண்ணீட்டு வந்து நிக்கறான். ஊருக்கு முன்னால கேவலப்பட்டு நிக்க வெச்சுட்டான். அவனுக்கு ஆக்கிப் போட்டு ஒபசாரம் பண்ணோணுமா?’ என்றாள்.

‘ஊருல இல்லாத அழவுக்கொமுரியக் கொண்டாந்துட்டான். இவளுக்கு மட்டும் தங்கத்துல செஞ்சு வெச்சிருக்குதோ என்னமோ. ஒரச்சு வித்துப் பாற மேல பங்களாக் கட்டுவான். காரு மேல காருப் போட்டுக்கிட்டு ஆளுவ வந்து போவாங்க பாரு’ என்று பேசிய குரலைக் குமரேசனுக்குத் தெரிந்திருந்தது. அந்தக் குரலின் வாஞ்சையை அறிந்தவன்தான் அவன். எங்கே போயிற்று எல்லாம்?

‘நெவுநெவுன்னு சீல கட்டிக்கிட்டு நிக்கறதப் பாரு. ஊரையே இழுத்து உள்ள வெச்சுக்குவா மாய்மாலக்காரி.

இவளுக்கெல்லாம் அங்க ஒருத்தனும் இப்பிடிக் கெடக்கலியாட்டம் இருக்குது . . .’

சரோஜா அவளது இயல்புக்கு மாறாக ஓங்கிக் குரலெடுத்து அழுதாள். அவள் கையை அழுந்தப் பற்றிக் கூட்டி வந்த குமரேசன் தலையைக் குனிந்தபடியே சைக்கிளை எடுத்தான். எல்லாம் தப்பாகச் செய்துவிட்டோமோ? குழப்பமாக இருந்தது.

0 0 0

# 8

குமரேசனுக்கும் சரோஜாவுக்குமான பழக்கம் கூடியது அவனுக்குக் கையில் அடிபட்டபோது. சோடாப் பிடிக்கும் குண்டுப்பாட்டில்களிடம் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிறு கிராக் வந்துவிட்டால் போதும், குபீர் என வெடித்துவிடும். பாட்டிலைக் கழுவும்போது ஒவ்வொன்றுக்கும் கிராக் பார்க்க வேண்டும். அந்த வேலை குமரேசனுக்கு மிகவும் பிடிக்கும். தொட்டித் தண்ணீரில் பாட்டில்களை அரைமணி நேரம் ஊற வைத்துக் கழுவினால் அழுக்கு பளிச்சென்று வந்துவிடும். உள்ளே கம்பிப் பிரஷ் போட்டும் மேலே கட்டை பிரஷ் போட்டும் கழுவலாம். கட்டைப் பிரஷில் இலுப்பைத் தூள் தொட்டுக் கழுவினால் ஒவ்வொரு பாட்டிலும் புதிதாக மின்னும். கொஞ்சிச் சீராட்டுவது போல ஒவ்வொரு பாட்டிலையும் நிதானமாகக் கழுவுவான்.

கழுவி எடுத்துத் தலைக்கு மேல் தூக்கிப் பாட்டிலைச் சுழற்றிப் பார்வையிட்டால் எத்தனை லேசான கிராக் என்றாலும் தெளிவாகத் தெரியும். பச்சை நிறத் தகதகப்பு கிளர்ச்சி தரும். பெரியசாமி இருந்தால் ‘என்னத்தீடா அப்பிடிப் பாத்துக்கிட்டுக் கெடக்கற? கொமுரிப்பிள்ளய மொறச்சுப் பாக்கறாப்பல’ என்று கிண்டல் செய்வான். ‘இந்தப் பக்கமிருந்து பாத்தா அந்தப் பக்கம் தெரியணும்டா. அப்பிடிப் பாட்டல் கழுவோணும்’ என்பான் குமரேசன். ‘எனக்கே சொல்லித் தர்ற. எல்லாத்திலயும் தேறிட்டடா. டேய் அந்த நரம்புத் தோலுக்காரிய நெனச்சுக்கிட்டுத்தான பாட்டலக் கழுவற? சொல்லு, எனக்குத் தெரியாதா? பாட்டலு மடிப்பத் தொட்டுக் கழுவறப்ப அவ இடுப்பு உனக்கு நெனப்பு வருதுங்கறத உம்மூஞ்சியே சொல்லுதே’ என்று பெரியசாமி ஏதேதோ சொல்வான். சரோஜாவை ‘நரம்புத் தோலுக்காரி’ என்பான் அவன். என்னவானாலும் அப்படிப்

பார்த்துத்தான் பாட்டில்களை வைப்பான் குமரேசன். எல்லாச் சமயத்திலும் அப்படி முடிவதில்லை.

சாராயக் கடைகள் சிலவற்றிற்கும் சோடா போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வேலை குமரேசன் கடைக்கு இல்லை என்றாலும் அவசரமான சமயத்தில் இங்கே வருவார்கள். டவுன்கடையில் கேஸ் தீர்ந்துவிட்டது என்று பெரியசாமி காலிப் பாட்டில்களைக் கட்டிக்கொண்டு சைக்கிளில் அவசரமாக வந்தான். இரண்டு கேஸ் கம்பங்கள் இருந்தாலும் சமயத்தில் இப்படி நடந்துவிடும். சாராயக்கடையில் கொஞ்சநேரம் சோடா இல்லை என்றால் பிடுங்கி எடுத்துவிடுவார்கள். சாராயக் கடையில் சோடா இலவசம். ஒரு சோடாவுக்கு ஐந்து அல்லது ஆறு பைசா தருவார்கள். அந்த விலைக்குப் போட்டுக் கட்டுபடி ஆகாது. அதற்கேற்றபடிதான் தயாரிப்பும் இருக்கும். சாராயக் கடை சோடாவை வெகு சீக்கிரத்தில் தயாரித்துவிடலாம்.

சாராயக்கடைக்குப் போடும் சோடாப் பாட்டில்களைப் பல சமயம் கழுவுவதே இல்லை. பாட்டில் முழுக்க அழுக்குத் திரண்டு உள்ளே இருக்கும் நீரைத் தெரியாமல் போய்விட்டால் அப்போது குமரேசன் கடைக்கு ஒவ்வொரு கிரேடாக வந்துசேரும். அவற்றைக் கழுவிப் பளபளப்பாக்கி விடுவான். கொண்டு வரும் பாட்டில் அளவுக்கு அவனிடம் இருக்கும் பாட்டில்களில் சோடாப் பிடித்துப் போய்விடுவார்கள். கழுவிய பாட்டில்களைக் கிராக் பார்த்தால் எப்படியும் இரண்டு மூன்றில் கண்டுபிடித்து அவற்றை ஒதுக்கிவிடுவான். அப்படி வாரத்திற்கு ஐந்தாறு கிரேடு பாட்டில்களைக் கழுவும் வேலையும் அவனுக்கு இருக்கும். வெளியே போகாமல் கடையிலேயே இருந்து செய்யும் வேலை என்றால் அவனுக்குப் பிரியம்தான்.

அன்றைக்கு அவசரம். இரண்டு பேர் வந்துவிட்டார்கள். குமரேசன் பிடித்து வைத்திருந்த சோடாக்களை ஒருவன் எடுத்துப் போனான். தான் கொண்டு வந்த பாட்டில்களைக் கழுவாமலே தண்ணீர் பிடித்து மிஷினில் வைத்துச் சுற்றிக் குண்டடைத்தான் பெரியசாமி.

வெளியே நிறுத்தியிருந்த சைக்கிள் கேரியரில் கட்டியிருந்த மரக் கிரேடில் சோடாக்களைக் கொண்டு போய் அடுக்கினான் குமரேசன். விரல் சந்துகளில் பாட்டில் கழுத்தைச் செருகி மூன்றை ஒரே நேரத்தில் எடுத்துச் செல்லும் வித்தை அவனுக்குக் கை வந்திருந்தது. ஒருகையில் மூன்றும் இன்னொரு கையில் இரண்டும் என ஐந்து பாட்டில்களை எடுத்துக்கொண்டு போனான்.

ஒருகையில் இருந்த இரண்டைக் கிரேடில் வைத்துக்கொண்டிருந்தபோது இன்னொரு கையிலிருந்த பாட்டில்கள் குபீர் என்று வெடித்தன. ஒன்று வெடித்தால் பக்கத்தில் உள்ளதும் அவ்வளவுதான். மூன்றும் ஒரே நேரத்தில் வெடித்துவிட்டன. என்ன நடந்தது என்று குமரேசனுக்குப் புரியவில்லை. பெரியசாமி வெளியே ஓடி வந்தான். வரிசைவீட்டுக்காரர்கள் பலரும் ஓடி வந்தனர். குமரேசன் கையிலிருந்தும் காலிலிருந்தும் ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. அவனுக்கு வலியே தெரியவில்லை. யார் யாரோ எங்கிருந்தோ துணிகளைக் கொண்டு வந்து கட்டுப் போட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக வலி தெரிய தொடங்கியபோது பெரியசாமி சைக்கிளில் குமரேசனை உட்கார வைத்து மருத்துவமனைக்குக் கூட்டிப் போய்க்கொண்டிருந்தான். சோடாக்கடைக்கு வந்து சேர்ந்த மூன்று மாதத்தில் இதுதான் முதல் முறை.

கடையில் வேலை செய்யும் பையன்களைப் பார்க்கும் போதெல்லாம் சோடாபாய் சொல்வார். ‘டேய் சோடாப் புட்டியச் சாதாரணமா நெனச்சுப்புடாத. அங்க இங்க கலவரம் வந்தா ரவுடிங்க ஏன் சோடாப்புட்டிய தூக்கிப் போடறாங்க? அது ஒன்னொன்னும் சின்ன வெடிகுண்டு மாரி. வெடிச்சிச்சின்னா இன்னா நடக்குதுன்னே தெரியாது. புட்டியில கீற ஒவ்வொரு கண்ணாடியும் ஒவ்வொரு எடத்தத் தோண்டிடும். அதே நம்ம செதையில பட்டா இன்னா ஆவும்னு பாரு. நம்ம வேலயே வெடிகுண்டோட வெளாடற மாரின்னு ஞாபகம் வெச்சுக்கோ.’

அவர் பேச்சின் உண்மையை அப்போது உணர்ந்தான். வலக்கை மணிக்கட்டின் ஓரமாக மூன்று தையல் போடும் அளவுக்குக் காயம். கால்களில் தையல் போட வேண்டியிருக்கவில்லை. என்றாலும் ஐந்தாறு இடங்களில் காயங்கள். செலவு முழுவதையும் சோடாபாயே ஏற்றுக்கொண்டார். சீக்கிரம் குணமாக வேண்டும் என்று அவர் வீட்டிலிருந்தே அவ்வப்போது பிரியாணியும் கறிக்குழம்பும் கொடுத்துவிட்டார். பிரியாணியை அதுவரை அவன் சாப்பிட்டதேயில்லை. கறியையும் சோற்றையும் கலந்து இப்படியும் ஒருருசியைக் கொண்டுவர முடியுமா என்று ஆச்சரியம். அரிசி அத்தனை சன்னம். ஒரு பருக்கைகூட வீணாகாமல் சாப்பிடுவான். தோலூருக்கு வந்ததே கொஞ்சம் பணம் சேர்க்கத்தான். அதனால் சாப்பாட்டில் படுசிக்கனமாக இருப்பான். பெரியசாமி வெளியே சாப்பிடக் கூப்பிட்டால் மறுத்துவிடுவான். இப்போது பலவிதமாகச் சாப்பிடத்தான் கை அடிபட்டது போல.

ஊருக்குப் போய்க் காயம் ஆறும் வரை இருந்துவரச் சொன்னார் சோடாபாய். குமரேசன் மறுத்துவிட்டான். காயங்களைப் பார்த்தால் அம்மா மறுபடியும் தோலூருக்குப் போக விடமாட்டாள். அதனால் முடிந்த வேலைகளைப் பார்த்துக்கொண்டு கடையிலேயே இருப்பதாகச் சொல்லிவிட்டான். அவன் நடந்து போய்வரும் தூரத்தில் இருந்த கடை ஒன்றில் ஆட்டுக்கால் சூப் தினமும் குடிக்க ஏற்பாடு செய்து தந்தார். பெரிய கோப்பையில் நிறைத்துத் தரும் அந்த சூப் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதுவும் அவர் செலவுதான். பெரியசாமி சொன்னான்.

‘இப்பிடி அடிகிடி பட்டுட்டா பாய் சும்மா உட்ர மாட்டாருடா. இந்தக் காலத்துல எவந் தங்கைக்காசச் செலவு பண்ணுவான். வேலயில நீ கவனமா இல்ல. அதுக்கு நான் என்ன பண்ணுவன்னு சொல்லீட்டுச் சம்பளத்துல புடிச்சிக்குவான். இந்த பாய் அப்பிடிக் கெடையாது. இல்லீனா இப்பிடிக் கறியும் மீனுமாச் சாப்பிடுவியா? எங்கையில பாட்டில் வெடிச்சிருந்தா

ஆவாதான்னு எனக்கே ஆசையா இருக்குதுடா.’ ‘கிராக் பாட்டிலு ஒன்னு வேணும்னாத் தரட்டுமா? சோடாப் புடிச்சு எடுத்துக்கிட்டுப் போ. வெடிச்சிரும்’ என்று குமரேசன் கிண்டல் செய்தான்.

‘கிராக் நல்லாத் தெரிஞ்சுதுன்னா அது மிசினுக்குள்ளயே வெடிச்சிரும். மயிராட்டம் கண்ணுக்குத் தெரியாத இருந்தாத்தான் கொஞ்சம் நேரமாயி வெடிக்கும். அத நாம ஏற்பாடு செய்ய முடியாதுடா’ என்று அவன் வேலைநுட்பம் கலந்து பேசினான். ஆட்டுக்கால் சூப்பையும் பிரியாணியையும் பெரியசாமியோடு பகிர்ந்து சாப்பிட்டான் குமரேசன். பெரியசாமிக்கு அது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

அவன் அம்மாவும் எப்போதாவது ஆட்டுக்காலில் கறிச்சாறு காய்ச்சுவாள். ராத்திரித் தூங்கப் போகும்முன் கால்களை வெட்டிப் போட்டு மிளகு செலவெல்லாம் கலந்து கொதிக்க வைத்து மூடிவிடுவாள். காலையில் இன்னொரு முறை காய்ச்சி வடிப்பாள். அதில் கொஞ்சம் கருகல் நாற்றம் இருக்கும். அதன் பின் சாறு காய்ச்சுவாள். கருகல் நாற்றம் ஏதுமில்லாமல் இங்கே சூப்புக் கிடைத்தது. எல்லாம் இங்கே கிடைத்திருக்க எதற்கு ஊருக்குப் போக வேண்டும்? காயம் ஆறித் தையல் பிரிக்க எப்படியும் பதினைந்து நாட்களுக்கு மேல் ஆகும். அதுவரை சரோஜாவைப் பார்க்காமலும் இருக்க முடியாது. அவன் ஊருக்குப் போக மறுத்ததற்கு அதுதான் முக்கியமான காரணம்.

அந்த நாட்களை நினைக்கையில் இருவருமே கண்கள் செருகிப் போவார்கள். சந்தோச ஒளிகொண்டு பின்னிப் படர விட்ட நாட்கள் அவை. எப்போதாவது பெரியசாமி வருவான். அவன் சோடா தயாரித்து எடுத்துச் செல்லும் வரை மட்டுமே கடைக்குள் இருப்பான். மற்ற நேரமெல்லாம் புங்க மரத்தடிக் கட்டில்தான். அங்கிருந்து பார்த்தால் சரோஜாவின் அசைவுகள் எல்லாம் தெரியும். ஓர் அறைக்குள் அவளுக்குச் செய்ய எத்தனை வேலைகள் என்று பிரமிப்பாக இருக்கும். எல்லாவற்றையும் சுறுசுறுப்பாகச் செய்துகொண்டே அவன்

நோட்டத்திற்கும் கண்களால் பதில் சொல்லிக்கொண்டிருப்பாள்.

வானொலி பாடிக்கொண்டிருக்கும். அந்தச் சமயத்தில் வெளியாகியிருந்த ‘கிராமத்து அத்தியாயம்’ படப் பாடல் ஒவ்வொரு வானொலி நிலையத்திலிருந்தும் தினம் ஒருமுறையாவது ஒலிபரப்பாகும். மலேசியா வாசுதேவனும் எஸ். ஜானகியும் பாடியிருந்த ‘ஆத்து மேட்டுல ஒரு பாட்டுக் கேக்குது’ பாடல் வெகுபிரபலம். ஒருநாளைக்கு இரண்டு மூன்று முறையேனும் அந்தப் பாடல் ஒலிக்கும். எஸ். ஜானகியின் குரல் ‘ம் . . . கும்கும் ம் . . . கும்கும்’ என்று தொடங்கியதும் இருவருக்கும் உற்சாகம் வந்துவிடும். குமரேசன் கட்டிலில் இருந்து எழுந்து உட்கார்ந்துகொள்வான். எங்கோ பார்ப்பதுபோல அவள் வீட்டுப்பக்கம் பார்வை பட்டுப்பட்டுத் திரும்பும். அவளும் சரியாக அவனுக்குக் காட்சியாகிவிடுவாள்.

பாட்டு முழுக்கவும் அவர்களுக்காகவே ஒலிப்பது போலிருக்கும். ‘காட்டுல கட்டில் ஒன்னு போடவா கையில கட்டிக்கொண்டு ஆடவா’ என்று வரி வரும்போது குமரேசன் ஜாடையாய்த் தன் கட்டிலைப் பார்ப்பான். தன் பாறைக் காட்டில் கட்டில் போட்டிருப்பது போல அவன் கற்பனை விரியும். அவள் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு கதவுச்சந்தில் மறைந்துகொள்வாள். ‘சொல்லச் சொல்ல வேகம் ஏறுது தூக்கிக்கிட்டுப் போகப் போறன்’ என்று பாடல் முடியும் தருணம் வரும்போது முகம் முழுக்கப் பரவிய ஒளியோடு சரோஜாவையே தின்றுவிடுவது போலக் குமரேசன் பார்த்துக்கொண்டேயிருப்பான். அவளும் அவனையே பார்த்தபடியிருப்பாள். பார்வையைப் பிரிக்க ஏதாவது நடந்தால்தான் உண்டு. அந்தப் பாடல் முழுக்கவே அவர்கள் பேச நினைப்பதைக் கேள்விபதில் வடிவத்தில் சொல்லிவிடுவதாக அமைந்திருந்தது.

அவனோடு கிளம்பி வந்த தருணத்தில் அவள் ‘தூக்கிக்கிட்டுப் போவப் போறன்னு பாட்டு வரும்போது அப்பிடிப்பாத்த. அதேமாரி தூக்கிக்கினே வந்துட்ட’ என்றாள். ‘ஆமா. தூக்கிக்கிட்டுப் போயிக் காட்டுல கட்டில்

ஒன்னு போடப் போறன்’ என்று சொல்லிச் சிரித்தான். அந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்று இருவருக்குமே விருப்பமாக இருந்தது. ஆனால் அப்போது ஒருவருக்கொருவர் வாய் திறந்து பேசிக்கொள்ள வாய்க்கவில்லை. கையில் தையல் போட்டுக் கட்டுடன் குமரேசன் இருந்தான். எங்கும் வெளியில் போகும்படியும் சூழல் அமையவில்லை.

ஒன்பது மணிக்கு மேல் சோற்றுப்பையுடன் அவள் கிளம்பும்போது சின்னக் குண்டா ஒன்றை அவன் அறை வாசல் முன் வைத்துவிட்டுப் போனாள். அவள் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தாள். அவனுக்காக ஏதோ செய்திருக்கிறாள் என்னும் ஜாடை புரிந்தது. அவளைக் கொஞ்சதூரம் போகவிட்டு ஆவலாய் ஓடிப்போய்க் குண்டாவை எடுத்துக்கொண்டு உள்ளே போனான். குண்டா நிறையக் கறிக்குழம்பு. குழம்புக்கு மேலே கறித்துண்டுகள் நின்றன. தினமும் சோறு ஆக்கி வைத்துவிட்டுப் பெரியசாமி வரட்டும் என்று காத்திருப்பான். அவன் வந்து ஏதாவது ஒரு குழம்பு வைத்துக் கொடுப்பான். சிலசமயம் அவன் வரத் தாமதமாகும். வெறும் சோற்றை அள்ளிப் போட்டுக் கரைத்துக் குடிப்பான். பசிக்கு வேறு வழியில்லை.

அறைக்கதவைப் பாதியாய்ச் சாத்தி வைத்துச் சோற்றோடு பிசைந்து உண்டான். குழம்பில் அவள் பிரியம் அவ்வளவும் கலந்திருந்தது. நல்லி எலும்புகளை அவன் தட்டி உறிஞ்சுவதை எப்போது பார்த்தாளோ தெரியவில்லை. அதற்குள் இருக்கும் ஊன் அவனுக்குப் பிடிக்கும். இரண்டு நல்லி எலும்புகள் நீளமாகவே இருந்தன. ஆசையாய் உறிஞ்சினான். உதட்டில் உதடு வைத்து உறிஞ்சும் சுகத்தை அனுபவித்தான். எந்நேரம் போய்க் கறி எடுத்து வந்திருப்பாள்? விடிகாலையிலேயே போய் அவள் அண்ணன் எடுத்துக்கொண்டு வந்து தந்திருப்பானோ. அவனிடம் என்ன சொல்லிக் கேட்டிருப்பாள்? சதை நிறைந்த எலும்புகளும் ஈரலுமாய்க் கால் கிலோ கறி முழுக்கத் தனக்கே கொடுத்திருக்கிறாள். அவளாகவே போய்க் கறி எடுத்து வந்திருக்கிறாள்.

அவனுக்காகவே ஆக்கியிருக்கிறாள். அப்படி நினைத்துக் கொள்வது சந்தோசமாக இருந்தது.

ரசித்து வெகுநேரம் சாப்பிட்டான். குண்டாவை வழித்து நக்கினான். அம்மா வைக்கும் கறிச்சாறு ரசம் போலிருக்கும். ஊற்றி ஊற்றிக் குடிக்கலாம். இது அப்படியல்ல. கெட்டிக் குழம்பு. கொஞ்சம் கலந்து பிசைந்தாலும் நிறையச் சோற்றுக்கு ஆகும். இப்படி ஒரு சுவையில் கறிக்குழம்பா என்று தீராத வியப்பாக இருந்தது. இந்தச் சுவையை வாழ்நாள் முழுக்க அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தான். அவள் திரும்பி வந்த மதியப் பொழுதில் மூடியுடன் குண்டா அவள் வீட்டு வாசலில் இருந்தது. உள்ளே எடுத்துக்கொண்டு போனாள். சுத்தமாகக் கழுவியிருந்த குண்டாவுக்குள் வால்போலத் துண்டுச் சீட்டு ஒன்றிருந்தது. ‘இது எனக்கு எப்போதும் வேண்டும் என ஆசைப்படுகிறேன். கிடைக்குமா?’ என்று எழுதியிருந்தது.

உடனே ‘ம்’ என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டாள். அந்த ‘ம்’ கொஞ்சம் கொஞ்சமாகத் திரண்டு மேலெழுந்து சத்தமாக வெளிப்பட்டது. அது காற்றில் பரவிப் போய் அவன் காதுக்குள் நுழைந்துவிடும் என நினைத்தாள். தன் சொல் ஒவ்வொன்றையும் அவன் கேட்பான் என்றே நம்பினாள். நினைப்பதெல்லாம் அவனுக்குத் தெரிந்துவிடும். அவன் நினைப்பது தனக்குத் தெரிவது போல. ‘ம்’ என்பதை மந்திரமாய்ப் பல வடிவங்களில் சொன்னாள். வெட்கத்துடன் கவிழ்ந்து படுத்துக்கொண்டாள். அன்றைக்கு மதியம் சாப்பிடும் நினைவு கூட வரவில்லை. அப்படியே தூங்கியிருந்தாள்.

எழுந்து பார்த்தபோது மாலை மயங்கி எங்கும் மெல்லிய ஆரவாரம். ஒருநாளும் இப்படித் தூங்கியதில்லை என்னும் குற்றவுணர்வோடு குளியலறைக்குப் போய் முகம் கழுவினாள். வெளியே வரும்போது பார்வதி எதிர்ப்பட்டுச் சிரித்தாள். அவளுக்கு ஏதும் தெரிந்திருக்குமோ என்றிருந்தது. குழம்புக் குண்டாவை வைத்ததையோ அவன் எடுத்ததையோ பார்த்திருப்பாளோ. அவளிடம் முகம் கொடுத்துப் பேசத் தோன்றவில்லை. லேசாகச்

சிரிப்பை மட்டும் காட்டிவிட்டுத் தலை குனிந்தபடி வீட்டுக்குப் போய்விட்டாள்.

கட்டிலில் அவனைக் காணவில்லை. அறையும் பூட்டியிருந்தது. இந்நேரத்திற்கு எங்கே போயிருப்பான்? தனியாக நாள் முழுக்கக் கட்டிலில் படுத்திருக்க எப்படி முடியும்? சாயங்காலத்தில் கொஞ்சநேரம் அப்படியே நடக்கப் போவான். அப்போது அவனோடு தானும் போனால் எப்படியிருக்கும் என்று யோசிப்பாள். எப்படியும் ஒருமணி நேரம் கழித்துத்தான் வருவான். அப்படியே இரவுச் சாப்பாட்டையும் எங்காவது முடித்திருப்பான். பிரியாணிக் கடைகள் நிறைய இருந்தன. சோடாபாய் வீட்டுப் பிரியாணி ருசி பார்த்தவன் ஆகையால் ஒருநாள் விட்டு ஒருநாள் பிரியாணி சாப்பிடுவான். நன்றாகச் சாப்பிடச் சொல்லி சோடாபாய் அவனுக்குப் பணம் கூடுதலாகவே கொடுத்திருந்தார். ஊரிலிருந்து கூட்டி வந்திருந்த பையன். வீட்டுக்கு ஒரே பையன். நிலபுலம் உள்ளவன். அதனால் அவனுக்குப் பாய் நிறையச் சலுகைகள் கொடுத்திருந்தார்.

அன்றைக்கு அவன் வெகுநேரமாகியும் திரும்பவில்லை. எல்லாப் பக்கமும் விளக்குகள் எரியத் தொடங்கி நேரமாயிற்று. அவனையே எதிர்பார்த்து வேலை சரியாக ஓடாமல் இருந்த சரோஜாவுக்கு என்னவாக இருக்கும் என்று பதற்றமாக இருந்தது. அடிபட்ட செய்தி தெரிந்து ஊரிலிருந்து யாரும் வந்து கூட்டிப் போயிருப்பார்களோ? அப்படியானால் இனிமேல் வருவானா மாட்டானா? பக்கத்து வீட்டில் கேட்கலாமா? பார்வதி சிரித்ததற்கு இதுதான் காரணமா? அவள் கள்ளி. எல்லாவற்றையும் கவனித்து வைத்திருப்பாள். ஆள் கிளம்பிவிட்டான் என்பதைச் சூசகமாகச் சிரிப்பில் காட்டினாளோ. அப்படி இருக்காது. ஊருக்குக் கிளம்புவதாக இருந்தால் சிறு சமிக்ஞையேனும் தராமல் போகமாட்டான். தன்னால் அவனைப் பார்க்காமல் இருக்க முடியாதது போலவே அவனாலும் பார்க்காமல் இருக்க முடியாது என்று நிச்சயமாக அவளுக்குத் தெரிந்திருந்தது. தான் சொன்ன

‘ம்’ சத்தம் அவனுக்கு நிச்சயம் கேட்டிருக்கும். காதுக்குப் போகவில்லை என்றாலும் மனதுக்குள் போய் ஒலித்திருக்கும். எங்கும் போகவிடாமல் அந்த ‘ம்’ தடுத்துவிடும்.

ஒருவேளை பெரியசாமி வந்து மருத்துவமனைக்குக் கூட்டிப் போயிருக்கக்கூடும். தையல் பிரிக்க நாளாகிவிட்டதோ? தையல் பிரித்துவிட்டால் அவ்வளவுதான். அவனை மரத்தடிக் கட்டிலில் அவ்வளவாகப் பார்க்க முடியாது. அவனுக்குச் சீக்கிரம் குணமாக வேண்டும் என்றுதான் விரும்பினாள். ஆனால் தையல் பிரிக்காமலே இருந்தால் எப்படி இருக்கும் என்னும் நினைப்புத் தோன்றுவதையும் அவளால் தவிர்க்க முடியவில்லை.

0 0 0

# 9

மூன்று நாட்களாகக் குமரேசன் வீட்டிலேயே தங்கவில்லை. சோடாக்கடை ஒன்றைப் பேசி முடித்திருந்தான். கரட்டூரிலிருந்து கிட்டத் தட்டப் பத்துக்கல் தொலைவு கொண்ட விரிச்சியூரில் கடை. தினந்தோறும் அவ்வளவு தூரம் சைக்கிள் அழுத்திக்கொண்டு போவது கஷ்டம். என்றாலும் அங்கேதான் வசமாகக் கடை கிடைத்திருக்கிறது என்றான். சோடாப் போடப் பதின்மூன்று பெட்டிக்கடைகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிராமத்தில். கிராமத்துக் கடைகள் என்பதால் நந்நான்கு கடைகளாகப் பிரித்துக் கொண்டால் மூன்று நாளுக்கு ஒருமுறை போனால் போதும்.

வாரச் சந்தைகள் இரண்டுக்குப் போகலாம். எங்காவது திருவிழா நடந்தால் அதற்கும் போகலாம். கரட்டில் சோடாகலர் விற்கப் பத்துப் பதினைந்து பேர் கூட்டுச் சேர்ந்து ஏலம் எடுத்திருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்தால் அடுத்த வருசத்திலிருந்து அங்கும் விற்கலாம். அங்கேயெல்லாம் 'கலரே கலர் கலரே' என்றும் 'சோடாக் கலரே சோடாக் கலரே' என்றும் சத்தமிட்டுக் கூவ வேண்டும். அதற்குப் பழகிக் கொள்ளலாம். வியாழச் சந்தையில் நிறுத்திய சைக்கிளில் கலர் கிரேடுகளைப் பிடித்தபடி 'கலரே கலரே' என்று கத்துவதைப் பார்த்திருக்கிறான். அதெல்லாம் வந்துவிடும்.

வேலைக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. அலைச்சல் அதிகம். சைக்கிளில் உள்ள சின்னக் கேரியரைக் கழற்றிவிட்டுப் பெரிய கேரியர் வைக்க வேண்டும். கேரியரின் இரண்டு பக்கமும் கம்பிப் பெட்டிகள் மாட்ட வாகாகக் கொக்கி பொருத்த வேண்டும். ஹேண்டில்பாரில் கம்பிப் பெட்டிகளை மாட்டினால் வழுக்கிக்கொண்டு வராமல் இரண்டு கைப்பிடிகளும் நிற்கும்படி கொக்கிகள் வைக்க வேண்டும். இப்படிச்

சைக்கிளுக்கே வேலை இருக்கிறது. எல்லாம் செலவும் அலைச்சலும்தான். ஆனாலும் வருமானம் குடும்பம் நடத்தப் போதும். அம்மாவின் கையை எதிர்பார்க்க வேண்டியதில்லை. கையில் பணம் புழங்கினால் எல்லாவற்றையும் எளிதாகக் கடக்கலாம். தோலூரில் என்றால் ஒரே தெருவில் பத்துக்கடைகள் இருக்கும். இங்கே அப்படி எதிர்பார்த்தால் முடியுமா? அலைவதைப் பற்றிப் பிரச்சினையில்லை. எல்லாம் அடங்கி அமைதியானால் பரவாயில்லை என்று நினைத்தான்.

கடைக்குப் பணம் திரட்டச் சிரமப்படுவது சரோஜாவுக்குத் தெரிந்தது. என்றாலும் அவன் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அவன் அம்மாவிடம் கேட்கலாமா வேண்டாமா என்று தயங்கினான். கேட்டால் 'இல்லை' என்று சொல்லிவிட்டால் முகத்தில் அடித்த மாதிரி ஆகிவிடும். தோலூரில் வேலை செய்த போதான சம்பளம் முழுவதையும் அம்மாவிடம்தான் கொடுத்திருந்தான். அதை அப்படியே சேர்த்து வைத்திருப்பாள். இப்போது கேட்டால் 'ஒன்னுமில்லாதவளக் கூட்டிக்கிட்டு வந்தா அப்பறம் திருவோடு ஏந்திக்கிட்டுத் தெருவோடதான் போவோணும். ஒத்தப் பைசாவுக்கு வழியில்லாதவள எந்த எடுபட்ட நாயாச்சும் ஏறெடுத்துப் பாக்குமா?' என்று அவ்வப்போது பேசுகிறாள். பணம் கேட்டால் அப்பேச்சு இன்னும் வெடிக்கும். வேறு எங்கெங்கோ அலைந்து முடித்து இரவு எட்டுமணிச் சங்கு ஊதும்போதோ ஊதிய பின்னோதான் வந்து சேர்ந்தான். அன்றைய இரவில் சரோஜாவை நிமிர்ந்து பார்க்கவேயில்லை.

அவளும் என்னென்னவோ பேசிப் பார்த்தாள். எல்லாவற்றுக்கும் ஒற்றைச் சொல் பதில். அவள் பயந்துபோனாள். அவளுக்கு இருக்கும் ஒரே பிடிப்பு அவன்தான். அவனும் முகத்தைத் திருப்பிக்கொண்டால் என்ன செய்வாள்? இதுவரை ஒருபோதும் அவன் அப்படி இருந்தவனல்ல. எவ்வளவு வேலையில் அலுப்புச் சலிப்போடு வந்தாலும் அவள் முகத்தைப் பார்த்ததும் அவனுக்குள் மலர்ச்சி பெருகி அப்படியே முகத்தில்

விரியும். அவன் தொடுதல் ஒவ்வொன்றிலும் அவள் மீதான பிரியத்தின் ஊற்று துளியும் வற்றியதாக அவள் உணர்ந்ததேயில்லை. ஊரெல்லாம் அவளை எதிர்த்து நின்றபோதும் அவன் ஒருவன் கொடுக்கும் தெம்பில் உயிர் துளிர்த்திருந்தாள். எல்லாச் சுமையையும் ஒற்றை முத்தத்தில் இறக்கி வைத்துவிடுவான். கையில் அவளைப் பஞ்சுபோல் ஏந்திக்கொண்டு காற்று வெளியில் பறப்பான். என்ன ஆயிற்று அவனுக்கு?

என்ன செய்வதென்று தெரியாமல் பாறை மரத்தடியே கதியாக இருந்தும் தூக்கம் வந்தும் வராமலும் புரண்டு கட்டிலில் கிடந்தும் மோசமான இரவு ஒன்றைப் போலப் பகல் முழுவதையும் கழித்தாள். தன்னைக் கேலி செய்தோ திட்டியோ பேசும் யாராவது வந்துபோனால் பரவாயில்லை என்று தோன்றியது. வெள்ளையன் வந்தால்கூட நல்லது. குமரேசனைப் பற்றிய கவலை தீரும்படி ஏதேனும் நடக்கும். அன்றைக்குப் பார்த்து எவருமே வரவில்லை. இரவில் அவன் வந்தபோதுதான் பகல் வந்ததாக உணர்ந்தாள். ஆனால் அவனும் குனிந்த தலை நிமிராமல் சோற்றை அளைந்துகொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் அழுவதைத் தவிர வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை. அவள் அழுகிறாள் என்பது தெரிந்த பிறகு எழுந்து அவளருகே வந்தான்.

‘அழுவாத’ என்று முகத்துக்கருகே அவன் வாய் வந்த போது வீச்சம் உணர்ந்தாள். இதுவரை அவனிடம் சாராய நாற்றம் வந்ததில்லை. அவன் குடிப்பான் என்பது அவளுக்குப் புதிய விஷயம். இந்த ஊருக்கு வந்து பார்க்கும் ஒவ்வொன்றுமே புதிய விஷயம்தான். இப்போது குமரேசனே புதியவனாகத் தெரிகிறான். இன்னும் எத்தனை பார்க்க வேண்டுமோ. அவள் அழுகை மேலும் கூடியது. ‘மனசுக்குக் கஷ்டமா இருந்துச்சு. அதான் கொஞ்சமாக் குடிச்சன். எப்பவாச்சுந்தான்’ என்று குழறினான்.

அவள் பிடிப்புகள் ஒவ்வொன்றும் விடுபட்டுக்கொண்டே இருப்பது போலத் தோன்றியது. இப்படியே போனால்

என்ன செய்வது? சட்டெனத் தன் கழுத்துச் சங்கிலியைக் கழட்டிக் கொடுத்தாள். அது இரண்டு பவுன். ‘கடக்கிவோணும்னா இத வித்துச் செலவு பண்ணிக்க. இப்பிடியெல்லாம் குடிச்சுப் புட்டு வந்தீனா நான் செத்துப்பூடுவன்’ என்று அழுதாள். ‘வேண்டாம். வெச்சுக்க. ஒன்னே ஒன்னுதான் வெச்சிருக்கற. அத நான் புடுங்க மாட்டன். செரி பண்ணீருவன். இன்னைக்கு மட்டுந்தான். இன்னமே குடிக்க மாட்டன். செரியா . . . எங்க சிரி . . . சிரி . . .’ என்று உளறினான். அவளை அப்படியே மாரோடு சேர்த்துத் தழுவினான். அவளுக்கு ஏதேதோ நினைவு வந்து அழுதாள்.

மாமியார் ஒருபோதும் ஒட்டுவதாகத் தெரியவில்லை. அன்பு இல்லாவிட்டால் போகிறது. ஒருவார்த்தையும் சாதாரணமாகக்கூட வருவதில்லை. சுட்டு எரிக்கும் கொள்ளியாக ஒவ்வொரு வார்த்தையும் மனதுக்குள் வந்து செருகுகின்றன. வெயில் காந்தும் பாறை இருப்பிடம். கங்கு வார்த்தைகள். மரத்தடியில் உட்கார்ந்திருந்த உச்சிவேளையில் பக்கத்துக் காட்டு வேலாயி பெரிய மண்குடத்தை எடுத்துக்கொண்டு அந்தப் பக்கமாகப் போனாள். அவளிடம் பேச்சுக் கொடுத்தாள் சீராயி.

‘நல்ல தண்ணிக்கா போறயாயா?’

‘ஆமாத்த. ஆடோட்டிக்கிட்டுப் போயிட்டு வந்து பாக்கறன், குடிக்கக்கூட ஒருசொட்டுத் தண்ணியில்ல. கொடம் காலியாக் கெடக்குது. ஊட்டுல இருக்கற சனியனுங்க எதுக்காச்சும் நல்ல தண்ணி வேணுமின்னு இருந்தாத்தான’ என்று பொரிந்தாள் அவள்.

‘எங்கூட்டுக்குந்தான் ஒரு சனியன் வந்திருக்குது. கோட்டான் புடிச்சாப்பல மரத்தடியில நிக்கறதும் பொந்துக்குள்ள போயிப் பூந்துக்கறதுந்தான் அதுக்கு வேல. சும்மா இருக்கறமே போயி ஒருகொடம் தண்ணி கொண்டாந்து வெக்கலாம்னு நெனச்சாத்தான. எல்லாம் தானா வரோணும். ஒன்னொன்னயும் சொல்லிச் சொல்லித்தான் வர வெக்கணும்னா என்னைக்கு ஆவறது?’

என்று சீராயி வேலாயியிடம் சொல்லச் சொல்ல சரோஜாவுக்குக் கைகள் இறுகின. அப்படியே அந்த முகத்தில் ஓங்கிக் குத்த வேண்டும் போலிருந்தது. தனக்கும் நாலுபேர் இங்கே இருந்தால் இப்படி வெளிப்படையாகச் ‘சனியன்’ என்று சொல்ல முடியுமா? தன்பக்கம் நின்று கேட்க ஒராளும் இல்லை என்னும் தைரியத்தில் இப்படி எத்தனை வார்த்தைகள். வீம்போடு கொட்டாயிக்குள் போய்ச் சின்னக்குடம் ஒன்றை எடுத்துக்கொண்டு ‘அக்கா நானும் வர்றன்’ என்று வெளியே வந்தாள்.

‘கொழந்தப்புள்ள தூக்கற கொடத்தக் கொமரி தூக்கிக்கிட்டுப் போனாக் கால் கழுவக்கூடத் தண்ணி காணாது’ என்றாள் சீராயி எங்கோ பார்த்துக்கொண்டு. மண்குடம் நல்ல கனம். தலையில் குடத்தை வைத்து சரோஜாவுக்குப் பழக்கமில்லை. கிணறு எவ்வளவு தூரமோ. அங்கிருந்து இடுப்பிலேயே குடத்தைக் கொண்டுவர வேண்டும். அதனால் என்ன சொன்னாலும் சின்னக்குடமே போதும். ‘போலா மாக்கா?’ என்றாள் வேலாயிடம். சரோஜாவை அதிசயம் போலப் பார்த்துப் ‘புதுப்பொண்ணு வாய் தெறந்து முத்து உதுத்துப்புடுச்சு’ என்று சிரித்தாள் வேலாயி.

‘அதிகம் பேசாத’ என்று குமரேசன் சொல்லியிருந்ததை ஒருபோதும் அவள் மறக்கவில்லை. வாய்விட்டுக் கலகலவெனப் பேசிக்கொண்டிருந்தவள் வாயை இறுகத் தைத்துக்கொண்டாள். இருப்பதிலேயே பெரும் சிரமம் பேசாமல் இருப்பதுதான் என்று தோன்றியது. யாரிடமும் எளிதில் பேசிவிடுவாள் சரோஜா. இரவில் அப்பனும் அண்ணனும் வந்ததும் அவர்களிடம் பேசத் தொடங்கினால் அவர்களே ‘போதும் படும்மா’ என்று சொல்லும் வரைக்கும் விடமாட்டாள். ஆனால் இங்கே பேசவே பயம். இந்தப் பக்கத்துப் பேச்சு அவளுக்குச் சரியாக புரியவில்லை. அதுவும் யாரும் வேகமாகப் பேசினால் சுத்தம். தான் பேசினால் சிரிப்பார்களோ என்னும் அச்சம். வேலாயியோடு குடத்தைத்

தூக்கிக்கொண்டு தண்ணீருக்குப் போனபோதும் அப்படித்தானாயிற்று.

அங்கிருந்து கிணறு வெகுதூரம். தலையெரிக்கும் வெயிலில் வெண்புழுதி பறக்கும் வண்டித்தடத்தில் நடந்து ஒரு வரப்பேறிக் காட்டுக்குள் ஒற்றையடித் தடத்தில் போய்க் கிணற்றை அடைந்தார்கள். முந்தானைச் சேலையைத் தலைக்கு முக்காடிட்டுக் கொண்டிருந்தாள் வேலாயி. அப்படிப் போட்டுக்கொள்ளும் பழக்கமில்லை என்பதால் சரோஜாவின் முகம் வெயில் பட்டு எரிந்தது. கிணற்றைச் சுற்றி நான்கைந்து தென்னைகள் நின்றன. அங்கே போனபிறகே கொஞ்சம் ஆசுவாசமாயிருந்தது. வெயிலைக் கடந்து போகும் வேகத்திலும் வேலாயி பேசியபடியே வந்தாள்.

‘இந்த முங்கொசுவம் வெச்சு எப்பிடிக் கட்டற? டவுனுப் பக்கத்துப் பிள்ளைங்க இப்பிடிக் கட்டறதப் பாத்திருக்கறன். இங்க எல்லாப் பொண்டுவளும் உன்னோட முங்கொசுவத்தப் பத்தித்தான் பேசறாளுவ’ என்றாள். சரோஜாவுக்கும் அப்போதுதான் தெரிந்தது. இந்த ஊரில் கண்ணுக்குப் பட்ட பெண்கள் எல்லாருமே பின்கொசுவம் வைத்துத்தான் புடவை கட்டியிருக்கிறார்கள். வயசுப்பெண்களும் அப்படித்தான். சரோஜாவின் முன்கொசுவம் இப்படிப் பேசுபொருளாகியிருக்கும் என்று நினைக்கவில்லை. சந்தோசத்தோடு ‘வேண்ணாக் கட்டி உடறன்’ என்றாள். ‘அய்யோ வேண்டாமாயா. டவுனுக்காரத் தட்டுவாணியாட்டம் முங்கொசுவம் வெச்சுக் கட்டறாளுங்கன்னு ஊருப் பஞ்சாயத்தே வெச்சிருவாங்க. கொஞ்ச நாளுப் போவட்டும். நீ இங்கயே இருந்தயின்னா எதுனா கலியாணம் காச்சி வர்றப்பக் கட்டிப் பாக்கறம். அப்பக் கேட்டாங்கன்னா அந்தப் பிள்ள மட்டும் கட்டுதே எங்கள மட்டும் ஏங்கேக்கறீங்கன்னு பேசலாம்’ என்று வேலாயி சொல்லிக்கொண்டே போனாள். தன்னாலும் இவர்களுக்கு ஒரு பிரயோசனம் உண்டு என்பது சந்தோசம் தந்தது.

ஏற்றம் இறைக்கும் கிணறு. வாரிவெளி நீண்டு மேட்டில் ஏற்றம் இருந்தது. அங்கே இரண்டு பெண்கள் நின்று தண்ணீர் சேந்திக்கொண்டிருந்தார்கள். ஒருத்தி குடத்தைத் தூரத்தில் வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். வாய்க்காலில் ஒருகாலும் ஏற்றக்காலில் ஒருகாலும் என இரண்டு பக்கமும் நின்றுகொண்டு அந்தப் பெண்கள் தண்ணீர் சேந்துவதைப் பார்க்க சரோஜாவுக்குப் பயமாக இருந்தது. குடம் மேலே வந்ததும் மிகவும் பிரயாசைப்பட்டு எட்டிப் பிடித்தாள் ஒருத்தி. இந்த ஊருக்கே இது ஒன்றுதான் நல்ல தண்ணீர்க் கிணறு. காட்டுக்காரர்கள் எதுவும் சொல்வதில்லை.

பிடித்த குடநீரைத் தூக்கிக்கொண்டு வந்து தூர நின்றிருந்த பெண்ணின் குடத்தில் ஊற்றினாள் அந்தப்பெண். ‘சம்பா . . . உங்க தொந்தரவு இல்லாத தண்ணி சேந்திக்கிட்டுப் போலாமின்னு மட்ட மத்தியானத்துல வந்தாலும் வந்து நின்னுக்கறீங்க’ என்றாள். குடத்தை வைத்துக்கொண்டிருந்தவள் ‘நீங்களே இப்பிடிச் சொன்னா நாங்க எங்க போவம் சாமி’ என்று சொல்லிவிட்டுக் குடத்தைத் தூக்கிக்கொண்டு நகர்ந்தாள்.

அதுவரைக்கும் பேசாமலே வந்த சரோஜா ‘இன்னாக்கா கொழாயில தண்ணி வராதா?’ என்றாள். உடனே எல்லாரும் சிரித்தார்கள். குடத்தைத் தூக்கிக்கொண்டு அந்தப் பக்கம் போன பெண்ணும் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள். வேலாயிக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. ‘நல்லவேள ஆம்பளைங்க ஆரும் இல்ல’ என்றாள். ‘கொழாயில தண்ணி நெறையா வரும். தொறந்துட்டுப் பாரு’ என்றாள் ஒருத்தி. தன் பேச்சில் என்ன தப்பு என்று சரோஜாவுக்குப் புரியவில்லை. ஆனால் அவர்களுக்கு ஏடாகூடமாக அர்த்தம் எடுத்துக்கொள்ள ஏதோ இருக்கிறது என்று தெரிந்தது. இப்படித்தான் ஏதாவது ஆகிவிடும் என்பதால் வாயைத் திறக்கவே பயமாக இருந்தது.

சிரிப்பினூடே வேலாயி ‘சம்பாளுக்கு ஊத்துனாப்பல இந்தக் கொழாயிக்காரிக்கும் ஒருகொடம் ஊத்துங்காயா’ என்றதும் மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

சரோஜாவின் முகம் வேர்த்து நிழலடைந்தது. அவமானமாக உணர்ந்தாள். அதன்பின் வீடு வரும்வரை வேலாயியிடம் எதுவும் பேசவில்லை. தான் சொன்னதில் என்ன தப்பிருக்கிறது என்று கேட்கத் தோன்றினாலும் கேட்டு அதில் ஏதும் பிரச்சினை வந்துவிட்டால் என்ன செய்வது? குடத்தைக் கொண்டு வந்து கொட்டாயிக்குள் வைத்துவிட்டுக் கட்டிலில் விழுந்தாள்.

முளைத்த இடத்தில் தளதளவென்று வளர்ந்திருந்தது அவள் செடி. சிறு வேரையும் விடாமல் மொத்தமாகச் சேர்த்துப் பிடுங்கி எடுத்து வந்துவிட்டாள். பேருக்கு அந்த மண் ஒருகை. இங்கே கொண்டு வந்து நட்டு வைத்திருக்கிறாள். இந்த மண்ணில் வேர் பிடித்துத் தழையுமா? இந்த மண் செடியை ஏற்றுக்கொள்ளுமா? இந்தத் தண்ணீர் சுவை அதற்குப் பழகிப் போகுமா? ஆனால் எப்போதும் பயமாகவே இருக்கிறது. செடியைப் பாறையில் நட்டுவிட்ட மாதிரியே தோன்றுகிறது. பாறையில் எந்தச் செடி தழையும்?

குமரேசன் வந்ததும் இன்றைக்கு நடந்ததைச் சொல்லலாம் என்றால் அவன் நிலை இப்படி இருக்கிறது. தலை நிற்காத போதையை மறைக்க என்னென்னவோ செய்தான். அவளிடம் கெஞ்சியும் கொஞ்சியும் பேசினான். எல்லாம் அவள் அழுகையை மேலும் கூட்டின. அவனிடம் சண்டைபோட அவளுக்கு மனதில் தெம்பில்லை. இதுவரைக்கும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடமாடிக்கொண்டிருக்கிறான். சோடாக்கடை முடிந்து கைவசம் வந்துவிட்டால் நல்லது. கையில் நாலு காசைப் பார்த்தால் யாரும் கொஞ்சம் மதிப்பார்கள். அவனுக்கு இருந்த நம்பிக்கை எல்லாம் கடை ஒன்றுதான். கடை வாங்க உதவி செய்யச் சில நண்பர்கள் இருந்தார்கள். அவர்களும் இல்லை என்றால் என்ன செய்வேன் என்பான் அடிக்கடி.

அப்புச்சி வீட்டுக்குப் போய்வந்த பிறகு அவனுக்கும் மனசு விட்டுப் போனமாதிரி தெரிந்தது. அவளிடம் அதைக் காட்டிக்கொள்ளாமல் இருக்க வெகுவாகப் பிரயத்தனப்பட்டான். தான் தவறு செய்துவிட்டதாகத்

திட்டினாலும் பாசத்தின் காரணமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பினான். அடிக்காத குறையாக விரட்டிவிட்டதை அவனால் சீரணித்துக் கொள்ளவே இயலவில்லை. அன்றைக்குத் திரும்பி வரும்போது அவனது பெருமௌனத்தைக் கலைக்க சரோஜா பெரும்பாடு பட வேண்டியதாயிற்று. அவனை எப்படி மீட்டுக் கொண்டு வருவது என்று அவளுக்கும் தெரியவில்லை. அவ்வளவு பெரிய ஆறுதல் வார்த்தைகள் அவள் வசம் இல்லை.

தான் பிரயோகிக்கும் சொல் ஒவ்வொன்றும் எந்த வலுவும் அற்றுச் சோர்ந்து விழுவதை அன்றைக்குக் கண்டாள். தங்களுக்கு எதிராக எல்லாரும் பயன்படுத்தும் சொற்களோ பெரும்வலுக்கொண்டு பாய்ந்து வந்து சரியாக இலக்கில் சேர்ந்துவிடுகின்றன. இந்தப் பாறையில் தனியாக இருப்பதால் அதிகம் ஆட்களைச் சந்திக்க வாய்ப்பில்லை. அவன் வெளியே போகிறான். தினமும் பலரைச் சந்திக்கிறான். ஒவ்வொருவரின் சொல்லுக்கும் அவன் பதில் சொல்ல வேண்டியிருக்கும். எத்தனையோ ஏளனச் சிரிப்பை எதிர்கொள்ள நேரும். இதுவரை எதையும் காட்டிக்கொள்ளாமல் இருந்திருக்கிறான்.

இந்தச் சாராய நெடி எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்துவிட்டது. இந்தச் சமயத்தில் அவனை எதுவும் சொல்லக்கூடாது. தன் அழுகையை நிறுத்திவிட்டு அவன் முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள். விளக்கு வெளிச்சத்தில் பரிதாபமாகத் தெரிந்தது. அப்படியே தன் நெஞ்சில் சாய்த்துக்கொண்டாள். அவன் அழுகை கூடிய மாதிரி தெரிந்தது. தலையைத் தடவியபடி அழுவாத. நானிருக்கறன்' என்றாள். அவனுக்கு அது பிடிகொடுத்தது. பயந்த குழந்தை தாயைத் தழுவும் வேகத்தோடு அவளைக் கட்டிக்கொண்டான். தேம்பல் கூடியது.

அப்போது வெளியே இருந்து சீராயி குரல் கொடுத்தாள். 'என்னடா காணாததக் கண்டுட்ட? வந்தொடன உள்ள பூந்து கதவச் சாத்திக்கிறான். வெடிஞ்சாலும் தொறக்கறதில்ல. இந்த அரிசியத்த எங்க கண்டம்?

வந்தமா, சோத்தத் தின்னமா, வெளிய வந்தமான்னு இல்லாத இது என்ன பழக்கம்?' என்று இடைவிடாமல் பேசினாள். அவள் குரல் இருளில் இரண்டு மூன்று காடு தாண்டிப் போயிருக்கும். மகனும் மருமகளும் சந்தோசமாக இருப்பதை வேவு பார்க்கும் கண்கள் அவளுக்கு. என்ன பேசுகிறார்கள் என்பதைக்கூட ஒன்றுவிடாமல் கேட்பாள். இங்கே குசுகுசுவெனப் பேசினாலும் வெளியே நன்றாகக் கேட்கும். ரகசியம் என்பதே இல்லை. எவ்வளவு எச்சரிக்கையாகப் பேசினாலும் அவள் கொட்டாய்ப் பக்கம் நிற்பது போலவே தோன்றும். அவள் இல்லாத பகல் பொழுதில் குமரேசன் இருந்தால் அப்போது பேசலாம். இங்கே இரவு பாதுகாப்பில்லாதது.

அம்மா அழைத்ததும் சரோஜாவின் அணைப்பிலிருந்து விடுபட்டு 'இரு வர்றன்' என்று சொல்லியவன் லுங்கியை இறுக்கிக்கொண்டு படல் கதவைத் திறந்து வெளியே போனான். உடனே ஓடிப்போய் என்னவென்று கேட்டாக வேண்டுமா? கொஞ்சம் பொறுத்துப் போனால் என்ன செய்துவிடுவாள்? அம்மா கூப்பிட்டால் எப்போதும் உடனே போய் நிற்பதைப் பழக்கமாக வைத்திருக்கிறான். போதை தெளிந்து நன்றாக நடந்து போவது மாதிரி தெரிந்தது. சரோஜா அதே இடத்தில் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். அவன் 'என்னம்மா?' என்றான்.

'என்ன னொன்னம்மா? இன்னைக்கு ஊர்க்கூட்டம் போட்டிருக்கறாங்க. மத்தியானமே ஆள் வந்து சொல்லீட்டுப் போயிருக்குது. நோம்பி சாட்டறாங்களாமா, அதுக்குப் பேசத்தான். போயிட்டு வா' என்றாள் அவள்.

'நாந்தான் போயி நோம்பி சாட்டறனா? அதுக்கெல்லாம் பேச ஆளிருக்கும் போ' என்றான்.

'அட ஆளுத்தான் கழதயாட்டம் வளந்திட்டயே தவிர ஒரு அறிவும் கெடையாது. இன்னைக்குக் கூட்டத்துல உம்பிரச்சினயப் பேசாத உடுவாங்களா? நோம்பிக்கூட்டம் இருக்குதுன்னுதான் இத்தன நாளுப் பொறுத்திருந்தாங்க. இன்னைக்கு உம்பிரச்சினதான்

அங்க செலவாங்கும். போயி என்னதான் பேசறாங்கன்னு கேட்டுக்கிட்டு வா’ என்றாள்.

அவனுக்குக் கொஞ்ச நேரம் யோசனை ஓடியது. அதன்பின் சொன்னான், ‘எதுனாலும் காலையில தெரிஞ்சுக்கலாம். இப்ப நான் போனா ஒன்னு கெடக்க ஒன்னு பேசப் போயிச் சண்ட வந்தாலும் வந்துரும்.’

‘என்னடா சண்ட வரப்போவுது. ஊரு என்ன கேக்குதோ அதச் சொல்லீரு. இல்லீனா இப்பிடியே உடமாட்டாங்க. ஊரு கொஞ்சுமுன்னு நெனச்சிராத. இது மானமுள்ள ஊரு. படிஞ்சு போ ஆமா.’

‘எல்லாம் பாத்துக்கலாம். நீ கவலப்படாத இரும்மா’ சொல்லிவிட்டுக் கொட்டகைக்குள் வந்தான்.

‘ஆமா எதையும் பாக்காத போயி அவளுதுக்குள்ள பூந்துக்க’ என்று மீண்டும் அவள் பேசத் தொடங்கினாள். குமரேசன் சொல்வது போலக் காதுகளை அடைத்துக்கொள்ள முடிந்தால் நன்றாக இருக்கும் என்று சரோஜாவுக்குத் தோன்றியது.

0 0 0

# 10

சரோஜாவுக்கு விடிகாலையிலேயே விழிப்பு வந்துவிடும். அப்பனும் அண்ணனும் பொழுது கிளம்பும் முன்னே வீட்டை விட்டு வெளியேறிப் போவார்கள். அதற்காக எழுந்து அப்படியே பழக்கமாகிவிட்டது. இங்கே வந்தபின்னும் சீக்கிரத்திலேயே விழிப்பு வந்துவிடுகிறது. அதுவும் விடிகாலை நான்கு மணிவாக்கில் பாறையை ஒட்டியிருந்த பனையிலிருந்து கரிக்குருவிகள் கீச்கீச்சென்று விடாமல் கத்தும். அந்தச் சத்தம் கேட்டதும் தூக்கம் போய்விடும். அப்புறம் விழித்தபடியே கிடக்க வேண்டியதுதான். இந்தக் குருவிகள் இந்த நேரத்தில் விழித்து என்ன செய்யும்? கொஞ்ச நேரம் கத்திவிட்டு அடங்கிக்கொள்ளும்.

அவளுக்கு வந்த விழிப்பு அப்படியேதான். எழுந்து செய்யவும் வேலை இல்லை. தோலூரில் மின்விளக்கு உண்டு. இங்கே லாந்தரைப் பற்ற வைக்கவே பிரயாசைப்பட வேண்டும். அந்த வெளிச்சத்தில் வேலை செய்யவும் இன்னும் பழகவில்லை. மாமியார்க்காரிக்கு எந்த வெளிச்சமும் தேவையில்லை. இருளுக்குள்ளேயே எல்லா வேலைகளையும் செய்வாள். பல வருசமாகப் புழங்கி இடமெல்லாம் அப்படிப் பழகியிருக்கிறது. அவள் வெளியே உருட்டும் சத்தம் கேட்கும். ஆடுகள் கனைக்கும். அவள் நடமாட்டத்தைக் கேட்டபடியே சரோஜா படுத்திருப்பாள்.

குமரேசன் அந்த நேரத்தில் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருப்பான். தொங்கும் சிம்னி வெளிச்சத்தில் அவனையே பார்த்துக்கொண்டிருக்கப் பிடிக்கும். வெளியே மாமியாரின் இயக்கம் ஒலிகளாகக் கேட்டுக்கொண்டிருக்கும். இந்தப் பத்து நாட்களில் ஒலிகளை வித்தியாசப்படுத்திப் புரிந்துகொள்ள முடிந்தது. தண்ணீர் சேந்தி வரக் குடம் எடுக்கும் மெல்லிய அரவமும் கொஞ்ச நேரத்தில் தாழியிலும் பானையிலும்

தண்ணீர் ஊற்றும் சத்தங்களும் கேட்கும். ஒவ்வொரு நாளும் பத்து அல்லது பதினொரு குடங்கள் தண்ணீர் கொண்டு வருவதை எண்ணிக் கணக்கிட்டு வைத்திருந்தாள் சரோஜா.

இந்த இருட்டுக்குள் போய்த் தூர்ந்த கிணற்றில் தைரியமாகச் சேந்திக் கொண்டுவரும் மாமியாரை நினைத்து அவளுக்குப் பயமாக இருந்தது. வெளியே வெளிச்சமே இல்லை. இருளைத் துளைத்துச் செல்லும் மிருகக்கண்கள் மாமியாருக்கு இருக்கிறதா என்று சந்தேகப்பட்டாள். இருட்டில் எழுந்து வெளியே போய்வருவதை நினைத்தாலே சரோஜாவுக்குப் பெரும்பயம். குமரேசனைக் கஷ்டப்பட்டு எழுப்பித் துணைக்கழைத்துக் கொண்டுதான் போவாள். கொட்டாய் வாசலுக்கு வந்து அவன் உட்கார்ந்திருப்பான். வெளியே வருவது தெரிந்ததும் மாமியார் கனைப்பாள்.

எந்த நேரம் தூங்குவாள், எப்போது விழித்திருப்பாள் என்பதைக் கண்டுபிடிக்கவே முடியாது. தூங்கவே மாட்டாளோ என்றுகூட சரோஜாவுக்குத் தோன்றும். கையில் லாந்தரை எடுத்துக்கொண்டு வந்தாலும் இந்த இருட்டுக்கு முன்னே அந்த வெளிச்சம் பொருட்டே இல்லாமல் போகும். மின்விளக்கு வெளிச்சத்தில் இருந்தே பழகியவளுக்கு இப்படி இருட்டிலேயே வாழும் வாழ்க்கையைப் பற்றி யோசனையே வந்ததில்லை. இதற்குள்ளேயே கிணற்றுக்குப் போய்த் தண்ணீர் கொண்டு வருவதோடு இல்லாமல் மாட்டுக்குத் தண்ணீர் காட்டுவதும் தீனி போடுவதும் பால் பீய்ச்சுவதும் என எத்தனை வேலைகள்.

வெளிச்சம் படரத் தொடங்கும்போது வெளியே வந்தால் எல்லா இடமும் சுத்தமாக இருக்கும். மாமியார் எப்படி இத்தனை வேலைகளைச் செய்து முடிக்கிறாள் என்னும் வியப்பு மாறி இப்பொதெல்லாம் சரோஜாவுக்குப் பயம்தான் முன்னால் நின்றது. எதனால் பயம் என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. தானும் இவ்வளவு வேலைகள் செய்ய வேண்டுமே என்பதாலா? இரவில் பிசாசைப் போலத் தன்னால் நடமாட முடியுமா

என்னும் யோசனையாலா? மாமியார் செய்யும் வேலைகளைவிட இருட்டு என்னும் உணர்வே இல்லாமல் அவள் இயங்கும் விதம் கண்டுதான் இந்தப் பயமோ. பயத்தோடு இந்த ஊரில் ஆயுள் முழுக்க வாழ்வது எப்படி? மனம் சோர்ந்துபோயிற்று.

'ஊர்க்கூட்டத்த நெனச்சுப் பயப்படறியா? என்ன பண்ணீருவானுங்க பாப்பம். எஞ்சோட்டுப் பசங்ககிட்டப் பேசி வெச்சிருக்கறன். அவனுங்க கூட்டத்தில நம்ம பக்கம் பேசுவானுங்க. அதனால ஒன்னும் பெரிசாப் பண்ணீர முடியாது' என்று ஆறுதல் சொன்னவன் 'இப்ப எதுக்கு இந்தப் பேச்செல்லாம்' என்றபடி அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் அவனிடமிருந்து வந்த வாசனை கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்துப்போனது. கைகளை விரித்தான் என்றால் அவளை அவனுக்குள் சுருட்டிக்கொள்வான். 'கைக்கு அடக்கம்' என்று முணுமுணுப்பான். அவளுக்கு அப்போது பெருமையாகவும் இருக்கும். எப்போதும் இப்படி அவனுக்குள்ளேயே கிடக்க வேண்டும் என்று ஆசை வரும். இன்னும் என்ன வேண்டும்? ஏன் எல்லாரும் அதையும் இதையும் சொல்லிப் பிரிக்கப் பார்க்கிறார்கள்? அந்த நினைப்பு வந்துவிட்டால் அவளால் இயல்பாக இருக்க முடியாது. அதைத் துடைத்தெறிவது அத்தனை சுலபமில்லை.

எந்த நேரம் என்று தெரியவில்லை, திடீரென்று விழிப்பு வந்தது. வெளியே எழுந்து போக வேண்டும் என்றிருந்தாலும் குமரேசனை எழுப்ப மனமில்லை. கட்டிலின் பெரும்பகுதியை அடைத்துக்கொண்டு ஆழ்ந்து உறங்கும் அவனைப் பார்த்தபடியிருந்தாள். அவன் நெஞ்சில் தலை வைத்துக் கொஞ்ச நேரம் படுத்தாள். விழித்தபின் மாமியாரின் வேலை அரவம் கேட்கும்வரைக்கும் துளியும் கண் மூடவில்லை. கண்ணை மூடினாலும் எரிந்தது. எழுந்து வெளியே போகவும் தைரியம் வரவில்லை. இன்னும் பளீரென்று விடிய நேரமிருந்தது. மாமியாரின் குடம் இப்போதுதான் நாலாவது முறையாகத் தண்ணீர் ஊற்றியிருக்கிறது.

இன்னும் ஆறேழு முறை வர வேண்டும். சலிப்போடு படுத்திருந்தாள்.

திடீரென்று நாய் இடைவிடாமல் குரைத்தது. யாரோ புதிதாக வருகிறார்கள் என்று தோன்றியது. தண்ணீருக்குப் போன மாமியார் அதற்குள் வந்துவிட்டால் நல்லது. இல்லாவிட்டால் எழுந்து வெளியே போக வேண்டும். வருபவர்களிடம் என்ன பேசுவது? குமரேசனை எழுப்பினால் எழுவானா? அவள் யோசனை கூடக்கூட 'ச்சுடாய். உள்ளூரு ஆளுக்கும் அசலூரு ஆளுக்கும் வித்தியாசம் தெரிலீயா உனக்கு?' என்று நாயை அதட்டும் கனத்த ஆண்குரல் கேட்டது.

குமரேசனின் கைகளை உதறிவிட்டு மெல்லக் கட்டிலுக்குள் இருந்து எழுந்தாள். அகலக் கட்டில் என்றால் குழிந்துவிடுகிறது. குழிக்குள் இருந்து கையூன்றி எழுவது போலத்தான். எழுந்து ஆடைகளைச் சரிசெய்தாள். அவனையும் சரிப்படுத்தினாள். அப்படியே வெளியே போனாலும் போய்விடுவான். சில நாள் இரவில் வந்து சுடுதண்ணீரில் குளிப்பான். அப்போது கோவணம் கட்டிக்கொள்வான். கோவணத்தோடு பார்க்கச் சிரிப்பாக இருக்கும். குளித்துக் கோவணத்தை மாற்றிக்கொண்டு அப்படியே வந்து படுப்பான். அவளுக்கு வெட்கமாக இருக்கும். 'இதயும் அவுத்துப் போட்டுப்புட்டு நட' என்பாள். 'இந்தூருக்கு இது போதும்' என்பான்.

லுங்கியை இடுப்பில் செருகிவிட்டு அவனை அசைத்தாள். அதற்குள் நாயை விரட்டும் மாமியாரின் குரல் கேட்டது. ஆசுவாசமாக இருந்தது. பதற்றம் குறைந்து கீழே உட்கார்ந்து தலையைச் சரி செய்துகொண்டாள். வெளியே பேசும் குரல்களிலிருந்து குறைந்தது மூன்று பேராவது வந்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. ஊர்க்கூட்டம் பற்றிய சேதிதான் வந்திருக்கிறது. நாய்ச்சத்தம் இப்போது முற்றிலுமாக அடங்கிவிட்டது. அவர்களின் பேச்சுக்குரலுக்குக் காது கொடுத்தாள்.

'என்னங்க மாமா இந்த நேரத்துல இப்பிடிக் கூட்டமா வந்திருக்கிறீங்க' என்றாள் மாமியார். அவள் குரலும் இயல்பாக இல்லை. ஊர் என்ன சொல்லுமோ என்ன

செய்யுமோ என்னும் பதற்றம் அவளுக்குள். அதைத்தான் வார்த்தைகளாகக் கொட்டிக்கொண்டிருக்கிறாளோ என்று தோன்றும். ஊரைவிட்டு வெளியே வராதவள். ஒத்தைப் பையனை வைத்துக்கொண்டு இருபது வயதிலிருந்து இங்கேயே கிடக்கிறாள். அவள் கவசம் ஒழுக்கம். அதற்கு மகனால் பங்கம் வந்துவிட்டதாகத் தோன்றுமோ. அவள் கேட்டதும் சலிக்கும் குரலில் ‘வர வேண்டியதாயிருச்சாயா. உம்பையன் செஞ்சிருக்கற காரியம் எங்களயெல்லாம் ராத்தூங்காம செஞ்சிருச்சு’ என்றார் ஒருவர்.

‘வெடியங்காட்டிக் கெளம்பிப் போயிட்டா என்ன பண்றதுன்னுதான் இந்நேரத்திலயே எந்திருச்சு வந்தம். ராத்திரிக் கூட்டம் முடியவே சாமமாயிப் போச்சு. அதுக்கப்பறம் தூக்கம் எங்க வருது’ என்று இன்னொரு குரல் குற்றம் சுமத்தும் தொனியில் பேசியது.

‘நோண்டிய எழுப்பி வெளிய கூப்புடாயா. அவங்கிட்டத் தான் பேசியாவோணும்’ என்று இன்னொருவர் சொன்னார். ‘அந்த நாதாரி நாய நானெழுப்புனா எந்திரிப்பானா? நல்ல நாளுலயே எஞ்சத்தத்த மசுருக்கும் மதிக்க மாட்டான். அவ கூப்பிட்டா ஒருசத்தத்துல எந்திரிச்சு வருவான். நம்மகிட்ட என்ன மருந்து மாயமா இருக்குது’ என்று மாமியார் அவர்களிடம் குமரேசனைத் திட்டினாள்.

சரோஜா குமரேசனை ‘த்தா த்தா’ என்று தட்டி எழுப்பினாள். அவன் காதுகளில் ரகசியம் போல ‘ஊருக்காரங்க வந்துக்கீறாங்க. உன்னக் கூப்புர்றாங்க. எயுந்துப் போ. உங்கொம்மா வேற மானத்த வாங்கறா’ என்று சொன்னாள். அவன் சலிப்போடு புரண்டு மெல்ல எழுந்து படல் கதவைத் திறந்து வெளியே போனான். யாரையோ பார்த்து ‘வாங்க தாத்தா . . . வாங்க மாமா’ என்று சொல்வது கேட்டது. வரிசை வைத்துக் கூப்பிடும் இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. யாரைப் பார்த்தாலும் உடனே ‘வாங்க’ என்று கையெடுத்து விடுவார்கள். பிடிக்காதவர்களை அதே கை அடித்து விரட்டவும் எந்நேரமும் தயாராக இருக்கும்.

அவளுக்கு வெளியே போகலாமா வேண்டாமா என்றிருந்தது. அடிவயிறு கனத்துத் தொந்தரவாக இருந்தது. இரண்டு நாட்களாக அவ்வப்போது தலை கிறுகிறுக்கிறது. நடந்தால் தானாகத் தள்ளுகிறது. விழுந்து விடுவோமோ என்று பயம். பிடித்துக்கொள்ள எதுவாவது தேவைப்படுகிறது. இதுவரை இப்படி ஆனதில்லை. காலையில் எழுந்தால் மந்தமாக இருக்கிறது. குமரேசன் வரட்டும் என்று வெளியே போகலாம் என நினைத்தாள். அவன் பானைத் தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்துக்கொள்ளும் சத்தம் கேட்டது.

‘சாமமுன்னு இல்லாத ஏமமுன்னு இல்லாத தண்ணி சேந்தியாந்து வெச்சா அள்ளி அள்ளி ஊத்து’ என்றாள் மாமியார். அவன் பதில் எதுவும் பேசவில்லை. அம்மாவின் பேச்சுக்குப் பெரும்பாலும் அவன் பதில் சொல்வதில்லை. ‘எரும மேல மழ பெஞ்சாப்பல இருக்கத் தெரிஞ்சுக்கிட்டான். எதுக்குனா அசையறானான்னு பாரேன்’ என்றும் திட்டுவாள். வாய் திறக்க மாட்டான். பாறைமீது போட்டிருந்த கட்டிலிலும் பெருங்கல்லிலும் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு முன்னே குமரேசன் வந்து பாறையின் மீது உட்கார்ந்து ‘சொல்லுங்க மாமா. இந்த நேரத்துல வந்திருக்கறீங்க’ என்றான்.

‘பச்சுப்பச்சுன்னு வெடியற நேரமாயிருச்சு மாப்ள. உனக்குத்தான் இப்ப நேரம் போறதே தெரியாதே’ என்று ஒருவர் சொல்ல எல்லாரும் மெல்லச் சிரித்தார்கள். படல் கதவு திறந்தே இருந்தது. சரோஜா வாசலில் இருந்து பார்த்தால் தெரியாத மாதிரி உள்ளொடுங்கி உட்கார்ந்திருந்தாள். அவள் உள்ளிருந்து பார்க்க முகங்கள் மசமசவென்று தெரிந்தன. ஆனால் குரல்கள் தெளிவாகவே கேட்டன.

‘மாப்ள . . . நீ என்ன நெனச்சுச் செஞ்சீன்னு தெரீல. இன்னைக்கு ஊரே உன்னயப் பேசறாப்பல ஆயிருச்சு பாத்துக்க. ராத்திரிப் பேசுனதுல கோயில் நோம்பி சாட்டறதையே நிறுத்தச் சொல்றாங்க பலபேரு. என்ன

எனம் ஏதுன்னு தெரியில. எங்க கலியாணம் பண்ணிக்கிட்டான், என்ன மொறையில பண்ணிக் கிட்டானும் தெரியில, ஒரு பிள்ளயக் கூட்டியாந்து ஊருல வெச்சிருக்கறான். எனம் சனமில்லாத பிள்ளய ஊருக்குள்ள வெச்சிருந்தா அது ஊருக்கே தீட்டு. தீட்ட வெச்சுக்கிட்டு நோம்பி சாட்டுனா சாமி கோபம் ஊர என்ன செய்யுமோ தெரியில. அதனால இந்த வருசம் நோம்பி சாட்ட வேண்டா முன்னு ஆளாளுக்குப் பேசறாங்கப்பா.'

ஒருவர் விட்ட இடைவெளியில் இன்னொருவர் தொடர்ந்தார்.

'பிள்ள எனம் என்னன்னு கேட்டா நீ எல்லாம் நம்ப சனந்தான்னு சொல்ற. நம்ப சனமின்னா ஏன் அவிய அப்பன் அம்மா ஒரம்பர எல்லாம் கூட வர்ல? கூட்டிக்கிட்டு வரச் சொல்லுங்கன்னு கேக்கறாங்க மாப்ள. என்ன பதில் சொல்ற?'

'ஒன்னு ரண்டு வலுசப் பசங்கதான் உம்பக்கம் பேசறாங்க. அவனுங்களும் என்னத்தப் பெரிசாச் சொல்றாங்க, அவனுக்குப் புடிச்சிருக்குது கட்டிக்கிட்டான், அதுக்கு ஊருக்கும் சம்பந்தமில்லைங்கறாங்க. இத என்ன ஞாயம் நீயே சொல்லு. எங்கிருந்தோ கட்டிக்கிட்டு வந்தாலும் நம்ம ஊருக்குத்தான் கூட்டிக்கிட்டு வந்திருக்கற. நாளைக்கு ஒரு விசேசம்னா நாலு எடத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போவ. ஒன்னுமின்னாப் பொழங்குவ. இந்தக் கலப்படமெல்லாம் சோடாக்கலர்ல இருக்கலாம். வாழ்றதுக்கு ஆவுமா?'

அதுவரைக்கும் எதுவும் பேசாமல் இருந்த குமரேசன் பொறுமை இழந்தவனாய் 'கட்டிக்கிட்டு வந்துட்டன். இப்ப என்னதான் செய்யச் சொல்றீங்க' என்று எரிச்சலோடு கேட்டான். 'ஊரப் பகச்சுக்கிட்டு உசுரோட வாழ முடியுமா மாப்ள . . . இந்தப் பேச்சுப் பேசற' என்றவர் 'இவங்கிட்ட என்னப்பா பேச்சு. ஊர் முடிவ நறுக்குன்னு நாலு வார்த்தயில சொல்லிட்டு வாங்கப்பா' என்று கோபத்தோடு சொன்னார். குமரேசன் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான். 'நாலு பேரப் பத்தி நெனச்சிருந்தா

இந்தக் காரியம் செஞ்சிட்டு வந்திருப்பானா இவன்' என்று மாமியார் தானாகப் புலம்பினாள். வந்தவர்களில் வயதான குரல் உடையவர் நிதானத்தோடு சொன்னார்.

'இங்க பாரு மாப்ள. ஊரு நோம்பியவே நிறுத்தலாமின்னு சொன்னாங்க. வேற எனத்துப் பிள்ள ஊர்ல இருக்கற தீட்டக் கழிக்காத நோம்பி போடக்கூடாதுன்னு பேச்சு வந்துது. அப்பறம் ஒராளுக்காவ ஊர்க் காரியத்த நிறுத்தக்கூடாதுன்னு ஒருமிச்சுச் சொல்லிட்டாங்க. ஆனா இப்படியே உட முடியாது. உட்டா ஊர்ல நாளைக்கு ஒவ்வொருத்தனும் எந்த எனத்துப் பிள்ளய வேண்ணாலும் இழுத்துக்கிட்டு வந்து ஊர்ல வெச்சிக்குவான். அப்பிடி உட முடியுமா? அக்கினிச் சட்டி எடுத்துக் கும்படற சாமி நம்ம சாமி. அவளுக்கு வேத்துச் எனமுன்னா ஆவுமா? அக்கினிச் சட்டி எடுக்கறவுங்களுக்கு எதுனா ஒன்னுன்னா என்ன செய்யறது சொல்லு. அதனால எல்லாரும் பேசி முடிவு செஞ்சது என்னன்னா . . .'

'என்னத்த இழுக்கறீங்க. சட்டுன்னு சொல்லுவீங்களாமா . . . அத உட்டுட்டு . . . இங்க பாரு மாப்ள . . . பிள்ள என்ன எனமுன்னு தெளிவாத் தெரியிற வரைக்கும் உங்குடும்பத்த ஊர உட்டு ஒதுக்கி வெச்சிருக்கறம். கோயில் வரி வாங்கமாட்டம். நோம்பி அது இதுன்னு கோயப்பக்கம் வந்திரக் கூடாது. குடி தொழிலாளிங்க ஆரும் உங்கூட்டுப் பக்கம் வர மாட்டாங்க. ஊருக்குள்ள ஆரு ஊட்லயும் எதும் உங்களுக்குத் தரமாட்டாங்க. உங்க கிட்டயும் வாங்க மாட்டாங்க. கட்டுப்பாட்ட மீறுனா ஊர்க்குத்தம் பாத்துக்க. நோம்பி முடியட்டும். அப்பறம் உன்னய வர வெச்சு ஒரு நாளைக்கிப் பேசிக்கலாம்னு முடிவாயிருக்குது. அதுவரைக்கும் இதுதான் நடமொற பாத்துக்க . . .'

'பிள்ளயோட அப்பனம்மா, சொந்தபந்தம் எல்லாரும் இங்க வரோணும். அவுங்க என்ன ஏதுன்னு ஊருக்கு மின்னால சொல்லோணும். பொழங்கற எனமா இருந்தா அதுக்கேத்த மாதிரி எதுனாப் பரிகாரம் பண்ணிக்கலாம். தீண்டாதாரா இருந்தாக் காலத்துக்கும் கட்டுப்பாடுதான்.

நீ வேண்ணாக் குடியிருக்கற எடத்த மாத்திக்கலாம். நோம்பி முடிஞ்சதயும் பேசிக்கலாம். அதுக்குள்ள எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணி வெய்யி. அதச் சொல்லி இதச் சொல்லி நழுவற வேலயெல்லாம் வேண்டாம். ஊரு ஒத்துக்காது. இப்பவே பக்கத்து ஊர்க்காரனெல்லாம் ஒருமாதிரியாப் பேசறானுங்க.'

'சீராயா நீ என்ன பண்ணுவ பாவம். இதுக்குத்தான் நம்ம பசவள நெட்டையோ குட்டையோ ஊரோட இருந்து எதுனா செய்யுங்கன்னு சொல்றது. வெளிய போயிட்டா அப்பறம் இப்பிடித்தாம். இவனுங்க கம்முனு இருந்தாலும் ஊர்ல இருக்கறதுவ உடுமா? பாக்கலாம். இன்னமேலாச்சும் புத்தி வருதான்னு. இப்பவும் ஒன்னும் வேண்டாம். கூட்டிக்கிட்டு வந்தாப்பலயே கூட்டியோயி உட்டுட்டு வந்துட்டான்னாக் கூடப் போதும். எதோ கெனாக் கண்டாப்பல நடந்துச்சுன்னு உட்ரலாம். என்ன பண்றான்னு பாப்பம் . . .'

சொல்லச் சொல்லவே மாமியார் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினாள். 'எங்குடி முழுவிப் போச்சே. என்ன செய்வன். ஆத்துல அக்கப்பட்டு சேத்துல சிக்கப்பட்டு இவன வளத்துனனே . . . இதுக்குத் தானா. ஊரோட இருந்தா ஒறவுண்டு ஊர உட்டுட்டா என்னவுண்டு? பாறையில ஓரியாக் கெடக்கறனே. அந்த நாய்க்குக் கட்டுப்பாடு போடுங்க. என்னய உட்டுருங்க. அவனப் பெத்த தப்பத் தவிர நானென்ன செஞ்சன். அவள அவன் உடமாட்டான். வந்ததியும் கொட்டாய்க்குள்ள போனான்னா வெடிஞ்சுதான வெளியில வர்றான். அவள எப்பிடி உடுவான் அவன் . . .' என்னும் அவள் குரல் வெகு தூரத்துக்குக் கேட்டிருக்கும். குமரேசன் எதுவும் பேசவில்லை. சரோஜாவுக்கு வயிறு புடைத்து உப்பிக்கொண்டது. உடனே வெளியே போயாக வேண்டும். எழப் பார்த்தாள். உடல் நடுங்கியது. தலை சுற்றி மயக்கம் வரும் போலிருந்தது.

0 0 0

# 11

கடை வேலையாய்ப் போகப் புறப்பட்ட குமரேசனை சரோஜா விடவில்லை. ஊர்க் கட்டுப்பாடு விஷயம் அவளுக்கு முழுவதுமாய்ப் புரியவில்லை என்றாலும் பயத்தை அதிகப்படுத்தியது. விடிகாலையில் வந்து பேசியவர்களைப் போல இன்னும் யாரும் வருவார்களோ என்று பயந்தாள். வருபவர்களை அவன் இல்லாமல் சமாளிக்க முடியாது. யாரும் வரவில்லை என்றாலும் தனியாய் இருக்க முடியாது. அவனும் யோசித்தபடியே இருந்தான். அவளுடைய சொந்தங்களை எல்லாம் கூட்டி வந்து ஊர்முன் நிறுத்த வேண்டுமாம். என்ன இனம் என்று சொல்ல வேண்டுமாsம். அதெல்லாம் நடக்கும் காரியமில்லை. சரோஜாவின் நிறத்தைப் பார்த்தால் துருவிக் கேட்க மாட்டார்கள் என்று அவன் நினைத்திருந்தான். கொஞ்ச நாள் பேசுவார்கள். அப்புறம் எல்லாம் சரியாகிவிடும் என்பது அவன் எண்ணம்.

வெளியூருக்குக் குடி போகலாம். இங்கே இருக்கும் நிலத்தை என்ன செய்வது? அம்மா எப்படியோ பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிட்டு சரோஜாவைக் கூட்டிப் போகலாம். இந்த உலகத்தில் எங்கே போனாலும் இந்த ஊர்க் கட்டுப்பாடு வந்து தீருமா? தோலூருக்கே போய் சோடாபாயிடம் வேலை செய்துகொண்டு வரிசை வீடு ஒன்றில் குடியிருந்தால் என்ன? இங்கே கடைவைக்கச் செய்திருக்கும் ஏற்பாடுகள் என்னாவது? கொடுத்த காசைத் திரும்ப வாங்க முடியாது. அவனுள் யோசனைகள் ஓடியபடியே இருந்தன. கட்டுப்பாடு போட்ட விஷயத்தைத் திடும்படித்து ஊருக்குள்ளும் காடுகாடுகளுக்கும் போய்ச் சொல்லும் சத்தம் பொழுது விடியும்போதே கேட்டது. திடும்புக்காரன் பாறைக்காட்டுக்குத் தூரத்தில் நின்றுகொண்டு நான்கு முறை திடும்பை முழக்கினான். பின் சத்தம் எடுத்துச் சொன்னான்.

‘ஆட்டூருக் கோயிலு நோம்பி சாட்ற கூட்டம் நேத்து ராத்திரி நடந்துச்சுங்கோ . . . அதுல ஊர்ப் பெரியவங்க கூடி எடுத்திருக்கற முடிவுப்படி பாறக்காட்டு வேலய்யஞ் . . . சாமி மகனாகிய குமரேசரு வெளியூர்ல இருந்து பொண்ணுக் கட்டிக்கிட்டு வந்திருக்கறதால ஊர்க் கட்டுப்பாடு விதிச்சிருக்குதுங்கோ . . . அதனால இன்னையிலருந்து ஊர்க்காரங்க ஆரும் அவிங்களோட பேச்சு வார்த்த வெச்சுக்கக் கூடாதுங்கோ . . . களவெட்டு கதிரறுப்புன்னு எந்த வேலைக்கும் அவிங்க காட்டுக்கு ஆரும் போவக்கூடாது, அவிங்களயும் கூப்டுக்கக் கூடாதுங்கோ . . . சோறுதண்ணிப் பொழக்கமும் இல்லீங்கோ . . . குடி தொழிலாளிங்களுக்கும் இதுதாங்கோ . . . நோம்பி முடிஞ்சு ஊர்க்கூட்டம் போட்டு மறுமுடிவு சொல்றவரைக்கும் இந்தக் கட்டுப்பாடுங்கோ . . . மீறுனா ஊர்க்குத்தமுங்கோ . . .’

ஒவ்வொரு காட்டுக்கும் அவன் போய் இப்படிச் சொல்லும் சேதி பொழுது விடிந்து வெகுநேரம் வரை கேட்டபடியிருந்தது. இனி இந்த ஊர் மனிதர்கள் யாரும் பாறைப் பக்கம் வரமாட்டார்கள் என்பது சரோஜாவுக்கு உள்ளூரச் சந்தோசம் கொடுத்தது. ஆனால் இந்தச் சந்தோசம் எத்தனை நாள் நீடிக்கும். மனிதர்களின் முகம் பார்க்காமல், சிரித்து நான்கு வார்த்தை பேசாமல், கொடுக்கல் வாங்கல் இல்லாமல் இங்கே காலம் தள்ள முடியுமா? குமரேசன் எங்காவது வெளியூருக்குக் கூட்டிப் போய்விட்டால் நிம்மதி. பாறையையும் நிலத்தையும் விட்டு வர மறுப்பானோ. அம்மா எப்படித் தனியாக இருப்பாள் என்று நினைப்பான். அவளைக் கூட அழைத்துப் போக முடியாது. இந்தப் பாறையில் பொரிந்து கிடப்பாளே தவிர எங்கும் நகர மாட்டாள். வேறென்ன செய்வான்?

மாமியார் எப்போதும் காட்டுக்குள்தான் இருக்கிறாள். பாறைப் பக்கம் வந்தாலே கூடை நிறைய நெருப்புக் கங்குகளை அள்ளித் தலையில் கொட்டுவது போலப் பேச்சுத்தான். அதுவும் இன்றைக்கு ஊர்க் கட்டுப்பாடு வந்தபின் இடைவிடாமல் பேசியபடியே இருக்கிறாள்.

திடும்படிப்புச் சத்தம் நாலாப் புறமிருந்தும் வரவர அவளால் பொறுக்கவே முடியவில்லை. குமரேசன் இருப்பதால் சத்தம் முனகலாய்க் குறைந்திருக்கிறது. அவன் பாறையை விட்டுக் கொஞ்சம் வெளியே போனால் போதும், குரலில் எங்கிருந்து இத்தனை வலு உண்டாகும் என்று ஆச்சர்யப்படும்படி கூடிவிடும்.

அவளுக்கு எதிரில் ஆட்கள் இருக்க வேண்டியதில்லை. வெற்றுவெளியைப் பார்த்தும் பேசுவாள். ஆடுகளிடம் பேசுவாள். மரம் செடிகொடிகளிடம் பேசுவாள். பேசாமல் இருப்பது அவளுக்கு இயலாத காரியம். தான் யாரிடம் பேச நினைக்கிறாளோ அந்த உருவத்தை எதிரே உடனடியாக நிறுத்திக்கொள்ள அவளால் முடிந்தது. எதிர்நிற்கும் உருவம் சொல்லும் பதில்களைக்கூட அவளால் கேட்க முடிகிறது என்றே தோன்றும். முன்பெல்லாம் குமரேசனின் அப்பனை முன்வைத்துப் பேசுவாளாம்.

‘என்னய இப்பிடி அத்தாந்தரமா உட்டுட்டுப் போயிட்டியேடா. போன எடத்துல நல்லா இருப்பியா? எஞ்சாபம் உன்னயச் சும்மா உடாது. எதோ ஏழ பாழையின்னு ஒருத்தனுக்குக் கட்டிக் குடுத்திருந்தாலும் செவப்புச் சீல கட்டிக்கிட்டுத் தல நெறையப் பூ வச்சுக்கிட்டு நாலு எடம் மதிப்பாப் போய் வருவன். இப்ப எங்க போனாலும் ஒரு மூலயில ஒதுங்கி நிக்க வெச்சிட்டயே. நான் உனக்கு எந்த ஜெம்மத்துல என்ன கெடுதி செஞ்சன். ஏன் என்னய இப்பிடி உட்டுட்டுப் போன?’

‘உன்னயக் கட்டிக்கிட்டு என்னத்தக் கண்டேன் . . . போனதுதான் போன எதுக்கு இந்த ஒன்னக் குடுத்துட்டுப் போன? கஷ்டப்பட்டுச் சீரழியோணும்னு இதக் குடுத்தயா. இந்த ஒன்னும் இல்லாத போயிருந்தா இந்நேரம் எங்கப்பமூட்டுச் சனத்தோட நாலு வார்த்த பேசிக்கிட்டாச்சும் கெடந்திருப்பனே. அதயும் கெடுத்துப்புட்டுப் போயிட்டயேடா . . . போன எடத்துல நீ நல்லா இருப்பியாடா . . .’

இப்படித் தினம் புருசனிடம் பேசாத நாள் இல்லையாம். புருசனைத் திட்டுவதற்கென்றே புதுப்புது வார்த்தைகளை உருவாக்கி வைத்திருந்தாள். சிலசமயம் ‘டேய் கொன்னவாயா’ என்பாள். அதுதான் அவள் அதிகம் பயன்படுத்தும் பெயர். குமரேசன் ‘செத்துப் போன மனசங்கிட்ட என்னம்மா உனக்குச் சண்ட?’ என்று கேட்டால் ‘செத்துப் போனா மட்டும் கணக்குத் தீந்து போயிருமா? எங்கிருந்தாலும் பதில் சொல்லித்தான் ஆவோணும்’ என்பாளாம். குமரேசன் சொல்லிச் சிரிப்பான்.

‘எங்கம்மா கண்ணு முன்னால எப்பவும் எங்கப்பன் நிப்பாரு. அது பேசற பேச்சக் கேட்டுச் சிரிச்சிக்கிட்டே இருப்பாருன்னு நெனச்சுக்குவன். எங்கண்ணுக்குத் தெரியமாட்டாரு. ரொம்பக் கற்பன பண்ணுனாலும் வாய் கோணுனாப்பல தெரியும். அவ்வளவுதான். ஒருவேள அவரு மூஞ்சி எனக்கு நெனப்பிருந்தா எனக்கும் தெரீவாரோ என்னமோ’ என்பான் குமரேசன்.

இப்போதெல்லாம் புருசனிடம் அதிகமாகப் பேசுவதைக் காணோம். எந்நேரமும் குமரேசனிடம்தான். செத்தவனையே துரத்திக்கொண்டிருப்பவள் உயிரோடு இருப்பவனை விடுவாளா. வீட்டில் அவன் இருக்கும்போது பேசுவது மிகவும் குறைச்சல். பல சமயம் மௌனமாகவே இருப்பாள். அதுவும் ஒருவகையில் பேச்சுத்தான் என்பான் குமரேசன். மௌனப் பேச்சைச் சகித்துக்கொள்வதுதான் கஷ்டம் என்பதும் அவன் அபிப்ராயம். அவன் இல்லாதபோது பேசும் சொற்கள் சரோஜாவின் காதுகளில் விழும். முதலில் உண்மையாகவே குமரேசன் வந்துவிட்டான், அவனிடம்தான் பேசுகிறாள் என்று நினைத்து வெளியே ஓடிவந்து பார்த்திருக்கிறாள்.

ஆவலோடு சரோஜா ஓடி வருவதைப் பார்த்து ‘நொம்பலப்பட்டு நொறுங்கிக் கெடக்கறாளாம் மயிலாத்தா, நோம்பி கொண்டாடலாம் வான்னு கையக் கையப் புடிச்சு இழுக்கறாளாம் குயிலாத்தா’ என்று சொல்லிக் கழுத்தை வெட்டி முகத்தைத் திருப்பிக்கொண்டாள் ஒருமுறை. அதற்குப் பிறகுதான்

கண்ணுக்குத் தெரியும் ஆட்களிடம் அவள் பேசவில்லை என்று புரிந்தது.

அவள் பேச்சைத் தொடங்கும் விதமே வித்தியாசமாக இருக்கும். ஆட்டிடம் பேசுவது போலத் தொடங்கிக் குமரேசனிடம் பேசுவதைத் தொடர்வாள். ஆடு குமரேசனாக உருமாறும் வித்தையை அவள் பேச்சுப் போகும் விதத்தைக் கொண்டுதான் ஊகிக்க முடியும். ‘ஒரெடத்துல மேய முடியாதா. ஊர் மேயப் போவோணுமா? நம்ம எடத்துல இருந்து நாலு பேரு மதிக்கிறாப்பல வாழோணும். மூஞ்சியில நாலு சனம் காறித் துப்புறாப்பல காரியஞ் செஞ்சிட்டு வந்த உனக்கு என்ன திமிரு பாரு . . . தலய நிமித்திக்கிட்டுப் போறதும் வர்றதும் . . .’

எல்லாப் பேச்சும் நியாயம் கேட்பதாகவே இருக்கும். புருசனிடம் ‘இப்படி உட்டுட்டுப் போனது செரியா?’ என்று கேட்பதைப் போல மகனிடம் கேட்பது ‘எப்படியெல்லாம் உன்னய வளத்தன். நீ செஞ்சிருக்கற காரியம் செரியா’ என்பதுதான். அதை வெவ்வேறு விதமாகக் கேட்பாள். சிலசமயம் ஒப்பாரி வைப்பது போலவே இருக்கும். ஒவ்வொரு முறையும் குமரேசனின் சிறுவயதில் நடந்த சம்பவம் ஒன்றை விவரிப்பாள். அவள் பேச்சுக்குக் காது கொடுத்ததன் மூலமாகப் பல விஷயங்கள் சரோஜாவுக்குத் தெரிய வந்தன. அவற்றுள் சிலவற்றை விளங்கிக்கொள்வதில் சிரமம் இருந்தது. மாமியார் சொல்லும் முறை அப்படி. அவள் புழங்கும் பல சொற்கள் இதுவரை சரோஜாவின் காதில் விழாதவை.

இப்படி ஒருநாள் தொடங்கினாள்: ‘அட அன்னைக்கு என்ன செஞ்ச தெரீமா? உனக்கெங்க தெரியப்போவுது . . . அப்ப நீ கழுவிக்கக்கூடத் தெரியாத சிண்டுப்பய. எவனோ சொன்னான்னு பனமரத்துல ஏறி நொங்கு வெட்டக் கௌம்பீட்ட. பனமரம் பழகுனவனயே பதம் பாத்திரும். பால் குடி மறக்காத பாலகன் நீ என்னாயா செய்வ? ரண்டாளு ஒசரம் எப்பிடியோ ஏறிப் போயிட்ட. அதுக்கப்பறம் கால் நடுங்கிக் கையெல்லாம் வேத்துப் போயிருச்சு. அண்ணாந்து பாத்திருக்கற. அந்தரத்துல

மொதக்கறாப்பல இருந்திருக்குது. அப்பிடியே கைய உட்டவந்தான். பொத்துன்னு சட்டிப் பனங்கா உழுவறாப்பல தரையில வந்து உழுந்துட்ட. பேச்சுமில்ல மூச்சுமில்ல இந்தப் பாற மேல கொண்டாந்து போட்டிருக்கறாங்க. எனக்குச் சேதி தெரிஞ்சு முள்ளுக்கரட்டுல ஆட்ட உட்டுட்டு ஒடியாரேன். வந்து பாத்தா எம்புடிமானம் மயங்கிக் கெடக்குது. மாரெல்லாம் பனமரச் செலாக்குக் கிழிச்சு ரத்தம். ஒடம்பெல்லாம் செம்மண்ணுப் புழுதி. ஆவியே போயிருச்சுன்னு நெனச்சு ஒன்ன வாரி அள்ளி நெஞ்சோட சேத்துக்கிட்டுக் கத்தறன். அப்பத்தான் கண்ண முழிச்சுப் பாத்த. எனக்குப் போன உசுரு திரும்ப வந்திச்சு. அன்னைக்கிருந்து உன்ன ஒரு மரத்துக்கிட்ட உட்டிருப்பனா? குடியானப் பையனுக்குப் பனையேறத் தெரீலீன்னா எப்பிடின்னு எத்தன பேரு பேசியிருப்பாங்க. ஒரே புடிவாதமா இருந்திட்டனே. எப்பேர்ப்பட்ட வேலையின்னாலும் நாஞ் செஞ்சிருவன். எந்தங்கம் எனக்கு அனுசரனயா இருந்தப் போதுமின்னு நெனச்சனே . . .'

அதற்குப் பின் நிகழ்காலத்துக்கு வந்துவிடும் அவள் பேச்சு.

'ஆருடா அவ? எங்கத்த நாயி? நெஞ்சுல சேத்து வளத்த தாய மறக்கச் சொல்லுச்சா? எம் பாட்ட ஒருதடவ நெனச்சுப் பாத்திருந்தா இதச் செய்வியா? ஊருக்கு மின்னால ஒத்தயா நின்னாலும் கெவுரவமா ஒசந்து நின்னாளே இந்தச் சீராயி. இப்ப உன்னால மானம் மரியாத எல்லாத்தயும் உட்டுத் தல கவுந்து நிக்கறாளே. ஒன்னுக்குமத்த ஒடசலு எல்லாம் என்னயப் பாத்து வார்த்த சொல்லுதே. சொல்லுடா நீ செஞ்சிருக்கற காரியம் ஞாயமாடா? பெத்து வளத்தவளுக்குக் காட்டற நன்னியாடா? பெத்த வவுறு பத்தி எரியுதே. என்னத்தப் போட்டு இந்தத் தீய அணைப்பன்?'

கடைசி வாக்கியங்களைப் பேசும்போது தலையை விரித்துக்கொண்டு ஆக்ரோசமாக மாரில் அடித்துக்கொள்வாள். அதைக் கேட்க சரோஜாவுக்குப் பெரும்பயம் பிடித்தாட்டும். குறுகி நடுங்கி உள்ளே

உட்கார்ந்திருப்பாள். கொட்டாயிக்குள் இருந்து வெளியே எட்டிக்கூடப் பார்க்க மாட்டாள். வெளியே போனால் பேய்க்காற்றுப் போலச் சுழன்றடிக்கும் அவள் வார்த்தைகள் தன்னைச் சுருட்டி அள்ளிக்கொண்டு போய் விடுமோ என்று தோன்றும். குமரேசனிடம் இரவில் பேசும்போது அதைச் சொன்னால் ‘அம்மா பாவம் என்ன பண்ணும். தங்கொறைய ஆருகிட்டப் போயிச் சொல்லும். பேசிட்டுப் போவுது போ. என்னயத்தான பேசுது’ என்று சாதாரணமாகச் சொல்லிவிடுவான். ‘உன்ன மட்டும் பேசுனா உட்டுடலாம். என்னக்கூடச் சேத்துத்தான பேசறா’ என்று சொல்ல நா வந்து உள்ளே மடங்கிக்கொள்ளும்.

அவன் இருக்கும் நாளில் பேச்சே வராது. ஒருநாளைக்கு மறைந்திருந்து அவள் பேசுவதைக் குமரேசன் கேட்க வேண்டும் என்று நினைப்பாள். ஊர்க் கட்டுப்பாடு பிரச்சினை பற்றி இன்றைக்கு என்னவெல்லாம் பேசப் போகிறாளோ என்னும் பயமும் உள்ளுக்குள் இருந்ததால் கட்டாயப்படுத்தி அவனை நிறுத்திவிட்டாள். இன்னும் ஓரிரு நாளில் கடை முழுதுமாக அவன் கைக்கு வந்துவிடும் என்று சொன்னான். அப்படியிருந்தும் இன்றைக்கு இரு என்று சொல்லிவிட்டாள். வாய்க்குள் முணு முணுத்துக்கொண்டே வேலைகளைச் செய்தாள் மாமியார்.

ஆடுகளை ஓட்டிக்கொண்டு கிளம்பும் முன் பானையில் கிடந்த நீரை மொண்டு குடித்தாள். ‘இன்னையோட இந்தத் தண்ணியும் போச்சு. அவன் கெணத்துப் பக்கம் அண்டக்கூட உடமாட்டாங்க. இந்தக் காட்டு உப்புத் தண்ணியக் குடிச்சுத் தாகம் அடங்காத கெடக்க வேண்டியதுதான். எது அடங்குச்சு. இந்தத் தாகம் மட்டும் அடங்காட்டிப் போவுது போ’ என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். அதற்குள் ஆடுகள் பிரிந்து ஆளுக்கொரு திக்கில் ஓடின. ‘கூட்டத்தோட இருந்தா மதிப்பு கொள்ள, தனிச்சுப் போன மதிப்பே இல்ல தெரிஞ்சுக்க’ என்று ஆடுகளைப் பார்த்துக்

கத்திக்கொண்டே ஓடினாள். அவள் பேச்சு பாறையில் எதிரொலி போல நிலைகொண்டது.

அந்தப் பகலில் குமரேசனுக்கும் சரோஜாவுக்கும்கூடப் பேச ஒன்றுமில்லாமல் போய்விட்டது. பாறைப் பக்கம் ஓராளும் வரவில்லை. காட்டுக்குள் புகுந்து செல்லும் ஓரிருவரும் காட்டைச் சுற்றிக்கொண்டு தூரப் போனார்கள். சொல் எட்டும் தொலைவில் போனாலும் சத்தமிட்டு இரண்டு வார்த்தை விசாரிக்காமல் போக மாட்டார்கள். ஆனால் இன்றைக்கு அந்நியக் குரல் என்று ஏதுமில்லை. ஊர்ப்பக்கமும் எதற்கும் போக முடியாது என்றால் பெருங்கஷ்டம்தான் என்று சரோஜாவுக்குப் புரிந்தது. பறவைக் குரல்கள் மட்டும் அவ்வப்போது வந்தன. துக்கம் விசாரிக்க இந்தக் குரல்களாவது இருக்கிறதே. குமரேசனிடம் ‘இன்னா செய்லாம்னு கீற?’ என்று மட்டும் கேட்டாள். அவன் பெருமூச்சுடன் ‘பாக்கலாம்’ என்றான். அவனுக்குள் எந்த முடிவும் வரவில்லை என்பது தெரிந்தது.

‘இன்னாருன்னு தெரிஞ்சா இன்னம் இன்னா பண்ணுவாங்களோ தெரீல. பேசாத என்னக் கூட்டிக்கினு போயி எங்கவூர்லயே உட்டுடு’ என்றாள். ‘இந்தப் பேச்சு மட்டும் வேண்டாம். என்னய நம்பி வந்தவள அப்பிடி ஒன்னும் அத்தாந்தரத்துல உட்ர மாட்டன்’ என்று அவள் முகத்தைப் பார்த்தபடி சொன்னான். அவன் குரலில் எந்தப் பொய்யும் இல்லை. எப்போதாவது கரையும் காக்கைக் குரல் பனையிலிருந்து கேட்கும். அது போலத்தான் இருவரும் ஓரிரு வார்த்தைகள் பேசிக்கொண்டார்கள்.

விருப்பமே இல்லாமல் பேருக்குச் சாப்பிட்டுவிட்டுக் கொட்டாய்க்குள் உட்கார்ந்திருந்த மத்தியானப் பொழுதில் ‘டேய் நோண்டிப்பயா நோண்டிப்பயா’ என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. இருவருக்குமே அந்தக் குரல் ஆச்சர்யமாக இருந்ததால் வேகமாக எழுந்து வெளியே வந்தார்கள். ‘பங்குனியிலயே இந்த வெயிலுக் கொளுத்துது. இன்னம் சித்திர கத்திரியில என்ன ஆவுமோ. மனசங்க கண்டபடி போனா மானமும்

கோவிச்சுக்கிட்டுப் போவுது. ஒரு மழ துளியக் காணாமே' என்றபடி வெயில் மறைப்புக்காகத் தலையில் முக்காடு போட்டிருந்த நடுத்தர வயதுப் பெண் ஒருத்தி நின்றிருந்தாள். சரோஜா அவளைப் பார்த்ததேயில்லை. தான் பார்க்காத எத்தனையோ பேர் இன்னும் இந்த ஊரில் இருக்கிறார்கள் என்று நினைத்தாள்.

குமரேசன் 'வாக்கா செல்லக்கா வாக்கா' என்று அவளை வரவேற்றான். வேம்படிக் கல்லில் உட்கார்ந்த அவள் 'அடேங்கப்பா என்னமா வெயிலடிக்குது' என்றாள். 'சரோஜா . . . அக்காளுக்குத் தண்ணி கொண்டா' என்றான். அவள் 'வேண்டாம் பயா. இப்பத்தான் சில்லாங்காட்டுல குடிச்சுப்புட்டு வர்றன்' என்று மறுத்தாள். சாயம் வெளுத்த சேலையைக் கட்டிக்கொண்டு காட்டுவேலைக்குப் போகிறவள் போலத் தெரிந்தாள். தேடி வரும் ஒரம்பரைகளை வீட்டுக்குள் அழைக்கும் பேச்சே இங்கில்லை. பாறையில் எங்கே வேண்டுமானாலும் உட்காரலாம். பெரும்பாலும் வேம்படிதான். ராத்திரி என்றால் பாறையில் கட்டில் போட்டுக்கொள்வார்கள்.

'நாளைக்கு ராத்திரி எம்பிள்ளைக்குத் தெரட்டி வெச்சிருக்கறம். அதுக்குத்தான் கூப்புட்டுப் போலாம்னு வந்தன். பத்து நாளாவே உன்னாலதான் பிரச்சின போ. இந்த ஊருப் பக்கமே வராத இருந்தன். உன்னயக் கூப்பிடறதா உட்றதான்னு எனக்கும் என்னூட்டுக்காரருக்கும் சண்ட. அப்பறம் நேத்துத்தான் அவரு ஒத்துக்கிட்டாரு. எத்தனையோ சனம் ஏழபாழகூட வருது. கையில துணியேந்திக்கிட்டு நிக்கற சனமும் வருது. அப்படி நெனச்சுக்கறன். போயிக் கூப்புட்டு வான்னு சொன்னாரு. அதான் இன்னைக்கு வந்தன். மேச்சக்காட்டுல உங்கொம்மாளப் பாத்துச் சொல்லீட்டன். நீங்களும் பிரசன் பொண்டாட்டி ரண்டு பேரும் தவறாத வந்திருங்க. நின்னுக்காத நோண்டி . . . மனசுல ஒன்னும் வெச்சுக்காத. ஆவாத நேரம் இப்பிடியெல்லாம் பண்ணிட்டு நிக்கற. நாலு சனத்துக்கு மின்னால கூனிக் குறுகி நிக்கோணும்னு உந்தலயில எழுதியிருக்குது. நீ

என்ன பண்ணுவ. உங்கூருல கட்டுப்பாடு போட்டிருக்கறது எனக்குத் தெரியும். எங்கூருக்கு அது செல்லாது. சாயந்திரமே வந்து தெரட்டி சுத்தி முடியற மட்டும் இருந்து சாப்பிட்டுட்டுத்தான் வரோணும். நிய்யெல்லாம் எம்பிள்ளைக்கு மாமன் மொறையாவறவன். நீ என்ன பண்ணியிருந்தாலும் உன்னய உட்டுட்டுச் சுத்த எனக்கு மனசு வல்ல நோண்டி. அடியே உங்கிட்டச் சொல்லலீன்னு நெனச்சுக்காத. வந்திரு ஆமா' என்று நிறுத்தாமல் பேசிவிட்டுக் கிளம்பினாள்.

அவள் போனபிறகுதான் குமரேசன் அவளைப் பற்றிச் சொன்னான். குமரேசனின் பங்காளி வகையில் அக்கா அவள். இரண்டு ஊர் தள்ளியிருக்கும் தேளூரில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 'சின்ன வயசுல இந்தக்கான்னா எனக்குக் கொள்ளப் பிரியம். அதுக்கும் எம்மேல அப்படித்தான். பிரசங்கிட்டயே எனக்காவச் சண்ட போட்டிருக்குது பாரேன்' என்றான் பெருமையுடன்.

'அதான் நம்மூட்டுல ஒருவா தண்ணிகூடக் குடிக்காம போறாளா உங்கொக்கா?' என்றாள் சரோஜா. அதற்கு அவன் ஒன்றும் பேசவில்லை. 'நாளைக்குப் போலாமா?' என்று கேட்டாள். 'போவாத எப்பிடி? இவ்வளவு தூரம் வந்து கூப்பிட்டுப் போவுது. அதும் சண்ட போட்டுட்டு வந்திருக்குது. உங்கிட்டயும் சொல்லுச்சில்ல. வா ரண்டு பேரும் போலாம்' என்றான். 'வாயிதான் வரச் சொல்லுச்சு. மனசு வர வேண்டாமின்னுதான் சொன்னாப்பல இருந்துச்சு' என மனதில் இருந்ததை லேசாகச் சொன்னாள் சரோஜா.

'உனக்கு எதக் கண்டாலும் பயந்தான். இப்பிடி நாலெடத்துக்குப் போனாத்தான் எல்லாரும் நம்மளயும் மதிப்பாங்க. ஏத்துக்குவாங்க. எங்கயும் போவாத இங்கயே உக்காந்துக்கிட்டு இருந்தம்னா தனிச்சுக் கெடக்க வேண்டீதுதான்' என்று அவன் கோபத்தோடு சொன்னான். சரோஜா பதில் எதுவும் பேசவில்லை. ஆனால் அவள் மனத்தில் பயம் புரட்டக்கூட இயலாத பெருங்கல்லாய் உட்கார்ந்திருந்தது.

o o o

# 12

விரிச்சியூர் போய்ச் சேர்வதற்குள் பெரிய மேடுகள் மூன்று. அவற்றில் குமரேசனை வற்புறுத்தி சரோஜா இறங்கிக்கொண்டாள். சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்தார்கள். ராத்திரியே அவனிடம் கேட்டுத் தானும் உடன்வரச் சம்மதிக்கச் செய்திருந்தாள். மாமியார் புழங்கும் ஓசை கேட்கத் தொடங்கிய அதிகாலையிலேயே சரோஜாவும் எழுந்து சமையல் வேலையை முடித்திருந்தாள். குமரேசனோடு போகிறோம் என்னும் சந்தோசத்தில் இருளில் வேலை செய்வது சிரமமாகத் தெரியவில்லை. காலைக்கும் மதியத்துக்கும் என இருவேளைக்கும் சேர்த்துப் பாத்திரங்களில் சோற்றைப் போட்டு வைத்தாள்.

தோலூரில் அப்பனுக்கும் அண்ணனுக்கும் சோறு கொண்டு போவதற்கென்றே தனிப் பாத்திரங்கள் வைத்திருந்தாள். ரசமோ குழம்போ எதுவும் தளும்பாமல் இருக்கும்படி இறுக மூடிகள் கொண்ட பாத்திரங்கள். அங்கே விதவிதமான பைகள் கிடைக்கும். நரம்பு போன்ற ஒயரில் பின்னப்பட்ட அகண்ட பைகள் இரண்டு இருந்தன. அவளாகவே அந்தப் பைகளை வாங்கினாள். அவை வந்தபின் சோறு கொண்டு போவது மிகச் சந்தோசமான காரியமாகிவிட்டது. சோற்றுப் பாத்திரங்களை இடைஞ்சல் இல்லாமல் உள்ளே அடுக்கிக்கொள்ளலாம். தட்டு, கரண்டி என எதை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். துண்டு ஒன்றை மேலே போட்டு மூடிவிடலாம்.

பை புதிதாக இருந்தபோது அதைத் தூக்கிக் கொண்டு நடக்கையில் தலை தானாக நிமிரும். சோற்றுக் கனத்தில் கையை அடிக்கடி மாற்றிக் கொண்டாலும் அலுப்பில்லாமல் போவாள். இங்கே அப்படிப் பையும் இல்லை. பாத்திரங்களும் இல்லை. பெரும்பாலானவை மண்பாண்டங்கள். ஒவ்வொன்றுக்குமான பெயர்களை

நினைவில் கொள்வதே சிரமமாக இருந்தது. வந்த புதிதில் ‘சோச்சட்டி, சாச்சட்டி’ என்பான் குமரேசன். அவளுக்கு ஒன்றுமே புரியாது. சோத்துச் சட்டி, சாத்துச்சட்டி என அவன் விளக்கிச் சொன்ன பிறகு வித்தியாசம் புரிந்தது. அவளையும் இந்த ஊர்க்காரியாகவே நினைத்து அவன் பாட்டுக்குப் பேசுவான். மற்றவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். குமரேசனும் பேசினால் எப்படி?

அவள் கோபித்துக்கொண்ட பின் ஒவ்வொன்றையும் விளக்கிப் பேசினான். மேலொலச்சட்டி, தடச்சட்டி, பெராலச்சட்டி, நீச்சட்டி, முட்டி, சொப்பு என்று ஒவ்வொன்றாகத் தெரிந்துகொண்டாள். அவற்றில் புழங்குவதற்கு நல்ல பயிற்சி வேண்டும். அதனால் நிதானமாக எதையும் செய்தாள். எதுவாவது உடைந்து போனால் அதற்குப் பதில் சொல்லி முடியாது. அடியில் கரிப்பத்து ஏறிக் கெட்டுப்பட்ட சட்டிகள் பல. அவற்றை அழுத்தித் தேய்த்துக் கழுவக்கூடாது என்று குமரேசன் சொல்லியிருந்தான். வட்டல்கள், டம்ளர்கள் என்று மிகச் சிலவே ஈயத்தில் இருந்தன. சில்வர் பாத்திரங்களே கிடையாது. பித்தளை அண்டா ஒன்று மட்டும் இருந்தது. மாமியாருக்குச் சீராகக் கொடுக்கப்பட்ட பித்தளைப் பாத்திரங்களும் சில்வர் பாத்திரங்களும் அப்புச்சி வீட்டிலேயே அட்டாலியில் கிடக்கின்றனவாம்.

‘பிள்ள குட்டி இங்க கொள்ளையாக் கொட்டியா கெடக்குது பித்தாளயும் சிலுவரும் வெச்சுப் பொழங்க. ஒண்டிக்காரிக்கு மம்பாண்டம் பத்தாதா. அவம் பொண்டாட்டி வந்தான்னா எல்லாத்தயும் எடுத்துப் பொழங்கட்டும். பொழங்கறாப்பல பெரிய மச்சூடு கட்டிக் குடுப்பானல்லொ . . .’ என்று கேட்பவர்களிடம் சொல்வாள் சீராயி. இந்த மருமகள் புழங்க அந்தப் பாத்திரங்களில் ஒன்றுகூட வராது.

‘இன்னமே அதெல்லாத்தையும் குடுக்க மாட்டம்னு சொன்னாலும் சொல்லீருவாங்க. ஆனா அம்மா அவ்வளவு லேசுல உடமாட்டா’ என்றான் குமரேசன்.

குமரேசன் பள்ளிக்கூடம் போனபோது சோறு கொண்டு போன ஈயத் தூக்குப்போசி ஒன்றும் பித்தளைப் போசி

ஒன்றும் மூலைப் பானைக்குள் இருந்தன. அவற்றை எடுத்துத் தூசி துடைத்து துலக்கினாள். மூடி போட்டவை என்றால் அவை மட்டும்தான். மற்றவற்றிற்கெல்லாம் தட்டம் வைத்து மூடித் துணியால் இறுகக் கட்டிச் சமாளித்திருந்தாள். கடை வேலைக்கு என்று சமீபத்தில் அவன் வாங்கி வந்திருந்த காக்கிப்பை ஒன்று பெரிதாக இருந்தது. அதற்குள் எல்லாவற்றையும் வைத்து அடுக்கி முடித்துவிட்டு அவனை எழுப்பினாள்.

கூட்டிப் போகிறேன் என்று இரவு சொன்னவன் காலையில் மறுத்துவிட்டால் என்ன செய்வது? அவனுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது என்றுதான் எல்லா வேலைகளையும் அவன் எழும் முன் செய்து முடித்துத் தயாரானாள். தண்ணீர் கொண்டு வந்து ஊற்றியபடி சரோஜா சமைப்பதைக் கவனித்த மாமியார் ‘கட்டுச்சோறு கட்டிக்கிட்டு பொட்டிவண்டி போட்டுக்கிட்டுப் போறாளாம் போறாளாம் கண்ணாத்தா எங்கதான் போறாளாம் கண்ணாத்தா’ என்று ராகம் பாடினாள். அதை ஒன்றும் சரோஜா கண்டுகொள்ளவில்லை.

குமரேசனும் எழுந்து புறப்பட்டுக் கிளம்பும்போது அவன்தான் போய்க் ‘கடைக்குப் போயிட்டு வர்றம்மா’ என்றான். ‘அங்க போறன் இங்க போறன்னு தலைக்குத் தீம்பக் கொண்டாந்த. இன்னம் என்னத்தக் கொண்டாரப் போறியோ. இப்ப ஒருநாயும் பேசாத பண்ணீட்ட. இந்த உசுரு ஒன்னுதான் கெடந்து தவிக்குது. இதயும் எடுத்துப்புட்டு ஒரேயடியாப் போயிருடாப்பா’ என்றாள். அதற்குமேல் அவனும் எதுவும் பேசவில்லை. சோற்றுப் பையைச் சைக்கிளில் முன்னால் மாட்டிக்கொண்டான். சோடாக் கம்பிப்பெட்டிகள் மாட்டுவதற்கு வாகாக ஹேண்டில்பாரில் கிளிப்புகள் வைத்திருந்தால் பையை மாட்டுவது சுலபமாக இருக்கும். இப்போது பைக்காதுகள் வழுக்கி ஓடி வந்தன. இரண்டையும் சேர்த்து மாட்டினால் ஏதாவது ஒழுதாலும் ஒழுகும். மாட்ட வேண்டாம் என்று சொல்லி சரோஜா பையை வாங்கி மடியில் வைத்துக் கொள்வதாகச் சொன்னாள். அவன் தரவில்லை.

இங்கே வந்ததில் இருந்து வெளியே எங்கும் போகவில்லை. அவன் அப்புச்சி வீட்டுக்குப் போய் வந்ததை நினைத்தால் அவளுக்கு உடல் சிலிர்த்துப் போகும். இப்போது எந்தச் சொந்தக்காரர் வீட்டுக்கும் போகவில்லை. இதுவரைக்கும் பார்க்காத புதிய ஊர். அங்கே ஆட்கள் யாருக்கும் அவளைத் தெரியாது. இளவெயில் நேரத்தில் உற்சாகத்தோடு அவனுடன் கிளம்பினாள். உடன் அழைத்துப் போக அவனைச் சம்மதிக்கச் செய்வது அத்தனை சுலபமாக இல்லை. கடைசியாக ஒரு நிபந்தனை போட்டான்.

'செரி. கூட்டிக்கிட்டுப் போறன். போயிட்டு வந்து ராத்திரிக்குச் செல்லக்கா ஊட்டுத் தெரட்டிக்குப் போவோனும். அதுக்கு நீ கண்டிப்பா வரோணும். அப்படீன்னாக் கூட்டிக்கிட்டுப் போறன்.' அதற்கு அவள் யோசிக்காமல் 'சரி வறேன்' என்று சொல்லிவிட்டாள்.

எப்படியாவது இன்றைக்கு இந்தப் பாறையை விட்டு வெளியே போய்விட்டால் போதும் என்றிருந்தது. கொஞ்சமும் நெகிழ்வற்ற பாறை. குமரேசன் உடனிருக்கும் இரவில் மட்டும் பாறை குளிர்ந்து அரவணைத்தது. மற்ற நேரமெல்லாம் வெம்மையும் புழுக்கமும்தான். இப்படி ஒரு இறுக்கத்தை அவள் எங்கும் உணர்ந்ததில்லை. ஊர்க்காரர்கள் வந்துபோன பின் காற்றும்கூடச் சுவர் போலக் கனத்து நகர்ந்து வந்து முகத்தில் ஓங்கி அடித்தது. இருக்கும் போதெல்லாம் மாமியாரின் பேச்சுக்கள் பாறையில் பட்டுத் திரும்பிப் பெரும்வேகத்துடன் சரோஜாவின் மேல் வந்து மோதின. இனித் தனியாக இருக்கவே முடியாது என்று நினைத்தாள். அவன் போகும் இடத்திற்கெல்லாம் அவனுடனேயே போய்விடுவதுதான் சரி என்று அவளுக்குள் தீர்மானம் வந்திருந்தது.

விரிச்சியூர் வெகுதூரம். மேடுகளில் சைக்கிள் அழுத்துவது சாதாரணமல்ல. முன்னால் சோற்றுப்பை. பின்னால் சரோஜா. அவன் உடலைத் தொடும்போது இரும்பைக் கையில் இறுக்குவது போல அவளுக்குத் தோன்றும். என்றாலும் இப்போது அவனுக்காக

இரக்கப்பட்டாள். தினமும் இத்தனை தூரம் வந்துதான் கடை வேலை பார்க்க வேண்டும். கஷ்டம் என்று அவன் நினைத்த மாதிரி தெரியவில்லை.

‘சோடாப் பாட்டில வெச்சுத்தான தெனமும் சைக்கிள் அழுத்தறன். நீ என்ன பூ மாதிரி இருக்கற. உன்னய வெச்சு அழுத்தறது சும்மா பறக்கறாப்பல இருக்குது’ என்று சொல்லிச் சிரித்தான்.

அவன் முகம் முழுக்க வேர்வை வெள்ளம். இந்தச் சூழலிலும் அவனால் இப்படிப் பேச முடிவது ஆச்சர்யம்தான். எப்பேர்ப்பட்ட சமயத்திலும் அவன் பெரும்பதற்றம் கொள்வதே இல்லை. அவன் என்ன சொன்னாலும் மேடுகளில் பிடிவாதம் பிடித்து இறங்கிக்கொண்டாள். வழியில் ஏதாவது இடத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுப் போகலாம் என்றாள். வயிறு நிறைந்துவிட்டால் சைக்கிள் அழுத்த முடியாது என்றும் கடைக்குப் போனதும் சாப்பிட்டுக்கொள்ளலாம் என்றும் சொல்லிவிட்டான்.

வழியெங்கும் மொட்டைக்காடுகள் பரந்திருந்தன. எங்காவது ஒன்றிரண்டு தென்னைகள் தென்பட்டன. ‘இன்னம் ஒருமாசம் கழிச்சு இந்தப் பக்கம் வந்து பாரு. காடெல்லாம் பச்சப்பசேல்னு கடலச்செடி படந்து கெடக்கும். வலுத்த மழ ஒன்னும் பெஞ்சிட்டா எல்லாம் மாறீரும்’ என்றான். எல்லாம் மாறிவிடுகிற மாதிரி ஒரு மழை பெய்யுமா? அவள் பெருமூச்சு விட்டாள்.

விரிச்சியூரைப் பார்த்தவுடன் அவளுக்குப் பிடித்துவிட்டது. சாலை வீதியில் பல கடைகள் இருந்தன. தோலூரில் உள்ளடங்கிய வீதி ஒன்றுக்குள் நுழைவது போலவே உணர்ந்தாள். குட்டியான துணிக்கடைகள், மளிகைக்கடைகள், சைக்கிள் கடைகள் என வரிசை கட்டியிருந்தன. சின்னச் சின்ன உணவகங்கள். பாட்டி ஒருத்தியோ நடுத்தர வயதுப் பெண்ணொருத்தியோ உணவக வாசலில் பெரிய இட்லிப் பானையை வைத்தபடி உட்கார்ந்திருந்தாள். சுடச்சுட இட்லியை எடுத்துப் போடும்போது ஆவி பறப்பதைச் சந்தோசமாய்ப் பார்த்தாள். ஒருநாளைக்கு இங்கே இட்லி வாங்கித் தின்ன

வேண்டும். சில கடைகள் ஓலை வேய்ந்த கொட்டகையில் இருந்தன. ஆனால் அவற்றுக்குள் ஆட்கள் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. எல்லா உணவகங்களிலும் முன்னால் டீ பாய்லர் தெரிந்தது. சுத்தமாகத் துலக்கித் திருநீறும் பட்டையும் வைத்திருந்தார்கள்.

'டீக் குடிக்கறியா?' என்று கேட்டான். போனதும் சாப்பிடப் போகிறோமே என்றிருந்தாலும் அங்கே டீ குடிக்க வேண்டும் என்று தோன்றியது. கண்ணாடி டம்ளரைப் பச்சைத் தண்ணீரில் கழுவிவிட்டுப் பின் வெந்நீர் ஊற்றிக் கழுவுவதைப் பார்க்க ஆச்சர்யமாக இருந்தது. நுரை வர டீயை ஆற்றி மேலே துளி டிகாஷன் விட்டுக் கொடுத்தான் கடைக்காரப் பையன். குடித்தால் இப்படி ஒரு டீயைக் குடிக்க வேண்டும் என்று நினைத்தாள். ஆட்டூருக்குப் போனது முதல் டீயே குடிக்கவில்லை. காலையில் எழுந்ததும் டீ குடித்தால்தான் அவளுக்கு வேலை ஓடும். இங்கே அந்த வாய்ப்பே இல்லை. குமரேசனிடம் கேட்கத் தயக்கம். மாமியார் பால் போகிறது என்று ஏதாவது பேசிவிடுவாள். அதைக் கேட்பதற்கு குடிக்காமலே இருந்துவிடலாம்.

சாலையை ஒட்டிய வலப்பக்கத்தில் பெரிய சந்தைத்திடல் இருந்தது. 'சனிக்கிழம இங்க சந்த' என்றான் குமரேசன். சந்தை நடக்கும்போது கடைகள் பரவியிருக்கும். மக்கள் கூட்டம் கூட்டமாகக் குழுமியிருப்பார்கள். அந்தக் காட்சியைக் கற்பனை செய்துகொண்டாள். அந்தக் கூட்டத்தில் தானும் ஒருத்தியாக நடந்து சென்றாள். அங்கே யாரும் சரோஜா பக்கம் விரல் நீட்டி 'யார் இவள்' என்று கேட்கவில்லை. 'இவ என்ன எனம்?' என்று கேட்போர் இல்லை. 'மயக்கிப்புட்டா மாய்மாலக் காரி' என்று கைகாட்டவில்லை. 'எத்தன பவுனு போட்டுக்கிட்டு வந்த' என்று கேட்போர் இல்லை. 'உன்ன ஊர விட்டு வெலக்கி வெச்சிருக்கறம்' என்று சொல்வோர் இல்லை. எந்தக் கடைக்குப் போயும் எதுவும் வாங்கலாம். யாரிடமும் தயக்கமோ பயமோ இல்லாமல் பேரம் பேசலாம். சண்டை போடலாம்.

குமரேசன் அவளுக்கு அந்த ஊரைப் பற்றி ஏதேதோ விளக்கிச் சொல்லிக்கொண்டு வந்தான். அவளுக்கு அவ்வளவாகக் காதில் விழவில்லை. அவள்பாட்டுக்குச் சந்தைக்கடையில் வளையல் வாங்கிக்கொண்டிருந்தாள். கால்கள் புழுதியில் அளைந்து நடந்தன. வெகு உற்சாகமாக இருந்தது. கூட்டத்தில் ஒருத்தியாக இருப்பது எவ்வளவு சந்தோசமான விஷயம் என்று நினைத்தாள். கூட்டத்தைவிட்டு விலகியதுதான் சந்தோசக் கேட்டுக்குக் காரணமாகிவிட்டது. இனிமேல் கூட்டத்துக்குள் சேர முடியுமா? எந்தப் பக்கமேனும் சேர்த்துக்கொள்வார்களா? இந்தச் சந்தைக் கூட்டத்தில் கலந்துவிட்டால் என்ன? அவளுக்குள் ஏதேதோ சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தன.

அதற்குள் குமரேசன் கடைக்கு வந்திருந்தான். ஒரு காலைக் கீழே ஊன்றிக்கொண்டு ‘எறங்கு பிள்ள’ என்றதும்தான் அவளுக்கு உணர்வு வந்தது. தோலூரில் இருந்த வரைக்கும் ‘பிள்ள’ என்று ரகசியமாகக் கூப்பிடுவான். அங்கே ‘பிள்ள’ என்றால் பையன். ஆனால் இங்கே பெண். அவன் அப்படிக் கூப்பிடுவதை முதலில் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதன்பின் அவன் அப்படிக் கூப்பிடுவதை விரும்பினாள். ‘இங்கெல்லாம் பொண்டாட்டியப் பிள்ளன்னுதான் கூப்பிடு வாங்க பிள்ள’ என்று சிரித்தான். என்ன செய்தாலும் உள்ளே புதைந்து கிடக்கும் சந்தோசத்தைத் தோண்டித் தோண்டி எடுக்கும் வித்தை அவனிடம் உண்டு. இந்த ஊருக்குள் அவளை இணைத்துவிடும் அவனது விடா முயற்சியின் தொடக்கமாக இந்தப் ‘பிள்ளை’ அமையட்டும் என்று நினைத்தாள்.

கடை ஒரு சந்துக்குள் இருந்தது. குனிந்து உள்ளே செல்லும் அளவுக்கான சின்னக் கதவு. உள்ளே ஒரே அறை. நன்றாக விரிந்திருந்தது. படுத்துப் புரளலாம். கடைச் சாமான்கள் கிடந்தன. இன்னும் மிஷின் வரவில்லை. ‘தண்ணித் தொட்டிக்குச் சொல்லியிருக்கறன். அத மொதப் போயி எடுத்தாரோனும்’ என்று அவனுக்குள் சொல்லிக்கொள்வது போல அவளுக்குச் சொன்னான்.

வேலை செய்யும் மனநிலை அவனுக்கு வந்துவிட்டதை உணர்ந்தாள். ‘சோத்தத் துன்னுபுட்டுப் போ’ என்றாள்.

இருவரும் உட்கார்ந்து சாப்பிடும்போது அந்தக் கடை இடத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தான். மாதம் பத்து ரூபாய் வாடகை. ஓட்டு வீடு. வீட்டுக்காரர்கள் அடுத்த வீதியில் இருந்தார்கள். இது போல நான்கைந்து சிறுசிறு வீடுகள் அவர்களுக்கு இருந்தன. அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டும் அந்த ஊரைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டும் இருந்ததில் அவளுக்குப் பசி மறந்துபோயிருந்தது. சோற்றைப் பிரித்ததும் பசி முந்திக்கொண்டு நின்றது. ஆவலாகச் சாப்பிட்டாள். குமரேசன் வீட்டுக்கு வந்ததிலிருந்து இப்படி ஆவலோடு ஒருநாளும் சாப்பிடவில்லை என்று தோன்றியது. ‘கொழம்பு நல்லா வெச்சிருக்கற பிள்ள’ என்றான் குமரேசன்.

பாறைக் கொட்டகையில் பயந்தபடியே அவன் சாப்பிடுவதாகத் தோன்றும். ஒருபோதும் ருசித்துச் சாப்பிட்டு அதைப் பற்றிப் பேசவேயில்லை. இப்போது அவன் பேச்சும் அழைப்பும் மனதுக்கு மிக நெருக்கமாக இருப்பதாக உணர்ந்தாள். ஏனோ கண் கலங்கிற்று. அதை வெளிக்காட்டாமல் தலை குனிந்து சாப்பிட்டாள். அவன் வெளிவேலைகளைப் பார்க்கும் முசுவில் இருந்தான். அவனை அனுப்பிவிட்டு உள்ளே வந்தவளால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஏனோ இந்த ஊர் தன் ஊர் போலவே இருப்பதாகத் தோன்றியது. இந்த அறையும் தன் வீட்டை நினைவுபடுத்தியது. இங்கே எல்லாச் சனங்களும் கலந்திருப்பார்கள். இங்கும் மைதிலியக்கா மாதிரியான ஆட்கள் இருப்பார்கள். இருந்தாலென்ன? அவர்களால் பெரிய தொந்தரவு ஏதுமில்லை. இந்த ஊரில் பத்துப் பதினைந்து வீதிகள்தான் இருக்கும். ஆனாலும் தோலூரின் சின்னப் பகுதி ஒன்றாகத் தெரிகிறது. இங்கே இருந்தால் எந்த நேரத்திலும் தோலூரின் பரபரப்பான பகுதிக்குள் சென்றுவிடலாம் என்று நம்பிக்கை வருகிறது.

இந்த ஊருக்குக் குடி வந்துவிட்டால் என்ன? குமரேசன் ஒத்துக்கொள்வானா? அம்மாவை விட்டு வர அவனால் முடியுமா? ஒரு வருசத்திற்கும் மேலாக அம்மாவை விட்டுப் பிரிந்துதான் தோலூரில் இருந்தான். எப்போதாவது வந்து பார்த்துப் போனதோடு சரி. அவன் அம்மாவால் தனியாக இருந்துகொள்ள முடியும். அவளுக்குப் பேச்சுத்துணைக்கு ஆளே வேண்டியதில்லை. ஆடுகளே போதும். பேசியபடியே இருப்பாள். அவனிடம் மெதுவாகப் பேசிப் பார்க்கலாம் என்று நினைத்தாள். அம்மாவையும் மகனையும் பிரிக்கச் சதி செய்கிறாள் என்று தவறாக நினைப்பானோ என்றும் ஒருபக்கம் தயக்கம் ஓடியது. அவர்கள் ஊரை விட்டு வெளியேறினால் மாமியாரை ஊரார் சேர்த்துக்கொள்ளவும் கூடும். எப்போதாவது ஒருநாளைக்குக் குமரேசன் மட்டும் யாருக்கும் தெரியாமல் ராத்திரியில் போய்ப் பார்த்துவிட்டும் வரலாம்.

அவனுக்கென்ன, விடிகாலையில் கிளம்பினால் இரவில் வீடு வந்து சேர்கிறான். அவன் அம்மாவோடு நாள் முழுக்க இருந்து பார்த்தால் தெரியும். எந்நேரமும் நெருப்புக்குள் நடந்துகொண்டிருப்பதைப் போலவே இருக்கிறது. அதைச் சொன்னால் புரிந்துகொள்வானா? கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். கடை முழுக்கப் புழுதியாக இருந்தது. எதுவும் முறையாக அடுக்கப்படவில்லை. அவன் வரும்வரை உட்கார்ந்து யோசித்தால் இடைவிடாமல் அழ வேண்டியதுதான். வேலை இருந்தால் எத்தனையோ பாரங்களை வேலை மேல் இறக்கி வைத்துவிட முடியும். வேலை நடக்க நடக்கப் பாரங்கள் குறைந்துகொண்டே போகும். வேலை முடிவில் எல்லாம் லேசாகி ஒன்றும் இல்லாமல் ஆகிவிடும். பாறையில் எந்த வேலையையும் செய்யப் பயம். மாமியார் ஏதாவது சொல்வாளோ இதைச் செய்யலாமா கூடாதா என்றெல்லாம் யோசித்து ஒன்றையும் செய்யாமல் இருப்பாள். இங்கே எந்தத் தடையும் இல்லை.

வாசலைக் கூட்டினாள். மண் தெரு. வெயில் ஏறியபின் வாசல் கூட்ட ஒருமாதிரி இருந்தது. என்றாலும் இது வீடு

இல்லையே கடைதானே என்று சமாதானப்படுத்திக் கொண்டாள். மேலாகக் கூட்டிவிட்டுத் தண்ணீர் தெளித்தாள். புழுதி அடங்கியதும் மீண்டும் கூட்டினாள். அவள் கூட்டிக்கொண்டு இருந்தபோது பக்கத்தில் இருந்து இரண்டு மூன்று பேர் வந்து கூடிவிட்டார்கள். அவர்களைப் பார்த்துச் சினேகத்துடன் சிரித்தாள். அவர்களும் சிரித்தார்கள். சிரிப்பில் பொய்யில்லை. சந்தோசம் தெரிந்தது. அவர்களில் ஒருத்தி ‘இங்கயே குடி வரப் போறீங்களா?’ என்றாள். உன் வாய் முகூர்த்தம் பலிக்கட்டும், மகராசியாக இரு என்று மனத்தில் நினைத்துக் கொண்டவள் ‘இன்னமேத்தான் தெரியும்’ என்றாள்.

‘ஒரு பொம்பள இருந்தா எந்த எடமும் நல்லாத்தான் இருக்கும். இங்க கட கொண்டாரமின்னு அந்தப் பையன் வந்து பத்து நாளைக்கு மேல இருக்கும். இதுநா வரைக்கும் ஒருநாளும் வாசக்கூட்டிப் பாத்ததில்ல. அட உள்ளயாச்சும் கூட்டினானோ என்னமோ’ என்றாள் இன்னொருத்தி.

‘நிய்யாச்சும் அப்பப்ப வந்து கூட்டி உடு’ என்று அவளே ஆலோசனை சொன்னாள். அவர்கள் பேசப்பேச ஆனந்தமாக இருந்தது. சரோஜாவுக்கு அப்போது சந்தேகம் ஏதும் தோன்றவில்லை. இது தன் ஊராகிய தோலூர்தான்.

0 0 0

# 13

விரிச்சியூரில் இருந்து திரும்பவே சரோஜாவுக்கு மனமில்லை. கடையறை முழுவதையும் சுத்தமாக்கவே அவளுக்கு வெகுநேரம் ஆயிற்று. தோலூரில் அவர்கள் குடியிருந்த வரிசை வீட்டு அறையைவிட ரொம்பப் பெரிது. எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துக் கூட்டி ஒழுங்குபடுத்திய பிறகு கடையையும் நடத்திக்கொண்டு இதற்குள்ளேயே குடும்பம் நடத்திவிடலாம் என்றிருந்தது. இரண்டு பேருக்கான சாமான்சட்டிகளும் ஸ்டவ் அடுப்பும் ஒரு மூலைக்குள் அடங்கிவிடும். சுவரில் பலகை போட்ட அலமாரிகள் சில இருந்தன. இது தாராளம். தரைக் காரை மட்டும் அங்கங்கே பெயர்ந்து சிறுசிறு குழிகள் இருந்தன. கொஞ்சம் சிமிட்டி கொண்டு வந்து அதைப் பூசிவிட்டால் போதும். பக்கத்து வீட்டுப் பெண்களிடம் அவ்வப்போது ஏதாவது பேசிக்கொண்டே எல்லாம் செய்தாள்.

குமரேசன் வெகுநேரம் கழித்தே வந்தான். மாட்டு வண்டியில் மூன்று தண்ணீர்த் தொட்டிகள் வந்திறங்கின. அவற்றை உள்ளே நகர்த்தி வைக்கப் பெரும்பாடாக இருந்தது. அவை வந்ததும் அறை அடைந்துவிட்டது போலத் தோன்றியது. இன்னும் ஒருவாரத்தில் எல்லாம் ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்றும் சோடாத் தயாரித்துக் கடைக்குப் போட்டாக வேண்டும் என்றும் அவளிடம் சொன்னான். வழக்கம் போல அவனுக்குச் சொல்லிக்கொண்டான் என்று தோன்றியது. கடையைச் சுத்தம் செய்து வைத்திருந்தது பற்றி அவனுக்குத் திருப்தி. இந்தச் சமயத்திலேயே இந்த ஊருக்குக் குடி வந்துவிடலாமா என்று கேட்கத் தோன்றியது. அவன் மனநிலை சந்தோசமாக இருக்கும்போது அதைக் கெடுத்துவிடக் கூடாது என்று நினைத்துக் கட்டுப்படுத்திக்கொண்டாள்.

மதிய உணவை உண்டு முடித்ததும் கிளம்பச் சொன்னான். ஊர் போய்ச் சேர்ந்து செல்லக்கா வீட்டுத்

தெரட்டிக்குப் போகும் எண்ணம் அவனுக்கு. அவளுக்கு அச்சமாக இருந்தது. அங்கே போனால் இன்றைய மகிழ்ச்சி எல்லாம் வடிந்துவிடும்படி ஏதாவது நடந்துவிடக் கூடும். ஆனால் அவன் கேட்க மாட்டான். சொந்தங்கள் எல்லாம் தன் திருமணத்தை அங்கீகரித்துத் தன்னையும் அவளையும் ஏற்றுக்கொள்வார்கள் என்னும் நம்பிக்கையில் ஒவ்வொன்றையும் செய்கிறான். இத்தனை நடந்தும் அவன் மாறவில்லை. ஏதாவது மாயம் நடந்து எல்லாரும் அரவணைப்பார்கள் என்று நம்புகிறான். ஒரு மாயமும் நடக்கப் போவதில்லை. அவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. அவனாகவே புரிந்துகொண்டால்தான் ஆயிற்று.

திரும்பும் வழியில் திரட்டி நிகழ்ச்சிக்குத் தட்டம் வைக்க வேண்டும் என்று சொல்லி அதற்கான பொருள்கள் எல்லாம் கரட்டூரில் வாங்கினார்கள். பழங்கள், கண்ணாடி, சீப்பு, பவுடர் டப்பா, ரவிக்கைத் துணி எல்லாம் எடுத்தார்கள். தட்டத்தைச் சுற்றி அலங்கரிக்கக் காகிதப்பூ வாங்கினார்கள். பித்தளையில் சிறுபோவணி ஒன்றும். எல்லாவற்றுக்கும் கிட்டத்தட்ட ஐம்பது ரூபாய் ஆகிவிட்டது. கடைக்குப் பணம் புரட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஐம்பது ரூபாய் என்பது முக்கியமானது. என்றாலும் வீடேறி வந்து கூப்பிட்டிருக்கிறாள் செல்லக்கா. பலபேர் கூப்பிட வேண்டாம் என்று சொல்லியும் அவள் கேட்கவில்லை. அதில் குமரேசன் உருகிப் போயிருந்தான். இல்லாவிட்டால் இப்படிச் சட்டெனச் செலவு செய்கிறவன் அல்ல. ‘நாளைக்கி நம்ப பிள்ள தெரட்டிக்கு இப்ப வெக்கறதெல்லாம் திரும்பி வந்திரும் பாரு’ என்றான். அவளுக்காகச் சொல்கிறானா அப்படியே நம்புகிறானா என்று தெரியவில்லை. இருந்தாலும் அவளுக்கு வெட்கமாக இருந்தது. எனக்கே இந்தக் கஷ்டம். எனக்குப் பிள்ளை பிறந்து அவளும் கஷ்டப்பட வேண்டுமா?

கல்யாணத்தின்போது அவர்கள் இருவரும் வந்துசேர்வதற்கு முந்தியே பெரியசாமி எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தான். பொண்ணுக்கும்

மாப்பிள்ளைக்கும் அவன் அக்காவை அழைத்துப் போய்த் துணிமணிகள் எடுத்திருந்தான். அவளுக்கு இருநூறு ரூபாய்ப் பட்டுப்புடவை. அது அதிகம் என்று குமரேசன் கவலைப்பட்டான். 'என்னைக்கோ ஒருநாளைக்கிக் கட்டற பொடவைக்கு எதுக்கு இத்தன வெல?' என்றான். பெரியசாமியிடம் இதைச் சொல்லிவிடுவானோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது. இரண்டு வீட்டு ஆதரவும் இல்லை. ஏதோ ஒரு மூன்றாம் மனுசன். இந்த அளவுக்கு உதவி செய்கிறான். 'அவுங்க ஆசைக்கு எடுத்துக்கீறாங்க. ஒன்னும் சொல்லிப்புடாத' என்று அவனை எச்சரித்து வைத்தாள்.

என்றைக்கோ ஒருநாளைக்குத்தான் கட்டும் புடவை. சரிதான். அதே போல எப்போதோ ஒருமுறைதானே எடுக்கிறோம்? அதை அவனிடம் பேச முடியாது. அவனைப் பொருத்தவரை பயன்படாத எதற்கும் செலவு செய்யக்கூடாது. திரட்டிக்குப் போகிறார்கள். அதுவும் தட்டம் எடுத்துக்கொண்டு. மாமன் முறை என்னும் சொந்தம் வேறு. தலையில் வைத்துக்கொள்ளக் கொஞ்சம் மல்லிகைப்பூ கேட்டாள். கடையில் விலையைக் கேட்டான். முழம் ஒரு ரூபாய் என்றதும் கொஞ்சம் தயங்கினான். சட்டென்று அவள் முந்திக்கொண்டு 'குடுங்க' என்று சொல்லிவிட்டாள். அவன் சிரித்தான். 'எல்லாத்திலயும் உனுக்குக் கணக்குத்தான்' என்று அவளும் சிரித்தாள். அப்படியே அவளுக்குப் பிடித்த தேங்காய் ரொட்டியும் டீயும் வாங்கிக் கொடுத்தான்.

அவனோடு கரட்டூர் வீதிகளில் சுற்றியதும் கடைகளுக்குள் நுழைந்து பொருள்கள் வாங்கியதும் மிகுந்த சந்தோசமாக இருந்தன. இப்படியே எல்லாம் அமைந்தால் எப்படியிருக்கும் என்று நினைப்பதைத் தவிர்க்க முடியவில்லை. இருவரும் வீட்டுக்கு வந்து சேரும்போது பொழுதிறங்கி இருள் சாம்பலாகப் படர ஆரம்பித்துவிட்டது. ஆடுகளைப் பிடித்துக் கட்டிக்கொண்டிருந்தாள் மாமியார். 'ஊரு சிரிக்குது எனக்கு. ஊர்கோலம் கேக்குது உனக்கு' என்று சொல்லிக்கொண்டே கையை மடக்கி ஓர் ஆட்டின்

தாடையில் குத்தினாள். ஆடு 'பே' என்று கத்திற்று. சரோஜா அனிச்சையாகத் தன் கன்னத்தைத் தடவிக்கொண்டாள். இதுவரைக்கும் அந்த நாள் வெகு சந்தோசமாகக் கழிந்தது. இந்த இரவு எப்படிப் போகுமோ என்று அடிவயிறு கலங்கியது. சில நாட்களாக அவ்வப்போது தலை சுற்றிக் கிறுகிறுப்பு வருகிறது. ஏனென்று தெரியவில்லை.

அம்மாவின் பேச்சைக் குமரேசன் பொருட்படுத்திய மாதிரி தெரியவில்லை. அவளிடம் போய் 'செல்லக்கா ஊட்டுத் தெரட்டிக்கு நீ போறயா?' என்று கேட்டான். 'ஆமா. போறன் சுடுகாட்டுக்கு' என்றாள். 'செரி. நாங்க போயிட்டு வர்றம்' என்றான். 'போங்க போங்க. ஜோடி போட்டுக்கிட்டுப் போனாத்தான பக்கத்து ஊரும் சேந்து சிரிக்கும்' என்றவள் அவன் முகத்தையே பார்க்கவில்லை. சரோஜாவைப் புறப்படச் சொன்னான். அவன் வேறு ஏதோ தீவிர யோசனையில் இருப்பதாகப் பட்டது. அம்மாவின் பேச்சு அவனுக்குப் பழகியதுதான். அதற்கு இப்படிக் கவலைப்பட மாட்டான். 'எந்தக் கோட்டயப் புடிக்கற ஒஜன?' என்றாள்.

அவன் விவரம் சொன்ன பிறகுதான் அவளுக்குப் புரிந்தது. செல்லக்காவின் அண்ணன் வீடு இங்கே ஊரிலிருந்து மேள தாளத்தோடு தட்டம் அழைத்துக்கொண்டு போவார்கள். மாமன் வீட்டிலிருந்து ஏழு தட்டங்களில் சீர் போகும். தட்டம்கொண்டு போகும் மற்றவர்களும் தட்டம் இல்லாமல் விசேசத்தில் கலந்துகொள்பவர்களும் மாமன் வீட்டு மேளதாளத்தோடு சேர்ந்துகொள்வார்கள். ஆள் சேரச் சேர பெரிய ஊர்வலம் ஆகிவிடும். மேளதாளத்தோடு ஆட்டமும் வைப்பதுண்டு. ஊரிலிருந்து புறப்படும் ஊர்வலத்தோடு போய்ச் சேர முடியாது. ஊர்க் கட்டுப்பாடு இருப்பதால் ஒதுக்கிவிடுவார்கள். அதுதான் என்ன செய்வது என்று அவன் தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தான்.

இப்போது 'போவணுமா?' என்று கேட்கவும் முடியாது. எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து வைத்தாகிவிட்டது. அவள் ஏதும் பேசாமல் புறப்பட்டுக்கொண்டிருந்தாள்.

கல்யாணத்தின் போது எடுத்த பட்டுப்புடவையைக் கட்டிக்கொண்டாள். தலைவாரிப் பூவைச் சரமாக வைத்தாள். அவனைத் தொந்தரவு செய்யவில்லை. யோசித்து அவனாகவே முடிவு செய்யட்டும் என்று விட்டாள். அண்டாவை மூடியிருந்த பெரிய பராத்துத் தட்டத்தை எடுத்துப் புளிப் போட்டுத் துலக்கச் சொன்னான். அவள் பித்தளைப் பாத்திரங்களை அவ்வளவாகப் புழங்கியவள் அல்ல. அதனால் தயங்கினாள். அம்மாவைக் கேட்டால் ஏதாவது இடித்துப் பேசுவாள். அவனே துலக்கிக் கொண்டு வந்தான். பித்தளைப் பராத்துப் புதிய போவணிக்கு நிகராக மின்னியது. அதில் எல்லாவற்றையும் அடுக்க அவனும் உதவினான். இப்படிச் சீர்த் தட்டம் வைப்பதை அவள் கண்டதில்லை. இங்கே எல்லாம் புதிது.

பூம்பழச் சீப்புகள் இரண்டையும் தட்டத்தின் இருபுறமாக வைத்து ஓரத்தில் தேங்காயை வைத்தான். நடுவில் மற்ற பொருள்கள். பழத்தில் காகிதப்பூவை அவள் விரித்துக் குத்தியதும் தட்டம் பொலிவு பெற்றது. காலையில் கடைக்குக் கிளம்பும்போது மீதம் வைத்துவிட்டுப் போன சோறு அப்படியே இருந்தது. 'தெரட்டி முடிஞ்சு சோறு போடச் சாமமாயிரும். அதுவரைக்கும் பசி பொறுக்க மாட்ட. இங்கயே கொஞ்சம் தின்னுட்டுப் போயிரலாம்' என்றான் அவன். சரோஜா வந்த பிறகு தினமும் நெல்லஞ்சோறுதான். ஆனால் மாமியார் அதைத் தொடுவதே இல்லை. தனிச்சோறு. கம்போ களியோ. மாட்டுக் கொட்டகையில் ஆக்கி அங்கேயே தின்றுகொள்கிறாள். எந்த நேரம் ஆக்குவாள் என்று தெரியாது.

'நாங்க ஆக்கற சோத்தத் தின்னும்மா. எதுக்குத் தனியா ஒல வெக்கற' என்று அவனும் பலமுறை சொல்லிப் பார்த்தான். ஒரே பதில். 'உன்னய நம்பி இத்தன காலம் இருந்தன். நம்பிக்கைய நல்லாக் காப்பாத்திட்ட. இன்னமே எங்காலம் முழுக்கத் தனிதான். உங்கைய எதிர்பாத்து ஒருநாளும் இருக்க மாட்டன். எவளோ ஒருத்தி ஆக்கி வெக்கறத வெக்கங்கெட்டுத் திங்கற அளவுக்கு எனக்குச்

சத்துக்கெட்டுப் போயிருல. எனக்கு நாலு சாமானம் போதும். அதத் தொடாத இருந்திட்டீங்கன்னாப் போதும்.'

எப்படிக் கேட்டாலும் இதே பதில். முதலில் சிலநாள் அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அப்புறம் செரித்துக்கொண்டான். சோற்றைப் பற்றியும் எதுவாவது சொல்வாள். 'வயக்காடு வெளையது இங்க, தெனம் நெல்லஞ்சோறாத் திங்க.' 'வவுறு காஞ்சாக் குதுர கொள்ளுந் திங்கும் புல்லுந் திங்கும்.' இருந்த சோற்றில் ஆளுக்குக் கொஞ்சம் தின்றார்கள். சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதே ஊருக்குள் மேளம் கொட்டும் ஓசை கேட்டது.

'மாமமூட்டுச் சீர் கெளம்பீருச்சு. அவங்களோட நாம போவ வேணாம். சைக்கிள்ல போயி தேளூர்க் கோயக்கிட்ட நின்னுக்கலாம். அங்கதான் வேத்தூருத் தட்டத்துக்காரங்க எல்லாம் நிப்பாங்க. மாமமூட்டு மோளம் வந்ததும் அதோட சேந்து போயிக்கலாம்' என்றான். அவன் சொன்ன வழி நிம்மதியாயிருந்தது. எங்கே ஊர்க்காரர்களோடு போய் நிற்கச் சொல்வானோ என்றிருந்தது. யாராவது ஒரு வார்த்தை சொன்னால் போதும். ஊரே சேர்ந்துகொள்ளும். மேளச் சத்தம் விட்டுவிட்டுக் கேட்டது. ஆட்டம் நடக்கிறது போல. அவர்கள் பேச்சுக்கு இடைவெளி விட்டுப் பின் மேளம் கொட்டியது.

சரோஜாவும் குமரேசனும் சைக்கிளின் பின்னால் தட்டத்தை வைத்துத் தள்ளியபடி நடந்தார்கள். பாறைக் கட்டிலில் படுத்திருந்த மாமியார் ஏதோ முனகுவது தெரிந்தது. இப்படி முனகுவதோடும் பேசுவதோடும் இவள் நின்றுவிடுவாளா வேறு ஏதாவது செய்துவிடுவாளா என்று சரோஜாவுக்குச் சட்டெனத் தோன்றியது. 'கொரைக்கிற நாயி கடிக்காது பிள்ள' என்று ஒருமுறை குமரேசன் சொல்லிச் சிரித்தான். அதை நினைவுபடுத்திக்கொண்டாள். குரைக்கிற நாயின் வாலை மிதித்துவிட்டால் அப்போதும் கடிக்காதா? தலையை உதறிக்கொண்டாள். நிலா மேற்கு வானில் தலை உயரம் தெரிந்தது. அவன் பேசிக்கொண்டே

வந்தான். நிலா வெளிச்சம் இருந்தாலும் இந்த இருள் அவளுக்குப் பழக்கமானதில்லை என்பதால் பேசுகிறான் என்பதை உணர்ந்தாள்.

செல்லக்காவுக்கு ஐந்து பிள்ளைகள். பையன் வேண்டும் என்று எதிர்பார்த்து அடுத்தடுத்துப் பெற்றுக்கொண்டாள். பையன் பிறக்கவே இல்லை. மூத்த பிள்ளைக்கு முன்னரே அடுத்த இரண்டு பிள்ளைகள் பெரியவர்களாகிவிட்டார்கள். மூத்த பிள்ளை திரட்டிக்குத்தான் மாமன் வீட்டு மேளதாளம், சீர் வரிசை எல்லாம் போகும். அடுத்த பிள்ளைகள் பெரியவர்களாகியும் மூத்தவள் வரவில்லை என்னும் கவலை செல்லக்காவுக்கு. ஒருவழியாகப் பதினாறாம் வயதில் மூத்தவள் வந்தபின்தான் செல்லக்கா முகத்தில் செழுமை வந்திருக்கிறது. மூத்தவளுக்குச் சீரோடு திரட்டி சுற்றி முடித்த கையோடு அடுத்த பிள்ளைகளுக்கும் அதே பந்தலில் சுற்றி முடிக்க ஏற்பாடு. இதையெல்லாம் சொல்லிக்கொண்டே அவன் வரவரத் தொலைவு குறைந்து தேளூர்க் கோயில் வந்துவிட்டது. நிலா வெளிச்சத்தில் நடந்து வருவதில் சரோஜாவுக்கு எந்தச் சங்கடமும் தோன்றவில்லை.

கோயில் முன் தீப்பந்த வெளிச்சமும் இரண்டு பெட்ரோமாக்ஸ் வெளிச்சமும் பளீரிட்டன. ஆட்களின் குரல்கள் சிரிப்பும் களிப்புமாகக் கேட்டன. ஒருகுரல் கனமாக எழுந்து தாழ்ந்தது. ‘மாமமூடு வந்து சேரங்காட்டி வெடிஞ்சு போயிருமாட்டம் இருக்குது. அப்பறம் எல்லாருத்துக்கும் பழைய சோத்தக் கரச்சு ஊத்த வேண்டியதுதான்.’ அந்தக் குரலை அடையாளம் கண்டுகொண்ட குமரேசன் சொன்னான். ‘அதுதான் எங்க பெரிய மாமன்.’ சரோஜாவுக்குத் திக்கென்றது. அவர்களுடைய ஊருக்குப் போனபோது மாமன்கள் நால்வருமே இல்லை. இங்கே நால்வரும் வந்திருக்க வாய்ப்பிருக்கிறது. எல்லாரும் சேர்ந்துகொண்டால் என்ன நடக்குமோ தெரியவில்லை. ஊரில் நடந்ததை நினைக்கும்போது அவர்கள் இல்லாதது எவ்வளவோ நல்லது என்று அவளுக்குத் தோன்றும்.

இங்கே அவர்கள் குடும்பமும் வரும் என்று அவள் யோசிக்கவே இல்லை. குமரேசனுக்குச் சொந்தம் என்றால் அவன் மாமன்களுக்கும் சொந்தமாகத்தானே செய்யும். இங்கே எல்லாரும் சொந்தக்காரர்கள்தான். எல்லாரையும் குமரேசன் முறை வைத்துக் கூப்பிடுவான். மாமன் மச்சினன் முறை. இல்லாவிட்டால் பங்காளி முறை. எப்படி இது தோன்றவில்லை? சரோஜா தனக்குள் குறுகிக்கொண்டாள். குமரேசனின் முதுகு அவளை முழுக்க மறைத்துக்கொண்டது. வெளிச்சத்துக்குப் போனதும் யாரோ ‘அட நோண்டி மாப்ள . . . உங்கூர்ல இருந்துதான மோளதாளம் வருது. அதோட வந்திருக்கலாமில்ல?’ என்று கேட்டார்கள். ‘மாமனுக்கெல்லாம் மோளச் சத்தம் கேக்காது. செவுட்டுக் காதுன்னு மின்னால வந்து சொல்லலாம்னு வந்தன் நான்’ என்று சிரித்தபடி பதில் சொன்னான் குமரேசன்.

‘ஆருக்குடா செவுட்டுக் காது? நாங் காணப் பொறந்த பய. கேலி மயிரு பண்ணறயா?’ என்று அவன் பெரிய மாமன் முன்னால் வந்து கத்தினார். அவரைச் சொல்லவில்லை என்றாலும் வலிந்து சண்டைக்கு வருகிறார் என்பது தெரிந்தது. ‘உங்களச் சொல்லுல மாமா’ என்றான் அடக்கமாக. ‘என்னடா மாமாப்பட்டம் வெக்கற. உனக்கு ஆரு மாமன்? அந்த ஒறவெல்லாம் வெச்சிக்கிட்டு எங்கிட்டப் பேசுற மயிரு வேண்டாம்.’

குமரேசன் மேற்கொண்டு பதில் பேசாமல் நின்றான். பேச்சை வளர்த்தால் சண்டை வளரும். அதை வளர்க்கத் தயாராக இருக்கிறார்கள் என்று நினைத்தான். எனினும் மாமன் ஓயவில்லை. ‘புல்லுத் தடுக்குனா உழுந்திருவாளாட்டம் இருக்குது. அந்த நாதாரியக் கூட்டிக்கிட்டு வந்து ஜாலாக்க மயிரு பண்றவனுக்கெல்லாம் ஆரு அழப்புட்டா? நாக்கத் தொங்கப் போட்டுக்கிட்டு நல்ல சோறு திங்க வந்தர்ரானுங்க கெதி கெட்ட நாய்ங்க.’ சரோஜா தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவர் குரல் மட்டும் பெரும்பெரும் கற்களாய் அவள்மீது வந்து மோதின.

குமரேசனும் இதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்து எதுவும் பேசாமல் நின்றான்.

வேறு யாரோ ‘ஒரம்பரையா வந்த எடத்துல உங்களுக்குள்ள சண்ட எதுக்கு? உங்க பிரச்சினைய வேற எங்கயாச்சும் வெச்சுக்கங்க’ என்றார்கள்.

‘ஊரே தள்ளி வெச்சவன் இங்க வந்துட்டான் ஜோடி போட்டுக்கிட்டு. எங்கயோ போயி எடுபட்டதக் கட்டிக்கிட்டு வந்துட்டமேன்னு நெஞ்சுல பயமிருந்தா இப்பிடி நாலு பேருக்கு மின்னால நிமித்திக்கிட்டுப் பேசுவானா? தோள்ல தூக்கி வளத்த மாமனுக்கு நேரா நின்னு பேசத் துணிச்ச வந்திருச்சா?’ என்று மாமன் பெண்டாட்டி கத்தினாள். ‘எல்லாம் வரும். வராதயா இருக்கும். கையவலத்தப் புதுசாப் பாக்கறானில்ல. அது குடுக்கற தெகிரியம். புளிச்சுப் போச்சுன்னா அப்பறம் வருவான் கைய ஏந்திக்கிட்டு எச்சக்கலப்பையன்’ என்று மாமன் இரைந்தார். அங்கங்கே நின்று கொண்டிருந்தவர்கள் எல்லாம் வரப் பெருங்கூட்டம் சேர்ந்தது.

மாமன் வீட்டை வரவேற்றுக் கூட்டிச் செல்ல வந்திருந்த செல்லக்கா முன்னால் வந்து ‘அட சாமிகளா. என்னூட்டு விஷேசத்துக்கு வந்திருக்கற ஒரம்பரைங்க நீங்க. எனக்கு ரண்டு பேரும் வேணும். சண்ட வேண்டாஞ் சாமீ. தெரட்டி முடிஞ்சு அப்பறம் உங்க ஓரியாட்டத்த வெச்சுக்குங்கப்பா. சாமீ சாமீயா இருப்பீங்க’ என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

அவன் பெரிய மாமன் சத்தமாகவும் தீர்மானமாகவும் ‘கௌம்பு பிள்ள. கொழந்த குட்டி எல்லார்த்தயும் கூப்புடு. இந்த நாயி கை நனைக்கற ஊட்டுல எனக்கென்ன வேல?’ என்றார்.

0 0 0

# 14

ஒருநாள் முழுக்க சரோஜா எழவே இல்லை. காலையில் குமரேசன் புறப்படும்போது அவளை எழுப்பி ‘வர்றயா பிள்ள’ என்றான். தேளூரில் மாமனோடு நடந்த சண்டை கண்டு பயந்து போயிருப்பாள் என்பதால் அவளையும் கூட அழைத்துக்கொண்டு போகலாம் என்று அவனுக்குத் தோன்றியிருக்கிறது. போகத்தான் அவளுக்கும் விருப்பம். எழுந்தாள். தலைக் கிறுகிறுப்பு உட்காரவே விடவில்லை. அப்படியே சாய்ந்துகொண்டாள். ‘நீ போயிட்டு வா’ என்று முனகினாள். ‘எந்திரிச்சு எதுனா ஆக்கிச் சாப்புடு. இல்லீனா கொழந்தைக்குப் பசிக்கும்’ என்றான். அவளுக்குப் புரியவில்லை.

கஷ்டப்பட்டுக் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள். உள்ளிருளில் அவன் சிரிப்பு மட்டும் பளீரிட்டது. ‘இன்னா சொல்ற?’ என்றாள். அருகில் உட்கார்ந்து அவள் தலையைத் தடவினான். நெற்றி மயிரை ஒதுக்கிவிட்டு முத்தமிட்டான். நேற்றைய கலவரச் சோகம் எதுவும் அவனிடம் இல்லை. பெருமகிழ்ச்சியோடு தெரிந்தான்.

‘நீ மயங்கி மயங்கிக் கெடக்கறதப் பாத்தா அதுதான். நல்லாத் தெரியுது. எத்தன பேரு சொல்லிக் கேட்டிருக்கறம். அம்மாகிட்ட இப்பச் சொல்லி ஆவாது. அது தம்மாதும்மான்னு குதிக்கும். மெதுவாச் சொல்லிக்கலாம். நீ பத்தரமா இருக்கோணும்.’

‘நீங்க சண்ட போடறதப் பாத்துப் பயந்து ஒடுங்கிக் கெடக்கறன். அதுக்குள்ள இந்த ஆச வேற. உனக்கு இப்பத்தான் கேலியா கீது.’

‘அட இல்ல பிள்ள. உம்மூஞ்சியப் பாத்தாத் தெரியுது. இன்னொரு உசுரு உள்ள பூந்திருச்சி.’

அவனது ஆவல் அவளுக்கும் தொற்றிக்கொள்ள வெட்கத்துடன் கண்களை மூடிக்கொண்டாள். அவன் மூச்சு கன்னத்தில் உரசியது. மெல்ல முத்தம்

கொடுத்தான். அவன் எப்போது கிளம்பினான் என்று அவளுக்குத் தெரியவில்லை. அவன் முத்தம் கொடுத்துக்கொண்டே இருப்பது போன்ற உணர்வில் அப்படியே கிடந்தாள். ஆழ்ந்த தூக்கமும் இல்லை. விழிப்பும் இல்லை. ஏதேதோ காட்சிகள் ஓடியபடியே இருந்தன. அவற்றைத் தெளிவாகப் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

'பையனா பிள்ளயா' என்று அவள் கேட்பது போலவும் அவன் 'ரண்டுந்தான்' என்று சொல்லிச் சிரிப்பது போலவும் இருந்தது. 'ரொம்பவும் ஆசதான்' என அவளுக்குள்ளேயே முனகிக்கொண்டாள். அவள் அண்ணனும் அப்பனும் வந்தார்கள். அவள் கையைப் பற்றியபடி அப்பன் ஏதோ பேசுவது தெரிந்தது. குமரேசனின் மாமன்கள் கோப முகத்தோடு வந்து மறைந்தார்கள். ஆடுகள் ஓடி வந்தன. அவளருகில் வந்ததும் ஒவ்வொரு ஆடும் மாமியாராக மாறி நின்றன. பாறையில் குழந்தைகள் ஓடி விளையாடின. 'பாத்துப் பாத்து' என்று அவன் அவற்றின் பின்னால் ஓடிக்கொண்டிருந்தான். வெள்ளையன் வந்து 'எல்லாம் குமரேசனுக்குப் பொறந்ததுதானா?' என்கிறான். காய்க்காரக் கிழவி 'பெத்துப் பொழச்சிக்கிட்ட. இது மட்டும் இல்லீனா உன்னய எப்பவே முடுக்கியிருப்பாங்க' என்றாள். 'முங்கொசுவம் கட்டி உடறயா' என்கிறாள் வேலாயி. 'கொழந்தைக்கும் கட்டுப்பாடு உண்டு' என்கிறார் ஒருவர் ஆக்ரோசமாய். இன்னும் முகம் தெரியாத ஏதேதோ ஆட்கள். எல்லாம் குழம்பியபடி இருக்க வயிறு அவளை எழுப்பியது.

மெல்லத் தடுமாறியபடி வெளியே வந்தபோது வெயில் பட்டென்று அவள் முகத்தில் அடித்தது. கண்களைத் தாழ்த்தி வெயிலை அனுசரிக்கப் பார்த்தாள். ரொம்ப தூரம் நடந்தால் விழுந்துவிடுவோமோ என்றிருந்தது. முகத்தில் குளிர்நீரை அள்ளித் தெளித்ததும் தெளிச்சி வந்தது. பரந்த காட்டுவெளியும் பனைமரங்களும் தெரிந்தன. காக்கைச் சத்தம் கேட்டது. ஆட்கள் ஒருவரையும் காணோம். இருந்தாலும் இந்தப் பக்கம்

யாரும் வருவதில்லை. ஏதாவது ஏடாகூடமாகப் பேசினாலும் நாலுபேர் முகத்தைப் பார்க்க முடிந்தது. இப்போது அதற்கும் வழியில்லை. பாறைப்பக்கம் ஆட்களின் காலடி பட்டு நாளாகிவிட்டது. ‘வந்தொடன ஆளுவ இந்தப் பக்கம் வராத தொடச்செடுத்திட்டா. இன்னம் எதெத எடுக்கப் போறாளோ’ என்று மாமியார் பேசியதும் கனவில் கேட்ட மாதிரி தோன்றியது. மயங்கிக் கிடந்தபோது பேசினாளோ.

ஊரில் கோயில் நோம்பி சாட்டிவிட்டார்கள் என்பதன் அடையாளமாக இரவில் மேளக் கொட்டுச் சத்தம் கேட்டது. எப்போது பொங்கல் என்று தெரியவில்லை. தெரிந்து என்ன செய்யப் போகிறோம்? பொங்கல் முடிந்து என்ன முடிவு செய்வார்களோ? அதற்குள் விரிச்சியூருக்குப் போய்விட்டால் நல்லது. இன்றைக்கு எழுப்பிக் குமரேசன் கூப்பிட்டதைப் பார்க்கும்போது குடிபோக ஒத்துக்கொள்வான் என்றே தோன்றியது. குழந்தை உண்மை என்றால் அவளைத் தனியாக இங்கே விட்டுப் போக மாட்டான். விரிச்சியூரில் பக்கத்து வீட்டுப் பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் உதவுவார்கள். வரிசை வீட்டுக்காரர்கள் போலத்தான் அங்கே எல்லாரும். இந்தச் சமயத்தில் வற்புறுத்தினால் ஒத்துக்கொள்வான். பாறை மேல் உட்கார்ந்தவளுக்கு வயிற்றைச் சுருட்டிப் பிடித்தது. ராத்திரியே சரியாகச் சாப்பிடவில்லை.

திரட்டி வீட்டில் சாப்பிடலாம் என்று சமையல் செய்யவேயில்லை. அங்கே சாப்பிடாமல் கிளம்பி வந்து பார்த்த போது சட்டியில் கிடந்த கொஞ்சத்தை ஆளுக்கொரு வாயாகத் தின்றுவிட்டுப் படுத்தார்கள். அப்போது அதற்குமேல் சாப்பிடவும் பிடிக்கவில்லை. இப்போது வயிறு கேட்கிறது. சட்டியில் ஏதுமில்லை. எந்நேரம் சமைத்துச் சாப்பிடுவது? மாமியார் ஏதாவது செய்திருப்பாள் என்பது நினைவு வந்தது. கொஞ்சமாக எடுத்துச் சாப்பிட்டால் தெரியவா போகிறது? காட்டில் எட்டிய வரைக்கும் கண்ணோட்டினாள். மாமியார் வெகுதூரம் ஆடோட்டிப் போயிருப்பாள்.

எழுந்து எதிர்கொட்டகைக்குள் போனாள். இதுவரைக்கும் அதற்குள் எட்டிப் பார்த்ததும் இல்லை. அந்தக் கொட்டகைக்குச் சுவர் இல்லை. ஓலைகளை வைத்துச் சுற்றிலும் தடுப்பாகக் கட்டியிருந்தது. கொட்டகையின் முன்பக்கம் மண்வெட்டி, கூடைகள் எல்லாம் கிடந்தன. உள்ளே ஒரு ஓரமாக மாமியாரின் சமையல் பாத்திரங்கள் தெரிந்தன. எல்லாம் மண்பாண்டங்கள். கூட்டடுப்பு ஒன்று மட்டும் இருந்தது. அதன் மேல் தடச்சட்டி வைத்து மூடியிருந்த சோச்சட்டியைத் திறந்தாள். கம்மஞ்சோற்று மணம் மூக்கில் வந்து ஏறியது. ஒரே ஒரு உருண்டை மட்டும் தோண்டியிருந்த குழிச்சுவடு தெரிந்தது.

தன் கொட்டகைக்குள் போய் வட்டலையும் கரண்டியையும் எடுத்துவந்து குழி பெரிதாகாதவாறு கரண்டியைச் சுழற்றித் தோண்டினாள். அரைக் கரண்டிக்கும் மேலே சோறு வந்தது. குழியைப் பார்த்தாள். சோறு தோண்டியதைக் கண்டுபிடிக்க முடியாது. அடுப்புக்குப் பக்கத்தில் இருந்த மேலுலைச் சட்டி ஒன்றில் குழம்பு இருப்பது போலத் தெரிந்தது. அதை எடுத்துப்பார்த்தாள். ஏதோ பொடி. வட்டல் சோற்றுக்கு அதை அள்ளிப் போட்டுக்கொண்டு சட்டென வெளியே வந்தாள். தன் கொட்டகைக்குள் போய் உட்கார்ந்து அவசர அவசரமாகத் தின்றாள். கம்மஞ்சோற்றுக்குப் பொடி காரசாரமாக இருந்தது. கொஞ்சம் வயிறு நிறைந்ததும் விக்கல் வந்தது. தண்ணீர் குடித்தாள்.

பசி தணிந்து உணர்வு வந்ததும் ஏனோ அவளை அறியாமல் அழுகை வந்தது. இது திருட்டுச் சாப்பாடு. சொந்த வீட்டில் திருடிச் சாப்பிடும்படி ஆகிவிட்டது. இந்நேரம் இந்தச் சேதி தெரிந்ததும் வாஞ்சையோடு கவனிக்க ஒராள் இல்லாத தன் கொடுப்பினையை எண்ணினாள். பார்த்திருந்தால் திருடிப்பட்டம் சுமத்தி அடித்துத் துரத்தியிருக்கவும் கூடும். அந்த நினைவைக் கஷ்டப்பட்டு ஒதுக்கிவிட்டு முழுதாகச் சாப்பிடப் பார்த்தாள். நிலக்கடலையில் செய்த பொடி அது. கம்மஞ் சோற்றுக்கு அத்தனை பொருத்தம். சோறு

தோண்டியிருப்பதை மாமியார் கண்டுபிடித்துவிடுவாளா? அதற்கு வழியில்லாத மாதிரி எச்சரிக்கையாகத்தான் தோண்டியிருந்தாள். திருட்டு தனக்கு நன்றாக வருகிறது என்று ஒருநிமிசம் சந்தோசமாக இருந்தது.

சின்ன வயதில் அப்பன் சட்டைச் சோப்பிலிருந்தும் அண்ணனுடையதில் இருந்தும் காசுகளை எடுப்பாள். அவளுக்கு விருப்பமான மிட்டாய்களை வாங்கித் தின்பாள். உடன் விளையாடும் பிள்ளைகளுக்கும் வாங்கிக் கொடுப்பாள். ஐந்தாம் வகுப்புவரைக்கும் பள்ளிக்கூடம் போனாள். அவள் பின்னால் எப்போதும் பிள்ளைகள் சுற்றும். ஒருமுறை அண்ணன்தான் இந்தத் திருட்டைக் கண்டுபிடித்தான். ஓங்கி அறைந்துவிட்டான். அப்பன் சொன்னார், ‘கொயந்தய அடிக்காதடா. இனிமே கேட்டு வாங்கிக்கம்மா.’ அன்றைக்கு அழுதாள். அதற்கப்புறம் தினமும் அப்பனே கேட்பார் ‘எவ்ளோ வோணும்?’ அண்ணன் கேட்பதில்லை. கைக்கு வரும் சில்லரையை எடுத்துக் கொடுப்பான். அன்றைக்குப் பழகிய திருட்டு இன்றைக்குக் கைகொடுத்திருக்கிறது. சாமர்த்தியம்தான்.

அந்தத் தெம்பில் சோறாக்கினாள். இரவுக்கும் சேர்த்து வைத்தாள். செய்து முடித்து அதிலும் கொஞ்சமாய்ச் சாப்பிட்டதும் அப்படியொரு களைப்பு மண்டியது. தடுக்குக் கதவைச் சாத்திவிட்டுப் படுத்தவள்தான். மாலை வரைக்கும் ஒன்றுமே தெரியவில்லை. மீண்டும் பசிதான் எழுப்பிவிட்டது. நேரம் பற்றி யோசிக்காமல் சாப்பிட்டாள். வெளியே காற்றோட்டமாகப் பாறையில் வந்து உட்கார்ந்தாள். தூரத்தில் மாமியார் ஆடுகளை விரட்டும் சத்தம் கேட்டது. ஆடுகள் இல்லை என்றால் மாமியாரைச் சமாளிப்பது பெருங்கஷ்டம். இப்போது எல்லாக் கோபமும் அவற்றின் மேல் வடிந்துவிடுகிறது. குமரேசன் வரும் வழிப்பக்கம் கண்ணோடி ஓடி மீண்டது. எந்த நேரம் வருவான் என்று தெரியவில்லை. இன்னும் நான்கைந்து நாட்கள் வேலை செய்தால் கடையைத் தொடங்கிவிடலாம். அதற்காகத்தான் கஷ்டப்படுகிறான்.

திரட்டி வீட்டில் அப்படிச் சண்டை போடுவார்கள் என்று சரோஜா நினைக்கவேயில்லை. குமரேசனின் பெரிய மாமன் எகிறிக்கொண்டு வந்தார். குமரேசனை அடிப்பதுதான் அவர் நோக்கம் என்பது தெரிந்தது. அவன் எதுவும் பேசாமல் கண் கலங்கி நின்றான். ஊமையாகிவிடுவது நல்லது என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. எதுவும் பேசாத போதே எல்லாரும் அவன் மேல் குற்றம் சொல்கையில் ஏதாவது பேசினால் என்னவாகியிருக்கும்? இருந்தவர்களில் யாரும் குமரேசனுக்கு ஆதரவாகப் பேசவில்லை. 'விருந்துக்கு வந்த எடத்துல எதுக்குச் சண்ட' என்றுதான் கேட்டார்கள்.

'ஊர உட்டே ஒதுக்கி வெச்சிருக்கறவனப் போயி இந்தச் செல்லா எதுக்கு அழச்சா? இப்ப அவன் ஒருத்தன் வந்து மாமம்பொட்டு வெக்கலீன்னாக் கொறஞ்சு போயிருதா?'

'சொந்தச் சண்டையில தெரட்டிய நிறுத்தீராதீங்கப்பா. செல்லா பிள்ள இத்தன வருசங் கழிச்சு இப்பத்தான் வந்திருக்குது. அதுல சண்ட போட வந்து சேந்திட்டீங்களா?'

'அடேய் நோண்டி . . . உங்க மாமந்தான் இப்பிடி எகிர்றாரே எதுக்கு இங்க நிக்கற? கௌம்பிப் போயிரு. தெரட்டி ஊட்டுல சண்ட சச்சரவுன்னா நல்லாவா இருக்கும்?'

மாமன் சீர் மேளதாளத்தோடு வரும்முன் இத்தனை களேபரம். அது வந்துவிட்டால் இன்னும் கூடும் என்று சரோஜாவுக்குத் தோன்றியது. வீட்டுக்குத் திரும்பி விடுவதுதான் நல்லது என்று நினைத்து அவன் கையை அழுத்தினாள் சரோஜா. பேச்சு கலாமுலாவென்று ஒன்றும் புரியவில்லை. அவன் பெரியமாமன் கயிற்றை அறுத்துக்கொண்டு வரும் காளை போலத் திடுமென ஓடிவந்து தட்டத்தை ஓங்கி உதைத்தார். இருட்டில் தட்டமும் பித்தளைப் போவணியும் எங்கோ விழும் சத்தம் மட்டும் கேட்டது.

'எச்சக்கல நாயி . . . அப்பனில்லாத பையன்னு உன்னய மார் மேலயும் தோள் மேலயும் போட்டு வளத்தமேடா. நீ

காட்டற நன்னி இதுதானாடா? கையவலத்தப் பாத்தொடன எல்லாம் மறந்து போயிருமா? கண்ணாலம் கட்டிக்கிட்டு வந்திருக்கறானாமா கண்ணாலம். மண்டயப் பொளந்திர்றன். அப்பன் போயிச் சேந்த எடத்துக்கே மவனும் போயிச் சேரு. எந்தங்கச்சிய முண்டச்சியா இத்தன நாளுப் பாத்துக்கிட்டம். இன்னங் கொஞ்சம் நாளைக்கு அனாதியாப் பாத்துக்கறம்' என்று இடைவிடாமல் கத்தினார்.

குமரேசன் அசையாமல் நின்றான். அவரை யார் யாரோ வந்து பிடித்து இழுத்துப் போனார்கள். குமரேசனையும் பிடித்துத் திருப்பி அனுப்ப முயன்றார்கள். அதற்குள் சிதறிய தட்டத்தை யாரோ பொறுக்கிக் கொண்டுவந்து சரோஜாவிடம் கொடுத்தார்கள். சைக்கிள் இருட்டில் வெகுதூரம் வரும்வரை ரவரவவென்று சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. குமரேசனும் சரோஜாவும் எதுவும் பேசாமல் நடந்தார்கள். ஒருவர் மூச்சு ஒருவருக்குக் கேட்கும்படியான இறுக்கம். பாறைக்கு வந்து சேர்ந்ததும் குமரேசன் உடைந்து அழுதான். பாறையின் மேல் கட்டில் போட்டுப் படுத்திருந்த மாமியார் 'அப்பனோட போனவ அழுதாத் தீருமா? செய்யறதுக்கு முன்னால ஓசன எங்க பீத்திங்கப் போயிருச்சா?' என்று கத்தினாள். அவன் அழுகை சட்டென அடங்கியது. பாறையும் காடும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை விரிந்து கிடக்கின்றன. ஆனால் வாய்விட்டு அழக்கூட ஓரிடம் இல்லை.

அத்தனை பாசமாக வளர்த்த அம்மாவிடம் இருந்து இப்போது ஒரு ஆதரவும் இல்லை. ஒற்றை வார்த்தை அன்பாக வருவதில்லை. நஞ்சுக்கொடியைக் கடித்து உதறும் நாய் போலச் சதையைக் கவ்வுகிறாள். ஏதும் பேசாமல் அடங்கிப் போகப்போக அவள் பேச்சு அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. அப்படி என்ன செய்துவிட்டேன்? கல்யாணம் செய்து கொண்டது தப்பா? மனசுக்குப் பிடித்த பெண்ணொருத்தியைக் கட்டிக்கொள்ளக் கூடாதா? அதனால் யாருக்கு என்ன குறை வந்துவிட்டது? அவள் என்மேல் உயிராக

இருக்கிறாள். அவள்மேல் எனக்கும் உயிர். யாரிடமும் ஒருபைசா கேட்டுக் கையேந்தி நிற்கவில்லை. ஏன் எல்லா இடத்திலும் இப்படி விரட்டுகிறார்கள்? அம்மாவுக்குக்கூட இது புரியவில்லையே. எந்தப் பெண்ணைக் கட்டியிருந்தாலும் இப்படித்தானே குடும்பம் நடத்தப் போகிறேன். அதைப் பிடித்த பெண்ணோடு நடத்துகிறேன். அதனால் யாருக்கு என்ன குறை நேர்ந்தது?

தோளிலும் மாரிலும் போட்டு வளர்த்தேன் என்றால் எல்லாரும் அப்படித்தானே வளர்க்கிறார்கள். அதை இல்லை என்று யார் சொன்னார்கள். மாமன் வீடு அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்கிறார்களே என்ன செய்தார்கள்? தங்கள் வீட்டுப் பிள்ளைக்குக் காவல் இருந்தார்கள். பாறைக் கொட்டாயை மாற்றி வில்லை வீடா கட்டிக் கொடுத்தார்கள்? கைக்காசைப் போட்டு என்ன செய்தார்கள்? இனமாம் இனம். சோடாபாய் எந்த இனம்? அவர்தானே வேலை கொடுத்தார். நாலு காசு கையில் பார்க்க அவரில்லாவிட்டால் ஏது? சொந்த இனத்தான் என்னத்தைத் தூக்கிக் கொடுத்தான்? அம்மாவிடம் ஏதேதோ கேட்க நினைத்தான். இளம்வயதிலேயே புருசனை இழந்துவிட்டு அனாதிப் பாறைக்காட்டில் தனியாகக் கிடக்கும் அவள் வாழ்வை நினைத்துப் பொறுத்துக்கொண்டான்.

அப்படியும் பொறுக்க முடியாமல் அழுதுகொண்டே கேட்டான், ‘எனக்காவ அதச் செஞ்சன், இதச் செஞ்சன்னு சொல்றியேம்மா. உனக்கு நெசமே எம்மேல பாசமிருந்தா எஞ்சந்தோசத்துக்குக் குறுக்க நிப்பியாம்மா? ஊருக்காரன் ஆயரம் சொல்லட்டும். மாமனும் மயிரானும் கெடக்கறானுவ. சொல்லு, என்னயப் பிரியமாத்தான் வளத்தயா? உனக்கு ஒரு புடிமானம் வேணும்னு என்னய வளத்திருக்கற. எம்மேல உனக்குத் துளிகூடப் பாசமில்ல. இருந்தா இப்பிடித் தெனந்தெனம் நெருப்ப அள்ளிக் கொட்டுவியா? இவ ஆரும்மா. நீ ஒரு பிள்ளப் பெத்திருந்தா இவளாட்டந்தான இருப்பா. நீ ஒரு

பொம்பள. உனக்கு அது புரியலியா? போம்மா சும்மா வேசம் போடாத.'

அவன் அம்மாவும் சளைக்கவில்லை. இரண்டு பேரும் இப்படி நேருக்கு நேர் பேசிக்கொள்வது இதுதான் முதல்முறை.

'ஆமாண்டா. உன்னோட எனக்கு ஊருத்தான் பெருசாப் போச்சு. நாலு பேரோட சேந்து வாழாத ஓரியா வாந்திருவியா? நான் இருவது வயசுல இருந்து ஆம்பள வாட இல்லாத கட்டுப்பாடா இருக்கல. உனக்கென்னடா இந்த வயசுலயே ஒடம்பு இப்பிடிக் கேக்குது.'

'இரவது வயசுல கேக்காத அறவது வயசுலயா கேக்கும்? ஏம்மா நீ கஷ்டப்பட்டீன்னா நானும் கஷ்டப்படோணுமா. இன்னொரு கலியாணம் பண்ற எனத்துல பொறந்திருந்தா உனக்கும் கலியாணம் பண்ணியிருப்பாங்க. கஷ்ட நஷ்டம் தெரிஞ்சிருக்கும். ஒண்டியா இருந்து இருந்து என்ன தெரீது உனக்கு?'

'ஆமாண்டா எனக்கு ஒன்னுந் தெரியாது. உனக்கு எல்லாந் தெரியும். அவ சொல்லிக் குடுத்துத் தெரிஞ்சிருப்ப. இல்லீனா என்னய இப்பிடி எதுத்துப் பேசுவியா? அப்படியா வளத்தன். அவளப் பாத்ததியும் பெத்த தாயி மாத்தாளாப் போயிட்டா. உன்னய இந்த அளவுக்கு உட்டது தப்பாப் போச்சுடா. என்னோட வவுத்தெரிச்சலக் கொட்டிக்கிட்டா நல்லா இருப்பியா. பெத்த தாயி சாபம் எத்தன பொறவிக்கு வருந் தெரீமாடா.'

அம்மாவின் கத்தலுக்கு அவனைப் பதில் சொல்லவிடாமல் சரோஜா தடுத்தாள். இன்னொரு சண்டையைப் பார்க்கத் தெம்பில்லை அவளுக்கு. அவன் அடங்கிய பிறகும் அம்மா பேசிக்கொண்டும் ஒப்பாரி வைத்துக்கொண்டும் இருந்தாள். தூக்கத்தின் நடுவில் அவ்வப்போது விழிப்பு வரும்போதும் ஒப்பாரி கேட்டபடியே இருந்தது. விடிய விடியப் பாடியே கிடந்திருக்கிறாள். கண்மூடித் தூங்கவில்லை.

குமரேசனுக்கும் கேட்டிருக்கும். இத்தனை விதமாக எங்கிருந்து பாட்டுக் கட்டுகிறாள்?

நான் பொறந்த சீமையில நான் பொறந்த சீமையில
மச்சு மேல மச்சுக் கட்டி மச்சிலொரு தூரி கட்டி
ஆடியாடிச் சிரிச்சிருந்தேன் அன்னாடம் மவுந்திருந்தேன்
ஆட்டிவுட ஆளுமுண்டு ஆயரமாச் சேவையுண்டு

வந்து பூந்த சீமையில வந்து பூந்த சீமையில
பாறையில குச்சுக் கட்டி பனந்தடுக்குக் கதவு வெச்சு
பாங்காப் பொழச்சிருந்தன் பாலகன பெத்தெடுத்தேன் கொண்டவனும்
போய்ச் சேர கொழந்தப் பயன் கூத்துவனாம்

மறுநாள் குமரேசன் காலையிலேயே சொல்லிவிட்டுப் போனான். இரவு வருவதற்கு நேரம் ஆகலாம். அல்லது இரவு அங்கேயே தங்கிவிட்டு அடுத்த நாள் சாயந்திரம்தான் வர முடியும் என்றான். பாட்டில்கள் எல்லாவற்றையும் கழுவிச் சோடா தயாரிப்பு வேலையை இரவில் செய்யலாம் என்றிருப்பதாகவும் உதவிசெய்யப் பெரியசாமிக்குச் சொல்லி விட்டிருப்பதாகவும் எப்படியும் சாயந்திரத்திற்குள் வந்துவிடுவான் எனவும் அடுத்த நாள் சனிச்சந்தைக்குக் கலர் கொண்டுபோக இருப்பதாகவும் ஏதேதோ சொன்னான். அவளுக்குப் பாதி புரிந்தும் பாதி புரியாமலும் இருந்தது.

எப்படியோ கடை தொடங்கப் போகிறது. விரிச்சியூருக்குக் குடி போய்விடலாம் என்று ஒருபக்கம் சந்தோசம். அதேசமயம் அவன் இல்லாமல் இரண்டு நாள் இங்கே இருக்க முடியாது என்று தோன்றியது. காலையில் தொடங்கும் தலைக் கிறுகிறுப்பும் மயக்க உணர்வும் மதியத்துக்கு மேல்தான் கொஞ்சம் கொஞ்சமாக விலகுகின்றன. இரவில் வெகுநேரம் தூக்கம் வராது. அவனும் இல்லை என்றால் அவ்வளவுதான். வந்துவிடுவான் என்று எதிர்பார்த்து அவன் சைக்கிள் சத்தத்திற்குக் காது விறைத்தேனும் கிடக்கலாம். ‘எந்நேரம்னாலும் வந்திடு. என்னால தனியா இருக்க முடியாது’ என்று முனகினாள்.

நேற்றைவிட இன்று பரவாயில்லை என்றாலும் எழுந்து நடந்தால் கீழே விழுந்துவிடும்படி தள்ளாட்டமாக இருந்தது. இரண்டு நாளாகக் குமரேசனுக்கு எதுவும்

கொடுத்தனுப்ப முடியவில்லை. அது சங்கடமாக இருந்தாலும் எழுந்து சமைக்க உடல் ஒத்துழைக்கவில்லை. விரிச்சியூரில் நிறையக் கடைகள் இருக்கின்றன. அங்கே சாப்பிட்டுக்கொள்வான். அவளுக்காவது செய்துதானே ஆகவேண்டும். சோறு திருடியதை மாமியார் கண்டுபிடிக்கவில்லை. எல்லா நாளும் இப்படியே போகுமா? இனி அந்த வேலை ஆகாது.

வெயில் நன்றாக மேலே ஏறிய பிறகு மெல்ல எழுந்து ஒவ்வொன்றாகச் செய்து முடித்தாள். மீண்டும் தூக்கமா மயக்கமா என்று தெரியாத கிடக்கைதான். மதிய உணவு உண்ட பிறகு ஓரளவு தெளிவாகிச் சாயங்காலத்தில் முற்றிலுமாக விடுபட்டாள். அவனை எதிர்பார்ப்பதைத் தவிர வேறு வேலையில்லை. கூடடையும் பறவைகள்தான் அவளது ஒரே துணை. இங்கே வந்த பிறகே இத்தனை பறவைகளைப் பார்க்கிறாள். அவற்றுக்கு மனிதர்களைப் போலக் கவலைகள் இருக்குமா? இப்படிப் புருசனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பறவை ஏதேனும் இருக்குமா?

பனைகளில் அண்டும் பறவைகள் குறைவுதான். பாறையிலிருந்து இறங்கிச் செல்லும் வழியை ஒட்டிப் பெரிய ஓடைப் பள்ளம். அங்கே பெருமரங்களும் அடர்புதர்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து வெகுநேரம் சத்தம் வரும். அவற்றையே கேட்ட படி உட்கார்ந்திருந்த சரோஜா சத்தம் அடங்கிய பிறகே தன்னுணர்வுக்கு வந்தாள். வயிறு இளகி வற்புறுத்தியது. இங்கே வந்தபின் நேரம்காலம் எல்லாம் மாறிவிட்டன. கழிப்பறைக்குள் உட்கார்ந்து பழகிய வயிற்றால் வெட்டவெளியில் இளக முடியவில்லை. அதனால் அதற்கு எப்போது விருப்பமோ அப்போதுதான் போகச் சொல்லும்.

போய்வரலாம் என்று எழுந்தபோது இருள் மெல்லச் சேர்ந்து திரண்டுவிட்டதை அறிந்தாள். பள்ளத்துப் புதருக்குள் அவளுக்கென்று ஓரிடம் கண்டுபிடித்து வைத்திருந்தாள். அதற்குள் போனால் கழிப்பறைக்குள் உட்கார்ந்திருப்பதைப் போலவே இருக்கும். அவசரமாக எழுந்து அங்கே போனாள். இத்தனை இருளுக்குள்

இதுவரை இங்கே வந்ததில்லை. பூச்சிகளின் ரீங்காரம் நொய்யென்று காதுகளைத் துளைத்தது. இருளைக் கையால் விலக்கியபடி உள்ளே போய் உட்கார்ந்தாள். பயத்தில் அவ்வளவாக வயிறு லேசாகவில்லை.

இப்போதைக்குப் போதும் என்று எழுந்து கால்களை அழுங்காமல் வைத்து வெளிவரப் பார்த்தாள். ரீங்காரச் சத்தத்தை அறுக்கிற மாதிரி கிசுகிசுப்பாய் மனிதக் குரல் கேட்டது. பயத்தில் உடல் இறுக அப்படியே அசையாமல் நின்றாள். காதுகளைக் கூர்மையாக்கினாள். மாமியாரின் குரல். அவள் முனகுவதே எதிராளியோடு சண்டை போடுவது போல இருக்கும்.

‘ஒன்ன வெச்சிருக்கறன். அதுக்கு எதும் ஆயிரக் கூடாதுன்னு தான் பொறுத்துக்கிட்டு இருக்கறன். அவனே இப்ப என்னய எதுத்துக் கேக்கறான். பிள்ளப்பூச்சியாட்டம் இருந்த பையன எப்பிடி மாத்திப்புட்டா. அவனுக்காவத்தான் இத்தன நாளு பொறுத்திருந்தன். இல்லீனா கருக்கருவாள்ல கழத்த அறுத்து எப்பவே கதைய முடிச்சிருப்பன்.’

‘ஒன்னும் ஆவாத பாத்துக்கலாம். இதுக்கு மேல என்ன ஆயிரப் போவுது. அதெல்லாம் ஒரு மணி நேரத்துல பொசுக்கீரலாம். மணியாரரு நம்பாளு. ரண்டுங்கற எடத்துல நால வெச்சம்னாப் போதும். எதுனாலும் பாத்துக்குவாரு. ஊரே நம்ப பக்கம் இருக்கையில என்ன ஆயிரும்?’

ஆண் குரல் அது. அவளுக்குள் பதிந்திருந்த எந்தக் குரலாகவும் அது இல்லை. எவ்வளவோ யோசித்தும் அடையாளம் காண முடியவில்லை

0 0 0

# 15

எந்தப் பக்கம் இருந்து பேச்சுக்குரல் வருகிறது என்பதை சரோஜாவால் அனுமானிக்க முடியவில்லை. ஆனால் தன்னிருப்பை எந்த வகையிலும் வெளிப்படுத்திவிடக் கூடாது என்னும் எச்சரிக்கை கொண்டாள். புதருக்குள் இருந்த இடத்தில் அப்படியே இருட்சிலையாய் நின்றாள். பேச்சுக்கு முழுவதுமாகக் காதைக் கூர் தீட்டிக் கொடுத்தாள். மாமியாரின் குரல் உரத்தும் மற்றொரு குரல் கிசுகிசுப்பாகவுமே பேசின. மாமியாரின் பேச்சை வைத்தே விஷயத்தை ஊகிக்க வேண்டியிருந்தது.

‘மொட்டுப்பாய எங்க கண்டுபுடிச்சீங்க?’

‘நோண்டி இந்தப் பிள்ளயக் கூட்டிக்கிட்டு ஒடியாந்தப்பறம் பாயி இந்தப் பக்கமே வர்லியே. ஆளு ஏவாரத்துக்கு ஊரயே மாத்திட்டான். எப்பிடி இருந்தாலும் ஒருநாளைக்குக் கண்ணுல படாதயா போயிருவான்னு பாத்துக்கிட்டுத்தான் இருந்தம்.’

‘பாயி நல்ல மனுசந்தான். அவன் நம்புளுக்கு ஒதவி பண்ணத்தான் பாத்தான். இந்த நாயி காலத் தூக்கிக்கிட்டுப் போவும்னு ஆரு கண்டா?’

‘போனதுதான் போனான் . . . பொழங்கற நாயாப் பாத்திருந்தா எப்பிடியோ போயித் தொலையறான்னு உட்டிருக்கலாம். இது மானக்கேடால்ல போயிருச்சி.’

‘பாயி சொன்னது நெசந்தானா?’

‘கையோட பாயக் கூட்டிக்கிட்டுத் தோலூருக்கே நேராப் போயிப் பாத்து வெசாரிச்சிட்டு வந்துட்டம். தோலுக் கம்பெனியில அப்பனும் மவனும் வேல செய்யறாங்க. குருவிக் கூடாட்டம் ஒண்டியறையில குடியிருக்கறாங்க. டவுனுக்குள்ள இருக்கறதால பக்கத்துல பக்கத்துல வேறவேற சனம் குடியிருக்குது . . .’

‘அவியெல்லாம் பேசப் புடிக்க இருக்கறாங்களா?’

‘பேசுவாங்க. ஆனாப் பொழங்குவாங்களா?’

‘என்ன சொல்லி வெசாரிச்சீங்க?’

‘இங்க வேலக்கி வந்த எங்க பையனக் காணாம்னுதான் வெசாரிச்சம். ரண்டுபேரும் எங்கயோ ஓடிப் போயிட்டாங்கன்னு நெனச்சிருக்கறாங்க. இங்க வந்தது தெரியாது. இங்கயெல்லாம் வல்லயின்னு சொல்லீட்டம். எங்கயோ போயித் தொலயிறா, தேடிக்கிட்டெல்லாம் போவ முடியாதுன்னு அப்பனும் மவனும் சொல்லீட்டாங்களாமா. பையனப் பத்தித் தெரிஞ்சிருக்கும், நல்ல எடம்னு பேசாத இருக்கறானுங்க.’

‘அங்க இருந்து எதுனா வில்லங்கம் வந்தராதே?’

‘ஒன்னும் வராது. பாயி இந்தப் பக்கமே வரமாட்டான். அப்பறம் ஆரு போயிச் சேதி சொல்லப் போறா? எப்பவாச்சும் தெரிஞ்சு வந்தா, என்னப்பா பண்றது பாவிமவ இப்பிடிப் பண்ணிக்கிட்டான்னு கொஞ்ச நேரம் அழுது ஒப்பாரி வெச்சுப் பேசுனாப் போவுது. ஒப்பாரி வெக்க உனக்குச் சொல்லியாதரோனும். அதுக்கு மேல என்ன பண்ணீருவாங்க. சனமத்த ஆளுங்க.’

அப்போது இன்னும் நான்கைந்து பேச்சுக்குரல்கள் கேட்டன. தடத்துப் பக்கமிருந்து ஆட்கள் வருகிற அரவம் கேட்டது. சரோஜாவுக்கு உடல் நடுக்கம் கொண்டது. அவர்கள் திட்டம் தெளிவான மாதிரியும் குழப்பமானதாகவும் மாறி மாறித் தோன்றிற்று. தோலூருக்கே போய் விசாரித்துவிட்டு வந்திருக்கிறார்கள். ஊரில் ஒதுக்கி வைத்துவிட்டுப் பேசாமல் இருப்பார்கள் என்று மட்டும்தான் அவள் நினைத்திருந்தாள். அதற்கு மேலும் ஆட்கள் வேலை செய்திருக்கிறார்கள்.

மாமியாரின் பேச்சு ஒருபோதும் அனுசரணையாக இருக்கவில்லை. ஆடுகளை ஓட்டிக்கொண்டு அவள் எங்கே போகிறாள் என்பது சரோஜாவுக்குத் தெரியவும் இல்லை. குமரேசனைப் பொருத்தவரை அம்மாவுக்கு ஒன்றும் தெரியாது என்றுதான் நினைப்பு. பயத்தில் சிலிர்த்து உடல் நடுங்கியபடியே இருந்தது. என்ன

செய்வது என்பதைப் பற்றி யோசிக்கவும் முடியவில்லை. இப்போது குரல்கள் கலந்து வந்தன. எல்லாக் குரல்களும் ரகசியமாகவே ஒலித்தன. காற்றின் திசை மாறலால் பேச்சு தெளிவாகக் கேட்கவில்லை. இதற்குமேல் தெளிவாகக் கேட்க என்ன இருக்கிறது?

இருள் அடர்ந்திருந்த புதருக்குள் அப்படியே உட்கார்ந்தாள். நாற்புறமும் சுவர்களைப் போல வளர்ந்து நின்றிருந்த முட்செடிகள் அவளைக் கவசமாய் மூடிக்கொண்டன. முட்களிடையே முட்டி வளர்ந்திருந்த சிறுவேம்பு ஒன்று மேலே குடை போல விரிந்திருந்தது. அதன் இலைகளுக்கிடையே நட்சத்திரங்கள் அவ்வப்போது தெரிந்தன. பகலிலேயே அங்கே வருவதற்குப் பயமாக இருக்கும். குமரேசனைக் கொஞ்ச தூரத்தில் நிற்கச் சொல்லிவிட்டு வருவாள். அவன் இல்லாமலே வரக் கொஞ்சம் பழக்கமாயிற்று.

பாறைக் கொட்டாயை விட இந்த இடம் அவளுக்கு ஆசுவாசம் தருவதாக அமைந்ததுண்டு. கண்ணீர் விட்டு அழவும் எல்லாவற்றில் இருந்தும் விலகித் தனியாக இருக்கவும் இதைப்போல ஓரிடம் அவளுக்கு இங்கே அமையவில்லை. பூச்சி பொட்டுகள் இருக்குமிடம் அது என்பதை எத்தனையோ முறை குமரேசன் சொல்லியிருக்கிறான். காட்டுக்குள் வேறு ஓர்இடத்தைக் காட்டவும் செய்தான் அவன். வெளியே துளி தெரிவதாக இருந்தாலும் அவளால் நிம்மதியாக உட்கார முடியாது. அதற்கு இந்த இடம்தான் சரி.

இதுவரைக்கும் பாம்பு எதையும் அவள் பார்த்ததில்லை. எலிகள் ஓடுவதுண்டு. ஒருமுறை முயல் ஒன்றைப் பார்த்திருக்கிறாள். அது அவளைப் பார்த்துப் பயந்து பாய்ந்தோடியது. வெகுதூரம் நீண்டு செல்லும் அந்தப் புதர் எங்கே போய் முடிகிறது என்று தெரியவில்லை. நீட்டிய ராட்சசக் கையைப் போலச் செல்லும் அது தனக்கென ஓரிடத்தை ஒதுக்கிக் கொடுத்திருப்பதாக நினைத்துக்கொள்வாள். உள்ளே ரொம்ப நேரம் உட்கார்ந்திருப்பது அவளுக்குப் பிடித்துப்போனது.

குமரேசனே ‘கக்கூஸுக்குள்ள போறதும் தெரியாது வாரதும் தெரியாது. இங்க என்னடான்னா முள்ளுக்குள்ள போயி உக்காந்தீன்னா ஒருமணி நேரமானாலும் வரவே மாட்டீங்கற’ என்று கேலி செய்வான். கக்கூஸுக்குப் போவதைக்கூடக் கவனித்து வைத்திருக்கிறான். அவள் சிரிப்பதைத் தவிர ஒன்றும் சொன்னதில்லை. மனிதர்களைவிட முள்ளும் மரமும் புதரும் எவ்வளவோ நல்லவை என்று அவளுக்கு அடிக்கடி தோன்றியிருக்கிறது. இப்போது அது உண்மையாகிவிட்டது. இரை தேடச் சென்றிருக்கும் தாய்ப் பறவையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பறவைக்குஞ்சு ஒன்றைப் போல உடலைக் குறுக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

கலங்கியிருந்த வயிறு இப்போது இறுகிக்கொண்டது. அவளை அறியாமல் அழுகை வந்தது. தன்னைச் சுற்றி எங்கும் இருளையே கண்டாள். இருளைத் துளைத்துச் செல்லக் கண்களுக்கு வலுவில்லை. ஆனால் காதுகள் இதுவரைக்கும் எப்போதும் இல்லாதபடி கூர்மை கொண்டன. காற்றில் அசையும் சருகோசையும் அவள் காதுகளுக்குப் பிசகில்லாமல் வந்து சேர்ந்தது. புதரை ஒட்டிப் பேசிய குரல்கள் இப்போது பாறையை நோக்கிப் போயிருந்தன. அங்கிருந்து பேசுவது காக்கைகளின் இரைச்சலெனப் பொருளற்றுக் கேட்டது.

புதரை ஒட்டிச் செல்லும் சிறுதடத்தில் குமரேசனின் சைக்கிள் சத்தம் கேட்குமா என எதிர்பார்த்திருந்தாள். அவன் சைக்கிள் சத்தம் அவள் காதுகளுக்கு மிகப் பழக்கமானது. இரண்டு சுற்றுக்கு ஒருமுறை கிரீச் என்று ஒலிக்கும். செயின் சுழலும் ஒலி ரீங்காரம் போலவே இருக்கும். தூக்கத்தில்கூட அவன் சைக்கிள் ஓசையை இனம் பிரித்துக் கண்டுவிடுவாள். இந்த நேரம் அந்த ஓசை கேட்டால் போதும். எல்லாம் மாறிவிடும். ஆனால் பாறையில் ஆட்களின் அரவம் கூடும் ஓசைதான் வந்துகொண்டிருந்தது. யாரோ இருவர் புதர்ப்பக்கம் வருவது கேட்டது.

எச்சிலைக் காறித் துப்பிக்கொண்டு உட்கார்ந்த இருளுருவம் ஒன்று ‘எங்கடா போயிருப்பா?’ என்றது.

‘ஆடு புடிச்சுக் கட்டறப்பப் பாத்தன்னு அந்தக்கா சொல்லுதே. அதுக்கப்பறம் எங்க போயிருக்க முடியும்?’

‘எங்காச்சும் காட்டுப்பக்கம் போயிருப்பா. வேற தூரத்துக்கா ஓடிருவா?’

‘எதுக்கும் பாத்துட்டு வரன்னு ரண்டு பேரு பஸ் நிக்கற பக்கம் போயிருக்கறாங்க. இந்நேரத்துக்குப் பஸ் எதும் கெடையாது, பாக்கலாம்.’

‘அவளுக்கு ஆயுசு கெட்டியோ என்னமோ.’

அவர்கள் குரல் அப்படியே தேய்ந்து பாறைக்குச் செல்வது கேட்டது. பாறைக்கு ஒரு கூட்டமே வந்திருப்பது புரிந்தது. குமரேசன் இன்றைக்குப் பார்த்து வந்தாலும் வருவேன், இல்லாவிட்டால் நாளைக்கு வருவேன் என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறான். அவன் சொல்லிச் சென்றதைக் காலையில் மாமியார் கேட்டிருக்கலாம். அதனால்தான் அவன் இல்லாதபோது இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறாள் என்று எண்ணம் ஓடியது. முட்டைபாய் மூலமாக விசாரித்து விவரம் தெரிந்துகொண்டு இன்றைக்குத்தான் வந்திருப்பார்களோ.

என்ன செய்வார்கள் என்று தெரியவில்லை. தடியால் அடிப்பார்களா, அரிவாள் வெட்டு விழுமா? போன குரல் சொன்னது போலத் தனக்கு ஆயுசு கெட்டியா, அவ்வளவுதானா? ஆட்கள் ஊரைச் சுற்றிலும் இருக்கிறார்கள். எந்தப் பக்கமும் போக வழியில்லை. இந்தப் புதரிருப்பை அவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிக்க முடியாது. இரவு முடியும்வரை இதற்குள் இப்படியே ஒடுங்கிக் கிடக்க வேண்டியதுதான். எப்படியும் குமரேசன் வந்துவிட்டால் போதும். அவன் இருந்தால் யாரும் ஒன்றும் செய்ய விடமாட்டான். அவனைத் தவிரத் தனக்கு இங்கே ஏதுமில்லை.

மனதுக்குள் தனக்குப் பிரியமான கூளியை நினைத்தாள். இங்கிருந்து ஒருகல் தொலைவில் உள்ள கூளி கோயிலுக்குக் குமரேசன் ஒருமுறை கூட்டிப்

போனான். விழிகளை அகட்டி நாக்கு துருத்திப் பிரகாசமான முகத்தோடு வெறி கொண்ட கூளி. பார்க்கும் முன் பயமுறுத்தினாள் கூளி. பார்த்ததும் ஏனோ அந்த உருவம் அவளுக்குப் பிடித்திருந்தது. எல்லாவற்றையும் அழித்துவிடும் வல்லமை அந்தப் பெண் உருவத்திற்கு இருப்பதாகத் தோன்றியது. புதர்ப்பக்கமாக மீண்டும் நடமாடின சில குரல்கள்.

‘எல்லாம் முடிஞ்சாத்தான் இன்னைக்குக் கோயில் பூச பண்ண முடியும். கொஞ்ச நேரம் பொறுக்கச் சொல்லீட்டு வந்தம். இப்பப் பாத்தா இது முடியாதாட்டம் இருக்குது. எப்படியோ அந்தப் பிள்ளைக்குச் சந்தேகம் வந்திருக்கோணும். அதான் எங்கயோ ஓடிப் போயிட்டா.’

‘சாயந்திரத்தில இருந்தே ஒராளு அவளப் பாத்துக்கிட்டே இருந்திருக்கோணும். இப்பிடி அநியாயமா உட்டுட்டமே.’

‘எங்காச்சும் இங்கதான் இருப்பா. இந்தப் பொதருக்குள்ள கூட இருந்தாலும் இருப்பாடா.’

அதைக் கேட்டதும் திக்கென்றது. கூளி உதவப் போவதில்லை. அவள் இவர்கள் சாமி. கூளியின் வெறி தன்மீதுதான் என்று அவளுக்கு இப்போது தோன்றியது. கூளியைக் கும்பிட்டதும் காட்டிக் கொடுத்துவிட்டாளே. வேறு எந்தச் சாமியும் அவளுக்குச் சட்டென நினைவு வரவில்லை. தோலூரில் அவள் கோயிலுக்கு எப்போதாவது போவாள். என்ன வேண்டுதல் வைப்பது என்று தெரியாது. தனக்கு எல்லாம் கிடைத்திருப்பதாகத் தோன்றும். ‘எல்லாரும் நல்லாக்கணும் சாமீ’ என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொள்வாள்.

குமரேசனோடு பழக்கம் ஏற்பட்ட பிறகு ‘அவன் எனுக்கு வேணும்’ என்று கேட்கத் தொடங்கினாள். தோலூரில் இருந்த கோட்டைச்சாமி கோயிலுக்கு ஒருமுறை அவனோடு போயிருக்கிறாள். அப்போது அவன் ‘என்ன வேண்டுன?’ என்றான். ‘உன்னத் தான்னு கேட்டன்’ என்று சிரித்தாள். ‘நெசமேவா?’ என்று சிரித்தான். அவளைச் சீண்டும் பொருட்டுச் ‘சாமிகிட்ட வேண்டுதல் வெச்சா

நாமளும் திருப்பிச் செய்யோணுமே. நீ என்ன குடுக்கப்போற?' என்று கேட்டான். அவளுக்கு அப்போதுதான் அப்படி வேண்டுதல் செய்யாமல் வந்துவிட்டோமே என்று தோன்றியது.

அந்த இடத்திலேயே நின்று மனதுக்குள் ஏதோ சொல்லிக்கொண்டாள். அவன் 'என்ன?' என்றான். அவள் ஏதும் சொல்லவில்லை. சிரித்தபடியே மழுப்பினாள். சமயங்களில் அவன் அதை நினைவுபடுத்திக் கேட்பதுண்டு. அப்படிப்பட்ட சமயம் ஒன்றில் 'அவனக் குடுத்திடு. என் உசுர வேண்ணாலும் குடுக்கறன்னு வேண்டிக்கினன்' என்றாள். அவன் 'அப்ப எங்கதி?' என்று கை கொட்டிச் சிரித்தான். 'இப்பிடியா வேண்டுவாங்க. கெடா வெட்டறன். பொங்க வெக்கறன்னு வேண்டிக்க' என்று அவளுக்குச் சொன்னான்.

கோட்டைச் சாமி சக்தியுள்ள சாமி. சொன்னபடி காவு வாங்கிவிடுவான். இப்போது அவன்தான் ஆளனுப்பி இருப்பானோ. உன் வேண்டுதலை நிறைவேற்றித் தந்துவிட்டேன், உயிரைக் கொடு என்று கேட்கிறானோ. பயமும் யோசனையும் கலந்திருந்த அவளுக்கு வெளியே பேச்சு அதற்கு மேல் கேட்கவில்லை. எல்லா இடத்திலும் தேடி முடித்து இங்கே வருவார்களோ. வெளியே போவதென்றால் இதற்குள் போவாள் என்பது மாமியாருக்குத் தெரியும். நினைவு வந்து இங்கே தேடச் சொன்னால் ஆட்கள் இங்கே வந்துவிடுவார்கள்.

கைகளில் என்ன வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. எத்தனை பேர் இருக்கிறார்கள் என்றும் தெரியவில்லை. பாறையில் குரல்கள் இப்போது பலமாகவும் பலவாகவும் கேட்டன. ஊரே சேர்ந்து இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கக் கூடும். புதர்ப் பக்கமாக மறுபடியும் குரல்கள் வந்தன.

'நம்ம வெள்ளையன் இருக்கறானுல்ல, அவன் ரண்டே நிமிசத்துல எல்லாத்தயும் முடிச்சிருவான். இப்ப ஆளு மட்டும் கைக்குக் கெடைச்சிட்டாப் போதும்.'

‘இப்பக் கூட்டஞ் . . . சேந்திருச்சு. அப்பலயே ஆளு இருந்திருந்தான்னா ஆவும். நோண்டி மயங்குன அந்தச் செந்தோலத் தொட்டுப் பாத்தரலாமின்னு நெனச்சன். இப்பிடி ஆயிப்போயிருச்சே.’

‘நம்ம கண்ணுக்கு மட்டும் படட்டும். தொட்டுப் பாத்தரலாம்.’

அவளுக்கு உடல் வேர்த்துக் கொட்டியது. புதர்ச்சுவர் மறைப்பு இன்னும் ரொம்ப நேரம் உதவாது. மெல்ல மெல்லப் புதருக்குள் நகர்ந்து நகர்ந்து உள்ளே போய்விட முடிந்தால் நல்லது என்று நினைத்தாள். எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் போய்விடலாம். முட்கள் உடம்பைக் கிழிக்கும். பாம்புகள் கிடக்கும். எதுவாக இருந்தால் என்ன? சட்டென மூளை தெளிவாகச் சிந்திக்கத் தொடங்கியது.

கைகளை இறுக நெஞ்சோடு சேர்த்துக்கொண்டு கால்களை நகர்த்தினாள். கல்லாய்க் கால்கள் பிடித்துக்கொண்டு நகர மறுத்தன. மிகுந்த பிரயாசைப்பட்டுப் பெரும்பாரத்தைத் தூக்கி வைப்பதுபோல முயன்றாள். கொஞ்சம் முன்னேறிய மாதிரி தோன்றியது. இடக்கைப் பக்கம் நகர்ந்தால் புதருக்கு உள்ளே போகலாம் என்று சொல்லிக்கொண்டாள். பாம்பு பூச்சி கடித்துச் செத்தாலும் பரவாயில்லை, இவர்கள் கையில் மட்டும் சிக்கிக்கொள்ளக் கூடாது. எங்கிருந்து எங்கே வந்து இப்படிச் சித்திரவதைப்பட விதித்திருக்கிறது.

உடல் எதன் மீதோ பட்டென்று இடித்தது. ஏதோ மரம். ‘அங்க பாருடா . . . பொதாருக்குள்ள ஒத்த மரம் மட்டும் அசையுது’ என்று யாரோ கத்துவதும் சிலர் ஓடி வருவதும் கேட்டன. பெரும்பயத்தில் வேர்வையும் கண்ணீரும் உடல் முழுவதையும் நனைத்தன. கால் நசுக்கலுக்குப் பயந்து தப்பித்தோடும் பூரானாய் பதற்றத்தோடு மண்ணைத் தடவித் தடவி நகரத் தொடங்கினாள்.

0 0 0

# 16

சரோஜாவின் நகரலில் வேறு செடிகளும் அசைந்தன. ஒண்டி ஒளிந்து கிடப்பவளை இந்த மரமும் செடிகளும்கூடவா காட்டிக் கொடுக்கும்? உங்களை நம்பித்தானே இதற்குள் வந்து அடைந்தேன், என்னை இப்படிக் கைவிடலாமா என்று கைக்குக் கிடைத்த ஒவ்வொன்றிடமும் அவள் கேட்டாள். அடியை, வேர்களை மனிதக் கால்களென நினைத்துக் கட்டிக்கொண்டாள். தொட்டு இறைஞ்சியபடியே உள்ளே நகர்ந்தாள்.

அவள் பேச்சை அவை பொருட்படுத்திய மாதிரியே தெரியவில்லை. தூரத்து ஆட்களை ஈர்க்க அசையும் கொடிகளைப் போல அவள் உடல்பட்ட எல்லாம் தம் தலையை அசைத்தன. அவற்றில் அடைந்திருந்த வண்டினங்கள் கூட்டமாய் எழும்பி ரீங்கரித்தன. தலைக்கு மேல் இடைவிடாமல் எழுந்த ரீங்காரம் வெகுதூரம்வரை செல்லக்கூடும். புதருக்குள் கூடு கட்டியிருந்த காடைகளும் கௌதாரிகளும் கத்தியபடி இருளுக்குள் எங்கே செல்வது எனத் தெரியாமல் தடுமாறி ஓடின. அவளுக்குத் தான் என்ன செய்கிறோம் என்பதே புரியவில்லை.

மரம் அசைகிறது என்பதைக் கண்டு வெளிக் குரல் கத்தியதும் பதற்றத்தில் எல்லாவற்றையும் அசைத்துவிட்டாள். குரல்களுக்கு இப்போது அவள் உள்ளே இருக்கிறாள் என்பது உறுதிப்பட்டுவிட்டது. ‘டேய் வாங்கடா . . . இங்கதான் இருக்கறா’ என்று பாறையை நோக்கிக் குரல்கள் உற்சாகமாய்க் கத்தின. ஆட்கள் அவசரமாய் இருளைக் கிழித்தபடி ஓடி வரும் ஓசை அவள் காதுகளுக்குத் தொம்தொம்மென்று கேட்டது. காதுகளை அழுத்தமாய்ப் பொத்திக்கொண்டாள். எனினும் சத்தம் குறையவில்லை. பாறையை உடைக்கும் சம்மட்டி போல விழுந்தது.

காலடி ஓசைக்குள் சுருண்டுவிட்ட குரல்கள் கலந்து விரவிக் குழப்பமாக ஒலித்தன. அவற்றைத் தெளிவாக உணர முடியவில்லை என்றாலும் நோக்கம் பற்றிச் சந்தேகம் இல்லை. புதருக்குள் அவள் எவ்வளவு தூரம் நகர்ந்திருக்கிறாள் என்பது தெரியவில்லை. போய்க்கொண்டேயிருப்பது போலத்தான் இருக்கிறது. ஆனால் எட்டிப் பிடிக்கும் தூரத்தில் குரல்கள் கேட்கின்றன. அவை கேட்காத தொலைவுக்குச் சென்றுவிட்டால் தைரியம் வரும். புதரைத் தடி கொண்டு அடிப்பதை உணர்ந்தாள். செடிகளின் மீது தடிகள் விழுவது அவள் மீதே படுவது போலத் தோன்றியது. வதங்கி வாடிக் கிடந்த செடிகள் எதிர்க்க முடியாமல் தலை தாழ்த்தி ஒடுங்கிய குரலோடு கீழே அடங்கின.

‘உள்ள எவ்வளவு தூரம் போயிருவா பாத்திரலாம் வாங்கடா. ஒரு பொம்பளைக்கு . . . அதும் . . . அறியாப் பிள்ளைக்கு இத்தன தெகிரியம் இருந்தா நாமெல்லாம் ஆம்பளைன்னு எதுக்கு இருக்கோணும்?’

‘இந்தப் பொதாருக்குள்ள பாம்பு எக்கச்சக்கம் கெடக்குது. நேத்துக்கூடப் பொணையல் பாம்பப் பாத்தன். உள்ள போனவ எந்தப் பாம்புகிட்டக் கடி வாங்கறாளோ.’

‘எங்கருந்தோ வந்தவ நம்புளுக்கே தண்ணி காட்டறா பாரேன். ஊருக்குள்ள நொழஞ்சதும் இதச் செஞ்சிருக்கோணும். இத்தன நாளு உட்டு வெச்சதுதான் தப்பாப் போயிருச்சி.’

சரோஜா கையில் பற்றியிருந்த வேர் ஒன்று பாம்பாய் நெளிந்தது. சட்டெனக் கையை உதறினாள். எனினும் அது கையிலிருந்து விடுபடவில்லை. கையைச் சுற்றிச்சுற்றிப் பிணைவது போலிருந்தது. கழுத்திலேறி இறுக்கிற்று. உடல் முழுவதிலும் பாம்புப் பிணையல். எழுந்து ஓடப் பார்த்தாள். எழ முடியவில்லை. தலையைக் கொஞ்சம் உயர்த்தினாலும் ஏதோ முள்ளோ கிளையோ தட்டியது. நிமிரவே முடியவில்லை.

உட்கார்ந்தவாக்கில் நகர்ந்துகொண்டேயிருந்தாள். ஒரு போதும் நகராமல் நின்றுவிடக்கூடாது என்று

தீர்மானித்தாள். செடிச் சந்துகளும் மர இடைவெளிகளும் இருக்கும் இடமெல்லாம் நுழைந்தாள். வெளி அரவம் கேட்டபடியே இருந்தது. உங்கள் யாருக்கும் ஒரு கெடுதலும் நான் செய்யவில்லையே, என்னை இப்படி விரட்டலாமா என்று மனதாரக் கேட்டாள். அவர்கள் காதுகளை அவள் இறைஞ்சுதல் எட்டியதோ என்னவோ. புதரை அடிக்கும் சத்தம் ஓய்ந்த மாதிரி தெரிந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன்னும் உள்ளே உள்ளே போய்விடலாம் என்று பரபரத்து நகர்ந்தாள். கைகளை முட்கள் கிழித்தன. இந்தப் புதரை அவள் தேடிக் காணும் வரை எத்தனையோ சிரமப்பட்டாள். காலையிலோ பகலிலோ வெளிச்சத்தில் வெளிக்காட்டுக்குப் போக முடியாது. இருட்டும் வரை காத்திருந்து குமரேசனையும் துணைக்கழைத்துக் கொண்டு காட்டுக்குள் போவாள். எல்லாப் பக்கமும் இருள் இருந்தாலும் திறந்திருக்கும் அறைக்குள் இருப்பதைப் போலவே தோன்றும். அதுவும் கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் ஓர்ஆள் நின்றுகொண்டிருக்க எப்படி வயிறு இளகும்?

குமரேசன் இல்லாத ஒருகாலையில் பிசைந்த வயிற்றை என்ன செய்வது என்று தெரியாமல் இந்தப் புதரை நாடி வந்தாள். செடிச் சந்துகளுக்கு இடையே மெல்ல நுழைந்து உள்ளே போகப் பயமாக இருந்தது. என்றாலும் இதற்குள் பாதுகாப்பு இருப்பதை அறிந்தாள். அதன்பின் இதையே தனக்குரிய இடமாக்கிக்கொண்டாள். புதருக்குள் வெளிக் காட்டுக்குப் போகும்போதெல்லாம் குமரேசன் எச்சரிப்பான்.

‘அதுக்குள்ள சீமக் கருவேல முள்ளுத்தான் அடந்து கெடக்குது. அது மரச்சனியன். ஒரு முள்ளுக் குத்தீட்டாலும் வெசந் தீண்டுனாப்பல வலிக்கும். உள்ள முள்ளு ஏறிடிச்சின்னா வெனயம் பண்ணிக்கும். எங்களுக்குன்னா பழக்கம். பாத்துக் கால வெப்பம். முள்ளுப் படாத ஒதுக்கி உட்ருவம். உன்னால அது முடியாது. ரொம்ப தூரம் போவாத. இங்க ஆரும் வரமாட்டாங்க.’

அவன் வீட்டில் இருந்தால் அவள் புதருக்குள் போய் வரும்வரை பாறை வெளியிலேயே உட்கார்ந்திருப்பான். அவளும் பெரும்பாலும் அவனிருக்கும்போது பார்த்தே புதருக்குப் போவாள். எச்சரிக்கும் அவன் குரல் காதுகளில் தானாக ஒலிக்கிறது. ரொம்ப தூரம் போகாதே என்பாயே, இந்தப் புதரின் முடிவுவரை போய்ப் பார்க்கச் சொல்லி இன்றைக்கு விட்டுவிட்டாயே. நீ வரக்கூடாதா? என்னை வற்புறுத்தி வாவென்று கூட்டிச் சென்றிருக்கக்கூடாதா? விஷக் கூட்டுக்குள் என்னைத் தூக்கி வீசிவிட்டு நீ போய்விட்டாயே. குமரேசா, என் குரல் உனக்குக் கேட்கிறதா? எங்கே உன் சைக்கிள் சத்தம்?

மீண்டும் குரல்கள் புதரை நெருக்கின. டார்ச் லைட்டுகள் புதர்ச் சந்துகளுக்குள் வெளிச்சமாய் நுழைந்தன. அவற்றை அடித்துக்கொண்டு சில குரல்கள் உள்ளே நுழைவது கேட்டது. இத்தனை நாள் பொறுத்துக்கொண்டு எப்படி இருந்தார்கள்? தன்னிடம் வந்து பேசிய குரல்களில் தென்பட்ட ஈரம் எல்லாம் பொய்தானா? ஒருகுரல்கூட உண்மை இல்லையா?

‘கைக்குச் சிக்கட்டும். மயரப் புடிச்சுப் பிச்சுப் புடறன் பிச்சு. முள்ளுக்குள்ள போயிப் பூந்துக்கிட்டு என்ன தொந்தரவு பண்றா பாரேன்.’

‘கஷ்டமில்லாத சாவ அவளுக்குக் குடுத்து வெக்கல. மேனிய முள்ளுக் குத்திக் கிழிச்சுத்தான் சாவோணுமின்னு இருக்குது பாத்துக்க.’

‘எங்காச்சும் ஒரெடத்துல தண்ணியில நனைஞ்ச கோழிக் குஞ்சாட்டம் உக்காந்திருப்பா. இதுக்குள்ள எவ்வளவு தூரம் போயிர முடியும்?’

முட்களைக் கடந்து அவர்களால் வெகுதூரம் உள்ளே வர முடியவில்லை. வெளிச்சமும் அவள் இருக்கும் இடத்தை அடையவில்லை. விடிய விடிய என்றாலும் அவர்களால் தன்னை நெருங்க முடியாது என்று கொஞ்சம் தைரியம் வந்தது. இன்னும் நகர்ந்தபடியே இருக்க வேண்டியதுதான். எது குத்தினாலும் என்ன கடித்தாலும் சரி. நடுராத்திரியில் வந்தாலும் காலையில் வந்தாலும்

குமரேசன் குரல் ‘பிள்ள’ என்று அழைத்த பிறகுதான் எதிர்க்குரல் கொடுக்க வேண்டும்.

அவள் இப்போது தன் உடலைக் குறுக்கிச் சுருட்டிக்கொண்டாள். பந்தென உருள முயன்றாள். எதிலாவது முட்டிக்கொண்டால் திரும்பப் பின்னால் வந்து சந்தினைத் தேடினாள். அவளுக்குள் வலு கூடிக்கொண்டேயிருந்தது. குமரேசனோடு ரொம்ப காலம் கூடி வாழ அவளுக்குள் ஆசையிருந்தது. அது பேராசையோ. வயிற்றில் அவன் கரு உதித்திருக்கிறது என்றதும் இனி எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகச் சரியாகிவிடும் என்று எதிர்பார்த்தாள். குழந்தை முகம் பார்த்தால் நெகிழாத மனம் ஏது? அதுவரை எல்லாவற்றையும் பொறுத்துப் போகலாம் என்றிருந்தாள்.

மாமியாரின் சொற்கள் சாட்டையென வீசி அடித்தபோதும் அவை அடங்கும் காலம் தூரமில்லை என்று தோன்றியது. ஆனால் அந்தச் சொற்களுக்குப் பின்னால் இப்படி ஒரு வன்மம் பொதிந்திருக்கும் என்று அவள் நினைக்கவில்லை. இந்த ஊரைப் பார்த்தால் வீடுகள் குறைந்து நிலம் பரந்து தெரிகிறது. எதுவும் உள்ளே நுழைந்து வெளியே போகலாம் என்றுதான் தோன்றும். ஆனால் அது மாயத்தோற்றம். வெளிக் காற்று உள்ளே நுழைய வழியேயில்லை. இந்த ஊர்க் காற்று இங்கேயே சுற்றிச் சுழன்று விஷமாகி இருக்கிறது. இது எதையும் அனுமதிக்காது. இந்தச் சூட்சுமத்தைக் குமரேசன்கூடப் புரிந்துகொள்ளவில்லை.

இப்படி இருக்கும் என்று தெரிந்திருந்தால் தோலூரிலேயே பிழைத்திருக்கலாம். அப்பனும் அண்ணனும் இப்படிப்பட்டவர்களல்ல. கோபப்படுவார்கள். அடித்தும் இருக்கலாம். வாழ விடாமல் செய்யக் கூடியவர்களல்ல. தோலூரில் கட்டிடங்கள் நெருங்கித் தெரியும். ஆனால் எல்லாத் தெருக்களும் திறந்தே கிடக்கும். அங்கேயே வாழ்ந்திருக்கலாம். ஒற்றையறை வரிசை வீடு போதும். அதற்குள் ஆனந்தமாக வசித்திருக்கலாம். விரிச்சியூர் போயிருந்தாலும் பிரச்சினையில்லை. அங்கே போகப்

போவதாகக் குமரேசன் யாரிடமும் சொல்லியிருக்கவும் கூடும். அதற்குள் முடித்துவிட வேண்டும் என்றுதான் வந்திருக்கிறார்கள். விரிச்சியூர் நல்ல ஊர். யாரையும் உள்வாங்கிக் கொள்ளக் காத்திருக்கும் ஊர். முதலிலேயே அங்கே போயிருந்தால் இந்தப் பிரச்சினையே இல்லை. குமரேசனுக்கு ஏன் அது தோன்றவில்லை?

அவள் நகர்தல் வேகம் கூடியபடியே இருந்தது. ஏதேதோ யோசனைகள் மனமெங்கும் பரவின. இந்த இக்கட்டிலிருந்து தப்பித்துவிட்டால் அதற்குப் பின் யாரும் ஏதும் செய்ய முடியாது. குமரேசன் வேறிடத்திற்கு அழைத்துப் போய்விடுவான். இந்த மனிதர்களோடு மேலும் இருக்க அவன் விரும்பமாட்டான். அவன் இவர்களைப் போலல்ல. இதுவரை ஒரு சுடுசொல்லும் சொன்னதில்லை. அவளுக்கு எல்லா வகையிலும் ஆறுதலாகவும் நம்பிக்கையாகவும் இருக்கவே பிரயாசைப்பட்டான். எத்தனை கஷ்டப்பட்டாவது உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும். அவளுக்கு இப்போது வாழும் ஆசை பெரும்வெள்ளமென மனதில் பெருக்கெடுத்தது.

‘இந்தச் சீன்றத்துக்குள்ள போயி யாரும் மாட்டிக்காதீங்கடா. எங்க போயிருவா? வெளிய வந்துதான தீரோணும்.’

‘நோண்டி கீது வந்தரப் போறானப்பா.’

‘வரட்டும் வரட்டும். வந்தா என்ன பண்ணீருவான்? ஊருல இல்லாத வழமொறையக் கொண்டாந்துட்டு வாய் பேசீருவானா?’

‘நோண்டி வந்து எதுனா சொன்னான்னா அவனயும் சேத்துப் போட்டற வேண்டியதுதான். காத்தாலக்கிப் பாத்துக்கலாம் உடுங்கடா.’

‘நாளைக்கித்தான் பாத்துக்கிட்டுச் செய்யலாம். செய்யறதுன்னு முடிவாயிருச்சு. அப்பறம் எங்க போயரப் போறா? ஆரு வந்து அதுக்குள்ள கூட்டிக்கிட்டுப் போயிருவா?’

‘ஆமாப்பா. நாளைக்கிங்கறது என்ன? வெடிஞ்சா நாளைக்கி.’

‘அத ஏப்பா தள்ளிப் போடுவானே. எதோ ஒன்னு இப்பவே பாத்தரலாம்.’

‘மாமோய் . . . பொதாரு முழுக்கக் காஞ்சுதான் கெடக்குது. சீம முள்ளுத்தான் வெளிய தளதளன்னு தெரியுது. தீய வெச்சு உட்டம்னா வெளிய வந்துதான தீரோனும்.’

‘வராட்டி உள்ளயே வெந்து சாவட்டும். தீய வெச்சரலாம். அதுதான் செரி.’

‘ஆமாப்பா. நாலாப் பக்கமும் தீய வெச்சுட்டா உள்ள கெழங்காட்டம் வெந்திருவா. அதப் பண்ணுங்க.’

சரோஜாவின் கைகள் எலியின் தலை போல மாறிப் பொந்துகளுக்குள் நுழைந்தன. உடலைக் குறுக்கிக் குறுக்கிப் புகுந்தாள். உடலில் படும் காயங்கள் வலிக்கவில்லை. துணி கிழிவது தெரியவில்லை. முள் மாட்டி இழுக்கும்போது மயிர் பிய்ந்து போவதை உணரவில்லை. காய்ந்து குவியலாய்க் கிடந்த சருகுகளும் குச்சிக்கோல்களும் அவள் இருப்பைக் காட்ட முனகின. மண்ணிலும் கற்களிலும் இழுத்து நகர்ந்த கால்கள் மரத்துப்போயிருந்தன. உடல் முழுக்க வேர்த்து நனைந்தது. மண்ணுக்குள் புகுந்து உயிரைக் காத்துக்கொள்ள ஓர்இடத்தைக் கண்டடையும் வெறியோடு அவள் நகர்ந்துகொண்டிருந்தாள்.

வெளியே கொஞ்சநேரம் அடங்கியிருந்த சத்தம் மீண்டும் மெல்லக் கூடத் தொடங்கியது. புதரின் புறங்களில் ஓலைகளின் சரசரப்பும் ஆட்களின் நடமாட்டமும் பெருகின. திருவிழாவுக்குக் கூடும் கூட்டமோ என்று அஞ்சினாள். இந்த ஊரில் எங்கே இருந்தார்கள் இத்தனை பேர்? ஒவ்வோர் அசைவுக்கும் ஆட்களைக் கற்பித்துக்கொள்கிறதா மனசு?

யாரும் வரவில்லை. எதுவும் நடக்கவில்லை. இதோ பாறைக் கொட்டாயில் . . . அல்ல அல்ல . . . தோலூர் வீட்டில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும்போது இப்படி ஒரு

கனவு. விழித்துவிட்டால் எல்லாம் மறைந்துவிடும். விழிக்கலாமா, என்ன ஆகிறது என்று பார்க்கலாமா? எப்படி நினைத்தாலும் விழிக்க முடியவில்லை. இதைக் கடந்துதான் ஆக வேண்டும் போல.

புதரைச் சுற்றித் தீ வெளிச்சம் எழுவது தெரிந்தது. தீ தன்னை நோக்கி வருவதற்கு அதிக நேரம் ஆகாது என்பது புரிந்தது. நெளிந்தோடும் பாம்பைப் போலச் சருகுகளுக்குள் புகுந்து பரவிய தீ காய்ந்த மரக்கிளைகளிலும் உற்சாகத்துடன் ஏறுவதை அவள் பார்த்தாள். அவளைச் சுற்றி எங்கும் வெளிச்சம். அனல் காற்றை உணர்ந்தாள்.

கனவு இப்போது முடிந்துவிடும். விழித்துக்கொள்ளலாம். இத்தனை கொடுமையான கனவா என்று நினைத்து நினைத்துச் சிரிக்கலாம். யாரிடமாவது சொன்னால் கேலி செய்யக்கூடும். தெள்ளத் தெளிவாக நினைவிருக்கும் நெடுங்கனவு. போதும் இது. விழிக்க முயன்றாள். திறந்திருந்த கண்கள் மூடத்தான் செய்தன. சரி, வேறு வழியில்லை. கனவைத் தொடரலாம் எனச் சட்டென முடிவு செய்தாள். கொடுங்குளிரின் பிடியிலிருந்து விடுவிக்கும் பெருநெருப்பு உடலை ஆரத் தழுவ வருகிறது. அதைக் கை நீட்டி வரவேற்கத் தயாரானாள். தீ ஏறிக் குச்சிகள் முறியும் சடசடப்பையும் மீறி அப்போது குமரேசனின் சைக்கிள் செயின் சத்தம் அவளுக்குக் கேட்டது.

0 0 0